# அருள் நெறி மாலை





வெளியிடுவோர்:

பாலகவி வேங்கடராமன்

**மணி விழாக் குழுவினர்**

இரெட்டையப்பட்டி



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

அகண்டாகார சச்சிதானந்த சொரூபமே! புறத்தே ஒடுக்கி அகத்தே அமைதி பெற்றது போல், என் பொறி புலன்களும் கரணங்களும் ஒடுங்கி நின்று, உடலின் ஒவ்வோர் அணுவிலும் ஆன்ம ஜோதியைக் கண்டு, அதனோடு இயையும் பெருவாழ்வு அளிப்பீர். இஃதன்றி யான் வேண்டுவது ஒன்றில்லை.

இறைவா! இறைவா!! இறைவா!!!




அருட்சட்ட நெறியை அவனியில் பரப்பி

அருளாட்சி செய்து வரும்


திருவார்திரு அருட்சக்தித் தாய் அவர்கள்

பிள்ளையார்குப்பம்.



**சித்தி விநாயகர்**

பிரணவ சொரூபியாக விளங்குகின்ற கணேசப் பெருமான் உலகில் தோன்றுகின்ற நாதங்களுக்கெல்லாம் ஆதியாகவும் நடுவாகவும் அந்தமாகவும் இருப்பவன்.



ஆண்டவரால் ஆட்கொள்ளப் பெற்று,

அருட்கொடி நாட்டி, அருளைப் பரப்பி,

அன்பால் அடியார்களை யீர்த்து,

ஆண்டவர் அருள்நிலை எய்திய

## திருவார்திரு அருட்கொடி சுவாமிகள்

திருச்சாத்தனூர்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# அருள் நெறி மாலை

ஆக்கியோன்:

**சற்குருதாசன்**

நள ஆண்டு புரட்டாசி 22 (8—10—1976)
இரேவதி நன்னாளில்
ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின்
**120-வது திரு அவதாரத் திருநாள் விழாவில்**
இரெட்டியப்பட்டியில், சுவாமிகள் சந்நிதியில்

வெளியிடுவோர்:
**நூலாசிரியரின் மணிவிழாக் குழுவினர்,**
இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் அஞ்சல், (627 904)
திருநெல்வேலி மாவட்டம்.

[ விலை ரூ. 5-00

பிரதிகள்: 1000 ]

# மகா சட்டம்

அகண்டாகார சச்சிதானந்தப் பொருளாய் அனைத்தினும் நின்று நிலவும் இறைவனைத் தன்னுள்ளே அறிந்து, அவனோடு கலந்து உறவாடுவதற்காகவே நீதிகளும், சாத்திரங்களும் வகுக்கப்பட்டன. அச்சாத்திரங்கள் அவ்விறைவனைப் போன்றே பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் தன்னுள்ளே அனைத்தையும் அடக்கிக் கொண்டதாய், அறிவற்ற சடப் பொருளுக்கும், உயர்ந்த அறிவுள்ள ஞானிக்கும் அவ்வப்போது வேண்டிய நீதிகளைத் தன்னகத்தே கொண்டதாய், 'நவில்தொறும் நூல் நயம் போல்' பயிலப் பயிலப் புது உண்மைகளைக் கொண்டதாய், எந்நாட்டினர்க்கும், எம்மதத்தினர்க்கும், எம்மொழியினர்க்கும், எக்காலத்திலும் பொருந்தக்கூடிய உண்மைகளை உடையதாய் விளங்குகின்ற ஒன்றே '**நீதி நூல்**' எனப்படும். அதுவே '**சாஸ்திரம்**' என்றும் பகரப்படும். அதுவே '**மகா சட்டம்**' என்றும் இயம்பப்படும்.

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

சற்குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின்
அருட்சட்ட நெறியை அவனியில் பரப்பி,
அருளாட்சி செய்துவரும்

திருவார்திரு. **அருட்சக்தித் தாயி** அவர்களின்

# ஆசியுரை

ஆண்டவரின் அருட்பெருங் கருணையினால், ஆண்டவர் மீது அளவிலாத பாடல்களைப் பாடியும், அர்ச்சனை முதலிய மந்திரங்களை அமைத்தும் தந்து, ஆண்டவர்க்காகவே உடல், பொருள், ஆவியை அர்ப்பணம் செய்து, இரெட்டியப்பட்டியில் வாழ்ந்துவரும் உயர்திரு. பாலகவி **M. K. வேங்கடராமன்** அவர்களின் 60-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அவர் ஆண்டவர்மீது பாடிய பாடல்களில் 61 தலைப்பையுடைய இப் புத்தகம் வெளிவருகிறது. இப்பாடல்களை அடியார்கள் படித்து ஆண்டவர் அருளைப் பெறவேண்டும்.

பிள்ளையார்குப்பம்,
கிருமாம்பாக்கம் தபால்,
கடலூர்-1.
3—7—1976.

திருவருள் துணை
**ஸ்ரீ அருட்சக்தி தாய்**

**ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருக்கோயில்,**

**இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் அஞ்சல்,**

**(திருநெல்வேலி மாவட்டம்)**

ஸ்ரீ குருபாதம் துணை

# பரிந்துரை

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளின் எண்ணிறந்த அடியார்களில் ரத்னம் போன்ற ஒருவரே நமது திரு. பாலகவி **M. K. வேங்கடராமன்** அவர்கள் ஆவர்.

குருபக்தி மிகுந்த உள்ளத்திலிருந்து பக்திச்சுவை சொட்டச் சொட்ட எண்ணிறந்த பாடல்களை அடியார்கள் உலகத்திற்கு அவர் ஆக்கி அளித்திருப்பது ஓர் வரப்பிரசாத மாகும்.

அவர் ஆக்கி அருளிய பாடல்களில் குருபர வணக்கம், சகஸ்ரநாம அர்ச்சனை இவை இரண்டையும் அச்சிட ஓர் வாய்ப்பை அடியேனுக்குத் தந்ததுபோல், வசதி உள்ள அடியார்கள் ஒவ்வொருவரும் அவர் அருளியுள்ள பாடல்களை ஒவ்வொரு பகுதியேனும் அச்சிட்டு வெளியிட்டால் அதுவே அவருக்கு நாம் தந்த கைம்மாருகும்.

பாடல்கள் மிக்க எளிய நடையில் உள்ளமையால், சாதாரண மக்களும் பாடிப்பாடி, உள்ளம் உருகி, ஸ்ரீ குரு பிரானின் திருவடியை அடைய வேண்டிக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

**K. சாம்பசிவ அய்யர்,**

திருக்கோயில் செயலர்.

இரெட்டியப்பட்டி,

4—7—1976.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# அருள் நெறி மாலை

## முன்னுரை

[ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் சங்கத் தலைவர், செந்தமிழ் விளக்க வள்ளலார்; 'ஆட்சிச் சொற்காவலர்', 'சாந்த சீலர்', அருட்பெருந்திரு கீ. இராமலிங்கனார், எம்.ஏ., அவர்கள்]

இறைவன் அவ்வப்போது, பக்குவப்பட்ட ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டு, இந்நிலவுலகில் அவதரித்துவருகிறான். ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு உடையவனின் அவதாரமாகத் தோன்றியருளிய குருபரனார் ஸ்ரீஇரெட்டியப்பட்டி சுவாமிகள் ஆவர். அப்பெருமானார், உலகமக்கள் கண்காண உலவி வந்த காலத்திற்போலவே, இன்றும் அடியவர்களுக்கு ஞானத்திரு மேனியுடன் காட்சியளித்து, அன்றாட வாழ்க்கையில் வழி காட்டிக் கொண்டே, பிறவிப் பெரும்பயனான வீடுபேற்றை யடைய வழிவகுத்து வருகிறார்.

விடியல் நீராட்டம், குளிப்பதற்கும் குடிப்பதற்கும் என்றும் பச்சை நீரையே பயன்படுத்துவது, மருந்து இல்லாமல் ஆண்டவர் அருள் துணைகொண்டே பிணிகளை நீக்கிக் கொள்வது, நிஷ்டை கூடி இறையருளுடன் ஒன்றிப் பழகுவது இவையே, சுவாமிகள் அடியவர்களுக்கு வகுத்துள்ள அருட்சட்ட நெறியின் சிறப்பிய லாகும். இன்று தமிழகத்திலும், நம் நாட்டின் வேறு பகுதி களிலும், மற்ற கண்டங்களில் வசிக்கும் சிலருங்கூட, ஆண்டவரின் அருட்சட்ட நெறியில் ஒழுகி வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டம், நாகலாபுரம் அஞ்சல் இரெட்டியப்பட்டி என்னும் திருத்தலத்தில் தோன்றியருளிய தனாலேயே, அவர்களை அடியவர்கள் 'இரெட்டியப்பட்டி சுவாமிகள்' எனப் போற்றலாயினர். அதே தலத்தில், உலகத்தில் அவர்கள் திருமேனி முதல் முதலில் காட்சியளித்த அதே இடத்தில், சுவாமிகள் திருக்கோயில் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பெருமானின் வழிபாட்டில் பயன்படத்தக்க மந்திரப் பாடல்களைப் படைத்துத் தந்துள்ள அதே ஆசிரியரே இந்த 'அருள்நெறிமாலை' என்னும் அற்புத அருட் கவிதை நூலை இயற்றி யளித்திருக்கின்றார்கள். இப்பாடல்கள் இதுவரை அச்சில் வராதவை. ஆசிரியர் பலப்பல காலங்களில் பாடிய 61 அருட் கவிகளைக் கொண்டது இந்நூல்.

ஆசிரியர் அவர்களின் அறுபத்து ஓராவது பிறந்த நாள் சிறப்பில் வெளியிடுவதற்காக அடியவர் குழாம் இந்நூலை அச்சு வடிவில் கொண்டு வருவது போற்றத்தக்கது. இதன்கண் உள்ள எல்லாப் பாடல்களும் குருநாதர் இரெட்டியப்பட்டி சுவாமி களைப் பற்றியவையே யாகும். சுவாமிகள் மீது இதுவரை ஆசிரியர் அவர்கள் இயற்றியளித்துள்ள மாணிக்கங்கள் போன்ற கவிதைகளின் நடுவே, இவை ஒளி வீசும் மாணிக்கங்களாக விளங்குவன.

குருநாதரின் கொள்கைகளைப் பாடல்களின் இடையே பொதிந்து வைத்திருக்கின்றார் ஆசிரியர். எல்லாம் வல்ல இறை பரம்பொருளுக்கு அமைந்த இலக்கணங்கள் யாவும் குருபிரா னிடம் பொருந்தி யிருப்பதை உணர்ந்து பாடியுள்ளார்கள். உலகிலுள்ள சமயங்களின் சாரமான கருத்துகள் யாவும் இப் பாடல்களில் குருநாதரின் சட்டநெறிக்கு உகந்தனவாக இருப் பதை உணர வைத்திருக்கின்றார்கள்.

ஆசிரியர் பாலகவி. திரு. எம். கே. வேங்கடராமன் அவர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். தமிழை முறையாக எவரிடமும் பாடம் கேட்காதவர். சமஸ்கிருத மொழியைப் பயிலாதவர்கள். ஆயினும், பாடல்களின் இலக்கியப் பாங்கும், கவிதை நயமும், படிப்பவர்களைப் பரவசப்படுத்தும் பான்மையன. இளமைப் பருவத்திலேயே கவி புனையும் ஆற்றல் நம் ஆசிரியர் அவர்களுக்கு இறைவன் அருளால் உதித்திருந்தது. பெரும் புலவர்களும் போற்றிப் படிக்கும் அத்துணை நலங்கள் நிறைந்த இப்பாடல்கள் ஆண்டவர் அருளால் ஆசிரியர் அவர்கள் வழியாக அளிக்கப் பெற்றவை யென்றேகொள்ளுதல் வேண்டும். பாடல்களில், வடமொழிச் சொற்களில் அரிய பொருளுடையன பல பயில்கின்றன. அவையும் அருள்வளத்தின் பாற்பட்டனவே.

ஆசிரியர் அவர்கள் சைவ, வைணவ அருட்பாடல்களை உணர்ந்து உணர்ந்து படித்திருக்கின்றூர்கள் என்பது பாடல்களின் பாங்கினைக் காணும்போது இனிது புலனுகின்றது. புலமை சான்ற கவிஞர்களும் போற்றிப் புகழும் பான்மையுடைய வாயினும், இப்பாடல்களில், திருவருட்பா பாடல்களின் எளிமையும், இனிமையும் சேர்ந்து பொலிகின்றன. சிறிது தமிழ் படித்தவர்களும் இலேசாகப் புரிந்து கொள்ளும்படி பாடல்கள் அமைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

பற்றற்ற நிலையினராக விளங்கும் இவ்வருட் கவிஞர், தமது அறுபத்து ஒன்ரும் பிறந்த நாள் சிறப்பில் இக்கவிதை நூல் வெளிவர உதவியது பெரிதும் பொருத்தமாகும். பத்தினை அறுத்து, இறையருளில் ஒன்றும் திருவுள்ளத்தை அனைவரும், இப்பாடல்களைப் பயில்வதால் பெற வேண்டும் என்பது அவர்களது உள்ளக்கிடக்கை. "அறு பத்து:ஒன்று" என்று அடியவர்களை யுள்ளிட்ட அருள் நாட்ட முடைய எல்லோரையும் அழைக்கின்ருர் நம் அருட்கவிஞர். இன்னும் பல்லாண்டு அவர்கள் அருள் வாழ்வு வாழ்ந்து வரவும், அடியவர்களும் மற்ருரும் உய்வதற்கான நெறி முறைகளையும், அவற்றைத்தம் அகத்தே கொண்ட கவிதைகளையும் ஆக்கி யளித்து வரவும், ஸ்ரீகுருபரனுரின் திருவடிகளை வழுத்துகிறேன்.

'தமிழ் மணம்'<br>
சென்னை-30,<br>
14—9—1976.

கி. இராமலிங்கம்.

ஸ்ரீ:

# அணிந்துரை

ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபந்ந வித்வான்

**உயர் அருள் திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள்**

ஊனக்கண்ணால் உணர முடியாத உத்தமனான ஆண்டவன், உண்மை உணர்ந்து ஒழுகாது, வீணே அழியும் ஆன்ம கோடிகட்காகத் திருவுளமிரங்கி 'பீதக ஆடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' என்கிறபடியே ஞானாசாரியனாக வடிவு கொண்டு, நல்லுபதேசத்தாலும், நன்னடையாலும் நாட்டை வாழ்விக்கின்றான் என்பது நல்லோர்தம் துணிபு. நம் முன்னோர் இதனை உணர்ந்தே 'குருவே தெய்வம், குருவே யாவும்' என்று உறுதி கூறினர்.

ஆண்டவனை அடைந்து வழிபடுதல் அரிது; ஆசாரியனை அடைந்து வழிபடுதல் எளிது.

நம்மாழ்வாரை அன்றித் தேவு மற்றறியாத மதுரகவி ஆழ்வாரும்,சொரூபானந்தரை அன்றி வேறறியாத தத்துவராய சுவாமிகளும் இதற்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர்கள்.

இக்காலத்துத் தமது உபதேசத்தாலும் அனுட்டானத்தாலும் பல வியத்தகு செயல்கள் புரிந்து, புகழுடம்போடு விளங்கும் இரெட்டியப்பட்டி குருநாத சுவாமிகள் சிறந்த ஞானசாரியர்களுள் ஒருவர் ஆவர்.

இவரைப்பற்றிய 'அருள் நெறிமாலை' எனப் பெயரிய இத் தொகுப்புத் தோத்திர நூல் மிகவும் போற்றத் தக்க நூலாகும். ஞானாசாரியன் பெருமையைத் தோத்திர வடிவில் விளக்குவது, கற்றாரையும் கல்லாரையும் களிப்புறச் செய்வது, படிக்கப் படிக்க 'நவில்தொறும் நூல் நய'த்துக்கு எடுத்துக்காட்டு.

திருஞான சம்பந்தர் அருளிய திருக்காளத்தித் தேவாரம் 'சந்தமாரகிலொடு', திருநீற்றுப்பதிகம் 'மந்திரமாவது நீறு' எனும் பாடல்களை அடியொற்றி—பக் 24. இறையருளியல்பில் 'இயலென இசையென', பக் 44. திருநீற்றின் மகிமையில் 'அருளை வளர்ப்பது நீறு' எனத் தொடங்கும் பாடல்களும் ஓசை நயத்துக்கு எடுத்துக் காட்டுகள்.

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்துள் முறையே திருநல்லூர்த் திருத்தாண்டகம் "நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்", திருப்பூவணத் திருத்தாண்டகம் "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்", திருவையாறு திருத்தாண்டகம். "ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்பனவற்றை ஒட்டி, பக். 29ல்"கலைகள் பலப்பல வைத்தார்", பக். 32ல்"அண்டமெலாம் தானாய அருமை தோன்றும்", பக். 85ல் "ஒருவருமே உரைப்பரிதாம் உயர்நற்சட்டம் உலகினுக்கே உரைத்தினிதோம் பொருவர் நீரே" எனத் தொடங்கும் பாடல்கள் பயன் தரத்தக்கவைகளாம். வடலூர் வள்ளலாரின் இசைப்பாடல்களை ஒட்டிய—பக். 103ல் 'தெண்டனிட்டேனென்று சொல்லடி', பக். 105ல் காதலின்பம் வேண்டி நின்றேன் வெண்ணிலாவே எனவரும் பாடல்களும்; கவிச்சக்ரவர்த்தி பாரதியாரின் பாடலைத் தழுவிய பக். 76ல் "என்றும் எங்கும் உள்ளவனே வா, வா, வா." என்னும் பாடலும் இசை நயத்துக்கு எடுத்துக்காட்டுகள்.

'கூறு பழஞ்சூத்திரத்தின் கோள்' என்பதற்கிலக்காக, முன்னோர்தம் சொற்களையும் கருத்துக்களையும் எடுத்தாளும் திறனும் இதனுள் நிரம்ப உள. அவற்றுள் சில:—

திருவாய்மொழி-முதற்பாசுரத்துள் ஒவ்வோர் அடியிலும் முதலிலுள்ள 'உயர்வற', 'மயர்வற', 'அயர்வறு', 'துயரறு' என்ற சொற்களை, பக். 84—பாடல் 9ல் அமைத்துள்ளதும்,

திருவாசகம் சிவபுராணத்துள் வரும் 'வேகம் கெடுத்தாண்ட வேந்தன், திருச்சதகத்துள் 10. 6. "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்ற சொற்றொடர்களைப் பக். 68. பாடல் 7ல் "வேகம் கெடுத்தெனையாண்டருள் விபு" எனவும், பக். 83—பாடல் 4ல் "வித்தின்றி விளைவு செயும் விபுவே" எனவும் ஆண்டுள்ளதும்,

தாயுமானார்தம்—'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'அங்கிங்கெனாதபடி எங்கும்' என்பனவற்றைப் பக். 67—பாடல் 12ல் "அவனன்றி ஓரணுவும் அசையாதெனும் தூய அறிவுரை விளக்கமுதமே! அங்கிங்கெனாதபடி எங்கெங்குமாய் நிறைந்தருள் அறிவுணர்த்தமுதமே! "எனப்போற்றியமையும்,

பெரியபுராணம்—வம்பறுவரிவண்டுச்சருக்கம், திருஞானசம்பந்தர் புராணத்துள் முதல்பாடல் 2ம் அடி—'பூதபரம்பரை பொலியப்புனிதவாய்' என்பதனைப் பக். 41. பாடல் 1ல் 'பூதபரம்பரை பொலியப்புனிதம் மிக ஒலிக்கும்' எனக் காட்டியமையும் உள்ளத்துக்கு உவகை தருவனவாம்.

திருநாவுக்கரசர் திருவாரூர்த் திருத்தாண்டகம் 7, 'முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்' என்ற திருத்தாண்டகத்தின் கருத்தினை, ஒரு முறைக்குப் பத்து முறையாக—பக்கம். 121ல் 48. 'தலைவன்தாள் தலைப்படல்' என்ற தலைப்பில் "காதிலவன் திருநாமம் கழறக்கேட்டாள்" என்று ஆரம்பித்து விளக்குவது உள்ளத்தை உருக்குவதாகும்.

ஆண்டவனுடைய ஆயிர நாமத்துள், 'அன்னம், அன்னாத;' என இருபெயர்கள் உண்டு; அவற்றின் பொருள், உணவும், உண்பானும் அவனே என்பது. அவன் நமக்கு உணவாகவும், நம்மை அவன் உண்பானாகவும் விளங்குவது ஆண்டவனுடைய வியத்தகு செயல் அல்லவா? இதனைக் குருநாதர் பாலும் ஏற்றி பக். 116ல் முழுதும் எதுகையாக உள்ள 43. 'உருகு வைப்பார்' என்ற தலைப்பில்,

> 'பருகு பால் பாகு எனவே என்னை மாற்றுவார்—தன்னைப்
> பருகவைத் தென்னை யவர் பருகிடு வார்'

என்று பாராட்டும் திறம், பலகாலும் படித்து இன்புறத்தக்கதாகும்.

இத்தகைய அரிய பெரிய தொகுப்பு நூலின் ஆசிரியர் மதிப்புக்குரிய பாலகவி வேங்கடராமன் அவர்கள். இவர்களைத் தமிழ்நாடு அறியும்; இன்றும் பாலகவியாகவே விளங்குகிறார்கள். இப்பெரியாரின் மணிவிழா நினைவாக, இவர்தம் பல நூல்களிலிருந்து 61 தலைப்புக்களில் அன்பர்களால் தொகுக்கப் பெற்றதே இந்நூல். இவர்கள், தம் குருநாதர் பால் கொண்ட ஆராக்காதலும், அனுபவ நிலையும் இந்நூல் பக். 108ல் 'அருட்குறிகேட்டல்' என்ற தலைப்பில் உள்ள பாடலால் அறியலாம். இப்பெரியாரின் அருமையும், பெருமையும் இத்தொகுப்பு நூலினால் நன்குணரலாம்.

இவர்கள், 'அடியவர்கட்கு ஆரமுத' மாகிக் குருநாதர்தம் சீரை உளமுருகப் பருகி, இன்ப வடிவாகி நீடு வாழ, எல்லாம் வல்ல எம்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

வாழ்க குருநாதர்! வாழ்க பாலகவி!!

வி. பூதூர். P. O.<br>(வழி) வளவனூர்,<br>விழுப்புரம் R. M. S.<br>20—8—76.

இங்ஙன்,<br>**கி. வேங்கடசாமி.**

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# அருள் சட்ட மணி மண்டபம்

**உ**லகம் தோன்றிய நாள் முதலாக அருளாளர்கள் கண்ட கனவு நனவாகி, எல்லா மக்களும் முத்தி பெறும் பொருட்டு, எல்லா மதங்களின் சாரங்களையும், மக்கள் அனுசரிக்கும் நித்ய கர்ம விதிகளாக எளிதில் ஆக்கித் தந்து, அருளாட்சி புரிந்து வரும் அண்ணல் அமர்ந்திருக்கும் அருள் மணி மண்டபத்தின் இயல்பை ஆயிரம் நாக்கொண்ட ஆதிசேடனாலும் கூற இயலாது எனின், இச்சிறியேன் எங்ஙனம் கூறவல்லேன்? எனினும், என துள்ளும் உறைகின்ற அவ்வண்ணலின் அருளால், அவர் உணர்த்தும் அளவு அறையலுற்றேன்.

உலக உயிர்கள் இறைவனை அடைய முடியாதபடி தடுத்து நிற்கும் **ஆணவம், மாயை, கன்மம்** என்னும் மரங்கள் அடர்ந்த காடுகளை வெட்டி, **நம்பிக்கை** என்னும் பள்ளம் தோண்டி, **சத்சங்கம்** என்னும் கற்களுடன், **இறையுணர்வு** என்னும் பசை கூட்டி அமைக்கப் பெற்ற கடைக்காலின்மேல், அம் மணிமண்டபம் கட்டப் பெற்றுள்ளது.

அம் மண்டபத்தின் ஒளி எல்லாத் திசைகளிலும் வீசுகின்றது. முதலில் நான்கு தூண்களோடு கூடிய முகப்பு மண்டபத்தின் அமைப்பைக் காண்போம்.

விடியல் நீராட்டம், மருந்தருந்தாமை, ஞானநிட்டை, அடியார் உறவு என்னும் நான்கு தூண்களைக் கொண்ட அம் முகப்பு மண்டபம், உலக மயக்கம் என்னும் கோடையால் வருந்தித் தளர்வுற்று வரும் உயிர்களுக்குக் குளிர்ந்த நிழலைத் தரும் தரு போன்றது.

அம் மண்டபத்தை அடுத்து, பச்சை நீர்ப் பழக்கம், வெந்நீர் தவிர்த்தல், வந்தனை வழிபாடு, மரக்கறி உணவு, பஞ்சமா பாதகம் தவிர்த்தல், நம்போல் உயிரை நாடாமை, நாளை கோளை நம்பாமை, மணி மந்த்ரம் மருவாமை, பிரார்த்தனை செய்து கொள்ளாமை, வெள்ளிக்கிழமை விரதம், ஆண்டவர் நாம மனனம், இறந்தவர்க்கு இரங்காமை, சமாதி, அறமன்றம்

அணுகாமை, உடல் பொருள் ஆவி ஒப்படைத்தல், சட்ட அனுபவம் ரகசியம் என்னும் ஒப்பற்ற பதினாறு தூண்களைக் கொண்ட உள்மண்டபம் காட்சி யளிக்கும்.

**இயற்கைநெறி பிறழாமை** என்பதே அம் மண்டபத்தின் பொற்சுவர்களாகும். **சோதனைகளில் தளர்வுறா உறுதி யுடன் அருள் துணைகொண்டு வெற்றிபெறல்** என்னும் நவமணிகள் அச்சுவரில் பதிக்கப் பெற்றுள்ளன.

அம் மணிமண்டபத்திற்குத் **தூய அன்பு** என்ற கூரை அமைந்துள்ளது. அக்கூரைக்கு மேல் **நிட்டானுபூதி** என்னும் கலசம் விளங்குகின்றது அக்கலசத்துக்கு மேலே **அத்துவிதக் கொடி** மிகப் பொலிவுடன், "எல்லோரும் இங்கே வந்து அமைதி பெறுங்கள்! முத்தி அடையுங்கள்" என்று அழைப்பது போல் பறக்கின்றது,

மண்டபத்தின் தரை **பக்தி** என்னும் சந்தனத்தில் **ஆர்வம்** என்னும் பனிநீர் கலந்து மெழுகப் பெற்றுள்ளது. நாற்புறமும் **அருட்சட்ட அனுபவம்** என்னும் முத்துச் சரங்கள் தொங்க விடப்பெற்றுள்ளன.

அம்மண்டபத்தின் நடுவே ஒரு **தெய்வக் கொள்கை** என்னும் விட்டத்திலிருந்து தொங்கவிடப் பெற்றிருக்கும் சைவம், வைணவம், இஸ்லாமியம், கிறித்தவம் என்னும் நான்கு பொற்சங்கிலிகளால் இணைக்கப் பெற்ற **சர்வமத சமரச சன்மார்க்கம்** என்னும் ஊஞ்சற் பலகையின் மீது, சிறப்பாக அருட்சட்ட அடியார்களையும், பொதுவாக எல்லா உயிர்களையும் காப்பான் வேண்டி வலது திருக்கரத்தில் தாமரையையும், நெறி தவறுவோரைத் தண்டித்துத் திருத்துவான் வேண்டி இடது திருக்கரத்தில் பொற்பிரம்பையும் ஏந்தி, கருணை நறுத்துளிக்கும் திருநயனங்களால் அனைத்து உயிர்களையும் கடைக்கண் பாலித்து **அண்ணல் குருநாதர்** அமர்ந்திருக்கின்றனர். அருட்சட்டம் என்ற புத்தகம் அருட்பொலிவோடு அவர் மடியில் திகழ்கிறது.

ஆயிரம் பண மகுடம் கொண்ட **ஆதிசேடன்** வெண் கொற்றக் குடையாக விளங்குகின்றான். **மெய்ஞ்ஞானம்** என்னும் விளக்குகள் எப்பக்கமும் சுடர்விட்டு எரிகின்றன. அருந்தவசிகளாம் அருளாளரின் ஆசிகள் அங்கு குளிர் தென்றலாக உலாவுகின்றது. இறைவன் திருநாமம் கேட்டு

உருகுகின்ற உள்ளம் என்னும் தூப மணம் கமழ்கின்றது. தன்னலமற்ற சேவை என்னும் கற்பூர தீப ஒளி கவினுறத் திகழ்கின்றது. —(ஆண்டவர் அருள்)

அம் மணிமண்டபத்தின் உள்ளே நுழைந்து ஆண்டவர் அருளைப்பெறும் பேறு பெற்றவர்கள் **அருட்சட்ட அடியார்களாவர்.** அவ்வருட் சட்ட மாண்பினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விழைபவர்கள், 'செந்தமிழ் விளக்க வள்ளலார்', 'ஆட்சிச் சொற்காவலர்', 'சாந்த சீலர்' உயர் அருள் திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ , அவர்கள் இயற்றியுள்ள **'வழி காட்டும் வான்பொருள்'** என்ற நூலில் கண்டு உணரலாம்.

## அருள்நெறி மாலை

இத்தகு சிறந்த அருள் நெறியைத் தந்து, அரும் பெருந் துணையாயிருந்து பேணி, உயர்நிலைக்கு உய்த்தவண்ணம் அருளாட்சி புரிந்து வரும் குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகளைத் துதிக்கும் முறையில் அமைந்துள்ள பாடல்களில் 61 தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து வெளியிட வேண்டும் என்ற அருளாணைக்கிணங்க 'அருள்நெறி மாலை' என்னும் இந்நூல் வெளியிடப் பெறுகிறது.

யாப்பிலக்கணம் ஏதும் பயின்றறியாத, அருள்ஞான அனுபவம் பழுத்திராத இச்சிற்றடிமையை உள்ளிருந்து ஊக்கி, இத்துதிப் பாடல்களை எழுதுவித்தருளிய ஸ்ரீ குருபரம்பொருளின் அருட் பெருங்கருணை அளவிடற் கரிதாகும்.

பெருங்கருணை கொண்டு இப்பாடல்களைக் கேட்டருளி, அருளாசி வழங்கி யருளிய பிள்ளையார்குப்பம் உயர்பெருந் தவத்திரு. அருட்சக்தி அன்னையார் அவர்களின் பொன்னார் திருவடி மலர்கட்கு இவ்வடிமையின் உளம் கனிந்த அன்பும் பணிவும் என்றும் உரியன.

இந்நூலை வெளியிடப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட அருள் நலம் சிறந்த மணி விழாக் குழுவினர்க்கும், இந்நூலுக்கு முன்னுரை, அணிந்துரை, பரிந்துரை, சாற்றுக்கவி முதலியன உதவி யருளிய பெருந்தகையாளர்கட்கும், குறைந்த நேரத்தில்

நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த காஞ்சிபுரம் துரை அச்சகத்தினர்க்கும், அச்சிடுகையில் பிழை திருத்தம் புரிந்து உதவிய காஞ்சிபுரம் 'வித்வான்' உயர்திரு. பு. மா. ஜெயசெந்தில்நாதன் அவர்கட்கும், படங்களையும், மேல் அட்டையையும் அழகுற அச்சிட்டுத் தந்த சென்னை சூப்பர் பவர் அச்சகத்தினர்க்கும், நல்ல முறையில் கட்டு (Bind) அமைத்துத் தந்த சென்னை அம்பாள் பிரிண்டர்ஸ் உரிமையாளர் அவர்கட்கும் இவ்வடிமையின் உளம் கனிந்த நன்றி உரியதாகும்.

இந்நூல் வெளிவர சொல், பொருள், செயல் ஆகிய வகைகளில் உதவிய அனைவர்க்கும், இத்துதி நூலைப் படிப்பவர், கேட்பவர், குருபரனாரின் அருள் நெறியை அன்புடனும் உறுதியுடனும் பேணும் அருளடியவர் அனைவர்க்கும், எல்லாம் வல்ல ஸ்ரீ குருபரம்பொருளின் அருட்பெருங் கருணை இகபர நலங்கள் அனைத்தும் வழங்கி என்றென்றும் காத்தருளுமாக!

இங்ஙனம்,

ஆண்டவர் அருள். அடியார்க்கு அடியன்,

**சற்குரு தாசன்,**

---

**சாற்றுக் கவி**

**[தவந்திரு. காஞ்சிபுரம் தாய் அவர்களின் திருத்தந்தையார்]**

அன்பால் உயிர்களை ஆளும் இறையை
நன்பாப் பலவால் நயமுறப் பாடி
இன்சொற் கொண்டே எழிலுறப் பிணைத்து
என்பையும் உருக்கும் நன்னிலை எய்த
எங்களை ஊக்கும் இன்கவி புனையும்
உங்கள்நற் பணியைத் தொடர்ந்திங் குளுற்ற
ஆறணி சடையோன் ஆரருட் பெருக்கும்
கூறரி தாம்சற் குருவருள் துணையும்
என்றும் இருக்க ஏத்தி வாழ்த்துதும்
நன்று வாழியநீர் நற்பால கவியே.

காஞ்சிபுரம்
1—9—1976

**நா. சுந்தரராஜ முதலியார்.**

## உள்ளுறை

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

# அருள் நெறி மாலை

## 1. அகண்ட பரிபூரணம்

அகண்டபரி பூரணம் சச்சிதா னந்தம் ஞா
ஞனுபவ சுகம்அட் சரம்
அருவுருவம் அருவம்உரு வம்பஞ்ச பூதபே
தாதிகுண பேத ரூபம்
அகாரமும் உகாரமும் மகாரமு மெனத்திகழ்
*அதிட்டான மூல மந்த்ரம்
அகிலாண்ட கோடியினி துண்டாக்கு காரணம்
அலங்கார பரிபா லனம்
அவையழிவு றச்செய்சங் காரம் திரோபவம்
அநுக்கிரகம் அசலம் அமலம்
ஆதித்த சந்த்ராக்னி ஜோதி சொரூ பம்ஞான
ஆகாச தத்வ மூலம்
ஆரண ரஹஸ்யார்த்தம் ஆகம ரஹஸ்யார்த்தம்
அதிசூக்ஷ்ம போத ரூபம்
அத்வைத சித்தாந்த நிர்த்தார ணம்புரியும்
ஆசார்ய ரூப அமிர்தம்
ஆதிகா ரணம்ஆதி பகவத்சொ ரூபம் ஷ
டாதார சக்ர வடிவம்
ஆதார லக்ஷணம்ந லைம்பத்தொ ரக்ஷரம்
†அநாகதம் அனந்த சொரூபம்
அருணோதயம் போத அருணாசலம் கோடி
அவதார நாம ரூபம்
அவிக்கினம் ‡அநாமயம் அகோசரம் அபேதஞா
ஞனுபூ திப்ர மாணம்

---

*அதிட்டானம் = நிலை, †அநாகதம் = அறியப்படாதது,
‡அநாமயம் = நோயின்மை.

அட்டாங்க யோகசாம் ராஜ்ஜியம் மகத்துவம்
அணுத்துவம் *அதீதம் °அதுலம்
அபிடேக தத்துவா னுக்ரக விசேடணம்
அபேட்சாதி ரகிதம் அபயம்
அபரோட்ச ஞானனு பவவிலாசம் கோடி
ஆதித்த ஜோதி ரூபம்
அனந்த கல்யாண குண காம்பீர்யம் ஏகசக்
ராதிபத் யம்ஷ டாந்தம்
அந்தர்முக பக்தஜன பாலனம் சௌந்தரியம்
அதிருஷ்டம் †அப்ர மேயம்
அகளங்க சிவயோக கைவல்யம் மெய்ஞ்ஞான வீடுபேறு
அமிர்தப்ர வாக ‡சுகிர்தம்
அபரிமித மாம் ஆன்ம வர்க்கரட் சணதத்வம்
ஆதிமத் யாந்த ரகிதம்
அமரகண வந்திதம் சாதுஜன சேவிதம்
அநுஷ்டான வேதா கமம்
அந்தராத் மானுபவம் ஆதாரம் ஆதேயம் தாங்கப்படுவது.
ஆகாரம் அந்த ரிட்சம்
ஆசா நிவாரணம் அநாயாசம் ஆசாரம்
அநுகூலம் மலநா சனம்
அதிதீவி ரப்பக்கு வர்க்கரு கிருந்திடர்
அகற்று கருணை சமுத்ரம்
அதிசீக்கி ரத்திலருள் தரவல்ல செந்நெறி
யளித்தோம்பு குருசொ ரூபம்
அதி நுட்ப மாம்பகுதி யாவையும் விளக்கியருள்
ஆசார்ய மோன வடிவம்
அதிமதுர மான ஒரு சொல்லருளி யடியவரை
அருகீர்க்கும் இன்ப வுருவம்
அருளழகு திசழுமுரு வோடுலகின் மீதுதித்
தருள்மாரி பொழியு மேகம்
அதிசயச் செயல்பலவும் அடியா ரிலங்கள் தொறும்
ஆற்றவல ஞான §சுப்ரம்

---

*அதீதம் = கடந்தது °அதுலம் = உவமையின்மை,
†அப்ரமேயம் = அளக்கப்படாதது, ‡சுகிர்தம் = இன்பம்
§சுப்ரம் = மிகும் ஒளி

அற்புதம் பற்பலவும் அரை நொடியி லேபுரியும்
ஆற்றல் மிகு புனித உருவம்
அட்டமா சித்தித் திறன்விளங் கப்பற்பல்
அருளாடல் புரிகுஞ் சரம்
அணுவளவும் அசையா மனப்பத்த ருள்ளத்
தமைந்தின்ப மூட்டு தெய்வம்
அனவரத மும்பிரிவி லாதொன் றி உயிர்தொறும்
அருட்பூர்ண முதவு பிரமம் 1

இகம்பர மிரண்டுமினி துலகுயிர்க ளெல்லாமும்
எய்திட விளங்கு தீபம்
எவ்வுருவில் நாடிடினும் அவ்வுருவில் வந்தன்பர்
இடர்நீக்கு கருணை வடிவம்
எப்பொழுதும் எல்வுயிர்க் கும்பசி யுறும் போதில்
இனிதூட்டு சுரபி யுருவம்
எப்பொருளை யெவ்வுயிர் விழைந்தாலு மீந்தருளும்
இனியகற் பகவி ருட்சம்
எவ்வண்ணம் எவ்வின்பம் எய்திட விழைந்தாலும்
ஈயவல ஆற்றல் வடிவம்
எத்தனைவி தக்குற்றம் அன்பர்செயி னும்பொறுத்
தினிதோம்பு குணபூ தரம்$
எங்கெங்கு நோக்கிடினும் அங்கங்கு மாய்நிறைந்
தின்ப நல மீயும் அமுதம்
எப்பிணிகள் வந்திடினும் அப்பிணிகள் அரைநொடியில்
ஏகவருள் புரியவு டதம்
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காம லேயிருந்
தெனையோம்பும் இதய நாதம்
இருவினைமும் மலம் நீறு படமூல வெங்கனல்
எழுப்பியரு ளாதி மூலம்
ஏகாட்ச ரப்பொருளை எவ்வுயிர்க ளுக்குள்ளும்
இனி துணர்த் திடுசு போதம்
ஏழுதா துக்களுளும் அருளமுது பாய்ச்சியே
இன்பமய மாக்கு தெய்வம்
எழில்மிக்க சிவஞான அனலெங்க ணும்பரவ
இசைமீட்டு வீணை யுருவம்

---

$பூதரம் = மலை

இயம்பிட வொணுதசிவ போகவிளை வெய்திட
இலங்குநட மிடுநா யகம்
ஏமனை யுதைத்துமொரு காமனை யெரித்து முயர்
இன்பவிளை வருளும் வீரம்
இணையிலாச் சின்முத்ரை காட்டியெல் லாப்பற்று
மில்லாம லாக்கு தாரம்
ஏகாந்த சுகபோக மீந்திட வுயிர்த்திரளை
இனிதே திருத்து புனிதம்
எண்ணவு மியம்பிடவு மிகவரிய பேரருளை
எளிதுதவு காருண் ணியம்
இனியகனி வர்க்கம் பிழிந்தெடுத் திடுமிரத
மெனவுளூ றும்ப்ர வாகம்
இளம்பதப் பாகுதேன் கற்கண்டு பாலமுத
மெனவுள் ளினிக்கு மதுரம்
ஈடிணையி லாக்கல்வி கற்பிக்குமொரு நிலையம்
எத்திருவு முதவு நிதியம்
எறும்பு முதல் யானையீ ருகவுள வுயிர்தொறும்
இலங்கியருள் நல்கு கோலம்
எனையும் திருத்திட விழைந்தெத்தனை முறையும்
எச்சரித் தாள் சுசீலம்
இகழ் வொரணு வளவுமெனை யெய்தாத வணமோம்பி
இன்னருள் வழங்கு சுகுணம்
இடர் கோடி யெய்திடினும் எனையணு கொணுதபடி
இனிது காக்கும் சுபாவம்
இளைப்புற்ற போதெலாம் இணையிலாத் துணையென
இருந்துதவி புரியு மார்வம்
என்னன்னை என்றந்தை என்சுற்ற மென்னட்
பெனச்சூழ்ந்து பேணு சத்யம்
என்குரவன் என்தெய்வம் எங்கள் குல தெய்வதம் என்
இஷ்டதெய் வத்தின் உருவம்
என்னில்ல மென்பூமி யினிதது தரும்விளை
வெனக்குற்ற செல்வம் வருவாய்
என்போகம் என்யோகம் என்சக்தி என்புத்தி
என்பத்தி என்னனு பவம்
என்தேகம் என்கரணம் என்னெண்ணம் என்வார்த்தை
என்செய்கை என்தத் துவம்
என்கல்வி என்கேள்வி என்னுயிர்ப் பென்னுவி
எனதுயா னற்ற இன்பம்

சந்திகழ் தலம் தீர்த்தம் மூர்த்தியென எங்கும்
சமைந்தருள் செயும்த யாளம்
தலந்தொறும் அமர்ந்தடியர் குழுவையரு கீர்த்தருள்
தரும் கருணை யின்ப்ர வாகம்
தவம்பெருக நாடிவரு தக்கவரை யீர்த்தருகு
தங்கவைக் கும்தா யகம்
சகலவுயிர்களையும் கடைக்கண்ணுல் நோக்கியருள்
தருமெண் குணச்சா கரம்
சார்பற்றெ லாம்நீக்கி உண்மையன் பாய்அருட்
சந்தானம் நல்சற் புதம்
தரணிமிசை வதிமனிதர் தவமிக்க முனிவர்விண்
தலம்வாழும் அமரரெல் லாம்
தகவொடு பரிந்துவந் தன்பால் வழுத்திடத்
தண்ணருள்செ யும்ப்ர தாபம்
சக்தி பல கோடியாய்ச் சக்தர்பல கோடியாய்ச்
சார்ந்து செயல் புரிவி வேகம்
சகளநிட் களமாகி எங்கெங்கும் மெய்யொளி
தரும்சூரி யப்ர காசம்
சவிகற்ப நிருவிகற் பங்களாய் யாவையும்
தாங்கியர சாள்ப்ர பாவம்
சங்கற்ப சகிதமாய்ச் சங்கற்ப ரஹிதமாய்ச்
சமையும் ஞானப்ர சித்தம்
சத்துமாய்ச் சத்திலமை சித்துமாய் மேலாம்
சதானந்த மாம்ப்ர தேசம்
தகைமையருள் சித்தாய்ச் சிதானந்தமாகி யொளிர்
சச்சி தானந்த நிலையம்
தாரித்ர நாசனம் சௌபாக்ய தாயகம்
சர்வசா மர்த்யம் நிபுணம்
சரவசர வர்க்கமாய் மேவுமுயிர் களையெலாம்
தக்கவா ருேம்பு தருமம்
தாமத மிராஜத மெலாம் நீக்கி யொப்பற்ற
சத்வவிளை வேற்று வேதம்
சாலோக சாமீப சாரூபம் நல்கிஉயர்
சாயுஜ்யம் அருளு பிரமம்
சாதுஜன ரக்ஷணம் துஷ்டஜன சிக்ஷணம்
சமயமத சாரம் அமலம்
தவறுகளெலாம் பொறுத் தொப்பற்ற தவ விளைவு
தரவல்ல வொருதா ரகம்

தாழ்வெலாம் நீக்கியுயர் வாழ்வெலா மீந்தருள்
தயா சொருப மான சமுகம்
சாந்தியமு தூறுதடம் ஒப்புயர்வி லாமோட்ச
சாம்ராஜ்ய சுகநா யகம்
சர்ப்பம் நிகர் குண்டலியை நன்றே நிமிர்த்தியொளி
தழைவுறப் புரிவல் லபம்
சங்கட மெலாம் தவிர்த் துண்மையன் போடுமுயர்
தண்ணளி பரப்பு சௌம்யம் *
சஞ்சலமொ ரணுவளவு மெய்தாத வாறருள்
தரும்கருணை யின்வி ளக்கம்
தர்க்கமிடு மனதினுளும் ஞானமென மேவிச்
சமாதானம் நல்கு சதுரம் †
சாதனமெலா முதவி யருள்நெறி யிலேயெளிது
சார்வுறப் புரிசௌ ரியம்
சாமர்த்தி யம்பலிக் காதென உணர்த்தியருள்
தன்மையை விளக்கு சகஜம் ‡
தடையனந் தம்வரினும் அவைநீக்கி யருளாம்
தனம்பெறப் புரிதந் திரம்
தக்கன எலாம் புரிய வைத்தலா தனநீக்கு
சன்மார்க்க போத வடிவம்
தழலென வுளேவளர்ந் தறுபகையை நீறுக்கு
தவவடிவம் இன்ப மூலம்
தாபத்ர யம்போக்கி யழியாத சுத்தநிலை
தந்துசாப் பாற்று தஞ்சம்°
சமயமத சாரமெல் லாம்வடித் தேயருட்
சட்டம் அருள் ஞான சரபம் 3/4

உகந்தெனையும் அன்பொடு தடுத்தாண் டருள்புரிந்
தோம்புகரு ணுப்ர சித்தம்$
உலகமாம் தூலம் அத னுள்ளிலகு சூக்குமம்
உரைக்கவரி தாம்கா ரணம்
உணர்வுக்கு ளுணர்வாகி உண்மையா கியபொரு
ளுணர்த்து மேதாவி லாசம்

*சௌம்யம் = சாந்தம், அழகு. †சதுரம் = திறமை
‡சகஜம் = இயற்கை, ஒழுங்கு. °தஞ்சம் = பற்றுக்கோடு, துணை.
$ப்ரசித்தம் = விளக்கம், வெளிப்படை

உயிர்க்குயி ரெனத்திகழும் ஒப்பற்ற தத்துவம்
உயர்வெலாம் நல்கும் விபுலம்$
உடல் பொருளொடாவி யிவை யர்ப்பணம் செய்பவர்
உயிர்த் துணைவ னும் பதித்வம்
உள்ளமெனு மொருமலரை யினிதலர்த் திடநன்
றுதிக்கின்ற சூர்யோ தயம்
உள்ளன் புடன்போற்றும் உத்தமர்க ளுக்கெதுவும்
உதவியா ளும்க டாக்ஷம்
உத்தமோத் தமமான விரதமெல் லாமளித்
தொளிநெறியி லுய்க்கும் விபவம்‡
உய்ந்திடவொ ரெளியநெறி யுண்டெனு உயிர்கட்
குணர்த்துமறை யின்மு ழக்கம்
உணவெனவும் உடையெனவும் உல்லாச வாழ்வெனவும்
உற்றுநல முதவு செல்வம்
உட்கரண மாய்ப்புறக் கரணமாய் உடலாய்
உயிர்த் தொகையு மாம்பெருக்கம்
உலகமாய் நீராகி வன்னியாய் வாயுவாய்
உயர்விண்ணு மாம் ஒடுக்கம்
உபமான உபமேய மென்றமுறை யால்வே
றுரைக்க வொண்ணாத நுட்பம்
உருகவைத் துருகவைத் தணுவுளணு வாக்கியே
உயர்போகம் நல்கும் ஒட்பம்*
உரிமையுட னேயான்ம வர்க்கத்தை யருளின்கண்
உய்க்க ஈர்க்கும் விழுப்பம்
உண்டாக்கி யும்காத்தும் ஒழிவற ஒழித்துமெவ்
வுலகினையு மாளொ ழுக்கம்†
உபாயங்க ளெல்லாம் உணர்த்தி யருள் வாழ்விலே
உயர்வளிக் கும்ப்ர ஸன்னம்‡
உகமெண்ணி லாக்கோடி யாயிடினும் அழியா
❋உரம் தந்து பேணு திட்பம்°
உபதேச மோதியுப நயனம் திறந்தருளை
யூட்டுஞா னப்ரஸா தம்

$விபுலம் = பெருமை,
‡விபவம் = மகத்துவம்
*ஒட்பம் = பேரறிவு,
†ஒழுக்கம் = மேன்மை,
‡ப்ரஸன்னம் = தெளிவு, காட்சி
❋உரம் = வலிமை,
°திட்பம் = திடம், மனஉறுதி.

உபவாசம் நல்கிமவு னத்தில்வைத் திருவினை
யுபாதிதீர்க் கும்ப்ர போதம்
உத்திரட் டாதிக் கடுத்த நன் ஞளிலிவ்
வுலகினிற் பூத்த புட்பம்
உபநிடத சாரமெல் லாம்திரண் டிடுசட்டம்
ஓதியோம் பும்ப்ர சாரம்
உட்பொருள்க ளெல்லாமும் எளிதினி லுணர்த்தியே
உற்சாக மூட்டுற் பனம்‡
உற்பவ மிறப்பென்னு மொருசுழற் குட்படா
உயர் மார்க்கம் அருள்விற் பனம்*
உன்னவைத் துணரவைத் துருகவைத் தேமெத்த
உன்மத்த மாக்குத் தமம்
உன்னத நிலைக் கெனையும் உய்த்திட விழைந்து நல
முதவியீர்க் கும்ப்ர பல்யம்†
உழைப்பினுக் கேற்ற ஊதியமுண் டெனச்சொலி
உழைக்கவைக் கிடுசூத் திரம்
ஊனுறக் கம்காமம் அச்சமிவை யறியா
உளத்தொன்றி யொளிர் பூரணம்
உருக்கமுட னுறுதிமிகு முள்ளத்தி லமுதென்ன
ஊறிநல முதவி ரக்கம்
உறுப்பனைத் தும்திரு வருள்மய மதாக்கனி
வுறப்புரி நெருப்பி னுருவம்
ஊழ்வினை யெலாம்பொடி படுத்திமெய்ஞ் ஞானவமு
தூட்டியுள் ளிணையு மின்பம்
ஓங்கார மாய்முளைத் தன்புமல ராயின்ப
வொண்கனியு மாம் குரவனே.

---

ஒருமுறை தேனுண்ட வண்டு மீண்டும் அத்தேனையே சுற்றிச்சுற்றி வரும். அதுபோல ஒருமுறை இறையின்பம் நுகர்ந்த ஆன்மா, மீண்டும் அதை விட்டு நகருவதில்லை. அதிலேயே தோய்ந்து ஒன்றிவிடும்.

---

‡உற்பனம் = மேன்மை, *விற்பனம் = அறிவு,
†ப்ரபல்யம் = கீர்த்தி.

## 2. பரம்பொருள் துதி

எப்பொருள் களுக்கும் முதற்பொரு ளெதுவோ
எணிலுல காள்பொரு ளெதுவோ
கைப்பொருள் தனினும் மெய்ப்பொரு ளெதுவோ
கருணையாய் ஒளிர்பொரு ளெதுவோ
எப்பொழு தினிலும் எவ்வுயிர்க் குள்ளும்
எங்கணும் திகழ்பொரு ளெதுவோ
அப்பொரு ளினைநன் றகமுறப் போற்றி
அன்பலர் சூட்டியேத் திடுவாம். 1

மூலமும் முடிவும் காணரி தெதுவோ
முழுமைபெற் றிடச்செய்வ தெதுவோ
காலமு மிடமும் கடந்தவொன் றெதுவோ
கணிப்பதற் கரும்பொரு ளெதுவோ
கோலங்க ளனைத்தும் கொண்டவொன் றெதுவோ
குணம்குறி கடந்தவொன் றெதுவோ
சீலமிக் கவருட் டிகழிறை யெதுவோ
அதைத்துதி செய்துபோற் றிடுவாம். 2

போக்குடன் வரவில் லாப்பொரு ளெதுவோ
பொய்கடந் தொளிர்பொரு ளெதுவோ
வாக்கும்நன் மனமும் செயலும்கண் டறியா
வகையினில் திகழ்பொரு ளெதுவோ
நோக்கமுள் ளாக்கச் செயும்பொரு ளெதுவோ
நோன்மைநல் கிடும்பொரு ளெதுவோ
ஆக்கமெல் லாமும் அருள்பொரு ளெதுவோ
அதனையன் பொடும்துதித் துய்வாம் 3

செல்வமெல் லாமும் தருபொரு ளெதுவோ
செல்வமாய்த் திகழ்பொரு ளெதுவோ
கல்வியின் பயனைத் தருபொரு ளெதுவோ
கல்வியா யமைபொரு ளெதுவோ
வல்வினை யனைத்தும் தவிர்பொரு ளெதுவோ
வாழ்வருள் வான்பொரு ளெதுவோ
நல்வள மனைத்து மாம்பொரு ளெதுவோ
அதைத்தினம் நாடியேத் திடுவாம். 4

நினைப்பொடு மறப்பில் லாப்பொரு ளெதுவோ
நிறையளித் தாள்பொரு ளெதுவோ
முனைப்பெலா மடக்கி முழுதருள் புரிந்து
மோனம்தந் தாள்பொரு ளெதுவோ
வினைப்பகை யனைத்தும் பொடிக்கும் நல் வழியை
விளக்கியாள் விழுப்பொரு ளெதுவோ
தனைப்புலப் படுத்தா தொளிர் பொரு ளெதுவோ
அதனையுட் சந்ததம் துதிப்பாம். 5

ஜென்மமாம் பிணியைத் தவிர்பொரு ளெதுவோ
செம்மை மிக் கருள்பொரு ளெதுவோ
கன்மமாம் கடல்வற் றிடச்செய்வ தெதுவோ
கதியெனத் திகழ்பொரு ளெதுவோ
நன்மைக ளனைத்தும் தருபொரு ளெதுவோ
ஞானமிக் கருள்பொரு ளெதுவோ
புன்மயல் தவிர்த்தின் பூட்டுவ தெதுவோ
அதனையுட் போற்றிவாழ்ந் திடுவாம். 6

காரண மனைத்தும் கடந்தவொன் றெதுவோ
கவினெலா மாம்பொரு ளெதுவோ
தாரணை த்யானம் தருபொரு ளெதுவோ
தவநிறை வருள்பொரு ளெதுவோ
பூரண மாகிப் பொலிபொரு ளெதுவோ
பூரணம் செயும்பொரு ளெதுவோ
ஆரண மனைத்து மாம்பொரு ளெதுவோ
அதைநினைந் தினிதுபோற் றிடுவாம். 7

எதுநம தாசை களையெரித் திடுமோ
எதுநமக் கன்பையூட் டிடுமோ
எதுநம தறியா மையையகற் றிடுமோ
எதுநமக் கறிவளித் திடுமோ
எதுநம ததர்ம வழியடைத் திடுமோ
எதுநமக் கறமுணர்த் திடுமோ
எதுநமை யருளில் இனிதிணைத் திடுமோ
அதைத்தொழு தினிதுபோற் றிடுவாம். 8

எதுபொறி புலன்க ளடங்கிடச் செயுமோ
எதுமன மடங்கிடச் செயுமோ

எதுஉப வாசம் பேணஉய்த் திடுமோ
எதுதவம் புரியஊக் கிடுமோ
எதுதிட ஞானம் நல்கியாண் டிடுமோ
எதுபர மோனமீந் திடுமோ
எதுபர மானந் தம்பெறச் செயுமோ
அதனைநன் றேத்தியுய்ந் திடுவாம். 9

எதுமன மயலை யகற்றியாண் டிடுமோ
எதுபர நெறியுணர்த் திடுமோ
எதுமிகு பக்குவம் பெறச் செயுமோ
எதுதுணை யெனத்திகழ்ந் திடுமோ
எதுநம திடர்க ளனைத்தையும் கொயுமோ
எதுநமக் கின்பமூட் டிடுமோ
எதுநம துயிருக் குயிரென வுறுமோ
அதைப்பணிந் தேத்தியுய்ந் திடுவாம். 10

எதுமத மனைத்தின் சாரமா னதுவோ
எதுபுவி வாழ்வருள் வதுவோ
எதுபொயைத் தவிர்த்துண் மையையுணர்த் துவதோ
எதுபய னனைத்துமீ வதுவோ
எதுபிழை தவிர்நல் வழியுணர்த் துவதோ
எதுகரை சேரவுய்ப் பதுவோ
எதுபர சுகத்தை இனிதரு ளுவதோ
அதைநித மேத்தியுய்ந் திடுவாம். 11

எதுமன மொழியைத் தூய்மைசெய் திடுமோ
எதுசெயல் தூய்மைதந் திடுமோ
எதுபுறம் அகமும் தூய்மைசெய் திடுமோ
எதுதவத் தூய்மைதந் திடுமோ
எதுஎன்றும் தூய்மை யாய்ப்பொலிந் திடுமோ
எதனையும் தூய்மைசெய் திடுமோ
எதுஇன்பத் தூய்மை யெய்தவுய்த் திடுமோ
அதைத்தொழு தேத்தியுய்ந் திடுவாம். 12

எதுசத்தி யனைத்தும் இனிதளித் திடுமோ
எதுசித்தி யாவும்நல் கிடுமோ
எதுபத்தி ஞான நெறியுணர்த் திடுமோ
எதுபவப் பிணியகற் றிடுமோ

எதுதுரி யத்தில் இனிதொளிர்ந் திடுமோ
எதுசுக மனைத்தையும் தருமோ
எதுபர முத்தி நலமளித் திடுமோ
அதையுளங் கொண்டிறைஞ் சிடுவாம். 13

எதுஉல கனைத்தி னையும்படைத் திடுமோ
எதுஅவற் றினைப்புரந் திடுமோ
எதுஉல கனைத்தி னையும்துடைத் திடுமோ
எதுஅனைத் தையும்மறைத் திடுமோ
எதுசிறப் பாக அனுக்ரஹம் செயுமோ
எஃதுயிர் தொறும்திகழ்ந் திடுமோ
எதுபல உயிர்க்கு மிதம்புரிந் திடுமோ
அதைநினைந் தானந்தம் பெறுவாம். 14

எதுமுதல் நடுவும் முடிவுமா னதுவோ
எதுமுதல் முடிவிலா ததுவோ
எதுபொறி புலனு லறியொணு ததுவோ
எதுபொறி புலனரு ளுவதோ
எதுமறை யனைத்து மாயொளிர் வதுவோ
எதுமறைக் கெட்டொணு ததுவோ
எதுநித்யா னந்த வாழ்வளிப் பதுவோ
அதிலிணைந் தானந்தம் பெறுவாம். 15

எதுபிழை யனைத்தும் பொறுத்தரு ளுவதோ
எதுபெருங் கருணைசெய் வதுவோ
எதுநித மதிகா லையிற்றணீ ரினிலே
இனிதுமூழ் கிடப்புரி வதுவோ
எதுமருந் தருந்தா நெறியளிப் பதுவோ
எதுபிணி துயர்தவிர்ப் பதுவோ
எதுநிட்டைப் பயனை இனிதளிப் பதுவோ
அதிலொன்றி யானந்தம் பெறுவாம். 16

அன்பு கொண்ட மனத்தராய், பொறுமையோடு, உயிர்கள் நமக்குச் செய்கின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்வோம். இந்நிலையே 'இறை நிலை' எனப்படும்.

## 3. அருள் தந்தை போற்றிப் பதிகம்

[உயிரெழுத்து மாலை]

அமிழ்தினிலும் மிக இனிய தமிழ்வழங்கும்
நாட்டில்அவ தரித்தாய் போற்றி
தமிழணங்கு மழலையுடன் தவழ் நெல்லை
மாவட்டத் தந்தாய் போற்றி
இமையவரும் முனிவரரும் ஏத்தும் இரு
டியர்பட்டி ஏறே போற்றி
சமயசம ரசச்சட்டம் தருகுருவைப்
பெறத்தவம்செய் தக்கோய் போற்றி. 1

ஆவுடைய நங்கையொடில் லறம்பேணி
அருள்வாழ்வாற் றண்ணல் போற்றி
சேவுடையோன் உருவில்வரு திறல்வீர உயர்வு
பத்திரன்பேர் கொண்டோய் போற்றி
ஓவில் புகழ் மிகுசைவ வேளாளர்
திருமரபில் உதித்தோய் போற்றி
யாவரையும் கரைசேர்க்கப் போந்த குரு
பரனையருள் ஏந்தல் போற்றி. 2

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்
டியதூய எம்மான் போற்றி
எவ்வுயிர்பா லும்மிகுந்த இரக்க முடன்
திகழ்ந்திட்ட இயல்போய் போற்றி
செவ்வையுற வேளாண்மை செய்தெவர்க்கும்
நலம்புரிந்த சீரோய் போற்றி
அவ்வும் உவ்வும் மவ்வும் அருள் குருபரனை
அவனிமிசை யீன்றோய் போற்றி. 3

ஈகைமிகு நன்மனத்தொ டிவண்விளங்கி
எவர்க்கும் உத வினியோய் போற்றி
ஓகையுடன் ஓங்கார கணபதியை மகிழ்ச்சி
இல்லினிலேத் தொருவா போற்றி
போகம்உயர் போதம்அருள் சக்திதிருத்
தளிபூசை புரிந்தோய் போற்றி
ஏகநெறி யாம்சட்டம் தருகுருவை
யீன்றருள்பே ரிசையே போற்றி. 4

உண்மையெனும் உயரொளியொ டுலகின்மிசை
உலவியபே ருரமே போற்றி
நுண்மை யெலாம் விளங்கவைக்கும் நோக்கமொடிப்
புவியிலுற்ற நோன்மை போற்றி
மண்மயலுள் அமிழாமல் மாசில்தவம்
நிகர்வாழ்வாற் றிட்டோய் போற்றி
கண்மணியாம் உண்மணியைச் சட்டம் அருள்
ஒண்மணியைத் தந்தோய் போற்றி. 5

ஊருணிநீர் நிறைந்தாங்கிவ் வுலகினருக்
குபகாரம் புரிந்தோய் போற்றி
ஆருளர் இவர்க்குநிக ரெனச் சொலுமா
றள்ளி வழங் கிடுவோய் போற்றி
சீரொடுநற் சிறப்புமிகு தெய்விகப்
பிதாவாகத் திகழ்வோய் போற்றி
பாருளர் விண்ணுளர் மகிழப் பயனருள்சே
யினைப்பயந்த பண்பா போற்றி. 6

எண்ணமெலாம் இறையருள்பால் வைத்த வண்ணம்
இவ்வுலகில் வாழ்ந்தோய் போற்றி
சுண்ணவெண்ணீ றொடுசாந்தம் குங்குமமும்
துலங்குதிரு நுதலோய் போற்றி
எண்ணிலுயிர் களுக்கிறைவி இன்னருளை
மடுத்தினிதீந் திடுவோய் போற்றி
கண்ணகல்ஞா லத்தைநனி திருத்த வந்த
கவின்சேயை யீன்றோய் போற்றி. 7

ஏழ்வகையாம் பவப்பவ்வம் எளிதுகடந்
தினிதுகரை சேர்ந்தோய் போற்றி
ஊழ்வகையாம் பகையனைத்தும் பொடியாக்கி
ஒப்பிலின்ப முற்றோய் போற்றி
தாழ்வெதுவும் அடையாவண் ணம்சிறந்த
தகவோடும் திகழ்வோய் போற்றி
பாழ்படும் இவ் வுலகுயிர்கள் பக்குவம்
பெறச்செய் சிசுப்யந்தோய் போற்றி. 8

ஐயமகற்றித் தூய அருளொளி
பிறங்குமுகத் தண்ணல் போற்றி

மையலின்றி மண்ணுலக வாழ்வைத்தவம்
போல் நடத்தும் மணியே போற்றி
மெய்யொளி மெய்யினில் துலங்க மேன்மக்கள்
வாழ்த்திடவாழ் மேலோய் போற்றி
உய்யுமொரு வழியெளிதில் அருளவந்த
ஒண்சேயைப் பயந்தோய் போற்றி 9

ஒப்புயர்வில் பேரருளின் ஒளியெங்க
ணும் பெருக நோற்போய் போற்றி
செப்பரிய அருட்கருணைத் தேன்சுவையை
எஞ்ஞான்றும் சுவைப்போய் போற்றி
கைப்பொருளின் மெய்ப்பொருளீ தெனக்கருணை
யினைச் சொரியும் கருத்தா போற்றி
மைப்படியும் மனம் திருத்தி யொளிபுகட்டும்
மாண்சேயைப் பயந்தோய் போற்றி 10

ஓங்காரம் ஓவாதுள் ளொலித்திலங்க
உயர்வுற்ற ஒருவா போற்றி
ஆங்காரம் அடையாமல் அன்புமய
மாய்வாழ்வாற் றிட்டோய் போற்றி
தீங்கேதும் வாராத வணம் அன்பர்
கட்குநலம் செய்வோய் போற்றி
தூங்காமல் தூங்கியின்பம் பெறச்செய்குரு
வினையீன்ற தூயோய் போற்றி. 11

ஔவியமா தியஅணுவும் அறியாநல் பொறாமை; தீவினை
லறவாழ்வாற் றிட்டோய் போற்றி
எவ்வமெந்த உயிர்க்குமுறு வணம் நாடும்
இதயமுடை இனியோய் போற்றி
தெவ்வரென்ற அறுவரையுள் ளொடுக்கும் உயர் பகைவர்
தெய்விகநல் லொளியோய் போற்றி
இவ்வடிமை யினைமணந்தா ளருட்குருவை
இனிதீன்ற எந்தாய் போற்றி. 12

அவன் என்றும் இருப்பவன்; எங்கும் இருப்பவன்; அவனைத் தவிர வேறு ஒரு தலைவர் எக்காலத்தும், எவ்வுலகத்தும், எவ்வுயிர்க்கும் இல்லை. அவன் ஏகாந்த நாதன்.

## 4. அருளன்னை போற்றிப் பதிகம்

(உயிரெழுத்து மாலை)

அன்புருவாய் அறவுருவாய் அருளுருவாய்
அவனிமிசை அமைந்தோய் போற்றி
துன்பமெலாம் துடைத் தெவர்க்கும் உதவிபுரி
கருணைமிகு தோகாய் போற்றி
பொன்பிறங்கு மேனி கொள் ஆவுடையம்மை
யெனும் பெயர்கொள் பொற்பே போற்றி
மன்பதைகட் கருட்சட்டம் வழங்க வந்த
மாமணியை யீன்றோய் போற்றி. 1

ஆர்வமெலாம் ஒருருவாய்த் திரண்டதென
அமைந்திலங்கும் அன்னே போற்றி
பேர்வடிவ மொடுபுவியிற் போந்தபர
ஞானசுகப் பெட்பே போற்றி அன்பே
கார்வழங்கு மழைபோலக் கருணைபொழி
காருண்யத் தாயே போற்றி
சீர்மிகுந்த தேசிகனை யீன்றெடுக்கச்
சிறந்ததவம் புரிந்தோய் போற்றி. 2

இல்லறமாம் நல்லறத்தை இனிது நடத்
திக்காட்டும் இனியோய் போற்றி
தொல்லறமே தூய்மைதரும் முழுமைசெயும்
என உணர்த்து தூயோய் போற்றி
கல்லினையும் கனியாக மாற்றவல்ல
கருணைநிறை கற்பே போற்றி
பல்லறத்தின் சாரமெனும் சட்டம் அருள்
பரனை நல்கு பண்பே போற்றி. 3

ஈடிணையில் மாமறையொன் றுள்ளொலிக்க
எச்செயலும் புரிவோய் போற்றி
ஆடிநிகர் மனத்தினில்மா சணுவுமுரு
வகைபுரக்கும் அம்மே போற்றி
தேடியடை தற்கரிதாம் திருவருட்செல்
வம்மிகுத்த செல்வீ போற்றி
கோடிசிசு வேனும் நிக ரிலையெனச்சொல்
குருவையருள் குழகே போற்றி. 4

உத்தமத்தாய் மார்களில் எல்லாம் சிறந்த
உத்தமத்தாய் ஆனாய் போற்றி
சித்தமலம் அணுவளவும் அறியாத
செம்மைமிகு திருவே போற்றி
இத்தலமும் இமையவர்கள் உலகமும் போற்
றத்திகழும் இறைவீ போற்றி
பெத்தரையும் முத்தர்களாய் மாற்று குரு
வினையருள் பிராட்டீ போற்றி. 5

ஊனுடையும் உயர்அருளும் உயிர்களெனும்
சேய்களுக்கீந் தருள்வோய் போற்றி
மாணருள் பெற் றிடவிழையும் மாந்தர் கட்கு
வழியுணர்த்தும் மானே போற்றி
பேணியருள் பெருந்தாயாய் என்றுமெங்கும்
பிறங்குபெருந் தயவே போற்றி
ஆணவமா யாகரும மலமறுத்தாள்
குருவையருள் அமுதே போற்றி. 6

எக்கணத்தும் எங்கும் நிறைந் தெவ்வுயிரை
யும்புரக்கும் இறைவீ போற்றி
மக்களுக்கெல் லாம்இரங்கி மாகருணை
புரிந்தருளும் மாதா போற்றி
திக்கனைத்தும் போற்றிருடி நகரில் அருள்
வாழ்வாற்று சிறப்பே போற்றி
தக்கநெறி தருகுருவைத் தாலாட்டிச்
சீராட்டும் தாயே போற்றி. 7

ஏர் முனையில் வளம் கொழிக்கும் இயல் வேளாண்
மரபில்வரும் எழிலே போற்றி
போர்முனையிற் பகையொழித்தல் போல ஐந்து
புலனைவென்ற பொற்பே போற்றி
சீர்மிகுநல் லிருடிநகர் செய்தவமாய்
வாழ்வாற்று செம்மை போற்றி
பார்மயல் தீர்த் தருட்சட்டம் பாலிக்கும்
குருவையருள் பரிவே போற்றி. 8

ஐங்கரன்தண் ணருளுவாய் ஆரணியின்
சீருருவாய் அமைந்தோய் போற்றி
செங்கரத்தால் எண்ணில் அறம் செய்து புவி
யினைப்பேணும் செல்வீ போற்றி
மங்களமெல் லாம்வழங்கி மாஞானக்
கொடை வழங்கும் வண்மை போற்றி
எங்கள்குரு பரனையிந்தப் புவியிலருள்
எண்ணில்தவ உருவே போற்றி. 9

ஒருமைமிகு மனதில்அரு ளுருவாகி
உயர்வினைத்து மீவோய் போற்றி
இருமைநல மும்வழங்கும் இறைவியென
எங்கும்நிறைந் தொளிர்வோய் போற்றி
பெருமையெலாம் எவ்வுயிரும் இனிதெய்தப்
பெருநோன்பாற் றிடுவோய் போற்றி
அருமையிலும் அருமையென ஒருசேயை
அருளும் எங்கள் அனையே போற்றி 10

ஓமுருவ ஒளிச்சுடரை உள்ளமைத்துண்
மைப்பூசை புரிவோய் போற்றி
காமமுத லாம்பகைகள் கடிந்து நிறை
கருணையுரு வானோய் போற்றி
நேமநிட்டை யனைத்தினிலும் நிகரொருவ
ரின்றிமிளிர் நிமலாய் போற்றி
நாமஉரு வங்கடந்த பரம்பொருளைச்
சேயெனநல் கிடுவோய் போற்றி 11

ஔடதமாய்ப் பிறவியெனும் பிணிதீர்க்க
அமைந்தஅரு ளனையே போற்றி
வெவ்வியஅஞ் ஞானமெனும் இருள்நீக்கும்
விமலபரா பரையே போற்றி
எவ்வெணமும் எம்மொழியும் எச்செயலும்
புனிதமுற அருள்வோய் போற்றி
இவ்வடிமை யைத்தடுத்தாண் டின்பூட்டு
குருவையருள் இறைவி போற்றி 12

## குருநாதர் துதி

# 5. போற்றி—108.

பூரணப் பொருளைக்கண்டு புல்கியின் புறுவோய் போற்றி
பூரணம் பெறக்குற்றாலத் தினிற்றவம் புரிந்தோய் போற்றி
பூரணப் பொலிவோடுள்ள புனிதசற் குருவே போற்றி
பூரணம் எவர்க்கும் நல்கும் பொற்புசால் பரனே போற்றி. 4

அழகு, பொலிவு

அகரமொ டுகரமாகி மகரமு மானாய் போற்றி
பகரரி தானமோனப் பரவெளி யானாய் போற்றி
நிகரறு சட்டமிந்த நீணிலத் தருள்வோய் போற்றி
நுகரரு பரமானந்தம் நுகர்ந்துய அருள்வாய் போற்றி. 8

இருடியர் பட்டியென்னும் எழிற்பதி யுதித்தாய் போற்றி
பருதிபல் கோடியென்னப் படர்ந்தபே ரொளியே போற்றி
கருதிய தனைத்தும்நல்கு கற்பகத் தருவே போற்றி
சுருதியின் முடிவிலோங்கு சுகநிறை வானாய் போற்றி. 12

ஆவுடை வீரபத்ரர்க் கருள்மக வானாய் போற்றி
தேவர்மா முனிவோர் போற்றும் தேசிக மணியே போற்றி
ஓவறு ஞானானந்த ஒளியருள் ஒருவா போற்றி
காவலா யெவர்க்கும் மேவும் கருணைமிக் கவனே போற்றி. 16

சத்தொடு சித்தா யெங்கும் தழைவுறு தகவே போற்றி
வித்தென வாகியின்ப விளைவருள் விபுவே போற்றி
சித்திக ளனைத்தும் நல்க வல அருட் சித்தா போற்றி
முத்தியை யருளும் வேத மூலகா ரணனே போற்றி. 20

கற்றவர் வியக்குமாறு கருணைகாட் டிடுவாய் போற்றி
பற்றகல் தவத்தோர் போற்றும் பரமபா வனனே போற்றி
உற்றபே றுறவா யின்ப மூட்டும்உத் தமனே போற்றி
முற்றுணர்ந் தவரும்வாழ்த்தும் முழுமணிச் சுடரே போற்றி 24

கல்வியின் பயனா யென்னுட் கலந்தகா ரணனே போற்றி
செல்வமெல் லாமு மாகிச் செழிக்கும்சிற் பரனே போற்றி
வல்வினை யகற்றி ஞான வளமருள் மாண்போய் போற்றி
நல்வர மனைத்தும் நல்கி யாண்டருள் நாதா போற்றி 28

உயர்வற உயர்ந்து தோன்றும் ஒருபெருங் குருவே போற்றி
மயர்வற மதிநலங்கள் வழங்கியாள் வள்ளால் போற்றி
அயர்வற அமரவாழ்வை அருளும்அற் புதனே போற்றி
துயர்தவிர் பேரானந்த ஜோதியா யொளிர்வாய் போற்றி

கரணங்கள் அனைத்தும் தூய்மை பெறப்புரி கருத்தா போற்றி
அரணமென் றடியார்க்குற்ற அரும்பெருந் துணையே போற்றி
சரணபங் கயம் சிரத்திற் சூட்டியாள் தந்தாய் போற்றி
தருணம்நன் றறிந்துசூழ்ந்து காத்தருள் தயாளா போற்றி

எக்கணத் திலும்நீங் காமல் என்னுள்வாழ் இறைவா போற்றி
தக்கபக் குவம்அன் பர்க்குத் தந்தருள் சான்றோய் போற்றி
அக்கரம் அனைத்துமாகி அருமறை யானாய் போற்றி
மக்களுக் கிரங்கிநல்ல வழியருள் மகிபா போற்றி

கங்கையை விடியுமுன்னர் காட்டியாள் அண்ணல் போற்றி
கங்கணம் பூண்டேயென்னைக் காத்தருள் காந்தா போற்றி
எங்கணும் நீக்கமின்றி இலங்குமீச் சுரனே போற்றி
மங்கள வாழ்வன் பர்க்கு வழங்கியாள் மன்னா போற்றி

அஞ்சலென் றடியார்தம்மை ஆதரித் தாள்வாய் போற்றி
நஞ்சையும் அமுதாய்மாற்றும் ஞானமூர்த் தாண்டா போற்றி
பஞ்செனவினையைப்பற்ப மாக்கியாள் பதியே போற்றி
நெஞ்சினைத் தளியாக்கொண்டு நிலைத்தமர் நிமலா போற்றி

தஞ்சமென் பவரைநன்கு தாங்கியாள் தக்கோய் போற்றி
வெஞ்சினம் காமமாதி விலக்கியாள் வீரா போற்றி
மஞ்செனக் கருணைமாரி பொழியருள் வாரீ போற்றி
வஞ்சமில் அருள்வாழ் வாற்ற வழித்துணை யாவாய் போற்றி.

அட்டமூர்த் தியுமாய்எங்கும் அமைந்தருள் அநகா போற்றி
துட்டர்கள் தமையும்நன்று திருத்தியாள் தூயா போற்றி
சிட்டர்கள் பெருகநோற்கும் செழுந்தவ மணியே போற்றி
திட்டமாய்த் திருவ ருட்செங் கோல்கொடாள் தேவே போற்றி.

சிந்தையைத் திருத்திநின்பொற் சேவடி சேர்ப்பாய் போற்றி
அந்தமொ டாதிகாணற் கரியபே ரழகே போற்றி
இந்துமண் டலமுட்காட்டி இன்னமு தருள்வோய் போற்றி
பந்தபா சங்கள் நீக்கிப் பரமுத்தி யருள்வோய் போற்றி.

அண்டமெண் ணிலவும்பேணி அருளர சாள்வோய் போற்றி
தொண்டர்க ளிதயமென்னும் தூமலர் வாசா போற்றி
கண்டது மீர்க்கும்தூய காந்தமா யொளிர்வாய் போற்றி
உண்டியைச் சுருக்கிஞான ஊற்றருள் பரனே போற்றி. 64

ஒப்புயர் வற்றஞான ஒளியுடைக் குரவா போற்றி
மெய்ப்பொரு ளுணர்த்தியொப்பில் மெய்யின்பம் அருள்வோய் போற்றி
அப்புமண் தீவிண்வாயு கதிர்மதி யானாய் போற்றி
செப்பருங் கருணை காட்டிச் சேர்த்தணைத் தருள்வாய் போற்றி 68

அம்மையொ டப்பனாகி அனைத்துயிர் புரப்பாய் போற்றி
இம்மையின் பமும்வழங்கித் தவத்தினுக் கிரப்பாய் போற்றி
மும்மைவெம் மலமும்போக்கி மோனவாழ் வருள்வாய் போற்றி
செம்மைசால் அடியர்உண்ணும் திருவருட் கனியே போற்றி 72

ஐயமெல் லாமும்நீக்கி அருள்வளர்த் திடுவாய் போற்றி
பொய்யெலாம் விலக்கி யுள்ளம் புனிதமாக் கிடுவாய் போற்றி
வையத்தில் வானம்நண்ண வைத்தவல் லபனே போற்றி
உய்யும்நன் னெறியி லென்றும் ஊக்கியாள் பவனே போற்றி 76

கண்ணினிற் சிறந்தஞானக் கண்ணருள் கணவா போற்றி
விண்ணவர் வழுத்தும்தூய விழுப்பொரு ளானாய் போற்றி
நண்ணுறு மனத்து ளன்பை நல்கியாள் நாதா போற்றி
திண்ணிய தவப்பேறீந்து திருவடி சேர்ப்பாய் போற்றி 80

செம்பெனும் மனத்திலுள்ள களிம்புநீக் கிடுவாய் போற்றி
செம்பொனாத் தொளிரச்செய்யும் செழுங்கன லாவாய் போற்றி
செம்பொருட் டெளிவைநல்கும் சிறந்தஆ சானே போற்றி
நம்படி யவர்க்கின் பூட்டும் நாயக மணியே போற்றி. 84

கரங்குவித் திறைஞ்சு வோர்க்குக் கருணைசெய் பவனே போற்றி
கரம்சிர மீதுவைத்துக் கைவல்யம் அருள்வாய் போற்றி
உரங்கெழு தவத்திலாக்கி உயர்வெலாம் தருவோய் போற்றி
கரும்பெனக் கனிகளென்ன இனித்தெனுட் கலந்தாய் போற்றி 88

ஆரண மாகியெண்ணி லாகம மானாய் போற்றி
காரண காரியங்கள் கடந்தொளிர் கலைஞ போற்றி
தாரணை தியானம் நல்கித் தவஉயர் வருள்வோய் போற்றி
தாரணி யுய்யப் போந்த தனிப்பெருங் கருணை போற்றி. 92

ஆக்கமெல் லாமும் ஈயும் அருட்பெருஞ் சுடரே போற்றி
போக்குடன் வரவில் லாமற் பொலியுமுத் தமனே போற்றி
வாக்குளம் செயலிற் றூய்மை வயங்கச்செய் மகிழ்ந போற்றி
நோக்கம்நன் றருளித் தூய நோன்மைகூட் டிறையே போற்றி. 96

கோத்திரச் சண்டை யாவும் குமைத்தகோ மகனே போற்றி
சாத்திர முடிவெல் லாமும் சட்டமாய் அருள்வோய் போற்றி
சூத்திர மனைத்தும்காட்டும் சூக்கும உணர்வே போற்றி
நேத்திர மாகியுண்மை நிகழ்ச்சிகாட் டிடுவாய் போற்றி 100

சாதனம் புரிய ஊக்கித் தனிப்பய னருள்வாய் போற்றி
நூதனம் அனைத்து மாய்ப் புராதன மானாய் போற்றி
மாதன மாயன்பர்க்கு வாய்த்தநல் வளமே போற்றி
வேதனை நீக்கி யின்பம் விளைத்தருள் மேலோய் போற்றி 104

கற்பனை யனைத்தும்காணாக் கடவுள்மா மணியே போற்றி
பொற்பனைத் தையும்தந் தாளும் பூரணப் பொருளே போற்றி
உற்பவம் மரிப்பில் லாத உயர்நிலை யருள்வாய் போற்றி
சிற்பர வெளியில் மேவும் தெய்வமே போற்றி போற்றி. 108

## 6. பிறவியை நோதல்

### பல்லவி

ஏன் பிறப் பித்தீ ரையா—இவ்வேழையை
ஏன் பிறப் பித்தீ ரையா

### சரணம்

ஊனுடம் பையே பேணி உலகில் உழன்றிடவோ
உரைத்தற் கரிய காமம் கோபம்கொண் டலையவோ
நானெனும் அகந்தையும் எனதெனும் ஆசையும்
நஞ்சென மிஞ்சிப் பொங்க ஞாலத்தில் திரியவோ (ஏன்)

ஞானம் அணுவுமின்றி த்யானம் பழகலின்றி
நாமம் ஜெபித்தலின்றி நற்பூசை செய்தலின்றி
வானவர் போற்றும் நின்சீர் வாயாற் புகழ்தலின்றி
வள்ளல்நின் னடியவர் வண்பணி செய்தலின்றி (ஏன்)

நீராய்ப் பிறப்பித்தாலும் நினக்கபி டேகமாகும்
நெல்லாய்ப் பிறப்பித்தாலும் நின்பூசைக் கமுதாகும்
நாராய்ப் பிறப்பித்தாலும் நற்பூத் தொடுத்தற் காகும்
நஞ்சாய்ப் பிறந்த என்னை நல்லமுதாக் கொள்வீரே (ஏன்)

## 7. அகந்தை நீக்க வழி சொல்

### பல்லவி

நானென்னும் அகந்தையை நீக்க ஒருவழிசொல்
ஞான சற்குரு நாதனே

### அநுபல்லவி

தேனென்ன மதுரமாய்த் தித்திக்கும் பாடல்பாடி
ஊனென்னும் உடலினை உன்திருக் கோயிலாக்கி
(நானென்னும்)

### சரணம்

மானென்னும் விழியுடை மாதர் மயல் தவிர்த்து
மாயைக்குள் ளாகிநையும் மார்க்கம் தனைத்தவிர்த்துக்
கோனென்ன உனையுள்ளங் கொண்டு குறை தவிர்த்துக்
குற்றம் பொறுத்தருள்நின் கோதில் புகழ் மொழிந்து
(நானென்னும்)

நல்லார் உறவைநாடி நாளும் நலம் வளர்த்து
நாயக நின்னருகில் நண்ணும் வகை படித்து
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நலமே புரிந்தருள்நின்
ஞானத் திருமேனியோ டொன்றும் படியுழைத்து
(நானென்னும்)

அத்தனும் அன்னையுமாய் ஆசானு மாம் தெய்வமே
அன்னமோ டாடையாகி அடியேற் குதவையனே
சுத்த சத்துவஞான ஜோதி யெனும் அண்ணலே
தோமில் பரமானந்தம் சுவைக்க அருளரசே
(நானென்னும்)

வேதாந்த சித்தாந்தனே யோகாந்த கலாந்தனே
விண்ணோர் மண்ணோர் பரவும் வித்தகக் குருதேவே
நாதாந்த போதாந்தனே நசைதீர்த் தருள் வள்ளலே
ஞான போனகம் எற்கும் நல்க விழை குருவே
(நானென்னும்)

மூதாண்ட கோடிகளை யுண்டாக்கிப் பேணுவோனே
மூலமலங் களெல்லாம் மோசித் தருளும் கோனே
சூதாண்ட என்றனுள்ளும் துலங்கும் ஜோதி மயமே
சொல்லும் நினைவும் காணாத் தூய பரமாத்மனே
(நானென்னும்)

பலநாளாய் உன்றனிடம் பன்னிப்பன்னி யுரைத்தேன்
பாரில் நினையன்றிமற் றோர்துணை கண்டறியேன்
விலகாம லுடன்சூழும் வினையை விலக்கி யுன்றன்
விரைமலர்க் கழலுக்கே விரைவில்ஆட் பட்டிலேன்
(நானென்னும்)

## 8. இறையருளியல்பு

["சந்தமாரகிலொடு" என்றபண்]

இயலென இசையென எழிலெனத் திகழ்பவன்
மயலறுத் தாள்பவன் மாணருள் பொழிபவன்
செயலெலாம் செய்துமொன் றுஞ்செயா துள்ளவன்
உயலெலாம் அருள்பவன் ஒருவன்காண் நெஞ்சமே. 1

ஆணெனப் பெண்ணென அலியெனப் பொலிபவன்
காணும்பல் லுருவினன் காணொணு அருவினன்
ஊனும்நீ ரும்உயிர்ப் பும்கொடுத் துயிர்களைப்
பேணும்அவ் வொருவனைப் பேணியுய் நெஞ்சமே. 2

நிலம்அனல் நீர்வளி நீள்விசும் பானவன்
குலமெலாம் ஒன்றெனும் கொள்கையோ டுள்ளவன்
புலனொடு பொறியறி யாவணம் பொலிபவன்
பலனெலாம் அருள்பவன் பதம்துதி நெஞ்சமே. 3

உணர்வினுக் குணர்வென உள்ளொளிர் உண்மையன்
புணர்வினை விழைபவர் புணர்வுற அருள்பவன்
மணவினை புரிந்தருள் வாழ்வளித் தாள்பவன்
குணவளம் உடையன்சீர் கூறியுய் நெஞ்சமே. 4

காயெலாம் கனியெனக் கனிவுற அருள்பவன்
நோயெலாம் நீக்கியாள் நோன்மையன் நோன்மைபேண்
சேயெலாம் பொலிவுறச் செய்யருட் செம்மல்சீர்
வாயெலாம் தித்திக்க வாழ்த்துவாய் நெஞ்சமே. 5

ஒளியென ஒலியென உயிரினுக் குயிரெனத்
தளிதொறும் திகழ்ந்தருள் தருமிறை எனஎங்கும்
ஒளிர்பவன் உலகெலாம் படைப்பவன் காப்பவன்
தளிரடி தகவுறப் போற்றியுய் நெஞ்சமே. 6

மஞ்சென எழுபவன் மழையெனப் பொழிபவன்
தஞ்சமென் றுறுபவர் தாழ்வெலாம் தவிர்ப்பவன்
அஞ்சலென் றருள்பவன் அருள்நலம் தருபவன்
செஞ்சரண் துணையெனச் சேர்ந்துய்கென் நெஞ்சமே. 7

ஓமெழுத் துருவினன் ஒப்புயர் வற்றவன்
காமமும் கோபமும் களைந்தெறி கருணையன்
சேமமெல் லாம்தரும் தேசிகன் மாசிலன்
நாமம்மெய் யன்பொடும் நாளும்பேண் நெஞ்சமே. 8

சத்தென வுள்ளவன் சாந்தமாய் ஒளிர்பவன்
சித்தெலாம் வல்லவன் சீரெலாம் அருள்பவன்
தத்துவம் யாவையும் கடந்தொளிர் தன்மையன்
மெய்த்திறம் போற்றிடின் மேன்மையாம் நெஞ்சமே. 9

மலையென நதியென மதியெனக் கதிரென
அலைமிகு கடலென அழிவிலொண் பொருளென
அலைவுறு மனதினுக் கமைதிநல் கிறையென
நிலையருள் பதியென நிலவுவன் காண்நெஞ்சே. 10

வேதமெல் லாமென வேதத்துட் பொருளென
வேதமெல் லாமினி தருளியாள் விபுவென
வேதமெல் லாம்கடந் தொளிரும்வித் தகனெனப்
பேதமில் லாதொளிர் பெரியன்காண் நெஞ்சமே. 11

பொருளெலா மானமெய்ப் பொருளெனப் பொலிபவன்
பொருளெலாம் விளக்கியுட் பொருளென ஒளிர்பவன்
இருளெலாம் நீக்கியாள் இயல்பினன் ஏத்துவோர்
தெருளெலாம் பெறஅருள் தேசன்காண் நெஞ்சமே. 12

புவனியா தியபல உலகமும் பொலிவுற
அவமறுத் தாள்பவன் ஆர்வமிக் கருள்பவன்
தவமிக ஊக்குநன் தகவுற ஆக்குநன்
நவயுக நெறியருள் நாதன்காண் நெஞ்சமே. 13

அகமெனப் புறமென ஆனவன் வானவன்
சகமென ஏனைய உலகெனச் சமைபவன்
இகமெனப் பரமென அமைபவன் இதயம்வாழ்
பகவன்நம் பதியவன் பரவியுய் நெஞ்சமே. 14

மதமெலாம் தொழவொளிர் மாண்பினன் உயிர்களை
இதமுற ஈர்ப்பவன் இன்னெறி சேர்ப்பவன்
நிதமுரு கடியவர் நினைவில்வாழ் நேர்மையன்
பதமலர் தொழுதிடின் பாவம்போம் நெஞ்சமே. 15

நன்மையெல் லாம்தரும் நாயகன் நாயினேன்
புன்மையெல் லாம்பொறுத் தருள்செயும் பொறப்பினன்
கன்மனம் கரையச்செய் கருணைமிக் குடையவன்
சென்மமாம் பிணிதவிர் செம்மல்காண் நெஞ்சமே. 16

காரண மாகியெங் கணும்நிறை கருணையன்
காரண காரியம் கடந்தொளிர் தன்மையன்
தாரணை த்யானமா தியவெலாம் தருபவன்
பூரணன் புகழ்நினைந் தேத்தியுய் நெஞ்சமே. 17

எல்லைகா ணரியவன் எவரினும் பெரியவன்
சொல்லினுற் சொல்லொணுச் சுயஞ்சுட ரானவன்
அல்லும்நன் பகலும்நல் லடியரைக் காப்பவன்
புல்லும்நெல் லாகச்செய் புனிதன்காண் நெஞ்சமே. 18

ஒன்றெனப் பலவென என்றும்நன் றுள்ளவன்
சென்றடை யாத்திரு வுடையவன் செம்பொனின்
மன்றினில் நடமிடும் மாண்பினன் மலரடி
நன்றருள் ஞானமா நாயகன் காண்நெஞ்சே. 19

குற்றமெல் லாம்பொறுத் தாண்டருள் கொள்கையன்
அற்றமில் சுற்றமாய் அமுதவூற் றருள்பவன்
பெற்றதாய் தந்தையாய்ப் பேணியாள் பெற்றியன்
பற்றறப் பற்றும்பொற் பாதன்காண் நெஞ்சமே. 20

உளனென இலனென உரைப்பவர் யாவரும்
உளமகிழ் வுறவுண வூட்டிநன் றோம்புநன்
அளவில்பே ரருளினன் அமைதிநல் கற்புதன்
†குளமொளிர் விழியருள் குழகன்காண் நெஞ்சமே, 21

## 9. திருவருட் பெருமை

["மந்திர மாவது நீறு" என்ற பண்]

அண்டம் அனைத்தும்உண் டாக்கி அருளுட னேபுரப் பானும்
விண்ட மறையனைத் துக்கும் உட்பொரு ளாய்மிளிர் வானும்
தெண்ட னிடுபவர்க் கெல்லாம் திருவருள் செய்திடு வானும்
இண்டை புனைந்தொளிர் வானும் இருடிநகர்உறை வானே. 1

ஆசில்நல் ஓமெழுத் தாகி ஆருயி ருள்ளொளிர் வானும்
தேசருள் பேரருட் ஜோதித் திருவுரு வாய்த்திகழ் வானும்
வாசி விளைவருள் வானும் சித்திவ ளம்அருள் வானும்
ஈச னெனஅமை வானும் இருடி நகர்உறை வானே. 2

அன்பென உள்ளொளிர் வானும் ஆர்வம் மிகப்புரி வானும்
மன்பதை உய்ந்திடும் வண்ணம் வண்சட்டம் நல்கிடு வானும்
துன்பமெ லாம்தவிர்ப் பானும் தூய்மை மிகப்புரி வானும்
இன்பமெ லாம்அருள் வானும் இருடிநகர் உறை வானே. 3

அருளெனும் ஒருருவாகி அகமிசை நன்றமர் வானும்
மருளெனும் யாவும் விலக்கி மாணரு ளாட்சிசெய் வானும்
பொருளனைத் தும்தரு வானும் போகம் புணர்த்திடு வானும்
இருளில் ஒளியருள் வானும் இருடி நகர்உறை வானே. 4

---

†குளம் = நெற்றி.

பூதமொ ரைந்தென வாகிப் பொறிபுல ஞுயமை வானும்
காதல் மிகுந்துள் ளுருகின் கருணை மிகப்புரி வானும்
போதம் புகட்டிடு வானும் பூரண மாக்கிடு வானும்
ஏதம் அறுத்தருள் வானும் இருடி நகர்உறை வானே. 5

இமையவர் தம்குழாம் வாழ்த்த இப்புவி யில்வரு வானும்
சமயம் அனைத்தினெண் சாரம் இதுவெனத் தந்தருள் வானும்
மும்மலம் ஒழித்தருள் வானும் முத்தி நலம்புணர்ப் பானும்
எமையிவண் ஆண்டருள் வானும் இருடி நகர்உறை வானே. 6

அகமும் புறமுமா யாகிஅமைதி யளித்தருள் வானும்
சகமிசை வாழுயிர் எல்லாம் தண்ணருள் எய்தச்செய் வானும்
சுகம்அனைத் தும்தரு வானும் துரிய நிலைதரு வானும்
இகபர மாயொளிர் வானும் இருடி நகர்உறை வானே. 7

எட்டுரு வாயொளிர் வானும் ஏக மெனஅமை வானும்
சிட்டர் எலாம்புகழ்ந் தேத்தத் தேசு மிகப்புரி வானும்
துட்டன் எனைப்புரப் பானும் சொத்தென உள்ளொளிர் வானும்
இட்டமெ லாம்நிறை வேற்ற இருடி நகர்உறை வானே. 8

அன்னையும் அத்தனு மாகி ஆரியன் தெய்வமா வானும்
முன்னை வினையறுப் பானும் மூர்த்தி யெனத்திகழ் வானும்
பின்னைப் பிறவியெய் தாமல் பேரருள் செய்திடு வானும்
என்னை மணந்தருள் வானும் இருடி நகர்உறை வானே. 9

வேடமெ லாம்புனை வானும் வேகமெ லாம்தவிர்ப் பானும்
பாடமெ லாம்பயில் விக்கும் பண்பு மிகுந்தொளிர் வானும்
தோடமெ லாம்தவிர்ப் பானும் தோமிலொளியருள் வானும்
ஈடிணை யற்றொளிர் வானும் இருடி நகர்உறை வானே. 10

கங்கையை விடியலில் நாளும் காட்டி யருள்புரி வானும்
செங்கை சிரமிசை சூட்டித் திருவருள் செய்திடு வானும்
மங்கள வாழ்வருள் வானும் மடி மிடி நீக்கிடு வானும்
எங்கணும் மேவிடு வானும் இருடி நகர்உறை வானே. 11

அச்சென வேஅமைந் தெண்ணில் அண்டம் இயக்கிடு வானும்
சச்சித் தெனத்திகழ் வானும் சமரச வாழ்வருள் வானும்
விச்சை யெலாம்அருள் வானும் விமலன் எனப்பொலி வானும்
இச்சையெலாம் நிறைவேற்றி இருடிநகர் உறை வானே. 12

# 10. தாண்டகம் (வைத்தார்)

கலைகள்பலப் பலவைத்தார் கலைகள் காணுக்
கழல்வைத்தார் நிழல்வைத்தார் கணக்கில் லாத
நிலைகள்பலப் பலவைத்தார் நேர்மை வைத்தார்
நிதிவைத்தார் கதிவைத்தார் நேமம் வைத்தார்
அலைகள்பலப் பலவைத்தார் அலைகள் மேவும்
கடல்வைத்தார் அதனைநிகர் அகமுள் வைத்தார்
சிலைகள்பலப் பலவைத்தார் அருள்செய் கின்ற
திறம்வைத்தார் இருடிநகர்ச் செல்வ னாரே. 1

சிந்தனைகள் பலவைத்தார் சிந்தைக் கெட்டாச்
செயல்வைத்தார் திருவருளின் திறமும் வைத்தார்
வந்தனைகள் புரிந்துய்ய வழிகள் வைத்தார்
வழிகளெலாம் ஒன்றெனச்சொல் மொழியும் வைத்தார்
பந்தனைகள் தீர்த்தருளும் பான்மை வைத்தார்
பக்குவங்கள் தரும்பக்தி ஞானம் வைத்தார்
எந்தனையும் ஈர்த்தின்பம் எய்த வைத்தார்
ஈடிணையில் இருடிநகர் இறைவ னாரே. 2

கரணமெலாம் கரைந்துருகக் கருணை வைத்தார்
கணக்கில்அடி யார்சிரமேற் கரம்வைத்(து) என்றும்
அரணமென அமைந்தோம்பும் அன்பு வைத்தார்
அருள் வைத்தார் பொருள் வைத்தார் ஆற்றல் வைத்தார்
மரணபயம் தவிர்த்துலவ மார்க்கம் வைத்தார்
மறைமுடிவில் வயங்குபொருள் விளக்கம் வைத்தார்
சரணகமலம் சூட்டும் சாந்தி வைத்தார்
தண்பொழில்சூழ் இருடிநகர்த் தலைவ னாரே 3

கட்புலன்கா ணக்கவினுர் காட்சி வைத்தார்
கட்புலன்கட் கெட்டாக் காட் சியையும் வைத்தார்
நட்பெனநன் றமைந்து தனை நம்ப வைத்தார்
நம்படியார் நலங்களெலாம் எய்த வைத்தார்
உட்புறமும் வெளிப்புறமும் தானே யாகி
யொளிருண்மை யுணர்ந்துய்ய ஞானம் வைத்தார்
பெட்பனைத்தும் நிறைந்தடியார் பிறங்க வைத்தார்
பெரியர்வழுத் (து)இருடிநகர்ப் பெருமா னாரே. 4

புவனியெலாம் வைத்தெண்ணில் பொருளும் வைத்தார்
போகமெலாம் உயிர்வர்க்கம் துய்க்க வைத்தார்
கவனமெலாம் கழலடியில் வைக்கும் தூய
கருத்துடையார் தமைப்புரக்கும் கருணை வைத்தார்
தவநெறிபே ணிடும்அடியார் தம்பால் என்றும்
தளர்வறியா உளம்வைத்தார் சாந்தம் வைத்தார்
நவநிலையும் தானுதல் உணர வைத்தார்
நல்லிருடித் திருநகர்வாழ் நாய னாரே. 5

அனம்வைத்தார் நீர்வைத்தார் ஆடை வைத்தார்
அனைத்துயிர்க்கும் உடல்வைத்தார் அறிவு வைத்தார்
தனம்வைத்தார் தானியங்கள் பலவும் வைத்தார்
தானதரு மங்களெலாம் தழைய வைத்தார்
மனம்வைத்தார் மனம்அடங்கும் மார்க்கம் வைத்தார்
மறைவைத்தார் மறையையுணர் பொறையுள் வைத்தார்
இனம்வைத்தார் மெய்யடியா ரீட்டம் வைத்தார்
எழில்மிகுநல் லிருடிநக ரீச னாரே. 6

மங்குல்பொழி மழைவைத்தார் பயிர்கள் வைத்தார்
மல்குவளம் பலவைத்தார் விளைவும் வைத்தார்
கங்குல்பகல் காணரியாக் காட்சி வைத்தார்
கற்பனைகட் கெட்டரிதாம் ஒட்பம் வைத்தார்
எங்கிருந்தும் தனைநினைப்போர்க் கின்பம் வைத்தார்
எனைவிழுங்கித் தனைவழங்கும் இதயம் வைத்தார்
துங்கமிகும் சட்டநெறி துலங்க வைத்தார்
தூயர்கள் போற் றிருடிநகர்த் தோன்ற லாரே. 7

நிலனனல்நீர் கால்வானம் நிலவ வைத்தார்
*நிகமமுடன் ஆகமங்கள் பலவும் வைத்தார்
புலனனைத்தும் பொறியனைத்தும் அடக்கி நோற்கும்
புண்ணியர்பால் எண்ணில்நலம் புணர வைத்தார்
கலனனைத்தும் கவினனைத்தும் கருணை யென்னக்
கண்டுகளிக் கும்தொண்டர்க் கருளை வைத்தார்
இலனெனஎன் றும்உரையார்க் கின்பம் வைத்தார்
இமையவர் வாழ்த் (து)இருடிநகர் எந்தை யாரே. 8

* நிகமம் = வேதம்

அமரர்களும் முனிவர்களும் அன்பாற் போற்ற
அருட்சட்ட நெறிபுவிமேல் விளங்க வைத்தார்
*மமரனைத்தும் தீர்த்துயிர்கள் வயங்க வைத்தார்
மாண்பொருளுள் ளுணர்ந்துய்ய நிட்டை வைத்தார்
சமரசசன் மார்க்கமணம் தழைய வைத்தார்
தவனைத்தும் தருமேலாம் சால்பு வைத்தார்
அமரநிலை பெறவைத்தார் இணையே யில்லா
அருள்வைத்தார் இருடிநகர் அண்ண லாரே. 9

உலகமெலாம் தன்மயமாய் ஒளிர வைத்தார்
உயிர்களுளே புகுந்தருளாம் ஒளியுள் வைத்தார்
கலகமெலாம் காணறியாக் காட்சி வைத்தார்
காட்சியெலாம் காட்டுமுயர் நிட்டை வைத்தார்
பலவுமுணர்ந் துள்ளடங்கும் மார்க்கம் வைத்தார்
பரநிலைபெற் றின்புறச்செய் ஊக்கம் வைத்தார்
நிலவும்அடி யார்குழுவுக் காக்கம் வைத்தார்
நீள்பொழில் சூழ் இருடிநகர் நிமல னாரே. 10

நெஞ்சுருகி நினைபவருள் நீங்கா தென்றும்
நிலவிடுபே ரன்புவைத்தார் இன்பம் வைத்தார்
வெஞ்சுரமா தியபிணிகள் விலக வைத்தார்
வினைத்தொகைகள் பொடிபடச்செய் விபூதி வைத்தார்
தஞ்சமென வரும்அடியார்க் குறவு வைத்தார்
தாழ்வகற்றி வாழ்வையருள் தகவும் வைத்தார்
செஞ்சரணம் காட்டியதிற் சேர வைத்தார்
திண்ணியர்போற் றிருடிநகர்ச் செம்ம லாரே. 11

ஒரு மனிதன் உலக நியதிக்குக் கட்டுப்பட்டு, அதனோடு ஒட்டஒழுக எண்ணினுன் ஆனால், சகிப்புத் தனமையும், பரோபகார குணமும், தீமைகளுக்கு அஞ்சா நெஞ்சமும், இறைவனிடத்தில் திடமான நம்பிக்கையும், எத்தகைய கைம்மாறும் எதிர்நோக்காத கருணையும் தேவை.

எந்த முறையிலாவது, கடவுளின் நினைவு மக்களின் உள்ளத்தில் நிலைத்திருக்கப் பாடுபடவேண்டும்.

*மமர் = துன்பம்

## 11. தாண்டகம் [தோன்றும்]

அண்டமெலாம் தானுய அருமை தோன்றும்
அனைத்துயிரை யும்புரக்கும் பெருமை தோன்றும்
விண்டலமெல் லாம்வழுத்தும் விழுமம் தோன்றும்
வேதாந்த சித்தாந்த விளக்கம் தோன்றும்
மண்டலமெல் லாம்வணங்கும் மகிமை தோன்றும்
மாணருட்சட் டம்வகுத்தாள் வண்மை தோன்றும்
எண்டிசையும் ஏத்தவொளிர் ஏற்றம் தோன்றும்
எழில்திகழும் இருடிநகர் இறைவன் பாலே. 1

நன்மையெலாம் வளரஅருள் நயனம் தோன்றும்
நல்லடியார்க் கருள்செய்திருக் கரங்கள் தோன்றும்
புன்மையெலாம் பொறுத்தருளும் பொறுமை தோன்றும்
போதாந்த நாதாந்தப் பொலிவு தோன்றும்
கன்மனமும் இளகிடச்செய் கருணை தோன்றும்
கதிகூட்டும் கமலமலர்ப் பதங்கள் தோன்றும்
ஜென்மவிடாய் தீர்த்தருளும் திட்பம் தோன்றும்
திருவிருடி நகர்திகழும் தேவன் பாலே. 2

வருகவென எனையழைக்கும் மாட்சி தோன்றும்
வாழ்விலருள் மலர்ந்திடச்செய் வளமை தோன்றும்
குருபரனுய் ஆண்டருள்செய் கொள்கை தோன்றும்
குறைதவிர்த்து நிறைவருளும் குணங்கள் தோன்றும்
தருகவென உடல்பொருளா வியைநன் றேற்றுத்
தவப்பயனெல் லாம்வழங்கும் தகைமை தோன்றும்
இருகரங்கொ டெனையணைத்தா ளினிமை தோன்றும்
இன்பம்வழங் கிருடிநகர் இறைவன் பாலே. 3

காலமெலாம் கடந்திலகும் காட்சி தோன்றும்
காந்தமென ஈர்த்தருள்செய் சாந்தம் தோன்றும்
சீலமெலாம் தானேயாம் சீர்மை தோன்றும்
சிட்டர்களை யாண்டருள்செய் நேர்மை தோன்றும்
மூலமலம் களைந்தருளும் மோனம் தோன்றும்
மூர்த்தியெலாம் தானுய நேர்த்தி தோன்றும்
கோலமெலாம் காட்டியருள் குழகு தோன்றும்
கொடைமிகுநல் லிருடிநகர்க் குரிசில் பாலே. 4

ஆதார ஆதேயம் தானாய்த் தோன்றும்
அடிமலர்என் சிரம்சூட்டும் அருமை தோன்றும்
சூதான யாவுமகல் தூய்மை தோன்றும்
சொல்லரிதாய்த் திகழ்ஞான ஜோதி தோன்றும்
ஓதாம லுணர்ந்திடச்செய் ஒட்பம் தோன்றும்
ஓங்காரத் திருமறையின் உண்மை தோன்றும்
போதாரும் பொன்முடியும் கழலும் தோன்றும்
பொழில்திகழும் இருடிநகர்ப் புனிதன் பாலே. 5

அருமறை சொல் லிலக்கணங்க ளனைத்தும் தோன்றும்
அகம்புறமெல் லாம்தானும் அருமை தோன்றும்
பெருமையெலாம் உடையஅருட் பேறு தோன்றும்
பேச்சிறந்த உயர்மௌனப் பெருமை தோன்றும்
இருமைவினை யெரித்தருள்செய் இனிமை தோன்றும்
எண்ணம்உரை செயல்தானும் ஏற்றம் தோன்றும்
குருமணியாய்ப் போந்தருளும் கோலம் தோன்றும்
கொண்டல்தவழ் இருடிநகர்க் குழகன் பாலே. 6

ஆராலும் அளப்பரிதாம் ஆற்றல் தோன்றும்
அனந்தகலை களின்முடிவாம் அமைதி தோன்றும்
ஆராநல் லமுதாகி யடியா ருட்போந்(து)
அருள்விளையாட் டுகள்புரியற் புதங்கள் தோன்றும்
தீராநோய் தீர்த்தருள்செய் திறங்கள் தோன்றும்
திருநீறும் தீர்த்தமுமாம் செம்மை தோன்றும்
காராரு மழைநீர்நேர் கருணை தோன்றும்
கவினிருடிப் பதியிலமர் கர்த்தன் பாலே. 7

உருவமுடன் அருவமுமாம் உண்மை தோன்றும்
உயர்நலங்கள் அனைத்தும்அருள் உயர்வு தோன்றும்
திருவனைத்தும் தானேயாம் சிறப்பு தோன்றும்
திருமுறைகள் தொழுமிறையாய்த் திகழ்தல் தோன்றும்
பருவபக்கு வம்வழங்கும் பாங்கு தோன்றும்
பண்பனைத்தும் வழங்கியருள் அன்பு தோன்றும்
புருவநடுத் திகழ்ஞானப் பொலிவு தோன்றும்
புனிதமிகும் இருடிநகர்ப் போதன் பாலே. 8

கற்பனைகள் கடந்தஅருட் காட்சி தோன்றும்
கனவையெலாம் நனவாக்கும் கருணை தோன்றும்
சிற்பத்துள் சித்திரத்துள் திகழ்தல் தோன்றும்
சிற்சபையுள் நடம்புரியும் செழுமை தோன்றும்
பொற்பனைத்தும் திரண்டொளிரும் பொலிவு தோன்றும்
போகம்உயர் போதம்அருள் புனிதம் தோன்றும்
நற்பதமெல் லாம்வழங்கும் நளினம் தோன்றும்
ஞானமிகும் இருடிநகர் நம்பன் பாலே. 9

சோகமெலாம் தீர்த்தருளும் தூய்மை தோன்றும்
தூலமுடன் சூக்கும காரணமும் தோன்றும்
தேகமொரா லயமாக்கொள் செம்மை தோன்றும்
திருவருட்செங் கோல்செலுத்தும் திட்பம் தோன்றும்
மோகமெலாம் தவிர்த்தருள்மெய்ஞ் ஞானம் தோன்றும்
முத்திநலம் தந்தருளும் மோனம் தோன்றும்
ஏகநெறி புகட்டியருள் ஏற்றம் தோன்றும்
இகம்பரம்நல் கிருடிநகர் எம்மான் பாலே. 10

அருள்வழங்க அழைத்தருள்பே ரன்பு தோன்றும்
அறம்பொருள்இன் பம்விளைக்கும் ஆண்மை தோன்றும்
பொருள்விளக்கிப் புனிதம்அருள் பொற்பு தோன்றும்
பொறிபுலன்கள் கடந்தசிவ போகம் தோன்றும்
இருள்தவிர்பே ரின்பமருள் இறைமை தோன்றும்
இமைப்பொழுதும் நீங்காப்பே ரிணக்கம் தோன்றும்
தெருளருளித் திருவருட்பே றருளல் தோன்றும்
சீர்நிறைநல் லிருடிநகர்ச் செல்வன் பாலே. 11

அந்தமுதல் அறிவரும் ஆனந்தம் தோன்றும்
ஆசையெலாம் பொடிசெயரு ளன்பு தோன்றும்
சிந்தையினைக் கனியவைக்கும் தெளிவு தோன்றும்
தென்திசையோ னையும்வெலச்செய் திறலும் தோன்றும்
நந்தலிலாப் பல்வளம்நல் கருமை தோன்றும்
நகைமுகத்தோ டருள்சுரக்கும் நலங்கள் தோன்றும்
எந்தவகை யிலும்புரக்கும் இனிமை தோன்றும்
இன்பமிகும் இருடிநக ரீசன் பாலே. 12

## 12. தாண்டகம் [அடையாளம்]

காதல்மிகும் மெய்யடியார் உள்ளம் மேவிக்
கருணைபுரி திறம்விளக்கும் கடவு ளாமே
சாதல்பிறத் தல்தவிர்க்கும் சதுர னாமே
சாந்தி யெனும் அமுதருளும் தக்கோ னாமே
போதபரம் பரைபொலியச் செய்வோ னாமே
புகலருளி இகல் தவிர்க்கும் பூமா னாமே
ஆதவன் அம்புலி அங்கி யாவா னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 1

செய்யபுகழ்த் திருமேனி தாங்கி யிங்கே
திருவவதா ரம்செய்த தீர்த்த னாமே
வையமிசைச் சட்டம்அருள் வள்ளலாமே
வானுலகும் மண்ணுலகும் வழுத்தும் வண்ணம்
பொய்யனைத்தும் கடிந்தாளும் புனித னாமே
போகமுமாய்ப் போதமுமாய்ப் பொலிவா னாமே
ஐயமெலாம் அகற்றியருள் ஆசா னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 2

அண்டமெலாம் அழகுறநன் றமைத்துத் தூய
அருளாட்சி புரிந்தருள் பேரரச னாமே
கொண்டலென மழைபொழிந்து குறைகள் நீக்கிக்
குலவுய் உயிர்ப் பயிர்வளர்க்கும் குரிசி லாமே
* தண்டதரன் ஆணை அன்பர் பாற்செல் லாமல்
தடுத்தினிது காத்தருள்செய் சதுர னாமே
அண்டர்முனி வரரேத்தும் அம்மா னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 3

நாம முரைக் கக் கேட்டுள் ளுருகும் அன்பர்
நல்லுளமே தளியாக்கொள் நம்ப னாமே
ஓமுருவத் தோடொளிரும் ஒருவ னாமே
உரைமனம் கா ணாக்கருணை யுருவ னாமே
காமமுடன் சினம்தவிர்க்கும் கடவு ளாமே
கமழ்மணமார் மலர்கள்நிறை கழலோ னாமே
ஆமெனவே அனைத்தையும்செய் யறிஞ னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 4

---

* தண்டதரன் = யமன்

உய்வழியை எவர்க்கும்காட் டொருவ னுமே
 உள்வெளியாய் எங்கும்நிறைந் தொளிர்வோ னுமே
பொய்வழியைத் தடுத்தாளும் புனித னுமே
 புலைகொலைகள் தவிர்த்தாளும் புண்ய னுமே
செய்வதெலாம் தன்செயலாய் ஏற்பா னுமே
 சீரடியார் அகம்மேவித் திகழ்வா னுமே
ஐவழியை யடக்கியரு ளளிப்பா னுமே
 அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 5

கள்ளமிலா உள்ளம்அமர் கர்த்த னுமே
 கருணையினு லாடல்செயும் சித்த னுமே
உள்ளமெலாம் கவர்ந்தாளும் ஒருத்த னுமே
 உத்தமர்கள் தமைவாட்டும் பித்த னுமே
மெள்ள எனைத் திருத்தியருள் நித்த னுமே
 மேன்மையெலாம் தரவிழையும் சத்த னுமே
அள்ளஅள்ளக் குறைதலிலா *அர்த்த னுமே
 அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 6

உண்மையறி வானந்த உருவம் கொண்டே
 உத்தமர்கள் உளத்தொளிரும் பெருமா னுமே
திண்மைசெறி மலைபலவாய்க் கடல்க ளாகிச்
 செங்கனலாய் வளிவானுய்த் திகழ்வா னுமே
பெண்மையுமாய் ஆண்மையுமாய்ப் பேதம் காட்டிப்
 பிறங்கும்அபே தமுமாகி யொளிர்வா னுமே
அண்மையுமாய்ச் சேய்மையுமாய் அமைவா னுமே
 அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 7

பாவமறியா உளத்திற் படர்வோ னுமே
 பவப் பிணியைத் தீர்த்தருள்செய் பரம னுமே
தேவர்விழை திருவாமே சித்தர்கூட்டம்
 செறிந்து தொழும் மாஞான சித்த னுமே
மூவர்புகழ் முனியாமே முத்தி கூட்டும்
 முதலாமே மோனமருள் மூர்த்தி யாமே
ஆவதெலாம் புரிந்தருள்பே ரரச னுமே
 அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 8

* அர்த்தன் = பொருளாளன்

செந்தழலொத் தொளிர்ஞானச் செல்வ னுமே
சீமானுமே நிகரில் பூமா னுமே
கொந்தவிழ்நன் மலர்த்தாள்கொள் கோமா னுமே
குறைகளிலா நிறைமொழிசொல் நாமா னுமே
சந்தமறை யின்பொருளாய்ச் சமைவா னுமே
சாத்திரங்கள் பலப்பலவாய் அமைவா னுமே
அந்தம்நடு வாதிசொலற் கரியா னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 9

பொன்புரை நற்றிருமேனி யுடையா னுமே
புனிதரெலாம் போற்றுமுயர் நடையா னுமே
அன்புடைநல் லடியரையா ளுடையா னுமே
ஆரணங்கள் ஆகமங்கட் கிடையா னுமே
இன்பமெலாம் ஈந்தருளும் கொடையா னுமே
இகல்தவிர்க்கும் மெய்ஞ்ஞானப் படையா னுமே
அன்பறியா அடியனையா ளுடையா னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 10

இச்சையெலாம் தீர்த்தருளும் இறைவ னுமே
எழுமையிலும் பிரிவறியாத் துணைவனுமே
அச்செனவாய் உலகையெலாம் அசைப்பா னுமே
அருள்மயமாய் அருட்பாடல் இசைப்பா னுமே
துச்சமெனப் புவியாசை தொலைத்தே ஞானத்
தூவெளிசார் பெரியருளம் தோய்வா னுமே
அச்சமொழித் தருட்சட்டம் அருள்வா னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 11

முக்கனியாய்ச் சர்க்கரையாய் இனிப்போ னுமே
மூலவொளிக் கனலாயுள் முளைப்போ னுமே
எக்கணமும் எனைப்பிரியா திருப்போ னுமே
ஏகாந்த மாய்ச்சுகமீந் தணைப்போ னுமே
திக்கனைத்து மாகிவிரிந் திருப்போ னுமே
சேமமெலாம் தந்தெனுளும் திளைப்போ னுமே
* அக்கம்நுதல் நடுவிலெனக் களிப்போ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 12

---

* அக்கம் = கண்

செல்வமெலாம் தருஞானச் செம்ம லாமே
தெய்வசிகா மணியாமே சிறந்த ஞானச்
கல்வியெனும் கடலாமே அதனுள் மேவும்
கருணையெனும் அமுதாமே கணித்தற் கொண்ணு
வல்வினைகள் தீர்த்தருள்பே ராற்ற லாமே
மாயையினை யெரித்தருளும் வன்னி யாமே
அல்வழிநீத் தடியனையா ளன்ப னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 13

பொருளனைத்து மாய்விளங்கும் போத னுமே
புன்மையெலாம் தவிர்த்தெனையாள் நாத னுமே
இருளனைத்தும் தவிர்த்தொளிநல் கீச னுமே
எங்கணும்மே விப்பொலியும் தேச னுமே
தெருளனைத்தும் விளக்கியருள் திறலோ னுமே
திரிகரணங் களில் தூய்மை யருள்வோ னுமே
அருளமுதம் சுரந்தூட்டி யாள்வோ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 14

அருவமுமாய் உருவமுமாய் அமைவோ னுமே
அளவில்பல உலகமுமாய்ச் சமைவோ னுமே
குருவுருவம் கொண்டுலகில் வருவோ னுமே
குறைகள்தவிர் சட்டநெறி தருவோ னுமே
பருவமறிந் தடியரையாட் கொள்வோ னுமே
பலவினை நோய் தீரஅருள் செய்வோ னுமே
அருகிலழைத் தெனையும்அணைத் தருள்வோ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 15

நிலவுலகில் அருட்சட்டம் நிலவும் வண்ணம்
நினைந்தவதா ரம்செய்த நித்ய னுமே
தலமனைத்தும் திருந்தியருட் சட்டம் பேணிச்
சாந்தியமு தருந்திடச்செய் சத்ய னுமே
குலமனைத்தும் விளங்கவைக்கும் கோமா னுமே
குறைதவிர்த்து நிறைவருளும் குரிசி லாமே
அலகில்சுகம் எனக்கருளும் அம்மா னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 16

வாழ்வனைத்தும் வழங்கியருள் வள்ள லாமே
வளம்பலவாய் விளங்கியொளிர் மாண்போ னாமே
தாழ்வனைத்தும் தவிர்த்தருளும் தக்கோ னாமே
தவவொழுக்கம் தந்தருள்செய் தகவோ னாமே
ஊழ்வினையைப் பொடிபடச்செய் உரவோ னாமே
ஓங்கார ஒலிமயமாய் விரிவோ னாமே
ஆழ்கடலில் கடைந்தெடுத்த அமுத மாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 17

ஒளியினுளோர் ஒளியாகி யொளிர்வோ னாமே
ஒலியினுளோ ரொலியாகி மிளிர்வோ னாமே
களிசிறப்பக் கருணையமு தருள்வோ னாமே
காட்சியெலாம் காட்டியுளே திகழ்வோ னாமே
தளியெனநல் லன்பருளம் கொள்வோ னாமே
தயவெனும்நற் பெருங்கடலாய் உள்ளோ னாமே
அளிமிகுந்தென் னைப்புரக்கும் ஆப்த னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 18

கனவினிற்பல் காட்சியருள் கர்த்த னாமே
கனவினிலும் காணறியாச் சித்த னாமே
நனவினில்நல் லடியர்முனே வருவோ னாமே
நல்வரங்கள் பற்பலவும் தருவோ னாமே
இனமதபே தங்கடந்த இறையோ னாமே
எவ்வுயிருள் ளும்பொலியும் எழிலோ னாமே
அனவரதம் எனைப்பேணும் அமல னாமே
அவனாகில் இருடிநகர் அண்ண லாமே. 19

இரவுபகல் கண்டறியா ஈச னாமே
எப்பொழுதும் எனைப்புரக்கும் தேச னாமே
கரவறியா நல்லுளத்துட் கலந்தோ னாமே
கவினனைத்தும் தானாகி நிறைந்தோ னாமே
குரவனெனும் ஒருருவம் கொள்வோ னாமே
கோதிலருட் சட்டநெறி விள்வோ னாமே
அரவொலியா லடியர்தொழ அமைவோ னாமே
அவனாகில் இருடிநகர் அண்ணலாமே. 20

வேதமெலாம் தொழுதேத்தும் விமல னுமே
விழுமியசீ ரடியரையாள் அமல னுமே
போதமெலாம் புகட்டியருள் புருட னுமே
பூரணப்பே ரின்பமருள் புனித னுமே
நாதமெலாங் கடந்திலகும் நம்ப னுமே
ஞானநெறி காட்டியருள் நாத னுமே
ஆதவனும் இருள்தவிர்த்துள் அமர்வோ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 21

உய்தல்விழை வோர்வருகென் றுரைப்போ னுமே
ஒருவழியை எவ்வுயிர்க்கும் திறப்போ னுமே
நைதல் தவிர்த் தின்பமருள் நல்லோ னுமே
ஞானியர்தம் குழுதிரட்ட வல்லோ னுமே
பொய்தவிர்த்து மெய்வழிகாட் டிறையோ னுமே
புனிதமிகச் செய்தினருள் புரிவோ னுமே
° ஐதவிர்த்தா ரோக்யம்அருள் அய்ய னுமே
அவனுகில் இருடிநகர் அண்ணலாமே. 22

தேனமரும் மலர்மாலை புனைவோ னுமே
தேவை யெலாம் தீர்த்தருள நினைவோ னுமே
வானமரும் நதியைவர வழைப்போ னுமே
வைகலில் நீ ராடுகென அழைப்போ னுமே
ஊனமரும் உடலுளமர்ந் தொளிர்வோ னுமே
ஓமெனுநன் மறையையுரைத் தருள்வோ னுமே
ஆனருள்பா லபிடேகம் கொள்வோ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ண லாமே. 23

கூறரிய மறைகூறும் குரவோ னுமே
கோடிபிழை யும்பொறுத்தா ளுரவோ னுமே.
மாறரிதாம் மனத்தையும்மாற் றிடுவோ னுமே
மாணருளாம் அமுதெனுள்ஊற் றிடுவோ னுமே
வேறொருவர் துணையிலையென் றிறைஞ்சும் நல்லோர்
விழைவதெலாம் வழங்கியருள் மேலோ னுமே
ஆறிதுவென் றுருயிர்கட் கருள்வோ னுமே
அவனுகில் இருடிநகர் அண்ணலாமே. 24

---

° ஐ = கோழை

## 13. திருநாம மகிமை

வேதமெலாம் ஓதுபயன் ஒருநொடியில் கொடுக்கும்
வினையிரண்டும் அணுவும்நம்பால் விரவாமல் தடுக்கும்
பூதபரம் பரைபொலியப் புனிதம்மிக ஒலிக்கும்
புன்மையெலாம் பொடிபடுத்திப் பொலிவுமிக அளிக்கும்
நாதவிந்து கலையின்முதல் நடுமுடிவை விளக்கும்
நானென தென் றெழும்அகந்தை மமதைகளை விலக்கும்
போதவொளிக் கதிரவனாய்ப் போந்தருளைத் துலக்கும்
பொற்பருளும் ரெட்டிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 1

கண்ணிரண்டின் நடுஞானக் கண்ணருளிக் காக்கும்
காமம்சினம் மோகம்மதம் மாச்சரியம் போக்கும்
மண்ணினில்வாழ் உயிர்த்திரளின் மனஇருளை நீக்கும்
மாசிலருட் சட்டநெறி பேணியுய்ய ஊக்கும்
விண்ணினில்வாழ் அமரர்களும் வாழ்த்திடஉட் பூக்கும்
விரிமனத்தை மிகவொடுக்கி மெய்யருளைச் சேர்க்கும்
பண்ணினுளும் பாட்டினுளும் பொருளினுளும் தோய்க்கும்
பவமகற்றும் ரெட்டிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 2

அடியவர்கள் இதயமிசை அன்பை நிலை நாட்டும்
அருள்நெறியில் இனிதொழுக ஆர்வமிகக் கூட்டும்
கொடியனஓர் அணுவும்நம்பால் கூடவிடா தோட்டும்
குற்றமிருந் தால்திருத்தக் கருதிநமை வாட்டும்
படியில்என்றும் சத்யம் வெல்லும் எனநிதமும் காட்டும்
பக்குவமிக் குற்றவர்க்குப் பரவமுதுள் ளூட்டும்
அடியனைத்தன் திருவுளத்தின் படியருளா லாட்டும்
அருள்நிறையும் ரெட்டிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 3

அன்பரெலாம் வம்மின்என அருள்முரசு முழக்கும்
அருகில்விரை வினில்வருகென் றடியனையும் அழைக்கும்
வன்பருங்கல் லனையஎன்றன் மனத்தினையும் குழைக்கும்
மாதவமாம் திருவுமுயர் அருள்வளமும் கொழிக்கும்
பொன்புகழ்நற் பொறைபுனிதம் பொலியஎங்கும் செழிக்கும்
போகமெலாம் போதமெலாம் மிகஅருளால் விழிக்கும்
இன்பமெலாம் எங்கும்மிக உளந்தொறுமுற் றினிக்கும்
எழில்மிகுநல் லிருடிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 4

சஞ்சலமெல் லாம்விலகத் தவக்கனலாய்ப் பொலியும்
சக்திமிக அளித்தருளிச் சாந்திதர விழையும்
மஞ்செனவான் வழியுலவிக் கருணைமழை பொழியும்
மாணடியார் குலம்வளர மன்னருளைப் புரியும்
செஞ்சரண பங்கயமென் சிந்தைமிசை வரையும்
திருவும்நலம் பலவும்எமக் கினிதருள விரையும்
தஞ்சமெனச் சார்பவருள் தழைந்தருளாய் நிறையும்
தக்கவர்சூழ் ரெட்டிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 5

வானவரும் முனிவரரும் வாழ்த்தஎங்கும் முழங்கும்
மனனம்நிதம் செயுமன்பரை வாழ்த்தியருள் வழங்கும்
ஞானவொளிப் பிழம்பாகி யோகியருள் துலங்கும்
நாதமுதல் நடுமுடிவாய் நண்ணியெங்கும் விளங்கும்
ஊனமற உயர்வுமிக உள்ளொளியாய்ப் பிறங்கும்
ஒன்றுமறி யாதுழலும் உயிர்களின்பால் இரங்கும்
மோனமெனும் திருவமுதாய் ஞானியருள் ளிலங்கும்
முத்தர்புகழ் ரெட்டிப்பட்டி சுவாமிதிருப் பெயரே. 6

(வேறு)

அன்பர் எங்குளர் எனநனி தேடும்
ஆர்வம் மிக்கநல் உள்ளத்தை நாடும்
துன்பம் யாவையும் ஓடிடச் சாடும்
தூய ஓமெழுத் தோடிசை பாடும்
இன்பம் யாவும் நிறைந்திடக் கூடும்
எள்ளளவு சூதெய் தினும் ஊடும்
மன்பதைக் கருள் ரெட்டியப் பட்டி
மாண்புசால் குரு வண்திருப் பெயரே. 7

சட்ட நன்னெறி தந்தெமை யாளும்
சச்சித் தாம்கன லாய்நனி மூளும்
இட்ட மோடும் இதயத்து ளாடும்
இரத்தத் தோடும் கலந்தெங்கும் ஓடும்
நிட்டை செய்யும் பெரியருள் நீடும்
நிலவு பொய்ப்பொறி புலன்வழி மூடும்
சிட்டர் போற்றுநல் ரெட்டியப் பட்டி
சீலம் சான்றசற் குருதிருப் பெயரே. 8

ஞால மீதருள் நல்கிடத் துள்ளும்
நல்ல வர்களின் சிந்தையை அள்ளும்
சீலம் நாடும்மெய் யன்பரைக் கொள்ளும்
தீமை கள்மரு வாவணம் தள்ளும்
மூல மந்திர மொன்றையுள் விள்ளும்
முளைத்தி டும்களை யாவையும் கிள்ளும்
மேலவர் புகழ் ரெட்டியப் பட்டி
மேன்மை சான்றசற் குருதிருப் பெயரே. 9

உய்யும் நாட்டம்உண் டோஎனக் காணும்
உலகிற் காத்திடக் கங்கணம் பூணும்
செய்ய பேரன்பர்க் கேநல்ல ஊணும்
சீல மார்உடை யும்தந்து பேணும்
துய்ய பேரொளி யாகியுள் தோணும்
துட்டத் தன்மைகண் டால்மிக நாணும்
வையம் உய்யச்செய் ரெட்டியப் பட்டி
வண்மை சான்றசற் குருதிருப் பெயரே. 10

பண்பு சால்உளம் கண்டிட அல்லும்
பகலும் பார்மிசை யெங்கணும் செல்லும்
நண்பு கொண்டுநன் மார்க்கத்தைச் சொல்லும்
நலமல் லாததுன் மார்க்கத்தை வெல்லும்
ஒண்பு கழ்மிகு மாறருள் நல்கும்
உயர்வு கூட்டியொன் றாகியுட் புல்கும்
தண்பொ ழில்மிகு ரெட்டியப் பட்டி
சாந்த மூர்த்திசற் குருதிருப் பெயரே. 11

மெய்ப்பொருள் விழை வோடிவண் வாழும்
மேன்மை சால்உளம் நாடியுட் சூழும்
பொய்ப்பவக் கடலா யுள ஏழும்
புல்லி யெம்மைவிடா துறும் ஊழும்
பற்ப மாக்கும் அகந்தையைப் போழும்
பரம பக்தர்கள் இதயத்து ளாழும்
செப்பம் மிக்க இரெட்டியப் பட்டி
திகழும் சற்குரு திருவருட் பெயரே. 12

## 14. திருநீற்றின் மகிமை

("மந்திரமாவது நீறு" என்ற பண்)

அருளை வளர்ப்பது நீறு ஆனந்த மீவது நீறு
பொருளை யருள்வது நீறு புண்ணிய மாவது நீறு
இருளைத் தவிர்ப்பது நீறு இகபர மாவது நீறு
இருடி நகர்க்குரு நாதன் இனித ருளும்திரு நீறே. 1

அன்பை வளர்ப்பது நீறு அறவுரு வாவது நீறு
துன்பைத் தவிர்ப்பது நீறு தூய்மை புரிவது நீறு
மன்பதை யுய்ந்திடச் சட்ட மாண்நெறி யாவது நீறு
இன்ப இருடியர் பட்டி இறைவன் அருள்திரு நீறே. 2

அக்கர மாவது நீறு ஆருயிர் காப்பது நீறு
சக்கர மாவது நீறு சத்தி யருள்வது நீறு
திக்கனைத் தும்புகழ் நீறு செம்மை புரிவது நீறு
தக்க இருடியர் பட்டித் தனிமுதல்வன் திரு நீறே. 3

அணிய இனியது நீறு ஆகத் தொளிர்வது நீறு
பணிவுடன் இன்சொல் லருளிப் பக்குவம் செய்வது நீறு
பிணிதவிர்த் தாள்வது நீறு பேறென வுள்ளது நீறு
பணிய அருள்குரு நாதன் பரிவொ டருள்திரு நீறே. 4

ஆகத் தணிவது நீறு அமரத்வ மீவது நீறு
யோகப் பொலிவருள் நீறு உள்ளொளி யாவது நீறு
மோகம் தவிர்ப்பது நீறு முத்தி யருள்வது நீறு
ஏகன் இருடியர் பட்டி ஈசன் அருள்திரு நீறே. 5

வேதம் புகழ்பொருள் நீறு வித்தக மாவது நீறு
பூத பரம்பரை வாழப் புனிதம் அருள்வது நீறு
நாத முடிதிகழ் நீறு ஞானம் வளர்ப்பது நீறு
போத இருடியர் பட்டிப் புனிதன் அருள்திரு நீறே. 6

அரிய பொருள்களில் எல்லாம் அரிய பெரும்பொருள் நீறு
உரிய தனைத்தையும் நல்கி ஓம்பி யருள்வது நீறு
துரிய நிலைதரும் நீறு ஜோதி யெனத்திகழ் நீறு
பெரியன் இருடியர் பட்டிப் பெம்மான் அருள்திரு நீறே. 7

சொல்ல இனியது நீறு சொல்லரும் சீருடை நீறு
நல்லவர் போற்றிடும் நீறு நாவிற் பொலிவது நீறு
வெல்லரும் ஐம்புல இச்சை வெல்லப் புரிவது நீறு
நல்ல இருடியர் பட்டி நம்பன் அருள்திரு நீறே. 8

ஆதவன் பேரொளி நீறு அம்புலி தண்ணொளி நீறு
ஓதரி தாம்மறை யாவும் ஓத அருள்வது நீறு
பேதமை தீர்ப்பது நீறு பெருமை யருள்வது நீறு
நாதன் இருடியர் பட்டி நற்குர வோன்திரு நீறே. 9

கனியின் இனியது நீறு கனிய அருள்வது நீறு
முனிவர் புகழ்வது நீறு மும்மலம் மாய்ப்பது நீறு
மனிதர் விலங்குபுள் வர்க்கம் வண்பயிர் ஆதிய வாழ
இனியன் இருடியர் பட்டி இறைவன் அருள்திரு நீறே. 10

கருதின் அருள்வது நீறு கருணை சுரப்பது நீறு
பருதி பலப்பல கோடி படர்வது போலொளிர் நீறு
சுருதி முடிதிகழ் நீறு சூழ்பவம் தீர்ப்பது நீறு
இருடியர் பட்டிச் சுவாமி இனிதரு ளும்திரு நீறே. 11

தேவர் அணிவது நீறு தீமை தவிர்ப்பது நீறு
மூவர் அருள்வதும் நீறு முதல்முடி வாவதும் நீறு
பாவலர் நாவலர் யாரும் பரவ வொளிர்வது நீறு
தேவன் இருடியர் பட்டிச் செல்வன் அருள்திரு நீறே. 12

சிட்ட ரெலாம்புகழ் நீறு செல்வ மெலாம்தரும் நீறு
மட்டில் சிறப்பருள் நீறு மாதவப் பேறருள் நீறு
உட்டெளி வீந்தருள் நீறு உருகவைக் கும்கனல் நீறு
சட்டம் அருள்குரு நாதன் தண்ணரு ளாம்திரு நீறே. 13

அகநிறை வாவது நீறு அமல நிலைதரும் நீறு
புகலருள் பொற்புடை நீறு புறத்தினிற் காப்பதும் நீறு
யுகமனந் தம்கடந் தாலும் ஒழிவற உள்ளது நீறு
தகவருள் சற்குரு நாதன் தண்ணரு ளாம்திரு நீறே. 14

ஆக்கம் அருள்வது நீறு ஆனந்த வாழ்வருள் நீறு
ஊக்கம் அருள்வது நீறு ஓமொலி யாவது நீறு
மோக்கம் அருள்வது நீறு முழுமை பெறச்செயும் நீறு
நீக்கமில் சற்குரு நாதன் நிகரில் அருள்திரு நீறே. 15

மூல மறைப்பொருள் நீறு மோனபரா னந்தம்நீறு
கால மனைத்தும் கடந்த காரண மாவது நீறு
சீலம் அருள்வது நீறு செம்மை யெலாம்தரும்நீறு
ஆலம் அமுதென ஆக்கும் அமல குருதிரு நீறே. 16

நல்லடி யாரை ஞாலத்தில் ஆட்கொண் டருள்வது நீறு
அல்லும் பகலும் அடியார்க் கரணென வுள்ளது நீறு
வெல்லரும் பேய்களை யோட்டி விடங்களை நீக்கிடும் நீறு
பல்வகைப் புண்களும் ஆற்றும்-குரு-பரன்அரு ளும் திரு நீறே. 17

பிழைக ளுக்காகத் தண்டித்துப் பேணித் திருத்திடும் நீறு
விழைவதெலாம்தரும் நீறு வினையை யெரிப்பது நீறு
தழைமகப் பேறருள் நீறு-பெற்ற-தாய்க்கும் பிறந்துள சேய்க்கும்
மொழிமருந் தின்றிப் பாலிக்கும்-குரு-மூர்த்தியருள் திரு நீறே. 18

திருமணமாகா தவர்க்கும் திருமணம் செய்விக்கும் நீறு
ஒருமை மனம்தரும் நீறு உண்மையின்பம் தரும் நீறு
பெருமை பிறங்கிடும் நீறு பிறவி தவிர்ப்பது நீறு
உரிமை யொடேயுலகோர்கள்-அணிந்-துய்யவொளிர்திருநீறே 19

முரடரை யும்வச மாக்கி முத்தி நெறிதரும் நீறு
திருடரும் நன்று திருந்தித் திருவருள் எய்தச்செய் நீறு
புருடரும் பெண்டிரும் யாரும் பூசிப் பருகியுய் நீறு
இருடிநகர் குருநாதன்-அருள்-என்ன வொளிர் திரு நீறே. 20

## 15. பூசை விளக்கம்

இறைவனுக்கர்ப் பணமாக
எச்செயலும் இயற்றுவதே பூசையாகும்
இறைவனுக்கர்ப் பணமென்ன
எப்போதும் விளம்புவதே பூசையாகும்
இறைவனுக்கர்ப் பணமாக
எதனையும்நாம் எண்ணுவதே பூசையாகும்
இறைவனுக்கர்ப் பணமாக்கி
எம்மூச்சும் இயங்கில்உயர் பூசையாமே. 1

எவ்வுயிரும் வாழ எண்ணி
    இனிதுவழி பாடியற்றல் பூசையாகும்
எவ்வுலகை யும்புரக்கும்
    இறையை உள மாரஎண்ணல் பூசை யாகும்
எவ்வுயிருக் குள்ளும் இறை
    விளக்க முணர்ந் தினிதேத்தல் பூசை யாகும்
எவ்வணுவுக் குள்ளும் அரு
    ளியக்க முணர்ந் தினிதேத்தல் பூசை யாமே. 2

உள்ளுறையும் பரம்பொருளுக்
    குயரன்பு நீராட்டல் பூசையாகும்
உள்ளுயிர்ப்பெ னும்தூபம்
    உயர்மதி தீபம் காட்டல் பூசை யாகும்
தெள்ளுபசு போதமதே
    திருவமுதாச் சமர்ப்பித்தல் பூசை யாகும்
விள்ளருநல் வாழ்வை இறைக்
    கர்ப்பணித்தல் வித்தகமாம் பூசையாமே. 3

அருளென்னும் பெருஞ்ஜோதிப்
    பிழம்பினையுட் கண்டேத்தல் பூசை யாகும்
அருளென்னும் பெருந்திருவை
    அகம்புறமும் கண்டேத்தல் பூசை யாகும்
அருளென்னும் பெருங்கடலுள்
    மூழ்கியுள தறிந்தேத்தல் பூசை யாகும்
அருளென்னும் ஒன்றில்தனைக்
    கரைத்திடச்செய் முயற்சி அருட் பூசை யாமே. 4

கருணை நினைந் தனவரதம்
    கண்களில் நீர் பெருக்கிடுதல் பூசையாகும்
கருணையினால் விளை நலன்கள்
    கேட்டபொழு தேயுருகல் பூசையாகும்
கருணையினால் தீமைபல
    விலகிடுதல் கண்டுருகல் பூசையாகும்
கருணையினுள் யானென்ப
    தைக்கரைத்துக் கலந்திடுதல் பூசையாமே 5

என்றும் எங்கும் இறையருள்
விளங்கிடக்காண் பதுஉண்மைப் பூசையாகும்
என்றும் எங்கும் இறையருள்
எல்லாம்புரிவ தைக்காண்டல் பூசையாகும்
என்றும் எங்கும் இறையருள் எவ்
வுயிரையும்பே ணலைக்காண்டல் பூசையாகும்
என்றும் எங்கும் இறையருளில்
இரண்டறக் கலத்தல் உயர் பூசையாமே. 6

திருவருளொன் றேஉண்மை யெனக்கண்டு
தெளிவுறுதல் பூசையாகும்
திருவருட்கு நினைவுமொழி செயல் மூச்சர்ப்
பணமாக்கல் பூசையாகும்
திருவருளில் தோய்ந்திணையில் தவமியற்றிச்
சிறந்தொளிர்தல் பூசையாகும்
திருவருளில் தனைக்கரைத்துத்
திருவருளின் மயமாதல் பூசையாமே. 7

குருநாதன் அருட்காட்சி கண்டுருகிப்
போற்றுவதே பூசையாகும்
குருநாதன் அருள்நினைந்து கும்பிட்டு
வாழ்வதுவே பூசையாகும்
குருநாதன் அருள்நாமம் அனவரதம்
கூறுவதே பூசையாகும்
குருநாதன் அருட்பணிகள் செய்வதுவே
உய்வுதரும் பூசையாமே. 8

எப்பொழுதும் குருபாதம் இதயத்திற்
கொண்டேத்தல் பூசையாகும்
எப்பொழுதும் குருநாமம் உள்ளோதி
உருகுவதே பூசையாகும்
எப்பொழுதும் குருநாதன் திருவுருவை
த்யானித்தல் பூசையாகும்
எப்பொழுதும் எங்கும் குரு
அருளாட்சி யினையுணர்தல் பூசையாமே. 9

அகம்புறமும் குருகருணே
விளங்கிடும்அற் புதம்காண்டல் பூசையாகும்
அகம்புறமும் குருகருணே
அரணுவ தறிந்தேத்தல் பூசையாகும்
அகம்புறமும் குருகருணே ஆக்கம்அருள்
வதையுணர்தல் பூசையாகும்
அகம்புறமும் குருகருணே
யினிலொன்றி யமைதல்உயர் பூசையாமே. 10

அணுவளவும் களங்கமின்றி
அருளேநினே ந் திருப்பதுவே பூசையாகும்
அணுவளவும் களங்கமின்றி
அருட்பாடல் ஓதுவதே பூசையாகும்
அணுவளவும் களங்கமின்றி
அருள்தொண் டியற்றுவதே பூசையாகும்
அணுவளவும் களங்கமின்றி
அடியர்பணி யாற்றுவதே பூசையாமே. 11

அடியார்கள் தரிசனம்கண்
டன்போடும் போற்றுவது பூசையாகும்
அடியார்கட் குணவூட்டி
அன்போடும் உதவிசெயல் பூசையாகும்
அடியார்கட் கானபணி விடைபுரிதல்
அகிலமிசை பூசையாகும்
அடியாரை ஆண்டவனுய் எண்ணி அவர்க்
காட்படுதல் பூசையாமே 12

## 16. அஞ்சேல் நெஞ்சகமே!

அஞ்சேல் நெஞ்சகமே—மிக
அற்புதமான அருட்குரு இங்குள்ளார் (அஞ்சேல்)
செஞ்சேவடி யருள்வார்—உயர்
தேவர் வியக்கத் திருவருள் நல்குவார் (அஞ்சேல்)
விஞ்சேர் கொள் தளியை—எழில்
மிக்க கருங்கல்லாற் செய்யப் பொருளீவார் (அஞ்சேல்)

பஞ்சேநேர் பதங்கொள்—வள்ளி
பக்கத் திருக்கும் படிவமும் காட்டுவார் (அஞ்சேல்)
மஞ்சே சூழ்சிகரம்—கொள்
வனப்புடைக் கோபுரம் கட்டச் செல்வமீவார் (அஞ்சேல்)
நஞ்சே நேரெனையும்—பர
ஞான வமுத மயமென ஆக்குவார் (அஞ்சேல்)
துஞ்சா நல் வளஞ்சால்—பதி
தூய இருடி நகரி லமர்ந் துள்ளார் (அஞ்சேல்)
நெஞ்சே யுள்ளுருகித்—தொழும்
நல்லமெய் யன்பர்கட் கென்றும் துணையாவார் (அஞ்சேல்)

## 17. இறைஞ்சாய் நெஞ்சே

திருவருளே உருவெனக்கொள் தேவா என்றும்
செல்வமெலாம் ஈந்தருளும் செல்வா என்றும்
ஒருவருமே உரைத்தறியா உயர்சட் டத்தை
உலகினுக்கு வகுத்தருளும் ஒருவா என்றும்
பருவபக்கு வங்களெலாம் அடியார்க் கீந்து
பாலித்தற் கவதரித்த பரமா என்றும்
இருவினைகள் தவிர்த்தருள்செய் ஈசா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 1

அன்புருவம் கொண்டருளும் அமலா என்றும்
அருமறைக ளாய்விளங்கும் அமரா என்றும்
வன்புகொண்ட மனந்திருத்தும் வரனே என்றும்
வழியடியார்க் கருள்சுரக்கும் பரனே என்றும்
துன்பமெலாம் தீர்த்தருளும் சுடரே என்றும்
தூய்மைசெயும் பெருங்கருணைக் கடலே என்றும்
இன்பமெலாம் வழங்கியருள் இறையே என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 2

நாதமெலாம் சென்றொடுங்கும் இடத்தே ஞான
நடனசபை யினில்நடம்செய் நாதா என்றும்
போதமெலாம் அளித்துதவும் புனிதா என்றும்
புன்மையெலாம் பொறுத்தருள்பூ பாலா என்றும்

வேதமெலாம் தொழுதேத்தும் விமலா என்றும்
வித்தெனவாய் விளைவெனவாம் விபுவே என்றும்
ஏதமெலாம் தீர்த்தருளும் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 3

வழுவறியா மாணிக்க மலையே என்றும்
வழிகாட்டும் வான்பொருளாம் பதியே என்றும்
குழுவெனநல் லடியரைச்சேர் குருவே என்றும்
குறைதவிர்த்து நிறைவருளும் திருவே என்றும்
நழுவிவிடா தருட்சட்ட நெறியில் மிக்க
நம்பிக்கை யோடுழைப்போர்க் கருள்வோய் என்றும்
எழுபிறப்பும் தவிர்த்தருளும் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 4

விஞ்ஞான ஆராய்ச்சி மிக்கோ ரெல்லாம்
வியக்கும் வணம் பிணிகள்தவிர் விமலா என்றும்
அஞ்ஞான இருளகற்றும் அமலா என்றும்
அருளமுதம் சுரந்தளித்தாள் அரசே என்றும்
மெய்ஞ்ஞான நிலைவழங்கும் மேலோய் என்றும்
மேன்மையெலாம் கொடுத்தருளும் மெய்யா என்றும்
எஞ்ஞான்றும் பிரிவறியா இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 5

மாகாந்த மாயீர்க்கும் மணியே என்றும்
மம்மரெலாம் தொலைத்தருளும் மாண்பே என்றும்
தேகாந்தம் உணராமல் திரிவோர் உய்யத்
திருவருட்சட் டம்கொடுத்தாள் தேவா என்றும்
மோகாந்தம் காட்டியருள் முனிவா என்றும்
மோனநிலை கூட்டியருள் மூர்த்தீ என்றும்
ஏகாந்த மாய்ப்புணரும் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 6

அருளமுதம் குழைத்தூட்டும் அப்பா என்றும்
ஆன்மார்த்த சுகம்வழங்கும் அழகா என்றும்
பொருளனைத்தும் விளக்கியருள் போதா என்றும்
பூரணமாய் எங்கும்நிறை புனிதா என்றும்

தெருளனைத்தும் வழங்கியருள் தேவா என்றும்
தேகமொரு தளியெனக்கொள் சீலா என்றும்
இருளனைத்தும் விலக்கியருள் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 7

புனலில்விடி யலில்மூழ்கும் புனிதர் தம்பால்
பொருந்தியருள் மிகப்புகட்டும் புனிதா என்றும்
அனலிலுறு மெழுகதுபோல் உருகி யேத்தும்
அடியவர்கட் காரமுதாய் இனிப்போய் என்றும்
உனல்உரைத்தல் செயல் புரிதல் எல்லாம் தானே
உணர்கவென நன்றுணர்த்தும் ஒருவா என்றும்
இனல்தவிர்த்து மெய்யின்பம் ஈவோய் என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 8

உள்ளமெலாம் குழைந்துருகும் அடியார் கட்கே
உயர்வனைத்தும் வழங்கியருள் ஒருவா என்றும்
கள்ளமெலாம் தவிர்த்தருளும் கர்த்தா என்றும்
கருணைநலம் சுரந்தருளும் நித்தா என்றும்
வள்ளலெனச் சட்டம்அருள் மன்னு என்றும்
வழித்துணையாய் என்றும்அமை மகிபா என்றும்
எள்ளலிலா தாண்டருள்செய் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 9

அகவொளியாய்ப் புறவொளியாய் அமைவோய் என்றும்
அச்சமெலாம் தவிர்த்தருளும் அரசே என்றும்
சகமுழுதும் விண்முழுதும் சமைத்தோய் என்றும்
சரம்அசரம் யாவையும்நன் றமைத்தோய் என்றும்
தகவனைத்தும் வழங்கியருள் தக்கோய் என்றும்
தருணமறிந் துதவிசெயும் சால்பே என்றும்
இகசுகமும் பரசுகமும் தருவோய் என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 10

எங்கடியர் நினைத்தாலும் அங்கே சென்(று)அவ்
வடியர்துயர் நீக்கியருள் அரசே என்றும்
மங்களமாய் உலகமெலாம் வாழ வேண்டி
மாணருட்சட் டம்வகுத்தாள் மணியே என்றும்
வங்கமென வந்துபவக் கடலை நீந்தும்
வழியுரைத்தே யழைத்தேகும் மாண்பே என்றும்
இங்கிதயத் தமர்ந்தருள்செய் இறைவா என்றும்
இருடிநகர்க் குருபரனை இறைஞ்சாய் நெஞ்சே. 11

## 18. கற்பகம் நிகர்த்த குருவே

மண்ணும்நீ விண்ணும்நீ காலும்நீ தீயும்நீ
வளமெலாம் தருநீரும் நீ
வகையும்நீ தொகையும்நீ வண்மைநீ திண்மைநீ
வார்த்தை யெண்ணம் செய்கைநீ

கண்ணும்நீ காட்சிநீ காட்டிவைப் பவனும்நீ
காணுணும் பல பொருளும் நீ
கற்பனைகள் யாவும்நீ கற்பனைக் கெட்டாத
கடவுள்நீ கருணையொளி நீ

பெண்ணும்நீ ஆணும்நீ பேச்சுநினை வற்றோங்கு
பெரியநிலை யாம்துரியம் நீ
பேதம்நீ பேதங்கள் அறியாத நிலைநீ
பிறங்கும் எல்லாப் பொருளும்நீ

எண்ணும் நீ உள்ளே யொலித்திடும் எழுத்தும்நீ
எண்ணிலாப் பண்ணின் வகைநீ
ஏழையேன் பிழையெலாம் எண்ணுமலே பொறுத்
தினிதாண் டருள்செய் குருவே. 1

பற்றற்ற வர்க்கெலாம் பாததாமரை நல்கு
பரம கருணு மூர்த்தியே
பாசபந் தங்களைந் தருள்நெறியில் ஏகுநற்
பாங்கினை யுணர்த்தும் ஒளியே

கற்றமே லவர்தம் கருத்திலூ றமுதே
களங்கமறு ஞான மதியே
கசடுநிறை மனதும் திருந்திடச் செய்துளே
கனிவிக்கும் உண்மை யன்பே

பெற்றதா யினுமினிய ளுகிமெய்ப் பரிவோடு
பேணியாண் டருளும் உறவே
பிறவியா கியபெரும் பிணியகல உள்ளே
பிறங்குமொரு நன் மருந்தே

நற்றவரும் மற்றவரும் நலமெய்த மெய்ஞ்ஞான
நாட்டம் வழங்கும் இறையே
நாயினேன் பிழையெலாம் எண்ணுமல் மன்னித்து
நன்றாண் டருள்செய் குருவே. 2

என்னறிவும் என்னன்பும் என்பொறியும் என்புலனும்
என்மனமும் என்வாக்கும் நீ
என்கரண மெல்லாமும் என்னெண்ண மெல்லாமும்
என்செயல்கள் எல்லாமும் நீ

என்னுள்நீ என்முன்நீ என்பின்நீ என்மேலும்
என்னகமும் என்புறமும்நீ
என்பக்க மெல்லாமும் நின்றுள்ள காவல் நீ
என்னகத் துள்ளதுணை நீ

என்னுடலும் என்னுயிரும் என்பொருளும் என்புகழும்
என்குணமும் என்நலமும்நீ
என்னிதய கோசம்நீ என்னிருகண் மணியும்நீ
என்காட்சி என்கேள்வி நீ

என்னுடைய பண்புநீ என்னன்னை தந்தைநீ
என்னையாண் டருளரசு நீ
என்னிட்ட தெய்வம்நீ எனதுகுல தெய்வம்நீ
என்னின்ப மான குருவே. 3

கல்விநீ யறிவுநீ கற்பனைகள் யாவும்நீ
கற்பனை கடந்த பொருள்நீ
கலையெலா முணர்விக்கும் உணர்வுநீ மெய்யறிவு
காட்டுமொரு சத்குருவும் நீ

செல்வம்நீ மெய்ச்செல்வ வருவாயும்நீ யளவில்
செல்வம் திரட்டுபவன் நீ
செல்வத்து ளுயரருட் செல்வம் பெருக்கி நற்
சீரடியர் பால்சேர்ப்பை நீ

பல்வளமு மிக்கநில மாய்க்கல் நிகர் மனதையும்
பண்படுத் திட வல்லை நீ
பக்குவ மிகுந்திலகு செம்மனத் தினில்அருட்
பயிர் செய்து காப்பவனும் நீ

நல்வினை வெனும் மெய்ம்மை யின்பமெங் கெங்குமுற
ஞான நீர் பாய்ச்சு பவன்நீ
நமனை நாடா தருளை நாட வுயிர்கட் கெலாம்
நன்னெறி வகுத்த குருவே. 4

வானிலொளிர் கதிரும்நீ நிலவுபொழி மதியும்நீ
மன்னுபல விண்மீனும் நீ
வாசமலர் யாவும்நீ வண்ணவகை யாவும்நீ
மது நீ இனிப்பு வகைநீ

ஊனில்அமை யழகுநீ உயிரும்நீ உணர்வும்நீ
உள்ளன்பும் உள்ளொளியும் நீ
ஓங்கார நாதம்நீ ஓதுபல மந்த்ரம்நீ
ஒப்பிலாப் பலதந்த்ரம் நீ

ஆனிவரு மீசனருள் ஐங்கரக் கணபதியை
அணையுமிரு கரமுடை யை நீ
ஆருயிர்க ளுக்கெலாம் அன்பு நெறி தந்தாளும்
அரசுநீ ஆசிரியன் நீ

ஞானியருள் ஞானிநீ மோனியருள் மோனிநீ
நாதாந்த வேதாந்தம் நீ
நாம ரூபங்க ளெல்லாம் கடந்தில கின்ப
நாட்டம் வழங்கு குருவே. 5

அன்புருவம்நீ உண்மை யறிவுருவம்நீ ஞான
ஆசிரியனின் உருவம் நீ
அருளுருவம்நீ பரம்பொரு ளுருவம்நீ சச்சி
தானந்த மாம் உருவம்நீ

என்புருக நின்னருளை நாடியுரு கன்பர்களின்
இதய பக்குவ வுருவம்நீ
இருள்நீக்கு மெய்ஞ்ஞான வொளியுருவம்நீ யிணையில்
ஏகாந்த சுகவுருவம் நீ

நின்புனித நெறியிலணு வளவு மாறு தவர்கள்
நெஞ்சத்தி னொளியுருவம் நீ
நிட்டானு பூதியிற் கனிவுற்ற முத்த ருளம்
நிலையுற் றிலங்குருவம் நீ

துன்புறு நெறிக் கணுறும் என்னையன் போடுநீ
தூநெறிக் கீர்த்தரு ளுவாய்
துரிய வொளி தந்தின்ப வமுதூட்டி மெய்யருட்
ஜோதிதந் தாள்க குருவே. 6

நின்னடியர் கூட்டத்தை நாடுபவர் எல்லோரும்
நின்னருளுடைவர் என்பார்
நின்னடியர் கூட்டத்தை நாடிநீங் காமல் வாழ்
நிலையடிய னேற் கருளுவாய்

கன்னவிலும் என் மனதை நின்னருட் சுவைமிக்க
கனியாக மாற்றி யருள்வாய்
காசினியில் வாழுயிர்க ளெல்லாம்நி னுருவெனும்
காட்சிதந் தாட்சி புரிவாய்

பொன்னனைய வொளியுடம்பும் ப்ரணவ தேகமும்
பொய்யில் மெய்ஞ்ஞான உருவும்
பொற்பொடு வழங்கி யருளார்ஜோதி யூடெனைப்
புகுவித்து முத்தி யருள்வாய்

என்னனைய பேயர்க்கு மின்னருள் வழங்கியாள்
ஏகசத் குருமூர்த் தியே
எண்ணரிய என்பிழைக ளெல்லாம் பொறுத்தருளி
இன்பம் வழங்கு குருவே. 7

நிட்டைநிலை யிற்பழுத் திலகுநின் னன்பர்தாள்
நேடியர்ச் சித்தறி கிலேன்
நெறியறி கிலாதுபாழ் படுமெனையும் நின் தூய
நெறியிலீர்த் தின்பம் அருள்வாய்

கட்டையிது கொண்டுநின் னன்பர்பணி செய்துநின்
கழல்நினைவி லாழ வைப்பாய்
கருணையமு துண்டுநன் னிட்டையைப் பேணும்
கருத்தருளி யாற்ற லருள்வாய்

முட்டையாய்க் குஞ்சுமாய்ப் பறவையாய் நாற்கால்
முளைத்த பலவகை விலங்காய்
மூர்க்கமுள மனிதராய் மூதறிவு ளோர்களாய்
மோனநிலை மேயவர் களாய்

சட்டையினை யொளிமயம தாக்கியரு ளார்ஜோதி
சாருபவ ராயிலகு வோய்
சத்திய நெறிக்கணுறு சத்துவரை யாண்டருள் செய்
சாந்த வடிவான குருவே. 8

ஆசையை யறுத்தெறியும் வழிகாட்டு மன்பே
அறத்தினை வளர்க்கும் உறவே
அகத்தினில் இருட்டற விளக்கிடும் விளக்கே
அருட்சோதி யான வொளியே

பூசையை விழைந்துநல் லின்பமுறு நெறியைப்
புகன்ற கருணு மூர்த்தியே
பொய்தவிர்த் துண்மையைப் போற்றுநல் வாழ்வுதரு
புனிதனே போத வுருவே

காசை உணவினை உடையை ஐம்புல நுகர்ச்சியைக்
காமத்தை நாடி யலையும்
கடையனென் னைத்திருத் தித்தூய நிட்டைநிலை
காட்டியமு தூட்டி யருள்வாய்

மாசையெல்லாம் போக்கி மன்னுயிர்களுக் கின்ப
வாழ்வருள வரும் வள்ளலே
வண்மையொடு திருவருட் சட்டத்தை யினிதே
வகுத்தீந்த ஞான குருவே. 9

ஞாலத்திலே உயிர்கள் உண்மை யுணராமலே
நலிவுறுதல் கண்டுயி ரெலாம்
நல்வாழ்வு பேணிமெய் யின்பமுற வொரு நெறியை
நாமறிதல் வேண்டு மென்று

சீலத்தொடும் மதுரையிற் பொதிகையிற் றவம்
செய்துண்மை வழியு ணர்ந்து
திருவருட் சட்டமென யாவர்க்கு மோதிநற்
சீடர்களை நாடி யேகி

மூலத்தை யுணர்வித்து முத்திவழி யைக்காட்டி
மூதறிவை யூட்டி யருளி
முகவொளியும் அன்பொளியும் மொழியொளியும்
முத்தராக் கிடநடந் தோய் [மாந்தர்களை

ஆலத்தை நிகர்மனத் துறுமழுக் கினைநீக்கி
அமுதமய மாக்கி யருள்வாய்
அல்லும்நன் பகலும்மெய்ந் நிட்டையினி லாழவைத்
தருள்புரிக ஞான குருவே. 10

பட்டப்பகற் பொழுதை யறியாது தூங்கிடும்
பதகனென வுழலு மெனைநீ
பட்சத்தொ டூர்த்துப் பரத்தினை யுணர்த்தி நற்
பக்குவம் வழங்கி யாள்வாய்

சட்டத்தினைத் தூய்மை யொடுபேண வைத்தருள்செய்
தத்துவம் விளக்கி யருள்வாய்
சத்துவ விளக்கமே சத்திய முழக்கமே
சாந்தியமு தூறு தடமே

மட்டற்ற பேராசை யைச்சுட்டு மெய்யன்பை
வளர்விக்கும் ஞான வுணர்வே
வாழ்வில்மெய் யருளொளி விளங்கவைத் திடுமறிவு
வளமே விளைந்த விளைவே

கட்டத்தை யெல்லாம் விலக்குகிற துணையே
கலக்கம் தவிர்க்கும் உறவே
கருணையமு தூட்டிப் புரக்குமொரு தேனுவே *
கற்பகம் நிகர்த்த குருவே. 11

## 19. கள்ளமில்லா உள்ளம் வேண்டும்.

(பல்லவி)

கள்ளம் கபடில்லாத உள்ளம் கொடுக்க வேண்டும்
கருணை வடிவாம் குருவே.

(அநுபல்லவி)

தெள்ளத்தெளிய எல்லாத் தெய்வ நெறிகளையும்
உள்ளவா றுணர்ந் துண்மை உலகுக் குணர்த் திறையே
(கள்ளம்)

(சரணம்)

புள்ளும் கோழியும் கூவும் பொழுதில் தண்ணீரில் மூழ்கி
எள்ளில் எண்ணெயைப் போல எங்கும் நிறைந்து நிற்கும்
வள்ளல் அருளை நாடி வழுத்தின் உய்யலாம் என்றே
பள்ள மடைநீர் போலப் பாருக் கருள் அரசே. (கள்ளம்)
துள்ளும் மன மடக்கித் தூய நிட்டை புரிந்து
வெள்ளி விரத மாதி விரத முறைகள் பேணி
உள்ளும் புறமு மொன்றி உயர்வுற் றினிதே அருட்
பள்ளியில் மேலா மின்பப் பயனைப் பெறச்செய் தேவே
(கள்ளம்)

---

தேனு = காமதேனு

## 20. விண்ணப்பம்

(ககர வரிசைப் பதிகம்)

கண்மாரி பொழிந்திடநும் கருணையினை வேண்டுகின்றேன்
கண்ணால் நோக்கி
உண்மாசு துடைத்தருளி அகரமக ரங்களுடன்
உகர மென்னும்
பண்மாரி பொழிந்தருளிப் பழவினையின் தொடக்கறுத்துப்
பரிசுத் தம்செய்(து)
எண்மாற்று டிரண்டரைசேர்த் தெனும்சொக்கத்
தங்கமென எனைச்செய் வீரே. 1

காதார நுமதுதிரு வருளொலியைக் கேட்டிடவும்
கண்ணா லேநும்
பாதார விந்தமலர்த் திருக்காட்சி பார்த்திடவும்
பரிவுற் றென்சொல்
மீதார்வத் தொடுநீரும் கேட்டுவிடை கூறிடவும்
வேண்டு கின்றேன்
ஆதாரம் ஓராறில் அமர்ந்ததற்கு மேலுமொளிர்ந்
தரசாள் தேவே. 2

கிருபைமிகக் கொண்டெனது குற்றமெலாம்
பொறுத்தருளிக் கீழ்மை நீக்க
ஒருபுரையில் விரதமளித் தோம்புநுங்கள்
உயர்கருணை யுரைக்கற் பாற்றோ
இருபுடையும் தீயிருக்க எறும்பவத்தைப்
படுவதுபோல் ஏங்கு கின்றேன்
இருவினையின் தொடக்கறுத்(து)உம் மிணையில் பதப்
பேறளிக்க ஈர்த்தாள் வீரே. 3

கீதமிசைத்(து) உம்புகழைப் பாடிடவும்
கற்றறியேன் கீழ்மை நோக்கித்
தீதுபுரி மனதுமொழி செயலுடையேன்
என்பாலும் கிருபை செய்து
போதம்நனி பெருகவொரு விரதம் அருள்
பெருமையினைப் போற்று கின்றேன்
வேதமுடன் ஆகமமும் சாத்திரமும் போற்றவொளிர்
விமலத் தேவே. 4

குறைமிகவும் உடையனெனக் கண்டிருந்தும்
குறையையுளம் கொண்டி டாமல்
நிறையருளக் கருதியுயர் விரதமொன்று
நீள்கருணை யாலே நல்கும்
மறையவ! நும் பெருமையினை யெடுத்துரைக்க
வரைந்துவைக்க வல்லே னல்லேன்
இறையவ! நும் திருப்பாதச் சேவைதந்து
பேரின்ப மீவீர் அண்ணல். 5

கூறரிய நுமதுதிருப் புகழ்கூறக்
குறித்தறியேன் குற்றம் செய்வேன்
சோறதனை ஆவலுடன் தின்றிடுவேன்
சுத்தம்அணு வேனும் இல்லேன்
ஈறுமுதல் காணரியா இறையவ! நும்
கருணையினு லீந்த உண்மைப்
பேறருள்நல் விரதமிதைப் பேணியருள்
பெறக்கருணை புரிவீர் நன்றே. 6

கெட்டநினை வொடுதினமும் திரியுமெனைக்
கிருபைபுரிந் தாண்டு கொண்டீர்
சிட்டர்புகழ் விரதமொன்றை எனக்களித்தீர்
திடம்படஇவ் விரதம் போற்றி
அட்டசித்தி யாதிகளும் அருட்பேறும்
ஞானமுமுற் றவனி மீதில்
சட்டநெறி நனிபரப்பித் தண்ணருளின்
பணிபுரியத் தயை செய்வீரே. 7

கேட்டதெலாம் கொடுத்தருளும் கேளிரெனத்
திகழுகின்றீர் கேளா முன்னம்
வாட்டமெலாம் தவிர்த்தருளும் வள்ளலென
எனக்குமைந்தீர் வரையா தீவீர்
நாட்டமெலாம் நும்பணியாக் கொண்டுயவும்
ஞாலமிசை அருளார் சட்டத்
தேட்டமெலாம் பறைசாற்றிச் சீரடியா
ருடன்திகழச் செய்வீர் தேவே. 8

கைப்பறுநல் லினிப்பெனக்குக் காட்டவல்லீர்
என நுமது கருணை நோக்கி
எப்பொழுதும் காத்திருந்தேன் எனக்குமொரு
நல்விரதம் இப்போ தீந்தீர்
மெய்ப்பொருளை விளக்கியுயர் திருவடிப்பே
றருளிஅருட் சட்டந் தன்னை
இப்புவியிற் பரப்புபணி யீந்தருள்வீர்
என்றனருட் குருவாம் தேவே. 9

கொடையில்மிகச் சிறந்துவிளங் கண்ணல்நும்
கொடைத்திறனைக் கூற கில்லேன்
நடையில்மிகத் தாழ்ந்தவெனை நற்கருணை
யாலீர்த்து விரதம் நல்கிப்
புடையமர்ந்துள் ளொளிர்ந்துநிதம் புரந்தருள்செய்
நும்கருணை புகலற் பாற்றே?
உடையவ! நும் சட்டநெறி உலகில் நனி
பரப்புபணி உவந்தி வீரே. 10

கோதகல்நல் லருள் நெறியை உலகினுக்குக்
கொடுத்தருள் நும் கருணை சற்றிங்
கோதவெனில் இயல்வதுவோ ஒப்புயர்வில்
பெருங்கருணை யுடையீர் எற்கும்
தீதகல்நல் விரதமளித் தனவரதம் பேணும் அருட்
செம்மை மிக்கீர்
பூதலத்(து)உம் சட்டநெறி பரப்புதிருப்
பணியிலெனைப் புகுத்து வீரே. 11

* கௌவைமுத லானதவ றணுவளவும்
காணுநற் சட்ட மொன்றைச்
செவ்வையுறப் புவிக்களித்துப் பேணுமுயர்
சிறப்புடையீர் சிறியேன் பாலும்
வெவ்வினைகள் தவிர்க்க நிட்டைப் பேறளிக்க
அருள்கூர்ந்து விரதம் தந்தீர்
° எவ்வமுறு வகைபுரந்(து)உம் திருப்பணியை
இனிதுசெயப் பணித்தாள் வீரே. 12

* கௌவை = பழிச்சொல், ° எவ்வம் = துன்பம்.

## 21. அமுதப் பதிகம்

சத்தான அமுதமே சித்தான அமுதமே
சச்சித்து மாம்அமு தமே
சதானந்த அமுதாம் சிதானந்த அமுதமே
சச்சிதா னந்த அமுதாய்

இத்தார ணிக்கணுறும் எவ்வுயிரும் மெய்யின்பம்
எய்தவிழை விண்ண முதமே
இணையிலாப் பேரரு ளெனும் தூய அமுதமே
ஏகாந்த மாம் அமுதமே

வித்தாய் அருள்விளைவு நல்குமுயர் அமுதமே
வித்தகர்கள் போற் றமுதமே
விழுமிய பரானந்தம் நல்கும்இன் னமுதமே
வேதங்கள் தேடமு தமே

முத்தாகி மோனத்தில் மூழ்குநன் மனதுள்
முளைக்கும் மூவா அமுதமே
முத்தர்பர விருடியர் பட்டியமர் அமுதமே
மூலமலம் நீக்கமு தமே. 1

தேவர்களும் அறியொணுச் சித்தான அமுதமே
செம்மைபல நல்கமு தமே
சித்தமலம் நீக்கும் சிவானந்த அமுதமே
தேடரிய விண்ணமு தமே

மூவர்களும் நாள்தோறும் நாடிவிழை யமுதமே
முத்தர்கள் அருந் தமுதமே
மூவாசைகளை நீக்கி மும்மலப் பகையினை
முறித்(து) அருள் அருத்தமு தமே

பாவலரும் நாவலரும் அன்பர்களும் இன்புறப்
பண்ணியருள் தண்ணமு தமே
பத்திநெறி சித்திநெறி முத்திநெறி யெல்லாம்
பரிந்துதவு நல்லமு தமே

யாவர்களும் அன்பினல் ஏத்தும் இருடிப்பட்டி
யெனும்நகர் இலங்கமு தமே
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்கா துறைந்தரு
ளெனத்தித்தித் திடும்அமு தமே. 2

எண்ணங்க ளாம்அலை யெழாததிரு வுளமிசை
யிலங்குதிரு வருளமு தமே
ஈரேழு புவனங்க ளுக்கும்இக மோடுபர
மீந்தருளும் இன்னமு தமே

வண்ணங்க ளுக்கெலாம் மூலமாய் உள்ளே
வயங்கும்மெய் யன்பமுதமே
வாராத செல்வங்க ளெல்லாம் வரச்செய்யும்
வரமுதவும் இன்பமு தமே

கண்ணும் கருத்துமொன் றச்செய்து வீர்த்துக்
களிப்பூட்டும் நல்லமு தமே
கருணையாம் கடலினைக் காணுபவர் மூழ்குபவர்
களிகொள்ள எழும் அமுதமே

உண்ணும்பல் பொருளுமாய்ப் போகபோக் யங்களாய்
உருவெடுத் திடும் அமுதமே
ஒப்புயர்வில் இருடியர் பட்டியெனும் நற்பதியில்
ஒளிர்கின்ற விண்ணமு தமே. 3

ஒப்பற்ற திருவரு ளுருக்கொண்டு தமிழ்நாட்டில்
உற்றொளிரும் இன்னமு தமே
உயிர்வர்க்க மெல்லாமும் உய்யவொரு சட்டநெறி
ஊட்டியருள் கூட்டமு தமே

செப்புற்ற திருவருட் பாக்களால் அன்பையுட்
சேர்த்துப் பொருத்தமு தமே
சிறியனேன் செய்பிழை யெலாமும் பொறுத்தறிவு
தீட்டித் திருத்தமு தமே

எப்பற்றை யும்பொடி படுத்திமுத் திப்பே
றெனும் பரிசு நல்கமு தமே
ஏழ்வகை யெனும்பிறவி யின்கணெய் தாதபடி
யீர்த்தின்ப மூட்டமு தமே

மெய்ப்பத்தி மெய்ஞ்ஞானம் மெய்யின்ப மென்றெங்கும்
மேவியொளிர் விண்ணமு தமே
மேன்மையெல் லாம்மிளிரும் இருடியர் பட்டியில்
விளங்கு பேரின்பமு தமே. 4

சட்டநெறி யைத்தந் திரட்சிக்க வே இவண்
சார்ந்தகுரு வாம்அமு தமே
சதானந்த மோனநிலை நல்கநிட் டையிலே
தனித்திருத் திடும் அமுதமே

குட்டமா தியபிணியும் நீக்கும்இன் னமுதமே
கூறரிய சுவையமு தமே
குற்றமில் உளந்தோறும் உற்றரு ளெனும்சுவை
கொடுத்தினிது பேணமு தமே

அட்டமூர்த் தியுமாய் அமைகின்ற அமுதமே
ஆற்றின்ஊற் றும்அமு தமே
ஆணினுள் பெண்ணினுள் அலியுனுள் வெளியினுள்
அமைந்தின் பருத்தமு தமே

விட்டகுறை தொட்டகுறை யாய்க்கூடும் அமுதமே
வேதமுடி வாம்அமு தமே
விழுமியர்கள் போற்றும்இரு டிப்பட்டி யாம்பதி
விளங்குதிரு வருளமு தமே. 5

பூரணம் பெறுமா றருட்சட்ட நெறியிற்
புகுத்தித் திருத்தமு தமே
பொய்யேதும் அறியாத மெய்ஞ்ஞான அமுதமே
பொலிவுமிக அருளமு தமே

காரணம் விளக்குதிரு வமுதமே இனியுமொரு
கருவுளுய்க் காவமு தமே
கல்வியா கியதிருப் பாற்கடலை இனிதே
கடைந்தெடுத் திடும் அமுதமே

நாரணனும் நான்முகனும் இந்திரனும் ஏனையரும்
நாடிவிழை நல்லமு தமே
நாமவுரு வங்கடந் திலகமுத மேநிகரில்
நாதாந்த மாம் அமுதமே

ஆரணமும் ஆகமமும் ஆகிமிளிர் அமுதமே
அன்பினும் அருளமு தமே
அருளடியர் நிறைஇருடி நகர்மேவும் அமுதமே
ஆனந்த மாம்அமு தமே. 6

தெய்விகத் தாய்தந்தை குருவான அமுதமே
தெய்வமென வொளிர் அமுதமே
சிக்குற்ற தொல்வினை தவிர்த்தருளும் அமுதமே
செம்பொருள் விளக்கமு தமே

செய்வகையை அறிய இயலாமல் திகைக்கையில்
தெளிவருளி யாள் அமுதமே
சித்தாந்த அமுதமே வேதாந்த அமுதமே
திகழ்போத மாம் அமுதமே

உய்வகை யிதோவுள தெனக்காட்டும் அமுதமே
உண்மையை உணர்த்தமு தமே
உத்தமர்க ளுக்கெலாம் உளமகிழ் வளித்திட
உளேபொங்கி யெழும் அமுதமே

மெய்வழி வகுத்துயிர்த் தொகையினை யழைக்கின்ற
மேலான பரவமு தமே
விழுமியர்கள் பரவும் இருடிப்பட்டி யமுதமே
வித்தகப் புத்தமு தமே. 7

சண்முகன் பெயர்கொண்ட சாத்வீக அமுதமே
சற்பாத்ரம் மேவமு தமே
சரவசர மாகிமிளிர் அபரிமித மாம் உயிர்கள்
தமை யோம்பி யாள் அமுதமே

உண்முக விளக்கமருள் அமுதமே மெய்ஞ்ஞான
ஊற்றெனப் பெருக முதமே
உறவுமுறை யெல்லாமு மாம் அமுத மேயென
துயிர்க்கும் உயி ராம் அமுதமே

பண்முறையி னிற்பாடு பாவலர்கள் நாவிற்
படிந்து விளையாடமு தமே
பகலிரவு காணரிய பரவெளியில் உலவும்
பராக்ரமர்கள் பருகமு தமே

எண்முறையி லேஎண்ண லாகாச் சிறப் பொடுள்
எழுந்தருளி வாழ் அமுதமே
இருடியர் பட்டியெனும் ஒருபதியில் இன்பமொ
டிலங்குபர சுகவ முதமே. 8

தேவர்முனி வோரெலாம் தேடியுணும் அமுதமே
செம்பாக மாம்அமு தமே
செத்தவர்கள் போலவே திரிமுத்தர் தம்முட்
சிறந்தோங்கு திருவமு தமே

ஆவலுடனே யடியர் நாடும்உயர் அமுதமே
அன்பறிவு நல்கமு தமே
அற்புதப் பொற்புறு கலாதீத அமுதமே
அருளறிவு பொழியமு தமே

சேவலொலி போலுதய கால முணர்வித்துச்
சிறப்புற எழுப்பமு தமே
செப்பரிய மெய்ப்பக்தி செய்பவர் உளத்தில்
திரண்டினித் திடும் அமுதமே

காவலென வோரைம் புலப்பகையை மாய்த்துட்
களிப்பூட்டு நல்லமு தமே
கவின்மிக்க இருடியர் பட்டித் தலத்திற்
கனிந்தகனி யாம் அமுதமே. 9

செல்வச் செருக்குடையர் காணொ அமுதமே
செல்வாக்கு மிகும்அமு தமே
தேடரிய சொத்தாகி மிளிர்அமுத மேயுட்
சிறந்தவொளி கூட்டமு தமே

கல்விக் கடற்குமொரு கரைகண்ட அமுதமே
காட்சிபல காட்டமு தமே
காண்பரிய தாம்சுயஞ் ஜோதியெனும் அமுதமே
கைகாட்டி யழையமு தமே

பல்வர்த்த கங்களினும் மேலான வர்த்தகம்
பண்ணுகென நண்ணமு தமே
பரவியோ மத்துட் பரஞ்சுட ரெனத்திகழ்
பரானந்த மூட்டமு தமே

வில்வம்மலர் அறுகுதுள வம்சூடும் அமுதமே
விழைவதருள் புரியமு தமே
வித்தகர்கள் பற்றும்இரு டிப்பட்டி யமுதமே
வேட்கைதீர்த் தருளமு தமே. 10

தேடவரி தாம்திரு வருட்செல்வம் நாடடியர்
சித்தத்தி லூறமு தமே
செப்புதற் கரிதான மெய்ஞ்ஞான மென்னும்
சிறந்த சுவை மிகும்அமு தமே
நாடவரி தாகிய நலம்பலவும் எளியேங்கள்
நண்ண அருள் புரியமு தமே
நாடகம் இவ் வாழ்வென உணர்த்திமெய் யன்பினையும்
நாட்டியோம் பிடும்அமு தமே
கூடவரி தானஅரு ளாளர்தம் மெய்யுறவு
கூட்டுவித் திடும்அமு தமே
கோதிலாச் சுத்தசத் துவவொளிய தாகியுட்
குலவும் ஆத்மிகஅமு தமே
பாடவுறு பாவலர்கள் நாவலர்கள் அன்பிற்
பதிந்து மகிழ் வூட்டமு தமே
பல்வளமும் மிக்கஇரு டிப்பட்டி யமுதமே
பதிஞானம் அருளமு தமே 11

அவனன்றி யோரணுவும் அசையா தெனும்தூய
அறிவுரை விளக்கமு தமே
அங்கிங் கெனுதபடி எங்கெங்கு மாய்நிறைந்
தருளறி வுணர்த் தமுதமே
புவனங்க ளெல்லாம் படைத்துயிர்த் தொகையைப்
புரந்தருளும் அன்பமு தமே
போக்குவர வில்லாச் சிதாகாச வெளியுட்
புகுத்தியின் பூட்டமு தமே
மவுனந்த னைப்பற்றி யுய்திபெறு மாண்பினர்
மனத்தூறும் இன்பமு தமே
மாகாத லோடருட் சட்டநெறி யைப்பற்றி
வாழ்பவர்க் குதவமு தமே
சிவ* நந்த னனைமுன்பு மதுரையிற் கண்டருட்
செயல் பலவும் ஆற்றமுதமே
திருவிருடி யர்பட்டி திகழமுத மேதூய
திருவடி வழங் கமுதமே. 12

* நந்தனன் = மகன்

## 22. நன்றே புரி நல்லோய்

நன்றேபுரி நல்லோய்நினை நாளும்பர வாமல்
தின்றேயிவண் திரியும்எனைத் திருத்திப்பதம் சேர்ப்பாய்
ஒன்றேகுலம் ஒன்றே இறை ஒன்றேநெறி என்று
நன்றேயரு ளிருடிப்பதி ஞானகர மூர்த்தி. 1

வேதம்பல நவில்சாரம் விளங்கும்திரு நெறியாய்
ஏதம்தவிர் வகையில்நலம் எய்தப்புரி வகையில்
நீதந்தருள் திறம்வாழ்த்தி நிதம்பூசனை புரிவேன்
பாதந்தனை முடிவைத்தருள் புரிவாய்பரஞ் சுடரே. 2

உலகம்பல பலவாகியும் உயிர்பற்பல வாயும்
இலகும்குரு பரனேநலம் எய்திப்புவி வாழ
அலகில்மறைப் பொருள்யாவையும் அன்போடு திரட்டி
நிலவும்திருச் சட்டம்என நீதந்தனை இறையே. 3

கற்றார்களும் வியக்கும்வணம் கருணைநெறி தந்தாய்
உற்றார்களும் அனைதந்தையும் உயர்நண்பரு மாகுய்
மற்றார்துணை மகிமீதென மயங்காதுன பாதம்
பெற்றார்பணி விடைசெய்து பிறங்கற்கருள் ப்ரபுவே. 4

அண்டம்பல பலவாகியும் அவண்வாழுயி ராயும்
பண்டம்பல பலவாகியும் பத்தித்திற னும்
தொண்டர்க்கருள் துணையாகியும் தோன்றித்திரு நெறிசொல்
அண்டர்க்கதி பதியேதிரு அருளும்குரு பரனே. 5

சிவனார் அருள்

~~சிவன்மாலயன்~~ முருகன்கண பதியாயொளிர் திருவே
பவநோய்பல வகைநோய்தவிர் பரஞானசற் குருவே
நவலோகமும் தவலோகமும் நலமாய்த்தொழு மிறையே
சிவஞானமும் தவமோனமும் சிறியேற்கினி தருளே. 6

தேகம்திருத் தளியாச்செயும் சிவஞானச்செங் கொழுந்தே
வேகம்கெடுத் தெனையாண்டருள் விபுவேயரு ளமுதே
போகம்பல வும்தந்தருட் போதம்பெறப் புரிவாய்
மாகம்தொழு மன்னேஅருள் வளமேமிகு பொன்னே. 7

செல்லும்வழி யிதுதானெனத் தெளிவாய்த்தரு பரனே
அல்லும்பக லும்மெய்யடி யார்க்கன்புடன் அருளி
சொல்லும்தகை யதுவன்றெனத் துணையாகியைம் புலனை
வெல்லும்வழி வீட்டைப்பெறும் வழிநன்றருள் விபுவே. 8

அகமாய்ப்புற மானுய்நினை யறிகிற்பவர் ஆரே
சகமாய்விணு மானுய்நினைச் சார்வார்அடி யாரே
இகமாய்ப்பர மானுய்இவ ணெனையாண்டருள் கோனே
சுகமாய்விளங் குன்சீரடித் தொண்டெற்கருள் வாயே. 9

பத்தித்திரு நெறிதா உயர் பரஞானநன் னெறிதா
சித்தித்திற னவைதா அடி சேரும்திற னதுதா
முத்திக்கொரு முதலே மறை மொழிதந் தருள் குருவே
எத்திக்கிலும் அடியார்தொழும் இருடிப்பதி யரசே. 10

கொன்றுண்பது தவறென்றருள் குருவேயருட் டிருவே
ஒன்றுண்டருள் நெறியென்றருள் ஒப்பில்பரம் பொருளே
தின்றிங்குழல் சிறியேனையும் திருத்தித்திரு வடியில்
நன்றென்றிட அருள்வாய்பர ஞானச்சுட ரொளியே. 11

தேவர்க்குறு துணையேஉயர் மூவர்க்கொரு முதலே
யாவர்க்கெது வெனினும்தரும் இறையேதவத் துறையே
நாவிற்கும் விழிக்கும்மனத் துக்கும்நல மானுய்
பூவிற்பொலி பதமெற்கருள் புனிதக்குரு மணியே. 12

கள்ளங்கப டறுசெந்நெறி கருணையுட னருளும்
வள்ளல்நினை வாழ்த்தச் சொலு முளதோ மறை முடிவே
எள்ளுக்குளு மெண்ணெய்யென இலகும்பரம் பொருளே
உள்ளும்புற மும்பேணுமென் னுறவேயருட் குருவே. 13

வேடம்பல பலவாகி விளங்கும்பெரு மானே
பாடம்பல போதித்தருட் பயன்நன்றருள் வோனே
தோடம்செறி யென்நெஞ்சைத் துடைத்துன்திருத் தாளிற்
கூடன்பினி தருள்வாய்அருட் குருவேபதி யுருவே. 14

முக்கட்சுட ரொளியேஉயர் மூலத்திரு மறையே
மக்கட்குயர் நெறிசொல்குரு மணியேபெருந் துணையே
திக்கெட்டிலும் அடியார்குழு தினம்வாழ்த்தரு ளுருவே
துக்கத்தினைத் தவிரன்பர்கள் குழுவேசுக நிறைவே. 15

செல்வம்மிக வும்தந்தருள் தெய்வத்திரு வுருவே
கல்விக்கட லமுதாயமை கருணைக்குரு வடிவே
பல்விக்கின மும்தீர்த்தருள் பரஞானநற் சுடரே
நல்வைப்பென என்னுட்பொலி நவமாமணிக் குவையே. 16

சிவனுயரி யயனுய்ச்சிவை திருவாய்க்கலை மகளாய்ப்
பவநோய்தவிர் பரஞானசற் குருவாய்வரு பரமே
தவமாமுனி வரரும்சுரர் குழுவும்தொழு தகவே
நவமாய்ப்பழ மையுமாயொளிர் ஞானச்சுடர் மணியே. 17

குறியொன்றென நாடாது குணங்கெட்டலை கொடியேன்
நெறியொன்றென நின்சட்டநன் நெறிபேணிட அருள்வாய்
அறிவென்றுமெய் யன்பென்றுந லருளென்று விளங்கிப்
பொறிவென்றிட நெறியொன்றருள் புனிதக்குரு மணியே. 18

சைவத்திரு முறையேஉயர் தனிமாமறைப் பொருளே
தெய்வத்தமிழ் மொழியேஅருட் சிங்காதன மேறி
உய்வைத்தர அருளாட்சிசெய் ஒருபேரரு ளரசே
மைவைத்தஎன் மயல்நீக்கிநின் மலர்ச்சேவடி யருளே. 19

பொன்போன்றொளிர் பொருளேமிகு புனிதம்தரும் பொருளே
என்போலியர் பிழையாவுமன் னித்தாண்டரு ளிறையே
மின்போல் மிளிர் வடிவேயருள் விழைவோர்க் கருள் விபுவே
வன்பாவவி னைதீர்த்தடி மலர்சேர்குரு மணியே. 20

## 23. இறை நினைவின் பயன்

நினை நினைந்தால் நிகரிலருள் தூய்மை மேவும்
நினை நினைந்தால் நிகரிலருள் வாய்மை மேவும்
நினை நினைந்தால் நிகரிலருள் நேயம் மேவும்
நினை நினைந்தால் நிகரிலரு ளின்பமாமே. 1

நினை நினைந்தால் குறையனைத்தும் எளிதே நீங்கும்
நினை நினைந்தால் நிறையனைத்தும் எய்த லாகும்
நினை நினைந்தால் பொறைபுனிதம் பொலிவு மேவும்
நினை நினைந்தால் நிறை யின்பம் துய்க்க லாமே. 2

நினை நினைந்தால் சஞ்சலங்கள் தாமாய் நீங்கும்
நினை நினைந்தால் என் மனத்துக் குருக்கம் எய்தும்
நினை நினைந்தால் என் வாழ்வில் ஒளியுண் டாகும்
நினை நினைந்தால் இரண்டறநன் றிணையலாமே. 3

நினை நினைந்தால் நோயனைத்தும் நீங்கி யேகும்
நினை நினைந்தால் தீமையெலாம் விலகிப் போகும்
நினை நினைந்தால் வினைப்பவ்வம் வற்றிப் போகும்
நினை நினைந்தால் நின்னடியை யெய்த லாமே 4

நினை நினைந்தால் அறமனைத்தும் தழைந்தி லங்கும்
நினை நினைந்தால் அன்புநெறி செழித்தி லங்கும்
நினை நினைந்தால் அருள்நலங்கள் வளர்ந்தி லங்கும்
நினை நினைந்தால் பேரின்ப முத்தி யாமே. 5

நினை நினைந்தால் அகம்புறமும் புனித மாகும்
நினை நினைந்தால் அனைத்துலகுக் கொளியுண் டாகும்
நினை நினைந்தால் அனைத்துயிர்க்கும் இன்பம் எய்தும்
நினை நினைந்தால் நலமனைத்தும் பெருகும் நன்றே. 6

நினை நினைந்தால் துன்மார்க்கம் விலகிப் போகும்
நினை நினைந்தால் நன்மார்க்க நாட்டம் தோன்றும்
நினை நினைந்தால் சன்மார்க்க விளைவுண் டாகும்
நினை நினைந்தால் நிரந்தரமாம் அமைதி யாமே. 7

நினை நினைந்தால் வேதாந்த விளக்கம் மேவும்
நினை நினைந்தால் சித்தாந்தத் தெளிவு மேவும்
நினை நினைந்தால் போதாந்தப் பொலிவு மேவும்
நினை நினைந்தால் நாதாந்த நடனம் தோன்றும். 8

நினை நினைந்தால் ஐயமெலாம் நீங்கிப் போகும்
நினை நினைந்தால் மெய்யறிவு விளக்க மாகும்
நினை நினைந்தால் நிகரில்தவ விளைவு மேவும்
நினை நினைந்தால் நினைக்கலந்து சுகிக்க லாமே. 9

நினை நினைந்தால் அஞ்ஞானம் நீங்கிப் போகும்
நினை நினைந்தால் விஞ்ஞான விளைவு மேவும்
நினை நினைந்தால் மெய்ஞ்ஞான நிலைகள் வாய்க்கும்
நினை நினைந்தால் பரமுத்தி சேர லாமே. 10

நினை நினைந்தால் எப்பொருளும் நினையே காட்டும்
நினை நினைந்தால் எவ்வுயிரும் நீயாய்த் தோன்றும்
நினை நினைந்தால் எவ்வணுவும் நின்பால் சேர்க்கும்
நினை நினைந்தால் யான்நின்மயம் ஆக லாமே. 11

நினை நினைந்தால் உலகமெலாம் ஒன்றாய்த் தோன்றும்
நினை நினைந்தால் உயிர்களெலாம் நினக்குள் தோன்றும்
நினை நினைந்தால் எனைநினக்குள் கரைக்க லாகும்
நினை நினைந்தால் யான் மறைந்து நீயா வேனே. 12

## 24. அருள வேண்டுதல்

('வாசி தீரவே' என்ற பண்)

செல்வம் யாவையும்
நல்கி யாண்டருள்
செல்வனே எனைப்
புல்கி யாள்கவே. 1

புத்தி தந்தருள்
நித்தி யாநின் தாட்
பத்தி தந்துநன்
முத்தி யீகவே. 2

நஞ்ச மொத்ததீ
நெஞ்ச ஞமெற்கும்
அஞ்ச லென்றொரு
செஞ்சொ லீகவே. 3

காணுறும் பொருள்
காணரும் பொருள்
ஆணலி பெணுய்ப்
பேணு தெய்வமே. 4

அட்ட மூர்த்தியே
துட்ட ஞமெற்கும்
நிட்டை கூட்டிநன்
றுட்டி கழ்கவே. 5

சுந்தரத் தமிழ்ச்
சந்தம் கொண்டுனைச்
சிந்தித் தேத்தும்நற்
புந்தி யீகவே. 6

செப்பரும் நின்சீர்
செப்பி யேத்திடும்
செப்பம் நல்குவாய்
ஒப்பி லீசனே. 7

அழுமெனக் கும்நின்
விழுமிய பதம்
தழுவி யுய்யும்நல்
வழியருள் கவே. 8

பழியிலா அருள்
வழிநல்கி நடு
விழிநல் கீசநின்
மொழியருள் கவே. 9

பாசபந் தம்நீக்
காசில் நாதனே
நேச மோடு நல்
வாசி யீகவே. 10

போகம் நல்கியாள்
யோக நாதனே
ஆக மேவிவாழ்
ஏக மூர்த்தியே. 11

ஆதி யந்தமில்
ஜோதி நின்புகழ்
ஓதி யுய்யச் செய்
நீதி யாளனே. 12

என்பிழை யெலாம்
அன்பினல் பொறுத்
தின்ப மூட்டியாள்
அன்பு நாதனே. 13

பல காலத்திலும், பல கோணத்திலும், எவ்வாறு உண்டாலும், இம்மியும் தெவிட்டாத, மேலும் மேலும் இனிக்கக் கூடியதாக விளங்குகின்றது **இறைவனின் திருவருள்** எனும் தெள்ளமுது.

## 25. பாட வேண்டும்

பாட வேண்டும்நான் போற்றி நின்புகழ்
பாடிப் பாடியுள் ளுருகிப் பத்தியால்
ஆட வேண்டும்நான் போற்றி நின்னரு
ளடியர் தம்குழு வோடு கூடியே
சூட வேண்டும்நான் போற்றி நின்னடி
சூடு மெய்யடி யார்ப ணிசெய
நாட வேண்டும்நான் போற்றி முத்தியை
ஞானசற்குரு நாத வள்ளலே. 1

ஆதி நாதனே ஆர ணங்களும்
ஆக மங்களும் தேடிக் காணொணுச்
சோதி நாதனே தூய மெய்த்தவம்
பேணு மெய்யடி யாரை யாண்டருள்
நீதி நாதனே நிமல நிர்க்குண
நித்தனே யொப்பில் நேய நாதனே
ஓதி யுன்திரு நாமம் நாள்தொறும்
உய்யு மாறருள் செய்க நாதனே. 2

கண்ணி னுலுனைக் கண்டு ருகிலேன்
காதினு லுன்சீர் கேட்டு ருகிலேன்
பண்ணி னுலுனைப் பாடி உய்கிலேன்
பத்தர் கள்பணி செய்தும் உய்கிலேன்
பெண்ணி னிச்சையும் பொன்னி னிச்சையும்
பெரிது கொண்டலைந் திவணு ழல்கிறேன்
உண்ணி லாவுயிர்க் குயிரென வொளிர்
உண்மையே தவத் திண்மை யீகவே. 3

அமரர் யாவரும் கண்ட றிகிலா
அருள்மகி மைமிக் குடைய அண்ணலே
சமயம் யாவுமே சாற்று சாரத்தைச்
சட்டமாய்த் தந்தாள் சாந்த மூர்த்தியே
மும்மல மாம்பகை நீறு செய்தருள்
மோன மூர்த்தியே மூல மூர்த்தியே
அமல ஜோதியாம் அன்பு மூர்த்தியே
அடிய னேற்கும் நின்னடி யருள்கவே. 4

வேத மூலமாய் நடுமுடி வுமாம்
விமல னேயுனை வேண்டுமன் பர்கள்
பாத மூலமே பற்றி யுய்ந்திடப்
பத்தி தந்தருள் பரம மூர்த்தியே
ஆத வன்மதி அங்கியா யொளிர்
அறவு ருவமே அருளு ருவமே
சோத னைபல தந்து பின்னருட்
சூக்ஷ்மம் காட்டியாள் மோக்ஷ மூர்த்தியே 5

என்றும் நின்னடி யுன்னி யேத்து வோர்
இன்பம் யாவையும் எய்தச் செய்பவா
மன்று ளேநட மாடும் மன்னவா
மாயை யைப்பொடி பண்ணு முன்னவா
தின்று தின்றுறங் கென்னை யும்தடுத்
தாண்டு கொண்டருள் செய்யும் மேலவா
ஒன்று நன்னெறி யென்றருட் சட்டம்
உலகி னுக்கருள் ஓமு ருவனே. 6

உன்னி யுன்னிநின் னொப்பில் பேரருட்(கு)
உருகு மன்பருள் ளொளிரும் ஜோதியே
பன்னிப் பன்னிநின் மெய்ப்பு கழையே
பரவ டியருள் விரவு நீதியே
என்னை நின்னடி யார்கு ழுவினுள்
ஈர்த்துச் சேர்த்தநின் இன்ன ருளினை
உன்ன வொண்ணுமோ ஓத வொண்ணுமோ
ஒப்பில் மாமறை செப்பு தெய்வமே. 7

என்ன நாமம் கொண் டுன்னை யெண்ணுகேன்
என்ன சொற் கொண்டுன் சீரைப் பாடுகேன்
என்ன செய்துன்தாள் எய்த நாடுகேன்
என்ன வாறுநின் அன்பனு குகேன்
பன்ன ரும்புகழ் சான்ற மூர்த்தியே
பாவம் யாவும்மன் னிக்கு மூர்த்தியே
உன்ன ரும்சிறப் புடைய மூர்த்தியே
ஓமெ ழுத்தினுள் ளொளிரு மூர்த்தியே. 8

அன்பு கொண்டுனை யன்பர் போற்றுவார்
அருளை நாடிமெய் யடியர் போற்றுவார்
அன்பி லாதயான் எங்ஙன் போற்றுகேன்
அருளை யெவ்வணம் எய்தி யுய்குவேன்
இன்பம் யாவையும் எவ்வுயிர்க் கும்நன்
றீந்து பேணியாள் சாந்த மூர்த்தியே
அன்பு தந்தெனை யாண்ட ருளுவாய்
அருளு ருவமாய் அமரும் நாதனே. 9

பற்ற னுவுமில் லாஅடியரைப்
பாலித் தின்னடி சேர்க்கு மண்ணலே
சுற்ற மென்னவுற் றுத்த மர்களை
சோதித் தின்பருள் தூய செம்மலே
குற்ற மேவடி வான என்னையும்
குறிக்கொ டாண்டருள் நாளு முள்ளதோ
குற்றம் யாவுமே குணமெனக் கொண்டாள்
கொள்கை யுள்ள சற்குண மணாளனே. 10

தேவர் யாரும்நின் நாம மோதுவார்
முனிவர் யாரும்நின் சீரை யேத்துவார்
பாவம் கோடிபல் கோடி செய்துழல்
பாவி யென்னையும் பாலித் தாளுவாய்
கோவம் காமமெல் லாம்வி லக்கியுன்
கோதில் பாதமுட் கொண்டுயச் செய்வாய்
நாவன் மைதந்துன் நல்லசீர் நிதம்
நாடிப் பாடியுய் வரம் அருள்கவே. 11

செல்வம் யாவுமெய் யடிய வர்க்கெலாம்
தேடி நல்கியாள் ஈடில் நாதனே
நல்வ ரம்பல நல்ல வர்க்கருள்
ஞான நாதனே ஞால நாதனே
தொல்வி னைதவிர் தூய நாதனே
சுகசொ ரூபமாய்த் திகழும் நாதனே
பல்வ ளம்செறி இருடி நன்னகர்
பகவ னுயொளிர் பரம சாதுவே. 12

ஒருமுறை நின்பே ரோதி னுலுமே
உற்றபா வங்கள் பற்பமா மென்பார்
அருமறை தொழும் அண்ணல் நின்பெயர்
அனுதினம் சொலி உய அரு ளுவாய்
கருமுறை தவிர்த் துயிர்க ளுய்ந்திடக்
கருணை நன்னெறி யருளி றைவனே
குருப ரன்என வந்தெனை மணம்
கொண்ட கொண்கனே அண்ட வாணனே. 13

## 26. வா! வா!! வா!!!

என்றும் எங்கும் உள்ளவனே வா வா வா
இருடியர் பட்டிக் குருவே வா வா வா
நன்று சட்டம் நல்கிறையே வா வா வா
ஞால முய்ய வந்தவனே வா வா வா
மன்றுள் நட மாடிறையே வா வா வா
மய லகற்றும் மாஞெளியே வா வா வா
அன்று மின்றும் என்றும் காப்போய் வா வா வா
ஆதிநடு அந்த மில்லாய் வா வா வா. 1

எண்ணில் உலகும் புரப்போய் வா வா வா
ஏக சுக போக மீவோய் வா வா வா
பண்ணில் அருட் பாட்டில் உள்ளோய் வா வா வா
பரவடியார் பேருறவே வா வா வா
மண்ணில் விண்ணில் வாழிறையே வா வா வா
மாதவத்தர் போற்றரசே வா வா வா
உண்ணிறைபே ரின்புருவே வா வா வா
உழலல் தவிர்த் தாள்பதியே வா வா வா. 2

ஊனமெல்லாம் ஓட்டிடுவாய் வா வா வா
உண்மை யன்பு கூட்டிடுவாய் வா வா வா
ஞானஜோதி காட்டிடுவாய் வா வா வா
நல்லமுதம் ஊட்டிடுவாய் வா வா வா
மோனவாழ்வு நல்கிடுவாய் வா வா வா
மூல மந்த்ர மானவனே வா வா வா
தீனபந்து வானவனே வா வா வா
தேசு நல்கும் ஈசுரனே வா வா வா. 3

நோயனைத்தும் நீக்கிறையே வா வா வா
நோன்மைமிகச் செய்குருவே வா வா வா
பேயனைத்தும் ஓட்டிறையே வா வா வா
பெருமை யெல்லாம் நல்கரசே வா வா வா
காயைக்கனி யாக்கிறையே வா வா வா
கருணையெனும் கடலமுதே வா வா வா
சேயெனையும் பேணிறையே வா வா வா
தெய்வமென உய்வளிப்பாய் வா வா வா. 4

மங்குலென மழைபொழிவாய் வா வா வா
மாசனைத்தும் நீக்கிறையே வா வா வா
கங்குல் பகல் காவல் செய்வாய் வா வா வா
காரண காரிய குருவே வா வா வா
பொங்கு புகழ் மிக்குடையாய் வா வா வா
பூரணஞா னப்பொருளே வா வா வா
திங்களங்கி கதிரொளியே வா வா வா
தீட்சை யருள் தேசிகனே வா வா வா. 5

கல்வியின் பெரும் பயனே வா வா வா
கற்பகமாம் நற்றருவே வா வா வா
செல்வமெல்லாம் நல்கரசே வா வா வா
செம்பொருள் உணர்த்திறையே வா வா வா
நல்வரமெல் லாம்தருவாய் வா வா வா
ஞானபரி பூரணனே வா வா வா
பல்வளமும் நல்கிறையே வா வா வா
பாத மலர் சேர்பரனே வா வா வா. 6

என்னையும்ஆட் கொண்டவனே வா வா வா
என்னிதயக் கோயிலுள்ளாய் வா வா வா
முன்னைவினை தீர்ப்பவனே வா வா வா
மூலமலம் கொய்பவனே வா வா வா
பொன்னை மணியைத் தருவாய் வா வா வா
போகமெலாம் ஊட்டிடுவாய் வா வா வா
அன்னை தந்தை சற்குருவே வா வா வா
ஆருயிர் மணவாளனே வா வா வா 7

அகவொளியே புறவொளியே வா வா வா
ஆரண முதற்பொருளே வா வா வா
இகபரமெல் லாம்தருவாய் வா வா வா
என்னைக் கொண்டுன் னைத்தருவாய் வா வா வா
சுகலளிதப் பெருவெளியே வா வா வா
சுயஞ் சுடரே பரம்பொருளே வா வா வா
துகளில் பரானந்தம் நல்க வா வா வா
சூக்குமத்துட் சூக்குமமே வா வா வா. 8

அல்லும்பக லும்புரப்போய் வா வா வா
ஆசையொழித் தன்பருள வா வா வா
நல்லதுணை யாம்குருவே வா வா வா
நாதாந்த நாட்டரசே வா வா வா
புல்லையும்நெல் லாக்கவல்லாய் வா வா வா
போதமுடி வானவனே வா வா வா
கல்லென் மனமும் கரைப்பாய் வா வா வா
கடிமணம் கொள் காதலனே வா வா வா. 9

புத்திக்கொளி யீபவனே வா வா வா
பூதபரம் பரைபொலிய வா வா வா
சித்தியெல்லாம் நல்கிறையே வா வா வா
சேமநிதி யானவனே வா வா வா
பத்தி கண்டு பயனருள்வாய் வா வா வா
பாடமெல்லாம் படிக்க வைப்பாய் வா வா வா
முத்திக்கனி நல்கிறையே வா வா வா
மோனகுரு பரமணியே வா வா வா 10

---

டாம்பீகமோ, வெளிவேடமோ அற்ற ஒரு நிலையில்தான் அருளைப் பரப்ப முடியும். எந்த ஒரு மலரும் 'நான் மலர்ந்திருக்கிறேன்' என்று சொல்வதில்லை. அதனுடைய உண்மையான மணம் அதற்குப் பக்குவப்பட்ட உள்ளங்களை ஈர்க்கும்.

உண்மையான அன்புடைய உள்ளங்களை எல்லாம் பக்குவப்படுத்துவதே சட்டத்தின் நோக்கம். சட்டத்திலே சேர்ந்த ஒவ்வொரு அடியாரும் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## 27. அமைதி யளித்தருளுவாய்

(பல்லவி)

அமைதி யளித்தருளுவாய்—தூய மன
அமைதி யளித்தருளுவாய்

(சரணம்)

சமய மதங்கள் யாவும் சாற்றும் பொருளனைத்தின்
சாரமெல்லாம் திரட்டிச் சட்டம் எனக் கொடுத்தாய்
இமையோர் முனிவரர்கள் ஏத்திப் புகழ்ந்து போற்ற
எல்லா உயிரும் உண்மை இன்பமுறச் செய்கோனே (அமைதி)

உன்னடியவன் போல உலகில் நடித்துழலும்
உலுத்தனெனையும் பேணும் உன் பேரருட் புகழைப்
பன்னுளும் பக்தியுடன் பாடிப் பரவசமாய்ப்
பாதமலரிற் கூடிப் பரமானந்தம் பெற்றுய்ய (அமைதி)

துட்டனென உழலும் தூர்த்தனென்னைத் திருத்தித்
தூய்மை பொறுமை யன்பு சுத்த சத்வம் புணர்த்திச்
சிட்டர் குழவுளுய்த்து ஜெனனப்பிணி தவிர்த்துத்
தேசுமிக அளித்துத் திருவருள் மயமாக்கி (அமைதி)

அங்கும் இங்குமா யோடி அவதியுறுத வண்ணம்
ஆசையெனும் பிசாசுக் கடிமை யாகாத வண்ணம்
கங்குகரையில் லாநின் கருணைப் பொலிவு காட்டிக்
கசடு பலவும் நீக்கிக் கழலிற் கூடுமாறீர்த்தே (அமைதி)

## 28. வாசி வேட்கை

(பல்லவி)

வாசி விளைவருள்வீர்—குருநாதரே
வாசி விளைவருள்வீர்

(சரணம்)

மாசிலா மனம்அருள்வீர் வண்பத நினைவருள்வீர்
நாசிநுனி மீதுநாட்டம் நல்கியுய்யச் செய்தருள்வீர்
பாசபந்தப் பற்றறுத்துப் பக்குவம் வழங்கிடுவீர்
கோசமைந்தி னுள்விளங்கும் கோதிலொளி காட்டியாள்வீர்
(வாசி)

சரியைகிரி யாயோகத்தின் தன்மையெல்லாம் நன்றுணர்த்தி
விரிவுறு மனம்ஒடுக்கி வேதமுடி வுள்விளக்கி
சொரியும்விண் ணமுதருளித் தூய்மைமிக்க மேன்மை நல்கி
புரியவொண்ணு உண்மையெல்லாம் புரியவைத்துட் போதமூட்டி
(வாசி)

## 29. வேண்டும் வரம்

யானெதனை விழைந்தாலும் எனக்கருளும் பதியே
என்னிதயா சனத்தமர்ந்தே இனிதொளிரும் பதியே
கோனெனஎவ் வுலகினையும் புரந்தருளும் பதியே
கோதிலருட் கொடிநாட்டிக் குறை தவிர்த்தாள் பதியே
ஊனுடலை உயிரினைப்பேண் உயிர்க்குயிராம் பதியே
ஒப்புயர்வில் மெய்ப்பொருளாய் ஓங்குபெரும் பதியே
தேனெனவுள் தித்தித்துத் தெளிவருளும் பதியே
திருவிருடிப் பதியிலமர் தெய்வசிகா மணியே. 1

நின்னுமம் என்னுவில் நிலைத்திடுதல் வேண்டும்
நின்னுருவம் என்கண்கள் கண்டிடுதல் வேண்டும்
பன்னும் நின்புகழ்யான் பாடிடுதல் வேண்டும்
பக்திமிகுந் துள்ளுருகிப் பரவிடுதல் வேண்டும்
உன்னுமுன் நீ யெல்லாம் உதவிடுதல் வேண்டும்
ஓங்காரம் உளும்புறமும் ஒலித்திடுதல் வேண்டும்
நின்னேயம் என்னுள்ளே நிறைந்தொளிரல் வேண்டும்
நிட்டைநலம் தரல்வேண்டும் நிர்க்குணசற் குருவே. 2

சத்தாக நீயெங்கும் தழைந்திடுதல் வேண்டும்
சாந்தமெனும் பெருநிலையை நீயருளல் வேண்டும்
சித்தாக எங்கனும்நீ திகழ்ந்திடுதல் வேண்டும்
தேகமுயிர் பொருளனைத்தும் நினதாதல் வேண்டும்
நித்யானந் தானுபவம் நீயருளல் வேண்டும்
நினைவுமொழி செயல் யாவும் நினதாதல் வேண்டும்
அத்வைதா னந்தஅனு பவமயமே எல்லா
மாகியொளிர் பரஞ்சுடரே அருட்கருணைப் பதியே. 3

வேதாந்த சித்தாந்த விளக்கமெலாம் உணர்ந்தே
விழுமியயோ காந்தகலாந் தமுமுணர்ந்தல் வேண்டும்
நாதாந்தப் பெருவெளியில் நடம்காணல் வேண்டும்
நடனமிடும் மலர்ப்பதம்என் சிரம்பதிதல் வேண்டும்
போதாந்த மாளிகையிற் புகுந்திடுதல் வேண்டும்
புனிதத்துட் புனிதமெனப் பொலிந்திடுதல் வேண்டும்
மூதாண்ட கோடியையாள் முழுமுதலே மோன
முத்தியெனும் பெருஞ்சுகத்துள் மூழ்கிடவேண்டுவனே. 4

ஆரா நல் லமுதெனமெய் யடியவர்தம் உளத்தே
அமைந்தொளிர்நீ அடியேற்கும் அருள்புரிதல் வேண்டும்
சீரார்நற் சித்தியெலாம் எனக்கருளல் வேண்டும்
திருக்கோயில் திருப்பணிசெய் திறம்அருளல் வேண்டும்
காராக எங்கணும்நீ மழை பொழிதல் வேண்டும்
காசினிமீ தெவ்வளமும் மிகுந்திடுதல் வேண்டும்
பாராரும் பல்லுயிரும் இன்புறுதல் வேண்டும்
பாதார விந்தசுகம் துய்த்திடவேண் டுவனே. 5

மூலாதா ரக்கனல்எங் கும்பெருகல் வேண்டும்
மும்மை மலம் அடியோடும் வெந்தொழிதல் வேண்டும்
நூலாதா ரங்களென வுள்ளபொருள் யாவும்
நொடியிலுணர்ந் தொப்பரிதாம் நோன்மைபெறல் வேண்டும்
மாலான யாவுமற ஞானமுறல் வேண்டும்
மகிதலமெல் லாம்செழித்து வயங்கிடுதல் வேண்டும்
தோலாதி தாதுடம்பை நீயெடுத்துக் கொண்டுன்
தூயஅரு ளொளியுடம்பெற் கீந்திட வேண் டுவனே. 6

வானவரும் முனிவரரும் வந்தனைசெய் நின்றன்
வண்கழலை இச்சிறியேன் வழுத்தியுயல் வேண்டும்
யானெனதென் னும்பற்றே ரணுவுமிலா தெரித்தே
ஈடிணையில் தவப்பொலிவுற் றிலங்கிடுதல் வேண்டும்
ஞானவொளிப் பிழம்பாகி நன்றமைதல் வேண்டும்
நாமஉரு வம்கடந்த நிலையுணர்தல் வேண்டும்
பானமென நின்னருளைப் பருகிடுதல் வேண்டும்
பரமசுகப் பேறருள்நல் விருடிநகர்ப் பதியே. 7

அண்டமனந் தங்கோடிக் கருளரசா யிலகும்
அற்புதநின் பொற்பினில்யான் அமிழ்ந்திடுதல் வேண்டும்
பண்டமெலாம் உண்டாக்கிப் பல உயிர்க்கும் அருளிப்
பாலிக்கும் நின்புகழ்யான் பாடிடுதல் வேண்டும்
விண்டமலர்ப் புண்டரிகத் தாள்சிரமேற் சூட்டி
விரிவுறுமென் மனமொடுக்கி யருள்புரிதல் வேண்டும்
அண்டரெலாம் வாழ்த்தஅருட் சட்டநெறி அவனிக்
களித்தருளி ஆனந்த வாழ்வருளென் னிறையே. 8

எங்கும்நின தருட்காட்சி யேகாணல் வேண்டும்
என்றும்நின தின்னருளில் யான்தோய்தல் வேண்டும்
கங்கைமுத லாம்நதிகள் யாவுமென்னுள் நிறைந்தே
களங்கமெலாம் நீக்கியெனைத் தூய்மைசெயல் வேண்டும்
மங்களமெல்லாம் இந்த மகிதலத்தில் நின்றன்
மாணடியார் பெற்றுயிர்கட் கிதம்புரிதல் வேண்டும்
பொங்குநின தருட்புகழைப் புவியெங்கும் பரப்பும்
புனிதமிகு நற்செயலெற் கீந்திடவேண் டுவனே. 9

எங்கணுமே நீர்வளமும் நிலவளமும் பெருகி
எவ்வுயிர்க்கும் வயிறார உணவளித்தல் வேண்டும்
எங்கணுமே அருள்வளமும் பொருள் வளமும் பெருகி
எவ்வுயிர்க்கும் எந்நலமும் ஈந்திடுதல் வேண்டும்
எங்கணும்வாழ் எவ்வுயிரும் நின்கருணை நினைந்தே
இகநலமும் பரநலமும் எய்தி யுயல் வேண்டும்
எங்கணுமே யறிவொளியும் அன்பொளியும் பெருகி
எங்கணும்பே ரின்பவளம் குலவிடவேண் டுவனே. 10

## 30. அன்பென்கோ

அன்பென்கோ அறமென்கோ அறிவேயென்கோ
அந்தம்நடு முதல் அறிதற் கரியாய் என்கோ
துன்பனைத்தும் தவிர்த்தருளும் துணையே என்கோ
துரியாதீ தத்தொளிரும் ஜோதீ யென்கோ
மன்பதைகட் கருள்புரியும் மணியே யென்கோ
மதியென்கோ கதிரென்கோ விண்மீ னென்கோ
இன்பமெலாம் வழங்கியருள் இறையே யென்கோ
இருடிநகர்க் கோயிலுள்வாழ் எம்கோ மானே. 1

எங்கணுமே நீக்கமற நிறைந்தோய் என்கோ
ஏகாந்தத் தனிச்சுகம்நல் கீசா என்கோ
கங்கையினை விடியலிலே காட்டி யாட்டிக்
கருணைமிகப் புரிந்தருளும் கர்த்தா என்கோ
மங்களமெல் லாம்வழங்கும் மகிபா என்கோ
வானென்கோ வளி தீ நீர் பூமி யென்கோ
எங்களையா ளப்போந்த இறைவா என்கோ
இருடிநகர்க் கோயிலுள்வாழ் எம்கோ மானே. 2

ஒவ்வொரு சிற்றணுவினுளும் உறைவோய் என்கோ
உயிரனைத்துள் அமைந்தியக்கும் ஒருவா என்கோ
எவ்வொரு கணத்துமெனைப் பிரியாய் என்கோ
இகநலமும் பரநலமும் தருவோய் என்கோ
செவ்வையுறத் திருத்தியருள் செல்வா என்கோ
சித்தியெலாம் வழங்கு பெருஞ் சித்தா என்கோ
அவ்வுமுவ்வும் மவ்வுமென அமைந்தாய் என்கோ
அணிஇருடி நகர்திகழும் அருட்கோ மானே. 3

வித்தின்றி விளைவுசெயும் விபுவே என்கோ
விமலானந் தம்விளக்கும் விகிர்தா என்கோ
சத்தென்ன எங்கும்நிறை சதுரா என்கோ
சாந்தி வழங்கிப்புரக்கும்தலைவா என்கோ
சித்தாடல் பலபுரியும் தேவா என்கோ
சென்னிமிசை திருக்கரம் வைத்தருள்வோ யென்கோ
இத்தாரணிக் கருளும் இறைவா என்கோ
இருடிநகர்க் கோயிலுள்வாழ் எம்கோ மானே. 4

ஆதாரம் ஆறிலமைந் தருள்வோய் என்கோ
ஆயிர இதழ்க்கமலத் தொளியே என்கோ
பாதார விந்தம் அருள் பதியே என்கோ
பரிந்தெனையும் இனிதாண்ட பகவா என்கோ
ஓதாமல் உணரஅருள் ஒருவா என்கோ
உள்ளொளிக்குள் உள்ளொளியாய் ஒளிர்வோய் என்கோ
பாதாளம்,பூமி,விணுப் படர்வோய் என்கோ
பல்வளமார் இருடிநகர்த் தளி வாழ் கோவே. 5

செம்மையெலாம் வழங்கியருள் தேவா என்கோ
திருவனைத்தும் வழங்கியருள் திருவே என்கோ
வெம்மையெலாம் தீர்த்தருளும் விமலா என்கோ
வேதாந்த சித்தாந்த விளைவே என்கோ
மும்மை மலம் முறித்தருளும் முதல்வா என்கோ
மூலத்தா னம்திகழும் மூர்த்தி யென்கோ
அம்மைபிதா ஆரியன்நற் கடவுள் என்கோ
அணிஇருடி நகர்திகழும் அருட்கோ மானே. 6

நலிவனைத்தும் அகற்றவந்த நம்பா என்கோ
நானிலத்திற் சட்டநெறி நவில்வோய் என்கோ
பொலிவனைத்தும் தந்தருள் புராணா என்கோ
போதாந்த நாதாந்த பூர்ணா என்கோ
கலிதவிர்த்துக் கருணைசெய் கணாளா என்கோ
கைப்பிடித்து மணந்தருள் மணாளா என்கோ
ஒலியனைத்தும் ஒளியனைத்து மானாய் என்கோ
ஒப்பில்இரு டிப்பதிவாழ் எம்கோ மானே. 7

ஓங்கார நாதமுழக் கொருவா என்கோ
உள்ளாகி வெளியாகி ஒளிர்வோய் என்கோ
ஆங்காரம் அகற்றியருள் அரசே என்கோ
அண்ட நிரை அனைத்தையும் ஆள் அதிபா என்கோ
நீங்கா தென்னுட் பிறங்கும் நிமலா என்கோ
நேமமுடன் நிட்டையருள் நேயா என்கோ
தூங்காமல் தூங்கும்நிலை யருள்வோய் என்கோ
சுடரொளியாய் இருடிநகர்திகழ்கோ மானே. 8

உயர்வறநன் றுயர்ந்திலங்கும் உயர்வே என்கோ
உகமனந்த கோடி யுங்காண் ஒருவா என்கோ
மயர்வறநன் மதிநலங்கள் அருள்வோய் என்கோ
மனமடங்கற் கருள்புரிமா மணியே என்கோ
அயர்வறநல் லடியவர்கட் கருள்வோய் என்கோ
அசரசரம் அனைத்துளும்வாழ் அறமே என்கோ
துயரறஎங் கும்துலங்கும் தூய்மை என்கோ
சுடரொளியாய் இருடிநகர் திகழ்கோ மானே. 9

எண்ணெனவும் எழுத்தெனவும் அமைவோய் என்கோ
இலக்கண இலக்கியமாய்த் திகழ்வோய் என்கோ
கண்ணெனவும் ஒளியெனவும் பொலிவோய் என்கோ
காட்சியெலாம் காட்டியருள் கவினே என்கோ
எண்ணம்மொழி செயல்களெலாம் ஆனாய் என்கோ
எவ்வொரணு வையும்இயக்கும் இறைவா என்கோ
உண்ணெனவிண் ணமுதருத்தும் ஒருவா என்கோ
ஒப்பிலிரு டிப்பதிவாழ் எம்கோ மானே. 10

சீரனைத்தும் வழங்கியருள் தேவே என்கோ
செழிப்புமிகச் செய்தருளும் செல்வா என்கோ
பேரனைத்தும் பெற்றொளிரும் பெரியோய் என்கோ
பிறப்பிறப்பெல் லாம்தவிர்க்கும் பெம்மான் என்கோ
ஊரனைத்தும் போற்றும்அரு ளுருவா என்கோ
ஒருமைமிகு மனத்தொளிரும் ஒருவா என்கோ
காரனைத்தும் எனக்கருணை பொழிவோய் என்கோ
கவினிருடிப் பதியிலமர் எம்கோ மானே. 11

சொல்லாகிச் சொற்பொருளாய் உள்ளாய் என்கோ
சொல்லிறந்த மவுனமுமாய்த் திகழ்வாய் என்கோ
நெல்லாகி யூணருளும் நிமலா என்கோ
நித்யானந் தம்வழங்கும் நித்தா என்கோ
எல்லாமும் எனக்கருளும் இறைவா என்கோ
இமைப்பொழுதும் பிரிவறியா திணைந்தோய் என்கோ
பொல்லாருந்திருந்த அருள் புரிவோய் என்கோ
பொழில் நிறைநல் விருடிநகர் பொலிகோ மானே. 12

## 31. தாண்டகம் [நீரே]

ஒருவருமே உரைப்பரிதாம் உயர்நற் சட்டம்
உலகினுக்கே உரைத்தினிதோம் பொருவர் நீரே
அருவமுமாய் உருவமுமாய் அமைந்தெங் கெங்கும்
அற்புதமாய் அருளாட்சி புரிவீர் நீரே
கருவினிலே திருவுடையார் தமையெந் நாளும்
காத்தருளிக் கருணைசெயும் கடவுள் நீரே
திருவருளே உருவெனக்கொண் டிருடிப் பட்டித்
திருநகரில் அவதரித்த செல்வர் நீரே. 1

ஓங்கார ஒளிமயமாய் உள்ளீர் நீரே
உண்மையறி வானந்த உருவர் நீரே
ஆங்காரம் அடக்கிநலம் அருள்வீர் நீரே
அருளெனும்நல் லமுதருத்தி யாள்வீர் நீரே
பாங்கான பக்தியெனக் கருள்வீர் நீரே
பக்குவமெல் லாம்வழங்கி யருள்வீர் நீரே
நீங்காம லுயிர்கள்தொறும் நிறைவீர் நீரே
நிகரிலிரு டிப்பதிவாழ் நிமலர் நீரே. 2

கல்லனைய என்மனத்தைக் கரைப்பீர் நீரே
காசினிக்குக் கருணைநெறி யுரைப்பீர் நீரே
புல்லினையும் ஏற்றணியும் பொற்பர் நீரே
பொய்யகற்றி மெய்யொளிகாட் டப்பர் நீரே
அல்லினில்நிட் டைபுரிவோர்க் கன்பர் நீரே
அடியரைச்சந் ததம்பேணும் நண்பர் நீரே
நல்லிருடி நகரிலவ தரித்தீர் நீரே
ஞானகுரு வாய்க்கலந்துட் களித்தீர் நீரே. 3

செங்கமல பதம்சிரமேல் வைப்பீர் நீரே
செய்தபிழை யாவையுமன் னிப்பீர் நீரே
சங்கையினை விடியலிற்காட் டிட்டீர் நீரே
கருணைவிழை யடியரையாட் டிட்டீர் நீரே
புங்கவர்க்குப் போதம்அருள் போதர் நீரே
புரமொரு மூன்றையும் பொடித்தாள் நாதர் நீரே
துங்கமிகு மிருடிநகர்த் தோன்றல் நீரே
துரியவள நாடரசாள் தூயர் நீரே. 4

பெரியரெலாம் பேணவமர் பெம்மான் நீரே
பேதாபே தங்கடந்த அம்மான் நீரே
அரியவெலாம் ஆற்றியருள் அறிஞர் நீரே
அமைதியெனுள் அமைத்தருளற் குரியர் நீரே
சரியைகிரி யாயோகம் தருவீர் நீரே
சாந்தியருள் மெய்ஞ்ஞானத் தலைவர் நீரே
உரியவெலாம் தந்தினிதோம் பிடுவீர் நீரே
உயரிருடிப் பதியிலமர்ந் தொளிர்வீர் நீரே. 5

பலகலையும் பரிந்தேத்தும் பரமர் நீரே
பலஉலகும் பாலனம்செய் பகவர் நீரே
பலவுயிரும் திருந்தும்வணம் சட்டம் நல்கிப்
பக்குவம்செய் தின்பமருள் பதியும் நீரே
குலமனைத்தும் விளக்கவந்த கோமான் நீரே
குறையனைத்தும் பொறுத்தருள்செய் பூமான் நீரே
அலகில்பொருள் விளக்கியரு ளாசான் நீரே
அருளிருடிப் பதியிலமர் அண்ணல் நீரே. 6

ஆகமங்கள் பலவிளக்கும் அறிஞர் நீரே
ஆரணங்கள் அனைத்தினுக்கும் அரியர் நீரே
ஆகமொரு தளியெனக்கொண் டமர்வீர் நீரே
அனல்புனல்பார் வளிவெளியா யமைவீர் நீரே
வேகமெலாம் கெடுத்தாளும் விமலர் நீரே
வேதாந்த சித்தாந்த விபுதர் நீரே
போகமெலாம் தரஇருடிப் பதியின் கண்ணே
பொலிந்திலகும் புனிதகுரு நாதர் நீரே. 7

புண்ணியரெல் லாம்போற்றும் புனிதர் நீரே
புனிதம்விழை புண்ணியருக் கினியர் நீரே
எண்ணியஎண் ணியபடியே யீவீர் நீரே
ஏகாந்த மோனசுக மாவீர் நீரே
பண்ணியலாய்ப் பாட்டியலாய் அமைவீர் நீரே
பலவுலகாய் ப்பலபொருளாய்ச் சமைவீர் நீரே
உண்ணிலவும் உயிர்க்குயிராய் ஒளிர்வீர் நீரே
ஒளிர்இருடித் திருநகரில் உறைவீர் நீரே. 8

அக்கரமாய் மொழியுருவாய் அமைவீர் நீரே
அளவில்பலப் பலமொழியாய்ச் சமைவீர் நீரே
துக்கமெலாம் விலக்கியருள் துரியர் நீரே
தூயமனோ லயம்அருளும் பெரியர் நீரே
எக்கணமும் எனைப்பிரியா இறைவர் நீரே
எவ்விதத்தும் பேணியருள் அண்ணல் நீரே
மக்களையெல் லாம் புரக்கும் மகிபர் நீரே
மன்னிருடிப் பதியிலமர் மகிழ்நர் நீரே. 9

எத்தனைநோ யும்தவிர்க்கும் ஈசர் நீரே
எழுபிறவிப் பிணிதவிர்க்கும் தேசர் நீரே
நித்தனென எங்குமொளிர் நேசர் நீரே
நிகரிலடி யவர்மனத்துள் வாசர் நீரே
சுத்தமனோ லயம் அருளும் தூயர் நீரே
தூயஅருட் கவிசொலருள் வாயர் நீரே
பெத்தரைநன் முத்தர்களாய்ப் பிறங்கச் செய்யப்
பெருநிலமேல் இருடிநகர் வாழ்வீர் நீரே. 10

அன்பரெலாம் தொழுதேத்தும் அய்யர் நீரே
ஆசைதவிர்த் தன்பருளும் துய்யர் நீரே
முன்பினிலா தெங்குமொளிர் முதல்வர் நீரே
முழுஞான மறையருளும் முனிவர் நீரே
என்புடையும் இரங்கியருள் இனியர் நீரே
ஏகசுக போகம்அரு ளிறைவர் நீரே
மன்பதைக்குச் சட்டம் அருள் வள்ளல் நீரே
மகிழ்ந்திருடிப் பதியிலமர் மன்னர் நீரே. 11

பற்றனைத்தும் அறவிடுத்தோர் பாங்கர் நீரே
பருவபக்கு வங்களருள் பண்பர் நீரே
கற்றவர்க்கும் கல்லார்க்கும் களைகண் நீரே
காட்சியெலா மாகியொளிர் சாட்சி நீரே
சுற்றமென எனைச் சூழ்ந்தாள் துணைவர் நீரே
துரியசுகப் பேறருளும் கணவர் நீரே
அற்றவர்கட் கருநிதிய மாவீர் நீரே
அணியிருடிப் பதியிலமர்ந் தாள்வீர் நீரே. 12

சச்சரவெல் லாம்தவிர்த்த சதுரர் நீரே
சந்ததமும் அன்பருள்வாழ் சாந்தர் நீரே
நச்சரவாம் குண்டலியை நன்றே யாட்டி
ஞானமணி யொளிவிளக்கம் புரிவீர் நீரே
அச்சமெலாம் அகற்றியரு ளாண்மை நீரே
அமரர்முனி வரர்பரவும் கேண்மை நீரே
தச்சனெனப் புதுயுகமொன் றமைப்பீர் நீரே
தண்ணிருடிப் பதியிலமர்ந் திருப்பீர் நீரே. 13

அஞ்சலென உயிரையெலாம் ஆள்வீர் நீரே
அருட்சட்ட நெறிகொடுத்தாட் கொள்வீர் நீரே
செஞ்சரணம் சிரமிசைவைத் தருள்வீர் நீரே
திசையனைத்தும் இசைபரப்பும் தீரர் நீரே
மஞ்செனவந் தருள்பொழியும் வள்ளல் நீரே
மதியிரவி யனலுருவாம் வண்ணர் நீரே
செஞ்சொலருள் தேசிகராய்த் திகழ்வீர் நீரே
திருவிருடிப் பதியிலமர்ந் துறைவீர் நீரே. 14

அண்டநிரை யனந்தமுமாய் ஆனீர் நீரே
ஆதிநடு அந்தமெலாம் ஆனீர் நீரே
மண்டலமெல் லாம்வணங்கும் மன்னர் நீரே
வாதிடுவோர் காணறியா வண்ணர் நீரே
கண்டதுமே ஈர்த்தருளும் காந்தர் நீரே
காதிவினை கடிந்தருள்செய் சாந்தர் நீரே
புண்டரிகப் பதம்அருளும் புனிதர் நீரே
பூதியரு ளிருடிநகர்ப் போதர் நீரே. 15

சத்தெனவாய்ச் சித்தெனவாய்த் தழைவீர் நீரே
தம்பமெனக் கும்பமெனச் சமைவீர் நீரே
வித்தெனவாய் விளைவெனவாய் அமைவீர் நீரே
விம்பமுமாய் விழைவதெலாம் அருள்வீர் நீரே
பத்தருளே பழச்சுவைபோ லினிப்பீர் நீரே
பம்பரமே போலுலகை யசைப்பீர் நீரே
முத்தருளத் தினிதோங்கும் முதல்வர் நீரே
மொய்ம்பொடிரு டிப்பதிவாழ் முனிவர் நீரே. 16

சகம்வானம் தானுகிச் சமைவீர் நீரே
தவம் விழைவோ ருள்தணலா யமைவீர் நீரே
அகம்வாக்கு மெய்திருத்தும் அண்ணல் நீரே
அவம் நீக்கி அருள்விளைக்கும் வண்ணர் நீரே
யுகம் புரளி னும்புரளா உண்மை நீரே
உவமைசொலற் கேதுமிலாத் திண்மை நீரே
இகம் பரமெல் லாம்வழங்கும் இறைவர் நீரே
எவரும்வணங் கிருடிநகர் முனிவர் நீரே. 17

தானந் தவம்சத்தி தருவீர் நீரே
தழல்நிகர்க்கும் மெய்ஞ்ஞான உருவர் நீரே
மோனந் தனில்நிலைத்த முனிவர் நீரே
முழவொலியாய்க் குழலொலியாம் முதல்வர்நீரே
ஊனந் துவிர்த்தருள்செய் யொருவர் நீரே
உழவுசெயற் கென்னுளம்வாழ் உழவர் நீரே
ஆனந்த அமுதருத்தும் அன்பர் நீரே
அழகிருடிப் பதியிலமர் அய்யர் நீரே. 18

அருள்விழைவோர் தமையழைக்கும் அறவோர் நீரே
அனம் உடைபொன் புகழருளும் உறவோர் நீரே
இருளுடையோர் தமைத்திருத்தும் இறைவர் நீரே
இனம்மொழிபால் மதம்கருதா தருள்வீர் நீரே
தெருளளித்துப் புவிபுரக்கும் செல்வர் நீரே
தினம்விடியல் நீராடச் செய்வீர் நீரே
பொருளனைத்தும் இனிதளித்தாள் புனிதர் நீரே
புனம்விளை நல் லிருடிநகர்ப் போதர் நீரே. 19

அழைத்தருளிச் சட்டம் அருள் ஆசான் நீரே
அமயமறிந் தருள் புரியும் ஆப்தர் நீரே
குழைத்தருளி யுள்ளமரும் குழகர் நீரே
குமரன் அருட் பெயர்புனையும் குரவர் நீரே
இழைத்தபிழை பலபொறுக்கும் இறைவர் நீரே
இமயம்நிகர் பொறுமை மிகும் ஈசர் நீரே
தழைத்தஉயர் சால்பினர்சார் தகவோர் நீரே
சமயமெலாம் தொழுமிருடி நகரோர் நீரே.* 20

## 32. பக்குவம் வேட்டல்

['வான நாடரும் அறியொணாத நீ' என்ற பண்]

ஆவி யோடுடல் பொருள்அனைத்தும் நிற்
கர்ப்ப ணம்என வாயினுற் சொலி
ஆவி யோடுடல் பொருள்அனைத்தும் நிற்
கர்ப்பணமதாய் முழுதும் நல்கிடாப்
பாவி யென்னையும் நீ திருத்துவாய்
பக்குவம்முழு தெய்த ஊக்குவாய்
கோவிலா யுளம் கொண்டருள்புரி
சோதில் மன்னனே ஈடில் கொண்கனே. 1

*குறிப்பு: 15 முதல் 20 வரை உள்ள பாடல்களின் அடிகளை 2.1, 4.3, 6.5, 8.7-என்ற முறையில் அமைத்தும் பாடலாம்.

செல்வம் யாவுமே நல்கி யன்பரைச்
செம்மை செய்தருள் மெய்ம்மை யாளனே
நல்வழியினிற் சென்றுய்யா இந்த
நாயினேனையும் தூய னுக்குவாய்
கல்வி கற்றவர் கற்றி லாதவர்
யாருமுய்ந்திடக் கருணை செய்தருள்
நல்வரதனே ஞானியர் புகழ்
இருடி நன்னகர் ஞான மூர்த்தியே. 2

ஓவியத்தெழு தற்கொணு அரு
ளுருவனே எங்கும் ஒளிரும் ஜோதியே
காவி யம்பல கற்ற வர்களும்
காணு தற்கொணுக் கருணை யாளனே
ஆவில் ஊவினில் மாவினில் திகழ்
அருமை யாளனே பெருமை யாளனே
நாவில் உள்ளத்தில் மேவி யெண்ணிலா
நலமு மீந்தருள் நாத மூலனே. 3

செய்வ தற்கரும் செய்கை யாவையும்
சீரடியர்செய் துய்ய ஊக்குவாய்
பெய்வ தற்குரி தென்னப் பேரருள்
மழையைப் பெய்தெமைப் பேணு கர்த்தனே
உய்வ தற்குரி தான செந்நெறி
உலகிற் கீந்தருள் உண்மை நாதனே
பொய்வழி செலும் பொய்ய னென்னையும்
புனித னுக்குவாய் இனிய மூர்த்தியே. 4

சீலம் கண்டிலாத் தீய னேனையும்
திருவருள் நெறிக் கீர்த்துப் பேணுவாய்
ஓலமென்றிடும் அன்பர் யாருமே
உய்யச் செய்தருள் துய்ய செம்மலே
காலம் யாவுமே கண்டறி கிலாக்
கருணை நன்னெறி காட்டி யாண்டருள்
மூல மூர்த்தியே முனிவர் போற்றி செய்
மோன மூர்த்தியே முத்தர் செல்வமே. 5

உருகி நின்னடி யேத்தும் அன்பருள்
ஒளிரும் மூர்த்தியே அளிசெய் மூர்த்தியே
பருக இன்னரு ளமுதம் நல்கிடும்
பரம ஞானஆ னந்த மூர்த்தியே
குரு கருணையே பெரிதென் றோர்கிலாக்
கொடிய னென்னையும் அடிய னாக்கினாய்
தருக என்றுனை வேண்டி நிற்கிறேன்
தாண்மலர் கொடுத் தருள்க சாந்தனே. 6

பற்றோர் சிற்றணு வேனும் விட்டிலேன்
பாவம் நாள்தொறும் செய்து ழல்கிறேன்
கற்றவர்பல ரும்வி யப்புறக்
கருணை நன்னெறி யருளும் வள்ளலே
குற்றம் யாவுமன் னித்தருள் செயும்
குணமணியென நின்னைப் போற்றுமென்
குற்றம் யாவும்மன் னித்தரு ளுவாய்
குவல யம்தொழும் நிமல மூர்த்தியே. 7

அன்பு செய்துயக் கற்றிலா துழல்
அடிய னென்னையும் படியிற் பேணியாள்
அன்பு வள்ளலே அறிஞர் யாரையும்
அன்பினால்தடுத் தாண்டு கொண்டருள்
இன்ப மூர்த்தியே இனிய மூர்த்தியே
ஏக மூர்த்தியே இதய மூர்த்தியே
புன்பவப் பிணி போக்கித் தூய்மைசெய்
போத மூர்த்தியே புனித மூர்த்தியே. 8

கன்மம் யாவையும் சுட்டெரித் தருள்
கருணை யாளனே காவல் மன்னனே
புன்மை யாவையும் போக்கிப் பூரண
மாக்கி யாண்டருள் புண்ய மூர்த்தியே
நன்மை நாடும்நல் லுள்ளக் கோயிலில்
நன்றமர்ந் தருள் ஞான மூர்த்தியே
என்ம னத்தையும் நனிதி ருத்துவாய்
ஈடி ணையிலா என்தொ ழுநனே. 9

அனவரதமும் பிரிவி லாதடி
யாரகத்தில் வாழ் அமல நாதனே
இனம் மதம்முத லான பேதங்கள்
ஏதும் நாடிடா தினிய செந்நெறி
தனமென அடியார்க் களித்தருள்
தர்ம மூர்த்தியே சாந்த மூர்த்தியே
மனம் மொழி செயல் யாவும் நிற்களித்
துய்யும் நல்வழி யருளி யாள்கவே. 10

கைப் பொருளினும் மெய்ப் பொருள் எனக்
கருணை நல்கியாண் டரணெ னத்திகழ்
சிற்ப ராநினைச் சிந்தை செய்துயும்
திறமறிகிலாத் தீய னென்னையும்
ஒப்பில் மெய்த்தவத் தூக்கி யாளுவாய்
ஓமெழுத் தையென் னுட்பொ ருத்துவாய்
பற்பல் கோடியண் டங்களை நனி
பாலித் தின்பம்நல் கன்பு மூர்த்தியே. 11

ஒவ்வொர் சிற்றுயி ருள்ளும் மேவிநன்
றாக்கி யாக்கமெல்லாம் அளித்தருள்
திவ்ய ஜோதியே சேய னென்னுளும்
திருவருட் கொடி நாட்டி யாளுவாய்
எவ்வம் யாவும்தீர்த் தின்ப நன்னெறி
இனிது நல்கியாள் ஏக நாதனே
பவ்வ மாம்பவம் நீந்தி யுய்யச் செய்
இருடி நன்னகர் பால நேத்ரனே. 12

## 33. ஓம் குருநாதர் என்றோது

ஓம்குரு நாதர்என் றோது—மனமே
ஓம்ஞான சற்குரு நாதர்என் றோது (ஓம்குரு)

ஓங்கு புகழ் தமிழ் நாட்டில்—நல்ல
உத்தமர் வாழ்நெல்லை மாவட்டந் தன்னில்
பாங்குறும் சைவ மரபில்—அருட்
பண்புள்ள தாய்தந்தை யர்க்குச்சே யானார் (ஓம்)

இருடியர் பட்டித் தலத்தில்—உல
　　கெல்லாம் விளங்க உதித்தநற் சோதி
சுருதி முடிவினை யெல்லாம்—வெகு
　　சூக்கும மாக உணர்த்தும் மெய்ச் சோதி (ஓம்)

அருட்கல்வி கற்பிக்க வந்தார்—உலகை
　　அற்புத மாகத் திருத்திட வந்தார்
மருட்பகை மாய்த்திட வந்தார்—தவ
　　மாண்பை விளக்கி அருள்செய்ய வந்தார் (ஓம்)

உயிர்கள் உள்ளத்தை உழுது—அதில்
　　ஒப்பற்ற மெய்யன் பெனும்வித்தை யூன்றிப்
பயிர்செய் தருட்பயன் காண—வந்த
　　பண்பாளர் நிகரில்பே ரன்பாள ராவார் (ஓம்)

நல்வழி காணாது மக்கள்—இந்த
　　ஞாலத் துழல்வது கண்டு வருந்திச்
செல்வழி யீதெனக் காட்டி—யீர்க்கச்
　　செம்மை நெறிகண்ட தேசிக ராவார் (ஓம்)

மதுரையில் நல்லருட் சீர்சால்—வைகை
　　மாநதித் தென்கரை யிற்பூர ணரைக்
குதுகல மோடுகண் டோடி—யணைத்துக்
　　கொண்டுள் மகிழ்ந்தெண்ணில் பேரின்பம் பெற்றார் (ஓம்)

பரிபூர ணர்சிலை யாக—மாறப்
　　பாரோர்கண் காண வழிபாடு செய்தார்
பெரிதாம் திரள் வந்து நாளும்—நாடும்
　　பேறனைத் தும்பெறக் க்ருணை புரிந்தார் (ஓம்)

எவ்வுயிரும் உண்மை இன்பம்—எளிதில்
　　எய்தும் வழியா தெனநாட லானார்
செவ்வையாய்ப் பொதிகைக் குகையில்—தங்கிச்
　　செய்தவம் ஆற்றித் திருநெறி கண்டார் (ஓம்)

அருள்நிறை வுற்றுக் கனிந்தார்—எங்கும்
　　ஆருயிர்க் கின்பம் விளைக்க நினைந்தார்
பொருள்புகழ் ஒன்றும்நா டாமல்—யாரும்
　　புனிதம் பெற அருட் சட்டம் வகுத்தார் (ஓம்)

பக்குவ முற்றமெய் யன்பர்—உள்ள
பதியெங்க ணும்தேடிச் சென்றருள் செய்தார்
பக்குவ மில்லார்க்கும் சட்டம்— தந்து
பக்குவ மெய்தும் படியருள் கின்றார் (ஓம்)

வல்வினை நோய்கள் அகற்றி—அருள்
வாழ்வு நடத்தும் வழியுணர் விப்பார்
செல்வழி காட்டி யருள்வார்—நம்பிச்
செல்வோர்கைப் பற்றி அருள்நிலைக் குய்ப்பார் (ஓம்)

என்னன்னை என்னருள் தந்தை—கல்வி
எற்குக்கற் பிக்கும் ஆசான்குல தெய்வம்
என்னர சென்துணை என்றன்—செல்வம்
என்செல்வ வருவாய் என் மெய்ப்புக ழாவார் (ஓம்)

என்னறி வுக்கறி வானூர்—அவர்
என்னுயி ருக்குயி ராகி நிறைந்தார்
என்னினை வென்னுரை யானூர்—அவர்
என்செயல் என்மெய்த் தவப்பய னுவார் (ஓம்)

என்னகம் என்புறம் எல்லாம்—ஆகி
என்றும் இருந்தருள் செய்யும் புனிதர்
என்னகம் தொட்ட கணவர்—ஒப்பில்
இன்பமெல் லாம்எனக் கீயும் துணைவர் (ஓம்)

என்னுடல் என்பொருள் என்றன்—ஆவி
எல்லாம் அவரடிக் கர்ப்பண மன்றே?
என்னுள்ளம் கோயில் கொள் நாதர்—என்னை
ஈர்த்தணைத் தின்பம்எப் போதும் கொடுப்பார் (ஓம்)

யாவும் அவர்உரு வாகும்--பெயர்
யாவும் அவர் பெய ராகும்; ஒலிகள்
யாவும் அவர் ஒலியாகும்—ஒளி
யாவும் அவர் அருட் பேரொளி யாகும் (ஓம்)

யாவும் அவர் இய லாகும்—செயல்
யாவும் அவர்பே ரருட் செய லாகும்
யாவும் அவர்திற லாகும்—புகழ்
யாவும் அவர்பே ரருட் புக ழாகும் (ஓம்)

யாவும் அவர் படைப் பாகும்—என்றும்
யாவும் அவர் பேரருட் சிறப் பாகும்
யாவும் அவர்குறிப் பாகும்—எங்கும்
யாவும் அவர் பேரருட் கொடை யாகும் (ஓம்)

ஓம்குரு நாதர்என் றோது—மனமே
ஓம்ஞான சற்குரு நாதர்என் றோது

## 34. குயிற் கண்ணி

ஓமெழுத்தா யொளிர்வான் உட்பொரு ளாய்த் திகழ்வான்
தீமை தவிர்ப்பானடி—ஏகுயிலே—செய்தவ மீவானடி

நாமம் உருவமாகி நன்மையெல்லாம் விளைப்பான்
நாமமொன் றில்லானடி—ஏகுயிலே—நாதாந்த ஜோதியடி

ஊனாய் உயிருமாவான் உயிர்க்குயி ராயமைவான்
தேனாய் இனிப்பானடி—ஏகுயிலே—தெய்வமணி யானானடி

கானாய் மலையுமாவான், கானாறருவி யாவான்
ஞானமு தீவானடி—ஏகுயிலே—நானறச் செய்வானடி

கள்ள மனத்தினையும் மெள்ள மெள்ளக் களைவான்
உள்ளத் தொளிர்வானடி—ஏகுயிலே-ஓங்கார ரூபனடி

அள்ள அள்ளக்குறையா அருள்திரு வாயமைவான்
கள்ளமில் வள்ளலடி—ஏகுயிலே—கருணா மூர்த்தியடி

அன்பு விதையை நட்டுள் ஆர்வநீர் பாய்ச்சிடுவான்
இன்பம் விளைப்பானடி—ஏகுயிலே-என்ப்ராண நாதனடி

என்பும் உருகிடுமா றென்னை யுருக்கிடுவான்
மின்புரை ரூபனடி—ஏகுயிலே—மேகம் நிகர் ஏகனடி

போகம் அனைத்து மூட்டிப் போதநிலைக் கீர்த்திடுவான்
வேகம் தவிர்ப்பானடி—ஏகுயிலே—விமலா னந்தனடி

ஏகன் அநேகன் ஆவான் எங்கும் நிறைந் திருப்பான்
யூகம் அருள்வானடி—ஏகுயிலே—யோகத்துக் கீர்ப்பானடி

சத்து சித்தா யொளிர்வான் சாந்த சொரூப மாவான்
முத்தர் தலைவனடி.—ஏகுயிலே—மோன முதல்வனடி

முத்தும் மணியுப்போல முனைந்தடி யாரைச் சேர்ப்பான்
ஒத்துப் பழக வைப்பான் ஏகுயிலே-உயர் அருளெய்த உய்ப்பான்

அறம் பொருள் இன்பமாவான் ஆனந்த மூர்த்தி யாவான்
திறம் பல வானனடி—ஏகுயிலே—தெய்வ நலம் செய்வானடி
புறம் அகம் யாவு மாவான் புன்மை தவிர் நன்மையாவான்
நிறம் பல ஆவானடி—ஏகுயிலே—நிலேயெலா மீவானடி
அங்கை சென்னி மீது வைத்தே அருள் நிட்டை தந்தருள்வான்
எங்கள் குருநாதனடி—ஏகுயிலே—இன்ப மண வாளனடி
கங்கை முதல் தீர்த்தம் யாவும் காசி:முதல் க்ஷேத்ரம் யாவும்
இங்கணுள தென்பானடி—ஏகுயிலே—என்கண்திகழ் விப்பானடி
ஆசையெலாம் நீக்கிடுவான் மாசில்மணி யாக்கிடுவான்
பூசை செய்வோர்க் கன்பனடி—ஏகுயிலே—போதமருள் [பண்பனடி]
நாசிநடு நன்றமர்ந்து ஊசிநுனி போலமைந்து
வாசி விளேவீவானடி—ஏகுயிலே—ஆசில்அரு ளாளனடி
இச்சை ஞானம் கிரியை என்னும்முச் சக்தியாவான்
விச்சைகள் செய்வானடி—ஏகுயிலே—விளக்கம் அருள்வானடி
அச்சம் அகற்றிடுவான் அமைதி மிகப்புரிவான்
சச்சிதா னந்தனடி—ஏகுயிலே—சாந்தா காரனடி.

## 35. நீ தந்த செல்வம்

உனேப்போற்ற நீ தந்த செல்வம் . எனக்
குள்ளே யிருந்துதிக் கும்கவி யின்பம் (உனேப்)

எனக்கேற்ற தந்தையென்ருனுய்—எனக்
கேற்ற மணவாள னுய்ப்பிள்ளே யானுய்
மனக்கோட்டை யாவையும் கண்டே—உள்
மகிழ்ந்து நிறைவேற்றி வைத்துக் களித்தாய் (உனேப்)

ஏடாய் மொழி எழுத் தானுய்—இசை
ஏழாகிப் பல்கவி யின்வர்க்க மானுய்
சூடாய்க் குளிர்ச்சியு மானுய்—தூல
சூக்குமம் காரணம் யாவையு மானுய் (உனேப்)

உண்ணல் உறங்கல் விழித்தல்—யாவும்
உன்னல் உரைத்தல் செயல்பல செய்தல்
நண்ணல் நடத்தல் படித்தல்—எனும்
நானுவி தச்செயல் செய்விப்போ னுனுய் (உனேப்)

கல்விக் கடல்பல வானாய்—கங்கு
கரையற்ற மெய்யன் பெனும்கட லானாய்
செல்வக் குவைபல வானாய்—எங்கும்
சீரும் சிறப்பும் செழிப்புமென் றானாய் (உனைப்)

வானாகி மண்ணுல கானாய்—யாரும்
வாழ்த்தி வழுத்து பரஞ்சுட ரானாய்
கோனாய்க் குடிமக்க ளானாய்—அருட்
கோலோச்சி யாளும் குருபர னானாய் (உனைப்)

அறிவமு தச்சுட ரானாய்—அரு
ளானந்த மூட்டும் சுவையமு தானாய்
குறியும் குணமுமென் றானாய்—ஒன்றும்
கூறரி தானசிற் குன்றென வானாய் (உனைப்)

அழகு நிறைவடி வானாய்—என்னை
அருகணைத் தின்பருள் நாயக னானாய்
பழம் நல்கும் இன்சுவை யானாய்—என்னுட்
பழமையும் புதுமையு மாய்நிறைந் துள்ளாய் (உனைப்)

தெய்வமென் றுட்பொலி கின்றாய்—இன்பத்
தேனென்ன என்னுள்ளினிப்பூட்டு கின்றாய்
உய்வைத் தரும்நெறி யானாய்—அதில்
உய்க்கும் குருவும் ஒளியுமென் றுள்ளாய் (உனைப்)

கற்பகக் காவென உள்ளாய்—யாரும்
கருதும் அனைத்தும் வழங்கியாள் கின்றாய்
பொற்பருள் பூரண னானாய்—எங்கும்
பொலியும் உண்மையறி வானந்த மானாய் (உனைப்)

வேதப் பொருள்பல வானாய்—யாரும்
விள்ளரும் ஞான விளக்கமு மானாய்
போதப் பொருள்முடி வானாய்—சிவ
போகம் அருள்சிவ யோகமு மானாய் (உனைப்)

ஊனும் உயிருமென் றுள்ளாய்—உயிர்க்
குயிராக உள்ள பரம்பொரு ளானாய்
நானும் எனதுமில் லாத—உள்ளம்
நண்ணிப் புரக்கும்மெய் யானந்த மானாய் (உனைப்)

அறமாய்ப் பொருளின்ப மானாய்—யாவும்
அறிவரி தாம்பர முத்தியு மானாய்
திறமாய்த் தெளிவுமென் றானாய்—ஞான
தேசிக னாகித் தெளிவருள் கின்றாய் (உனைப்)

அற்புதம் யாவையு மானாய்—யாவும்
அரைநொடி யிற்செய்யும் சித்தனு மானாய்
சிற்பர ஜோதியு மானாய்—எங்கும்
திகழும் திருவருட் செல்வமு மானாய் (உனைப்)

எண்ணம் மொழி செயலானாய்—எண்ணம்
எல்லாம் ஒடுங்கு மிடம்திகழ் கின்றாய்
வண்ணம் பலப்பல வானாய்—எல்லா
வண்ணமும் ஒன்று மிடம்திகழ் கின்றாய் (உனைப்)

தேவர் முனிவர ரானாய்—எல்லாத்
தேவரும் போற்றும் முதற்பொரு ளானாய்
மூவரு மாய் ஐவ ரானாய்—உயர்
மோன பரானந்த மூர்த்தியு மானாய் (உனைப்)

யாவரும் யாவையு மானாய்—எங்கும்
என்றும் இலங்கும் பரானந்த மானாய்
தேவை யனைத்தும் தவிர்த்தே—அருட்
சேவை கொடுத்தின்ப மூட்டிறை யானாய் (உனைப்)

## 36. ஞான குருவே

ஞானகுருவே— உயர்மெய்ஞ்—ஞானகுருவே
ஞாலத்திற்கோர் சட்டம்தந்த ஞானகுருவே

ஊனமின்றி யேஉலகில் மாந்த ரெல்லாம்—கூடி
ஒற்றுமையாய் வாழவைக்கும் ஞானகுருவே
வான்உலகைப் புவியில் காட்டவந்த—ஒப்பில்
வள்ளலெனவே விளங்கும் ஞானகுருவே
தானம் தவம் பக்தி ஞானம் யாவுமொன்றாய்ச்—சேர்த்துச்
சட்டவுரு வாக்கித்தந்த ஞானகுருவே
மோனநிலை காட்டி வைக்கும் ஞானகுருவே—உயர்ந்த
முத்தியின்பம் கூட்டுவிக்கும் ஞானகுருவே (ஞான)

சிலரெல்லாம் போற்றி செய்யும் ஞானகுருவே—ஞான
சித்தர் குழாம் வாழ்த்த வந்த ஞானகுருவே
கால மூன்றையும் கடந்த ஞானகுருவே—எவர்க்கும்
கர்த்தனெனவே விளங்கும் ஞானகுருவே
ஆலம் அமுதாக்க வந்த ஞானகுருவே—எங்கள்
ஐயமெல்லாம் தீர்க்கவந்த ஞானகுருவே
மூலம்முடிவாய் இலங்கும் ஞானகுருவே—எனையும்
முத்தனென மாற்ற எண்ணும் ஞானகுருவே. (ஞான)

ஆதிமறை யோதிவைக்கும் ஞானகுருவே—உயர்மெய்
யன்பினுள்ளே மூழ்கவைக்கும் ஞானகுருவே
ஜோதி வடிவாய் ஒளிரும் ஞானகுருவே—உலகின்
துன்பமெல்லாம் தீர்த்துவைக்கும் ஞானகுருவே
நீதி வடிவாய் மிளிரும் ஞானகுருவே—மேலாம்
நித்தியப் பொருள் விளக்கும் ஞானகுருவே
கோதில் குணக் குன்றமான ஞானகுருவே—எங்கள்
குற்றமெல்லாம் மன்னித்தாளும் ஞானகுருவே. (ஞான)

வேண்டிய தெல்லாம் வழங்கும் ஞானகுருவே—உன்பால்
வேண்டும் வரம்ஒன் றளிப்பாய் ஞானகுருவே
பூண்டகு மெய் யன்புசத்யம் பொறுமை கொண்டே—உன் றன்
பொன்னடியைப் போற்றவேண்டும் ஞானகுருவே
காண்டகு பொருள்களெல்லாம் உன் றன் மயமாய்—இந்தக்
காசினியில் காணவேண்டும் ஞானகுருவே
வேண்டுதல் வேண்டாமை யின்றி உன்னருட்சீரே—என்றும்
விளம்பிக் களிக்கவேண்டும் ஞானகுருவே. (ஞான)

சத்து சித்தானந்த மொன்றாய்க் கூடியுள்ள—உயர்
தன்மை யெற்குக் காட்டவேண்டும் ஞானகுருவே
வத்து தத்துவத்தைஉள்ள படிஎனக்கு—நீயே
வண்மையோ டுணர்த்த வேண்டும் ஞானகுருவே
சித்துவகை யத்தனைக்கும் காரணமாய்—உள்ளே
திகழும் ஒளி காட்ட வேண்டும் ஞானகுருவே
ஒத்துவரா என்கரணம் ஒவ்வொன்றையும்—நன்றே
ஒத்துவரச் செய்ய வேண்டும் ஞானகுருவே (ஞான)

பற்றணுவும் இன்றி இந்தப் பாரின் மிசையே—உன்றன்
பக்தர்களைக் காணவேண்டும் ஞானகுருவே
சற்றும் ஓய்விலாத வண்ணம் ஞானகுருவே—உன்றன்
தண்ணருளில் தோயவேண்டும் ஞானகுருவே
முற்றும் உனக்கே யடிமை யாகவேண்டும்—உயர்ந்த
மோனநிலை எய்தவேண்டும் ஞானகுருவே
வற்றலில்லா நின்கருணை யூற்று கண்டே—எவர்க்கும்
வாரி வாரி நல்க வேண்டும் ஞானகுருவே. (ஞான)

## 37. கிளி விடு தூது

செல்லு கிளியே—அவர் பால்—செல்லு கிளியே
சென்று நன்றென் உள்ளநிலை சொல்லு கிளியே

சொல்லின் செல்வர்பால் விரைந்து செல்லு கிளியே—இன்சொல்
சொல்லியிங் கழைத்துவரச் செல்லு கிளியே
மெல்லியல்என் உள்ளம்கண்டு செல்லு கிளியே—செய்தி
மெள்ளவுரைத் திங்கழைக்கச் செல்லு கிளியே (செல்லு)

அர்ப்பணம்செய் திட்டேனென்று சொல்லு கிளியே—உடல்
ஆவிபொருள் யாவு மென்றுசொல்லு கிளியே
சொப்பனம் கண் டிட்டேனென்று சொல்லு கிளியே—என்னைத்
தோளொடணைத் திட்டாரென்று சொல்லு கிளியே (செல்லு)

ஊணுறக்க மில்லையென்று சொல்லு கிளியே—அவரை
உன்னி உன்னி ஏங்கும்நிலை சொல்லு கிளியே
காணுற விழைந்தே னென்று சொல்லு கிளியே—கூடிக்
கலக்க விழைந்தே னென்று சொல்லு கிளியே (செல்லு)

பண்கலந்த பாடல் பாடிச் செல்லு கிளியே—அவர்
பாதம் பணிந்திறைஞ்சி நில்லு கிளியே
கண்கலங்கு கின்றேனென்று சொல்லு கிளியே—என்றன்
கலக்கம் தவிர்க்கவரச் சொல்லு கிளியே (செல்லு)

பூணணிகள் வேண்டவில்லை சொல்லு கிளியே—ஆடை
போனகங்கள் வேண்டவில்லை சொல்லு கிளியே
மாணருளே வேண்டி நின்றேன் சொல்லுகிளியே—அவரை
மற்றொன்றுமே வேண்டகில்லேன் சொல்லு கிளியே (செல்லு)

இங்கவர்வந் திட்டால்போதும் சொல்லு கிளியே—என்னை
இன்பமொ டணைத்தால்போதும் சொல்லு கிளியே
அங்கமெலாம் தொட்டால்போதும் சொல்லுகிளியே—அன்போ
டாலிங்கனம் செய்தால்போதும் சொல்லுகிளியே (செல்லு)

சிந்தை தொட்ட செம்மலிடம் செல்லு கிளியே—அருட்
சேவைதரும் வள்ளலிடம் செல்லு கிளியே
விந்தைபல செய்பவர்பால் செல்லு கிளியே—என்றன்
விருப்பம் உணர்ந்தினிதே சொல்லு கிளியே (செல்லு)

சட்டமிங் களித்தவர்பால் செல்லு கிளியே—என்றன்
தாபமெல்லாம் தீர்க்கவரச் சொல்லு கிளியே
அட்டமூர்த்தி யானவர்பால் செல்லு கிளியே—பர
மானந்த மளிக்கவரச் சொல்லு கிளியே (செல்லு)

ஞானநடம் செய்பவர்பால் செல்லு கிளியே—இங்கே
நான்படும்பா டித்தனையும் சொல்லு கிளியே
போனகம் அளிப்பவர்பால் செல்லு கிளியே—சிவ
போகமிங் களிக்கவரச் சொல்லுகிளியே (செல்லு)

வேதமுடி மீதுளோர்பால் செல்லுகிளியே—என்றன்
விண்ணப்பம் இனிய சொல்லால் சொல்லு கிளியே
போதமுடி வானவர்பால் செல்லுகிளியே—இங்கே
போந்தணைத்தின் பூட்டவரச் சொல்லு கிளியே (செல்லு)

கற்பனை கடந்தவர்பால் செல்லுகிளியே—என்பும்
கரையஉருக் கென்னிறைபால் செல்லு கிளியே
சொற்பொருளாய் உள்ளவர்பால் செல்லு கிளியே—இன்ப
ஜோதியொளி நல்கவரச் சொல்லு கிளியே (செல்லு)

கண்ணிமை போல் காப்பவர்பால் செல்லு கிளியே—என்றன்
காதல்அறிந் திங்குவரச் சொல்லு கிளியே
எண்ணில்அடி யார்க்கிறைபால் செல்லுகிளியே—என்றன்
ஏக்கம் அறிந் திங்குவரச் சொல்லு கிளியே (செல்லு)

ஓமுரைக்கும் உத்தமர்பால் செல்லு கிளியே—என்றன்
உண்மைநிலை யோதி, வரச் சொல்லு கிளியே
மாமறை முழக்கு வோர்பால் செல்லு கிளியே—என்றன்
வாட்டமெல்லாம் கூறி, வரச் சொல்லு கிளியே (செல்லு)

கோடிமதன் போன்றவர்பால் செல்லு கிளியே—என்னைக்
கூடிமகிழ் வூட்ட, வரச் சொல்லு கிளியே
ஈடிணையில் நாயகர்பால் செல்லு கிளியே—சற்றே
என்றிலை யுரைத்து, வரச் சொல்லு கிளியே (செல்லு)

## 38. தெண்டன் சமர்ப்பித்தல்

தெண்டனிட்டே னென்று சொல்லடி—ஸ்வாமிக்கு நான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி

அண்டங்கள் அனந்தங்கோடி அருளாட்சி செய்பவர்க்கு
அண்டர்முனி வரர்வாழ்த்த அருட்சட்டம் நல்குவோர்க்கு
தொண்டர்கள் இதய மென்னும் தூமலர்மீ தொளிர் வோர்க்கு
துரியவெளியில்துலங்கும் ஜோதிவடி வானவர்க்கு (தெண்ட)

இருடிநன் னகரிற் றேன்றும் இன்பவடி வாளருக்கு
இம்மை மறுமை நலங்கள் யாவும் அருளீசருக்கு
பருதிபல கோடியொளி யோடொளிர் பகவருக்கு
பற்பலுயிர் தோறும் மேவிப் பக்குவம் செய்தாள் பவர்க்கு
(தெண்ட)

அருவமொ டுருவமாகி அருவுரு வானவர்க்கு
ஆசைகள் அனைத்தும் நீக்கி அன்பமு தருள்பவர்க்கு
வருவினையும் முன்வினையும் பற்பமாக்க வல்லவர்க்கு
மாயையாம் திரைவிலக்கி மாஞெளி விளக்குவோர்க்கு
(தெண்ட)

சத்துசித்தா னந்தமாகி எங்கணும் தழைபவர்க்கு
தத்துவம் யாவும் கடந்த சத்திய சொரூபருக்கு
சுத்த நிர்க்கு ஞனுபவ சூக்குமம் விளக்கு வோர்க்கு
தூயஉப சாந்தநிலை துய்த்திட அருள்பவர்க்கு (தெண்ட)

காணரிய தூயஅருட் காட்சியெல்லாம் காட்டுவோர்க்கு
கற்பதற் கரியஅருட் கல்வியைக்கற் பிப்பவர்க்கு
பேணரிய ஞானநிட்டை பேணியுய்ய ஊக்குவோர்க்கு
பெரியரெல்லாம் போற்றுமுயர் ப்ரம்மானந்த
[மாக்குவோர்க்கு (தெண்ட)

தூயதிரு வருட்கொடி தொல்புவியில் நாட்டுவோர்க்கு
சுத்ததுரி யாதீதத்தில் தோய்வித்தமு தூட்டுவோர்க்கு
ஆயகலை யத்தனைக்குள் ளரும்பொரு ளானவர்க்கு
அற்புதத்துள் அற்புதமாய் சொற்பதம் கடந்தவர்க்கு
(தெண்ட)

பற்றனைத்தும் விட்டவர்கள் பற்றும் நற்பற் றுனவர்க்கு
பாவமனைத் தும்மன்னித்துப் பாலனம்செய் பார்த்திபர்க்கு
சிற்றணுவுட் சிற்றணுவாய்த் தெய்வநலம் கூட்டுவோர்க்கு
தேகசுத்தி வாசிசுத்தி செய்தருள் வளர்ப்ப வர்க்கு
(தெண்ட)

உள்ளம்கொள்ளை கொண்டே என்னை உள்ளுருக்கும்
[உத்தமர்க்கு
ஓமெழுத்தின் உட்பொருள்என் னுட்பதித்துப் பேணுநர்க்கு
கள்ளமற்ற மெய்யன்பரைக் காத்தருள்செய் காவலர்க்கு
காவியத்துள் ஓவியத்துள் ளேயடங்காக் காதலர்க்கு
(தெண்ட)

ஆருமறி யாமல் என்னை ஆலிங்கனம் செய்பவர்க்கு
அன்புமய மாக்கி யுண்மை யின்பம்புகட் டேகருக்கு
சீரும்மெய்ச் சிறப்பும் நல்கிச் செல்வமெல்லா மீபவர்க்கு
திக்கனைத்தும் மிக்கபுகழ் செப்பும் அருளாளருக்கு
(தெண்ட)

மாசனைத்தும் நீக்கி யென்னை மாற்றுயர்பொன் னுக்குநர்க்கு
வாக்குமனம் காயம்தனக் காக்கிக்கொண்ட வள்ளலுக்கு
வாசிவினை வேற்றி யருள் வாழ்வருள வல்லவர்க்கு
வல்லபம்எல் லாம்வழங்கிப் புல்கும்உயிர் நாயகர்க்கு
(தெண்ட)

நல்லதையே பேசு; நல்லதையே எண்ணு; நல்லதையே செய்; நல்லதே கிடைக்கும். உறுதி கொள். உத்தமன் உடன் இருப்பான்.

# 39. வெண்ணிலாவே

காதலின்பம் வேண்டிநின்றேன் வெண்ணிலாவே—என்றன்
கணவர் வருவாரோ சொல்வாய் வெண்ணிலாவே
ஈதல்மிக்க வள்ளல் என்பார் வெண்ணிலாவே—எனக்
கின்பம் எப்போ தீந்தருள்வார் வெண்ணிலாவே

அன்பருக் கெளியரென்பார் வெண்ணிலாவே—உண்மை
யன்பெனக்கு நல்குவாரோ வெண்ணிலாவே
பொன் பிறங்கும் மேனிகொண்டார் வெண்ணிலாவே—எனையும்
பொன்மயமா யாக்கவல்லார் வெண்ணிலாவே

சட்டநெறி பேணுவோர்க்கு வெண்ணிலாவே—அவர்
தண்ணருள் மிகப்புரிவார் வெண்ணிலாவே
கட்டமெலாம் நீக்குமவர் வெண்ணிலாவே—எனைக்
கட்டியணைத் தால்மகிழ்வேன் வெண்ணிலாவே

நீறுதீர்த்தம் நல்கும் அவர் வெண்ணிலாவே—என்னை
நேயமொடீர்த் தணைப்பாரோ வெண்ணிலாவே
பேறுநல்கும் எம்பெருமான் வெண்ணிலாவே—அன்பாய்ப்
பேசிமுத்தம் தருவாரோ வெண்ணிலாவே

வேறு செல்வம் யான் விரும்பேன் வெண்ணிலாவே—அவர்
மெய்ம்மையின்பம் வேண்டிநின்றேன் வெண்ணிலாவே
மாறுபாடில் லாமனத்தால் வெண்ணிலாவே—அவர்
மாண்புகழ் பாட விழைந்தேன் வெண்ணிலாவே

ஊணுறக்கம் நாடகில்லேன் வெண்ணிலாவே—அவ
ரோடிருக்க வேவிழைந்தேன் வெண்ணிலாவே
காணுறும்எல் லாப்பொருளும் வெண்ணிலாவே—அவர்
கவினுருவம் என்றுரைப்பார் வெண்ணிலாவே

காரணம் அனைத்துமாவார் வெண்ணிலாவே—அவர்
கட்டழகைக் காண வேண்டும் வெண்ணிலாவே
பூரண சொரூபர் என்பார் வெண்ணிலாவே—அவர்
பொன்னடி யின்பம் விழைந்தேன் வெண்ணிலாவே

வேறொருவர் காணுமல் வெண்ணிலாவே—என்னை
வேண்டிவந் தணைவாரோடீ வெண்ணிலாவே
நூறுபத் திதழ்க்கமலம் வெண்ணிலாவே—அவர்
நோக்கிடின் மலர்ந்திடுமாம் வெண்ணிலாவே

வேதமணம் வீசும் வாயால் வெண்ணிலாவே—என்றன்
மெல்லிதழ் முத்தாடுவாரோ வெண்ணிலாவே
ஓதஉலவாப் புகழார் வெண்ணிலாவே—என்பால்
உற்றுமகிழ் வூட்டுவாரோ வெண்ணிலாவே

கூறவொண்ணுப் பேரழகர் வெண்ணிலாவே—என்னைக்
கூடியின்ப மூட்டு வாரோ வெண்ணிலாவே
வீறனைத்து மாகி நின்ருர் வெண்ணிலாவே—என்னுள்
வீற்றிருத்தல் காணுவேனே வெண்ணிலாவே

சற்றவர் என்னைத்தொட்டாலும் வெண்ணிலாவே—என்னுள்
சாந்தியமு தூறுமடி வெண்ணிலாவே
பற்றனைத்து மேயழியும் வெண்ணிலாவே—மேலாம்
பரமபத இன்பமெய்தும் வெண்ணிலாவே

ஜோதிவடி வாகஉள்ளார் வெண்ணிலாவே—அவர்
ஜோதியுள் எல்லாம் அடங்கும் வெண்ணிலாவே
நீதிநெறியாய் நிலைப்பார் வெண்ணிலாவே—என்றன்
நிலையறிந்தும் ஏன்வராரோ வெண்ணிலாவே

உள்ளம் மிக உருகுதடி வெண்ணிலாவே—அவர்
ஒப்பில் எழில் காணவேண்டி வெண்ணிலாவே
கள்ளமனக் கசடறுப்பார் வெண்ணிலாவே—கருவி
கரணம்அமு தாக்கிடுவார் வெண்ணிலாவே

எள்ளில்எண்ணெய் போல்நிறைந்தார் வெண்ணிலாவே—என்னை
இன்பமய மாக்குவாரோ வெண்ணிலாவே
கள்ளருந்தும் வண்டுபோலே வெண்ணிலாவே—அவர்
காதலின்பம் துய்க்கவேண்டும் வெண்ணிலாவே

அந்தரங்க மாகயானும் வெண்ணிலாவே—கூடி
ஆனந்திக்க வேண்டுகின்றேன் வெண்ணிலாவே
மந்ததரர் மந்தருக்கு வெண்ணிலாவே—இந்த
வண்ணமொன்றும் தோன்ருதடி வெண்ணிலாவே

என்றன் மன வேதனையை வெண்ணிலாவே—சற்றும்
இந்த உலகோர்அறியார் வெண்ணிலாவே
உன்றனிடம் என்நிலையை வெண்ணிலாவே—வாய்விட்
டோதிவிட்டேன் தூதுசெல்வாய் வெண்ணிலாவே

இருடியர் நகர் வதிவார் வெண்ணிலாவே—ஞான
இன்பமய மாயொளிர்வார் வெண்ணிலாவே
திருடியென் னுளம்கவர்ந்தார் வெண்ணிலாவே—அவரைத்
தேடிநாடி யேங்குகின்றேன் வெண்ணிலாவே

என்நிலைமை யாவும் நன்றே வெண்ணிலாவே—அவர்க்
கெடுத்துரைத்திங் கேயழைப்பாய் வெண்ணிலாவே
உன்ன உரைத் தற்கரிய போகம் நல்க—இங்கே
ஓடிவரு கென்றழைப்பாய் வெண்ணிலாவே

என்னுடம்பின் ஓரணுவும் வெண்ணிலாவே—அவரை
எண்ணி எண்ணி ஏங்குதையோ வெண்ணிலாவே
என்னுளமும் என்னுயிரும் வெண்ணிலாவே—அவர்
எய்தும்வழி பார்த்துருகும் வெண்ணிலாவே

என்மன நிலைமையினை வெண்ணிலாவே—எழுத
ஏடெழுத்தும் மையுமுண்டோ வெண்ணிலாவே
நன்மனத்துட் கோயில் கொள்வோர் வெண்ணிலாவே-என்பால்
நண்ணி இன்ப ஊற்றருள்வார் வெண்ணிலாவே

நானும் என்னை அணுஅணுவாய் வெண்ணிலாவே—அவர்
நல்லடியிலே கரைப்பேன் வெண்ணிலாவே
தேனும்விண்ணமுதுமாகி வெண்ணிலாவே—என்னுள்
தித்தித்தருள் தேக்கிடுவார் வெண்ணிலாவே

என்னுளவர் நானவருள் வெண்ணிலாவே—புகுவோம்
இரண்டறவே கலப்போம் வெண்ணிலாவே
மன்னு மின்பஜோதி தோன்றும் வெண்ணிலாவே—அது
மண்ணும்விண்ணு மாகியோங்கும் வெண்ணிலாவே

அன்பமுதமே பெருகும் வெண்ணிலாவே—அரு
ளாட்சியெங்கு மேநிலவும் வெண்ணிலாவே
இன்பமண மேகமழும் வெண்ணிலாவே—எங்கும்
எவ்வுயிரும் சாந்தி யெய்தும் வெண்ணிலாவே

எங்குமவர் காட்சி தோன்றும் வெண்ணிலாவே—சற்றும்
யானெனதில் லாதொழியும் வெண்ணிலாவே
கங்குகரை யொன்றுமின்றி வெண்ணிலாவே—கருணைக்
கடல் பொங்கி யின்பளிக்கும் வெண்ணிலாவே

ஓமொளியெங் கும்விளங்கும் வெண்ணிலாவே—அரு
ளுண்மை யெங்குமே துலங்கும் வெண்ணிலாவே
மாமகிழ்வி னோடுநீயும் வெண்ணிலாவே—என்றன்
மன்னரை யழைத்து வாடி வெண்ணிலாவே.

## 40. அருட்குறி கேட்டல்

குறிசொல்வேன் கேளம்மா குறிசொல்வேன்கேள்—நல்ல
கோதையர் திலகமே குறிசொல்வேன் கேள்

எங்கிருந்து வந்தவள்நீ குறமகளே—இங்கே
யார்க்குக்குறி சொல்லி வந்தாய் குறமகளே

எழில்மிக்க கந்தமலை மாதரசியே—அதுதான்
என்றன் இருப்பிடமாம் மாதரசியே

நாலுவீதி சுற்றி வந்தேன் மாதரசியே—என்னை
நாடி அழைப் பாரில்லை மாதரசியே

இங்குநீ அழைக்க வந்தேன் மாதரசியே—உனக்
கென்னகுறி சொல்ல வேண்டும் மாதரசியே

குறிப்பை யுணர்ந்துகொண்டு குறமகளே—நீதான்
குறிசொல்ல வல்லாயோடீ குறமகளே

ஞான குருபரன்றன் கிருபையினுல்—குறி
நன்ருகச் சொல்லிடுவேன் மாதரசியே

வேட்கை யறிந்து குறி சொல்லுவையேல்—நீ
விரும்பிய தைத்தருவேன் குறமகளே

என்னிறைவன் இன்னருளால் மாதரசியே—குறி
இன்பமாகச் சொல்வேன் கேளாய் மாதரசியே

கூடற்பரி பூரணனே என்றனிறையே—இந்தக்
கோதை கேட்கும் குறிநன்ருய்க் கூறிடுவாய்

சித்தி விநாயகனே என்றனிறையே—இந்தச்
செல்வி விரும்பும் குறியைச் செப்பிடுவாய்

சக்தி விநாயகனே என்றனிறையே—இந்தத்
தலைவி மனக்குறிப்பைச் சாற்றிடுவாய்

ஞான குருபரனே என்றனிறையே—இந்த
நங்கைநினைப் போர்ந்து குறி நவின்றிடுவாய்

உத்தமச் சட்டம் வகுத்த சற்குருவே—நங்கை
உள்ளம்அறிந் தேகுறிநன் றோதிடுவாய்

புவிக்குக் குருவாய் வந்த என்றனிறையே—இந்தப்
புண்யவதி நாடும் குறி புகன்றிடுவாய்

எங்கும் நிறைபொருளாம் என்றனிறையே—அரசி
எண்ணம் அறிந்தே குறி நன்றியம் பிடுவாய்

ஏழை உள் ளத்திருந்தே என்றன் இறையே—குறி
இன்பமாகச் சொல்ல வேண்டும் என்றனிறையே

இத்தனை காலமாக மாதரசியே—நீதான்
எண்ணில்ஜென் மம்எடுத்தாய் மாதரசியே

அத்தனை ஜென்மங்களிலும் மாதரசியே—உன்றன்
அன்பர்உன் னோடிருந்தார் மாதரசியே

அவரை இது வரையில் மாதரசியே—நீதான்
அறிந்து மகிழவில்லை மாதரசியே

அவரை யடைய எண்ணி மாதரசியே—நீயும்
அனுதினம் வாடுகின்றாய் மாதரசியே

வந்தணைந்தின் பருள்வாரோ என்றுநிதம்—எண்ணி
வாடி வருந்துகின்றாய் மாதரசியே

உன்பிழைகள் எண்ணியவர் முனிந்துளரோ—என்றே
உன்னி யுன்னி யேங்குகின்றாய் மாதரசியே

உண்ணஉறங்க விரும்பா தவர்வரவை—நாடி
உள்ளக் கவலை கொண்டாய் மாதரசியே

உள்ளம் கவர்ந்த அவர் வராமையினால்—அழுதாய்
உயிரும் விடத்துணிந்தாய் மாதரசியே

நாதர் வரவுபற்றி நல்ல உரைகள்—நானும்
நவிலுவ னோஎன்றெண்ணி எனை யழைத்தாய்

காணும் பொருள்களெல்லாம் அவர் உருவே—கண்ணால்
காணவொண் ணாப்பொருளும் அவர் உருவே

அகமும் புறமும் அவர் நிரம்பியுள்ளார்—இன்னும்
அகப்புறம் புறப்புற மாகவும் உள்ளார்

உன்னுடலும் உன்பொருளும் உன்னுயிருமாய்—உன்றன்
உட்கருவி கரணமு மாய் அவர் உள்ளார்

எங்கும் அவர் நிறைந்துள்ளார் ஆதலினுல்—அவர்
இல்லாத இடம் இல்லை மாதரசியே

இத்தனையும் வாசித்துள்ளாய் மாதரசியே—நிட்டை
இருந்தும் பழகு கின்ருய் மாதரசியே

அனுபவத் தால்உளமும் பழுக்கவில்லை—அதனுல்
ஐயமுற்று வாடு கின்ருய் மாதரசியே

அகில உலகும் படைத் தளித்தழித்தே—அருள்செய்
அவரேநின் நாயகராம் மாதரசியே

அருளின் வடிவு கொண்டு மாதரசியே—உன்னை
அன்பால் மணந்து கொண்டார் மாதரசியே

விரதம் இருந்து நீயுள் வருந்துகையில்—உன்பால்
விருப்பொடு வந்தணைத்தின் பளித்தும் உள்ளார்

மீண்டும் அவர் வரவை நாடி மனம்—நொந்தே
வேண்டி வருந்து கின்ருய் மாதரசியே

கருணை வடிவுடையார் மாதரசியே—உன்னைக்
கைவிட மாட்டார் அம்மா மாதரசியே

உன்பிழைக ளைக்கருதி மாதரசியே—உன்னை
ஒதுக்கியும் தள்ள மாட்டார் மாதரசியே

பொறுமை நிறை புனிதர் மாதரசியே—உன்றன்
புன்மையெல் லாம் பொறுப்பார் மாதரசியே

சற்றும் கலங்க வேண்டாம் மாதரசியே—உன்பால்
சார்ந்து சுகம் தருவார் மாதரசியே

பூரணஇன் பம் தருவார் மாதரசியே—சற்றே
பொறுமை யுடன் இருப்பாய் மாதரசியே

வாக்கு மனம் செய்கை யெல்லாம் மாதரசியே—அவர்க்
காக்கி நின்ருல் வந்தருள்வார் மாதரசியே

காதல் அறிந்து விரைவில் இங்குவருவார்—இனியும்
கண்கலங்க வையார் அம்மா மாதரசியே

இருடி நகர் வதிவார் எங்கும் இருப்பார்—அவர்
இனிவிரைவில் வந்திடுவார் மாதரசியே
விரைவினில் வந்தருள்வார் மாதரசியே—நீதான்
விரும்பும் சுகம் தருவார் மாதரசியே

சந்தோஷ மாய் இருப்பாய் மாதரசியே—உன்றன்
தலைவர் இன்பம் தருவார் மாதரசியே

இனிதவர் பேரருளால் மாதரசியே—அவரை
எங்கும்கண் டின்புறுவாய் மாதரசியே

நிரந்தர மான இன்பம் மாதரசியே—அவரால்
நீ அடைந்தே திகழ்வாய் மாதரசியே

இந்த விதம் குறிகள் தோன்றுதம்மா—என்றன்
இறை அருளால் உரைத்தேன் மாதரசியே

விழைந்த குறிகள் சொன்னாய் குறமகளே—இந்த
வெகுமதி பெற்றுச் செல்வாய் குறமகளே

மாதரசி தந்தவெகு மதிப்பொருளைக்—குற
மகள்பெற்றுக் கொண்டு சென்றாள் மகிழ்வுடனே.

## 41. பொருள் அருள் வள்ளல்

அருளின்உருவம்கொண்டு,தெருளளித் தாளவந்தான்
பொருளருள் வள்ளலடி—சூழும்—இருள்தவிர் வண்ணனடி

பொய்வழி நாடும் எற்கும்,உய்வழிகாட்ட வந்தான்
சைவக் குரவனடி—மேலாம்—தெய்வத்தலைவனடி

ஏமன்விழ உதைத்துக் காமன் உரு ஒழித்தான்
சோமனைக் கொண்டானடி—புவிமேல்—மாமறை விண்டானடி

ஆலம் அமுதெனச்செய்,சீலம் மிகவுடையான்
மூலம் மொழிந்தானடி—மூன்று—காலம் கடந்தானடி

ஊன உடம்புருக, வானமுதம் பொழியும்
ஞான உருவனடி—துரிய—மோன முனிவனடி

நாமம் நவில்பவர்க்குச், சேமம் மிகப்புரிவான்
கோமள ரூபனடி—சிவந்த—தாமரைப் பாதனடி

மெள்ள அருகழைத்தென்,உள்ளங்குடி யமர்ந்தான்
கள்ளம் தவிர்ப்பானடி—ஞான—வெள்ளம் நிறைப்பானடி

பொன்புரை மேனிகொண்டுள், அன்பை வளர்த்தருள்வான்
துன்பம் தவிர்ப்பானடி—உண்மை—இன்பம் விளைப்பானடி
கன்றைக்காக் கும்பசுப்போல், நன்றெனைப் பேணுகின்றான்
என்றும் இருப்போனடி—சட்டம்—ஒன்றை யுரைப்போனடி
செல்வம் மிகக்கொடுத்துப்,பல்வளமும் கொழிப்பான்
வல்வினை தீர்ப்பானடி—எனையும்—நல்வழி சேர்ப்பானடி
பெற்றதாய் தந்தைகுரு,சுற்றம்எனத் திகழ்வான்
குற்றம் பொறுப்பானடி—இரண்டு—பற்றும் அறுப்பானடி
உன்ன உரைக்கவொண்ணாச், சொன்னமெனப் பொலிவான்
நன்னல மீவானடி—உலக—மன்னனுமாவானடி
வேத நுட்பம் அனைத்தும், பேதமறத் திரட்டி
நூதனச் சட்டம் தந்தான்—எளிய—சாதனம் தந்தானடி
ஆரும் அறிவரியான், சீரும் சிறப்பும் மிக்கான்
பாரினில் வந்தானடி—கருணை—மாரி பொழிந்தானடி
ஆரணம் ஆகமத்தின், காரணமாக வுள்ள
வாரண நாதன் அருள்—நமையும்—பூரணம் ஆக்குமடி
அருவ நிலையில் உள்ளான், உருவம் பலவும் கொள்வான்
திருவும் தொழிலு மாவான்—உலகின்—குருவென உள்ளானடி
நாடும் அடியரொடும், கூடும் குணமுடையான்
பாடும் இசைக் குவந்தே—நடனம்—ஆடும் அழகனடி
வருகவென அழைத்துள், ளுருகு மெய்யன்பர் நிதம்
பருகும் அமுத மாவான்—கருணை—பெருகும் ப்ரவாகனடி
கன்னிப் பருவத் தென்முன், மன்னி மணந்து கொண்ட
பொன்னின் உருவனடி—எழிலால்—மின்னும் ஒளியனடி
என்னை மணந்த கொண்கன்—இன்னும் வராத தேனோ
முன்னர் அழைத்து வந்தால்—சகியே—என்னுயிர் தங்குமடி
பத்தி புரியும் உயர், சத்தி யில்லேன் எனினும்
சித்தி கொடுத் தழைத்துச்—சிறந்த—முத்திகொடுப்பானடி
மும்மை மலம் அழியச், செம்மை புரிய வல்லான்
இம்மை மறுமை நலம்—வழங்கி—நம்மையும் காப்பானடி
யாவும் புரி வல்லபம், மேவ அருள் புரிவான்
தேவ சகாய னடி—உலக—ஜீவர்கள் நேயனடி
காயம் பொருள் உயிரும், நேயமொடே யளித்தால்
தூய பரமசுகம்—எவர்க்கும்—ஈயும் இறைவனடி

## 42. வரவெதிர் நோக்கல்

கல்வியெனும் கடல் அருளாற் கடந்த அருட் கலைஞர்
கணக் கனைத்தும் இணக்கமுறக் கண்டஅருட் கணக்கர்
செல்வமெலா மாகிநலம் செய்யும்அருட் செல்வர்
செய்தொழில்எல் லாமாகித் திகழ்ந்திடும் என் தேவர்
பல்வளமு மாய்எங்கும் படரும் அருட் பண்பர்
பலஉலகாய்ப் பல உயிராய்ப் பரவும் இயல் புடையர்
வல்வினைநோய் தவிர்பெரியர் வளர் இருடிப்பட்டி
வாழ்கணவர் வரவையெதிர் பார்த்துள்ளேன் தோழி. 1

அருளுடையார் பலர் போற்ற அமர்நதஅரு ளாளர்
அண்டநிரை பலகோடி யுடையபொரு ளாளர்
இருளிரியச் சுடர்விரிக்கும் இன்பவொளி யாளர்
இனியமனத் தவரையெலாம் ஈர்க்கும் ஒலி யாளர்
பொருளனைத்தும் விளக்கி யருள் புனித நடை யாளர்
போற்றுநருக் கெப்பொருளும் நல்கு கொடை யாளர்
மருள்விலக என்மனத்தும் புகுந்தமண வாளர்
மன்னிருடிப் பட்டியழ காளர்காண் தோழி. 2

அன்பெனும் நற்றிருவுருவம் கொண்ட அருட் செல்வர்
ஆரணமாய் ஆகமமாய் அமையும் உயர் பொருளர்
பொன்புரைநன் மனத்தர்தமை யீர்த்தருள் செய் புனிதர்
போதாந்த நாதாந்தம் புகட்டிடும் ஆசிரியர்
என்புமுளே கரைந்துருகச் செய்தருளும் செயலர்
இதயமிசை எழுந்தருளி யின்னருள்செய் யினியர்
இன்பமெலாம் மெய்யடியார்க் கீந்தருள்பே ரரசர்
இருடியர்பட் டிப்பதிவாழ் என் கணவர் தோழி. 3

ஏகநெறி கண்டுலகுக் கீந்தருள்செய் குரவர்
எப்பொழுதும் எவ்விடத்தும் எனைப்பிரியாத் துணைவர்
யோகநெறி ஞானநெறி ரகசியமெல் லாமும்
ஒருகணத்துள் உத்தமருள் உணர்த்திடுபே ரறிஞர்
போகமெலாம் எவ்வுயிர்க்கும் புணர்த்தியருள் தலைவர்
புண்ணியம்செய் புண்ணியமாய்ப் புவியில் வரும் புலவர்
ஆகமிதைக் கோயிலெனக் கொண்டுளமர் அழகர்
அருளிருடிப் பட்டியமர் அற்புதர் என் தோழி. 4

ஊனமெலாம் நீக்கியுயர் உண்மையுணர்த் தொருவர்
ஒப்புயர்வில் மெய்ப்பொருளாய் உள்ளொளிர் பேரொளியர்
தானமுடன் தவம்புரிவோர் தம்முளமர் தலைவர்
சாந்தியெனும் திருவமுதுட் சமைத்தூட்டும் சமர்த்தர்
ஞானவுணர் வூட்டியருள் நல்குகலைச் செல்வர்
நாமமெலாம் உருவமெலாம் பூண்டொளிர்பே ரழகர்
மோனநிலை காட்டியுயர் முத்தியருள் செயலர்
முழுவளமார் இருடிநகர் முதல்வர்காண் தோழி. 5

ஆரியரெல் லாம்பரவ அமர்வுறுமெய்த் தலைவர்
அழகாளர் புகழாளர் அருளாளர் பெரியர்
சீரியரெல் லாம்வருகென் றீர்த்தருள்செய் செயலர்
செம்மையெலாம் நல்குமுயர் சட்டம் அருள் குரவர்
சூரியர் பல்கோடியெனும் ஜோதி யொளி யுடையர்
தூய்மையுடன் நேர்மையெனத் தோன்றுமுயர் நடையர்
கோரியநல் வரமனைத்தும் இனிதுதவும் கொடையர்
குதுகலமார் இருடிநகர்க் கொண்கர் காண் தோழி. 6

தேவரெலாம் முனிவரெலாம் போற்றுபுகழாளர்
சிறுமையெலாம் தவிர்த்துநலம் செய்யும் அருளாளர்
மூவர்தொழும் பூரணனை வைகைநதிக் கரையில்
முழுமகிழ்வோ டணைந்தருளாய்ச் சமைந்த திருவாளர்
நாவலரெல்லாம் பரவும் ஞானவுரு வாளர்
நன்றெனக்கும் மணமாலை சூட்டும் மணவாளர்
காவலரா யிருந்தெனையும் காக்குமிய லாளர்
கவின்மிகுநல் லிருடிநகர்க் கர்த்தர் காண் தோழி. 7

குற்றமெலாம் குணமெனவே கொண்டருளென் கொழுநர்
குவலயமெல் லாம்பரவக் கோயில்கொளும் தலைவர்
பற்றறவாழ் பண்புடையார் உள்ளமமர் பரமர்
பழமறையாய்த் திருமுறையாய்ப் பரவிடுபே ரிசையர்
நற்றவமாய்த் தவப்பயனாய் நண்ணிடுமின் னியலர்
நானெனதென் பவையறவே ஞானமருள் குரவர்
அற்றவர்கட் கருநிதியம் போலொளிர்பே ரரசர்
அழகிருடிப் பட்டியமர் அழகியர்காண் தோழி. 8

அன்னமெனப் பானமென அமைந்தடியார் தங்கள்
அரும்பசிதா கம்தவிர்க்கும் அற்புதப்பொற் புடையர்
சொன்னமென மணிகளெனத் தோன்றுமொளி யாளர்
தூநீறு தீர்த்தத்தால் பிணிகள் தவிர் பெரியர்
நன்னலமெல் லாம்வழங்கும் ஞானநெறி யொன்றை
ஞாலமிசை சட்டமென நல்குகொடை யாளர்
பன்னருமெய்ப் போகம் எனக் கூட்டும்உயிர்த் தோழர்
பத்தர்கள் சூழ் இருடிநகர்ப் பார்த்திபர்காண் தோழி. 9

உள்ளுணர்வுக் குள்ளுணர்வாய் ஒளிரும்உயிர்த் துணைவர்
ஒப்புயர்வில் பரபோகம் ஊட்டிடும்என் கணவர்
தெள்ளுதமிழ்த் திருமொழியால் செம்மைமிகும் பாடல்
செப்பியுல குயிரையெலாம் சேர்த்தீர்க்கும் செயலர்
வள்ளுவர் நூல் தேவாரம் மணிமொழியாதி யெலாம்
வடித்தெடுத்த செந்நெறியை வழங்கும் அருட்குரவர்
கொள்ளுகஎன் றருளமுதம் கொடுத்தருள் என்கொழுநர்
குலவுவளம் செறியிருடிப் பதியினர்காண் தோழி. 10

ஏதமெலாம் தீர்த்தருள்செய் இனியமண வாளர்
என்னகம்நற் கோயிலென ஏற்றகுண சீலர்
பாதமிதைப் பற்றுகெனப் பரிவொடருள் நேயர்
பத்தருடன் சித்தர்பலர் பரவவொளிர் தூயர்
நாதமெலாம் கூடுமிடம் நடமிடுசெம் பாதர்
ஞானவரம் பெனமிளிரும் மோனவடி வாளர்
பூதமெலா மாகிஉயிர்த் தொகையெனவாழ் போதர்
பொன்னிருடிப் பட்டியமர் பூரணர்காண் தோழி. 11

காலமெலாம் கடந்திலகும் காரணராம் இறைவர்
ககனம்கால் அனல்தண்ணீர் காசினியாம் உருவர்
ஞாலமெலாம் திருந்திடநன் னெறியருள் நாயகனுர்
நல்லவர்எண் ணியதனைத்தும் நல்கிடுபூ ரணனுர்
கோலமெலாம் கொண்டருளும் கொற்றவனுர் என்றன்
குறையனைத்தும் நீக்கி உயர் நிறையருள் கோமகனுர்
சீலமெலாம் செறிஇருடிப் பட்டியமர் செல்வர்
திருமுன்விரைந் தேகியழைத் திடுவாய் என் தோழி. 12

## 43. உருகவைப்பார்

உருகவைப்பார் உருகவைப்பார் உருகவைப்பார்—அவர்
உருகவைக்கும் திறத்தை உன்ன வொண்ணுமோ
அருகதை இவ்வேழைக்கணு வேனுமிலே—எனினும்
அவரெனை அசட்டைசெய் தெள்ளிட மாட்டார்
பெருகு பல்கோடிபாவம் செய்துள்ளேன்என—அவர்பால்
பேதையேன் சொல்லிடினும் எள்ளிடமாட்டார்
அருகுற்றுன் பாவங்கள்எல் லாமுமன்னிப்பேன்—இனி
அருளியல் பெய்துமென அன்புடன் சொல்வார்
ஒருகுறை யேனுமிலா துன்றனைச் செய்வேன்—இனி
உண்மை யன்பின் மயமாய் ஆகுக என்பார்
பருகுபால் பாகெனவே என்னை மாற்றுவார்—தன்னைப்
பருகவைத் தென்னையவர் பருகிடுவார்
சருகு பக்ஷணம் அருந்தித் தவம் புரியும்—பலரும்
சாதித்தற் கரியசெயல் சாதிக்கச் செய்வார்
சொருகிடுவார் தன்னையென் உள்ளத்துள்ளே—எனைச்
சூக்குமமாய் தன்னுளேற்றுத் தூய்மை புரிவார்
குருகரு ணையிதெனக் கூறியருள்வார்—ஒன்ருய்க்
கூடி யிணைந்துபேரின் பூட்டி யருள்வார்
வருக வருகஎன மாண்பொ டழைப்பார்—அவர்
வாய்ச்சொ லினிமை யுணர்ந் தார்விரும்புவார்
பெருகுமன் போடவர்பால் யார் அணுகினும்—அருட்
பெருங் கருணை புரிந்து பேணியருள்வார்.

## 44. அருள்திறம் போற்றல்

காணுறு போலோடும் கள்ளமனத்தையும்
தேனுக்க வல்லாரடி—அவர்—தேனுக்க வல்லாரடி
ஊன்நாடி ஊண்நாடி உலகத் தலையாரை
வானுளவைப்பாரடி—அவர்—வானுளவைப்பாரடி
யானுர் எனக்குத் தலைவனுர் என்றுன்னின்
தானுய்வந் தாள்வாரடி—அவர்—தானுய்வந் தாள்வாரடி
வானுர் கதிர்மதி வன்னிவிண் மீனெல்லாம்
தானு யொளிர்வாரடி—அவர்—தானுயொளிர்வாரடி

மோனமுத தம்பெற நாடி முயன்றிடின்
தானயருள் வாரடி—அவர் தானயருள்வாரடி
ஞானார்த்த மெல்லாமும் நன்றுள் நவில் எனில்
தானயுரைப்பாரடி—அவர்—தானயுரைப்பாரடி
கானமுதத்திற் கலந்துள்ளுருகிடின்
தேனாய் இனிப்பாரடி—அவர்—தேனாய் இருப்பாரடி
ஆன அருட்செல்வம் நாடி யுழைத்திடின்
தானயருள்வாரடி—அவர்—தானயருள்வாரடி
மானபிமானம் அனைத்தும் விட்டேத்திடின்
தானயருள்வாரடி—அவர்—தானயருள்வாரடி
நான்நான் என்றேயெழும் ஆணவம் மாய்ந்திடின்
தானயருள்வாரடி—அவர்—தானயருள்வாரடி
கோனகி வந்து குறைகள் தவிர்த்தின்பம்
தானயருள்வாரடி—அவர்—தானயருள்வாரடி

## 45. இது நல்ல சமயம்

(பல்லவி)

இதுநல்ல சமயம் ஐயா—அருள் செய்ய
இதுநல்ல சமயம் ஐயா.

(அனுபல்லவி)

அது இது என எங்கும் அலைந்து திரிந்த மனம்
இது நல்ல வழி யென்றுன் இணையடி நாடிற்று (இது)

(சரணம்)

புதுப் புதுக் காட்சிகள் பொடிவுடன் தோன்றின
மது மலர்ச் சோலைகள் மணம் மிகப் பரப்பின
பொது நலச் செயல்களிப் புவிமிசை யோங்கின
விதுமண்டலத்தின் நடுவிளங்கித் தண்ணருள் செய்வாய் (இது)

காலமூன்றும் கடந்த கருணை வடிவினனே
சீலமிகுந்த திருவருட்சட்ட மீந்தவனே
தூலசூக்ம காரணச் சுடரொளியாய்த் துலங்கும்
மூலமே அடிமையின் மும்மலம் கொய்தருள்வாய் (இது)

செந்தழல் புரையருட் டிருமேனி கொண்டோனே
பந்தபா சங்களெல்லாம் பற்பமாகச் செய்வோனே
சந்தமார் தமிழ்த்தொடை சாத்த அருள் செய்வோனே
கந்தமலர் மணக்கும் கழல்நிழல் தந்தருள் வாய் (இது)

ஆகம் தளியெனக் கொண்டருள் நடம் புரிவோனே
ஏகநெறிக்கெனையும் ஈர்த்தின்பம் அருள்வோனே
போகம் பலபுணர்த்திப் புனிதம் பெறச்செய் வோனே
யோகம் ஞான நுட்பங்கள் உணர்த்தி முத்தி யருள்வாய் (இது)

எங்கும் நின் புகழ்கூறி இன்பம் பெற அருள்வாய்
சங்கையெல்லாம் தவிர்க்கும்சட்டம் பரப்பச் செவ்வாய்
துங்க நெறிகொள்யாரும் தூய்மைபெற்றுயச் செவ்வாய்
மங்கள வாழ்விங்காற்றி மலரடியெய்தச் செய்வாய் (இது)

தஞ்சமென் போரையாளும் தகவு மிகவுள்ளோனே
சஞ்சலம் யாவுந்தீர்த்துத் தண்ணருள் புரிவோனே
மஞ்சனம் உண்மையன்பென் றேற்றுமகிழும் கோனே
கஞ்ச மலர்ச்சரணம் காட்டிக்கருணை செய்வாய் (இது)

ஒப்பற்ற மந்திரமாய் உட்டுய்மை தந்தருள்வாய்
செப்புற்ற நலம்யாவும் செகமிசை நல்கிடுவாய்
கற்புற்ற நல்லோர்காணும் கவினுருக் காட்டிடுவாய்
பொற்புற்ற மெய்யடியா ளுகிப் பொலியச் செய்வாய். (இது)

## 46. கண்டுய்ய அருள்வாய்

(பல்லவி)

திருவருள் வடிவாம் நின்திருமேனி கண்டுய்யும்
திறமெனக் கருள் வாயோ

(அனுபல்லவி)

கருவுள்ளினியும் புகாக் கருணை நெறி யளித்த
குருபெரு மானேநின் குன்றுப்புகழ் பாடித் (திரு)

(சரணம்)

அருவும் உருவுமாகி அருவுரு வம்பலவாய்
திருவும் கலையுமாகிச் சீரும் சிறப்புமாகி
மருவும் மலரும் உள்ளார் மணமும் மதுவுமாகி
குருவும் குருமொழியும் நெறியும் பயனுமாகித் (திரு)

கருவம் கொளாத வண்ணம் கண்டித்துப் பேணரசாய்
பருவம் அறிந்தன் பரைப் பாலிக்கும் பண்புருவாய்
இருவினை மும்மலங்கள் எரிக்கும் கனலுருவாய்
பொருவில் முத்தியருளிப் பொற்றுள் சேர்த்தின்ப மூட்டும் (திரு)

ஒருவழியும் அறியா துலகில் உழன்ற என்னை
திருவருட் சட்டநெறிக் கீர்த்துத் தெருளளித்தாய்
கிருபை சுரந்தெனக்கும் கிளரின் பொளியருள்வாய்
சொருபசுகம் வழங்கிச் சோதி மயமாய்ச் செய்யும் (திரு)

அருகில் வருகவென்றே அன்போடணைத் தருள்வாய்
பெருகும் நலங்களெல்லாம் தந்துபேணி யருள்வாய்
உருகும் மனத்தைத் தந்துள் ஒளியாய் விளங்கிடுவாய்
பருகும் அமுதே என்னைப் பருகிநின்மய மாக்கும் (திரு)

## 47. அன்னே என்னும்

[செவிலி தோழிக்கு உரைத்தல்].

எத்தனை நன்மொழி இவ்வுலகில் உண்டோ
அத்தனைக்கும் முதல் அன்னே என்னும்
அற்புதச் சிற்சுடர் அன்னே என்னும்

சத்தும் சச்சித்தும் சதானந்த போகமும்
நித்தியமும் அவர் அன்னே என்னும்
நிட்கள நின்மலர் அன்னே என்னும்

எப்பொருட் குள்ளும் நிலைத்து விளங்கிடும்
மெய்ப்பொரு ளாமவர் அன்னே யென்னும்
வேத மொழியினர் அன்னே என்னும்

கைப்பொரு ளும்பல கல்வியும் செல்வத்தின்
வைப்புமென் றுனவர் அன்னே என்னும்
வாழ்வருள் தூயவர் அன்னே என்னும்

நல்லவர்க் கெய்தும் வருத்தம் தவிர்த்தருள்
நல்கிப் புரப்பவர் அன்னே யென்னும்
ஞானம் அளிப்பவர் அன்னே யென்னும்

அல்லல் அனைத்தும் அகற்றி யடியருள்
அன்பை விளைப்பவர் அன்னே யென்னும்
ஆனந்த மீபவர் அன்னே என்னும்

வேதாந்தம் சித்தாந்தம் நாதாந்த மாகி
விளங்கும் ஒருவராம் அன்னே என்னும்
வித்தகத் தத்துவர் அன்னே என்னும்

போதாந்தம் யோகாந்தம் போற்றும் கலாந்தமாம்
பூரணப் பொற்பினர் அன்னே என்னும்
பொன்னொளி மேனியர் அன்னே என்னும்

அக்கரம் ஐம்பத்தொன் றாகியோ ராறெனும்
சக்கர மானவர் அன்னே என்னும்
சக்தி மிகுந்தவர் அன்னே என்னும்

எக்கணத் தும்தமி யேன்மனத் தேயொளிர்
தக்க தகவினர் அன்னே என்னும்
சாந்த வடிவினர் அன்னே என்னும்

உட்கர ணங்கட் கொளிமிக வூட்டிடும்
சட்குண சம்பன்னர் அன்னே என்னும்
சற்ஜன பாலனர் அன்னே என்னும்

மட்கலம் போன்ற உடம்பினைப் பொன்னென
மாற்றிட வல்லராம் அன்னே என்னும்
மாண்பு மிகுந்தவர் அன்னே என்னும்

சொற்கொண் டளப்பரும் ஜோதி வடிவினர்
பொற்குன் றனையவர் அன்னே யென்னும்
பொய்தவிர் மெய் வண்ணர் அன்னே யென்னும்

நற்கொண்ட லாகி அருட் சட்ட மாரிபெய்
துட்கொண்டுயச் செய்வார் அன்னே யென்னும்
ஓமக்கரத்தினர் அன்னே யென்னும்

உம்பர் முனிவரர் உற்று வழுத்திடும்
செம்பொரு ளாமவர் அன்னே யென்னும்
செம்மை யருள்பவர் அன்னே யென்னும்

அம்பரம் வாயு அனல்புனல் மண்ணெனும்
ஐம் பொரு ளாமவர் அன்னே என்னும்
அகந்திகழ் நாயகர் அன்னே என்னும்.

## 48. தலைவன் தாள்தலைப்பட்டாள்

[தலைவி நிலை தாய் கூறல்]

காதிலவன் திருநாமம் கழறக் கேட்டாள்
கர்த்தனருட் டிருமேனி வண்ணம் கேட்டாள்
நாதனமர்ந் தருளிருடி நகரம் கேட்டாள்
நன்மனத்தை அவற்களித்துப் பிச்சியானாள்
தாதையனை தமரையெலாம் உடனே நீத்தாள்
தகர்த்தாள்இத் தரையிலுளார் முறையை யெல்லாம்
மாதவன்தன் னைமறந்தாள் தன்பேர் கெட்டாள்
மன்னியதன் தலைவன்தாள் தலைப்பட்டாளே. 1

ஒருகாதில் திருநாமம் ஓதக்கேட்டாள்
உடையவன்றன் திருமேனி வண்ணம் கேட்டாள்
பெருகாதல் கொண்டவனூர்ப் பெயரைக் கேட்டாள்
பிரியமெலாம் அவற்காக்கிப் பிச்சியானாள்
அருகான அனைதந்தை தமரை நீத்தாள்
அவனியுளார் ஆசாரம் அனைத்தும் விட்டாள்
உருகாநின் றுடல்மறந்தாள் பெயரும் கெட்டாள்
ஒண்கணவன் ஒளிமலர்த்தாள் தலைப்பட்டாளே. 2

செவியிலவன் திருநாமம் செப்பக் கேட்டாள்
தீர்த்தனருட் டிருமேனி வண்ணம் கேட்டாள்
புவியிலவன் அமர்இருடி நகரம் கேட்டாள்
புந்தியவன் றனக்காக்கிப் பிச்சியானாள்
நவிலுமனை தந்தைதமர் நட்பை நீத்தாள்
ஞாலமுளார் நடைமுறைகள் பலவும் விட்டாள்
தவிநிலையில் தனைமறந்தாள் தன்பேர் கெட்டாள்
தன்தலைவன் தண்மலர்த்தாள் தலைப்பட்டாளே. 3

திருநாமம் செவியாரச் செப்பக் கேட்டாள்
தேவனருட் டிருமேனி வண்ணம் கேட்டாள்
பெருஞாலத் தவன்இருடி நகரம் கேட்டாள்
பேர்வண்ணம் ஊர்எண்ணிப் பிச்சி யானாள்
கருநோற்ற தாய்தந்தை தமரை நீத்தாள்
காசினியார் நடைமுறைகள் அனைத்தும் விட்டாள்
குருநாதா எனல்மறந்தாள் குழைந்து நின்றாள்
குமரியவள் கொழுநன்தாள் தலைப்பட்டாளே. 4

ஓம்குருநாதா எனும்சொல் ஓதக்கேட்டாள்
உடையவன்தண் ணருள்மேனிவண்ணம் கேட்டாள்
ஈங்கவனுற் றமர்இருடி நகரம் கேட்டாள்
இதயம்அவற் கேயாக்கிப்பிச்சி யானாள்
பாங்கியர்தாய் தந்தைதமர் நட்பை நீத்தாள்
பாருலகோர் நடைமுறைகள் பலவும் விட்டாள்
ஆங்கவள் தன்னை மறந்தாள் தன்பேர் கெட்டாள்
ஆருயிர்நா யகன்மலர்த்தாள் தலைப்பட் டாளே. 5

குருபரன்றன் திருநாமம் கூறக்கேட்டாள்
குழகனவன் திருமேனி வண்ணம் கேட்டாள்
கிருபையுடன் அமர்இருடி நகரம் கேட்டாள்
கிளர் இதயம் அவற்காக்கிப் பிச்சியானாள்
கருபலநாள் தாங்கனைதந் தையையும் நீத்தாள்
கருதுலகோர் ஆசாரம் எல்லாம் விட்டாள்
சொருபமுடன் தனைமறந்தாள் தன்பேர் கெட்டாள்
தோகையவள் தலைவன்தாள் தலைப்பட்டாளே. 6

நாயகன்றன் திருநாமம் நவிலக் கேட்டாள்
நம்பியவன் இருந்தருளும் வண்ணம் கேட்டாள்
மேயபதி இருடிநகர் என்னக் கேட்டாள்
மெல்லிதயம் அவற்காக்கிப் பிச்சியானாள்
தாயையும்தந் தையையும்உற்றா ரையுமே நீத்தாள்
தரணியுளோர் நடைமுறைகள் யாவும் விட்டாள்
தூயவளாய்த் தனைமறந்தாள் தன்பேர் கெட்டாள்
துணைவன்தாள் மலரிலவள் தோய்ந்திட் டாளே. 7

உடையவன்றன் திருநாமம் ஓதக் கேட்டாள்
ஒப்பிலவன் திருமேனி வண்ணம் கேட்டாள்
கொடையுடையான் அமர்இருடி நகர்பேர் கேட்டாள்
குழைந்துகுழைந் தவனுக்கேபிச்சி யானாள்
தடையெனத்தாய் தந்தையுற வனைத்தும் விட்டாள்
தகர்த்தெறிந்தாள் தாரணியோர்ஆசா ரத்தை
நடையிழந்தாள் தனைமறந்தாள் நாமம் கெட்டாள்
நங்கையவள் நாதன்தாள் தலைப்பட் டாளே. 8

பதிநாமம் ஒருகாதில் பகரக் கேட்டாள்
பரமன்அவன் இருந்தருளும் பான்மை கேட்டாள்
துதிநாளும் சேர் இருடி நகர்பேர் கேட்டாள்
தூமனத்தை யர்ப்பணித்துப் பிச்சி யானுள்
அதிபிரிய முடைதாய்தந் தையரை நீத்தாள்
அகலிடத்தார் ஆசாரம் அனைத்தும் விட்டாள்
மதியிழந்தாள் தனைமறந்தாள் தன்பேர் கெட்டாள்
மங்கையவள் தலைவனருள் வலைப்பட்டாளே. 9

தலைவன்அவன் திருநாமம் சாற்றக் கேட்டாள்
தகவொடவன் இருந்தருளும் தன்மை கேட்டாள்
அலைகடல்சூழ் புவியில்அவன் அமர்ஊர் கேட்டாள்
அகம் அவற்கே அர்ப்பணித்துப் பிச்சி யானுள்
நிலையுணர்ந்த அன்னைதந்தை உறவை நீத்தாள்
நீளுலகோர் நடைமுறைகள் யாவும் விட்டாள்
கலைமறந்தாள் தனையிழந்தாள் தன்பேர் கெட்டாள்
காரிகையாள் கணவன்தாள் தலைப்பட் டாளே. 10

## 49. பேச வாரீர்

பேசவாரீர்—அன்பாய்ப்—பேசவாரீர்
பெட்புமிக்க சற்குருவே பேசவாரீர்

ஆசையெல்லாம் தீர்க்க வல்லீர் பேசவாரீர்—உண்மை
அன்பருளிக் காக்க வல்லீர் பேசவாரீர்
பாச பந்தம்நீக்க வல்லீர் பேச வாரீர்—தூய
பக்திநல்கி ஊக்க வல்லீர் பேசவாரீர் (பேச)

உம்முடன் பேச விழைந்தேன் பேசவாரீர்—உம்பால்
உண்மையுடன் பேசுகின்றேன் பேசவாரீர்
செம்மையுறப் பேசவந்தேன் பேசவாரீர்—பேசிச்
சித்தசுத்தி யெய்த நின்றேன் பேசவாரீர் (பேச)

என்குறைகள் நீரறிவீர் பேசவாரீர்—எனக்
கேற்றம் சொல்லித் தேற்ற வல்லீர்பேசவாரீர்
என்கவலை போக்க வல்லீர் பேசவாரீர்—பேச்சில்
ஈடுநுமக் கேவ ருள்ளார் பேசவாரீர். (பேச)

கற்கனியப் பேச வல்லீர் பேசவாரீர்—ஒன்றும்
கற்றறியா என்னுடனும் பேசவாரீர்
கற்கண்டு போலே இனிக்கப் பேசவாரீர்—அருளால்
கல்விகரை கண்டவரே பேசவாரீர் (பேச)

என்னிடத்தும் அன்பு கொண்டுபேசவாரீர்—என்போல்
ஏழையெங்கு காணவல்லீர் பேசவாரீர்
மன்னிரக்க மோடென்னிடம் பேசவாரீர்—மிக்க
வாஞ்சை கொண்டு வந்தெனுடன் பேசவாரீர் (பேச)

சொல்லில் இன்பம் சொட்டச்சொட்டப் பேசவாரீர்—ஞானச்
சொல்ல தொன்றையும் பொருத்திப் பேசவாரீர்
சொல்லிலக்க ணங்கள் வல்லீர் பேசவாரீர்—உம்வாய்ச்
சொற்சுவைக்கிங் கேங்குகின்றேன் பேசவாரீர் (பேச)

சொல்லாய்ப் பொருளாக உள்ளீர் பேசவாரீர்—என்றன்
சொற்லையும் கேட்டுச் சுவைத்துப் பேசவாரீர்
சொல்லில்அரு ளூட்டவல்லீர் பேசவாரீர்—நும்வாய்ச்
சொல்லமுத மேவிழைந்தேன் பேசவாரீர் (பேச)

தண்ணருள் வடிவம் கொண்டீர் பேசவாரீர்—என்பால்
தங்குதடையொன்றுமின்றிப் பேசவாரீர்
எண்ணமெல்லாம் கண்டி ருந்தீர் பேசவாரீர்—என்னுள்
எண்ண அலை நிற்கும் வண்ணம் பேசவாரீர் (பேச)

கொஞ்சிக்கொஞ்சியே அழகாய்பேச வாரீர்—அன்பால்
கூப்பிட்டரு கேஅமர்த்திப் பேசவாரீர்
செஞ்சொல்பல வும்தொடுத்துப் பேசவாரீர்—மேலாம்
தெய்வமணம் வீசும்வாயால் பேசவாரீர் (பேச)

ஆற்றல்மிக நல்கவல்லீர் பேசவாரீர்—அரு
ளாற்றல் மிக்க சொற்கள் சொல்லிப் பேசவாரீர்
கூற்றை வெல்லும் மார்க்கம் சொல்லிப் பேசவாரீர்—பேதை
கோரும் இன்ப வாழ்வளிக்கப் பேசவாரீர் (பேச)

தெய்வநெறி நல்கும்நல்லீர் பேசவாரீர்—உம்மைச்
சேவித்துப் பேச விழைந்தேன் பேவாரீர்
உய்வழியை நன்றுரைத்துப் பேசவாரீர்—அரு
ளூறும்திரு வாய்மணக்கப் பேசவாரீர் (பேச)

என்னைத்தொட்டுப் பேரன்புடன் பேசவாரீர்—சாரும்
இன்னல்—எல்லாம் நீங்கும்வண்ணம் பேசவாரீர்
பொன்னையொத்த மேனிகாட்டிப் பேசவாரீர்—என்னைப்
பொன்மயமாய் ஆக்கவல்லீர் பேசவாரீர் (பேச)

காத்திருந்திங் கேங்குகின்றேன் பேசவாரீர்—உண்மைக்
காதலுட னேயழைத்தேன் பேசவாரீர்
பூத்திருக்கும் சோலையுள்ளே பேசவாரீர்—நித்ய
போதமணம் வீசும் வண்ணம் பேசவாரீர் (பேச)

ஊடலின்றிக் கூடும்வண்ணம் பேசவாரீர்—என்றும்
ஒப்பிலின்பம் எய்தும் வண்ணம் பேசவாரீர்
நாடறியா வண்ணமிங்கே பேசவாரீர்—ஆன்ம
நாயகரே சற்றென்னுடன் பேசவாரீர் (பேச)

தூயகரு ணைக்கடலே பேசவாரீர்—சுயஞ்
ஜோதியென்னுள் தோன்றும் வண்ணம் பேசவாரீர்
மாயையெல்லாம் நீங்கும்வண்ணம் பேசவாரீர்—அருள்
வானமுத மாரிபெய்யப் பேசவாரீர் (பேச)

மன்மதர்பல் கோடியொத்தீர் பேசவாரீர்—ஞான
மாண்பனைத்தும் கூடும்வண்ணம் பேசவாரீர்
கன்மவினைக் கட்டறுத்துப் பேசவாரீர்—மூல
காரணரே பூரணத்தைப் பேசவாரீர் (பேச)

ஆணவமலம் தொலைப்பீர் பேசவாரீர்—அரு
ளாடல்பல செய்யவல்லீர் பேசவாரீர்
காணரிதாம் காட்சிகாட்டிப் பேசவாரீர்—மூன்று
காலமும் கடந்தநிலை பேசவாரீர் (பேச)

சித்திவல்ல பம்மிகுந்தீர் பேசவாரீர்—இஷ்ட
சித்திநல்கி யேயென்னுடன் பேசவாரீர்
சத்திமிக ஊட்டவல்லீர் பேசவாரீர்—இன்பத்
தாள்நிழலில் கூட்டவல்லீர் பேசவாரீர் (பேச)

ஜோதிநடு வீதிகாட்டிப் பேசவாரீர்—ஜன்மத்
துன்பமெல்லாம் தீரும் வண்ணம் பேசவாரீர்
ஓதியறி யாமொழியால் பேசவாரீர்—உம்மோ
டொன்றி யின்ப மெய்தும்வண்ணம் பேசவாரீர் (பேச)

வேறு துணேகண்டறியேன் பேசவாரீர்—அருள்
வேதமணம் வீசஎன்பால் பேசவாரீர்
ஆறுமுகன் பேருடையீர் பேசவாரீர்—ஊரில்
ஆருமறி யாம லிங்கே பேசவாரீர் (பேச)

அந்தரங்க சேவைதந்து பேசவாரீர்—சொல்லின்
அற்புதங்கள் காட்டிச்சற்றே பேசவாரீர்
செந்தழல்போல் மேனிகொண்டீர் பேசவாரீர்—யானும்
செந்தழலாய் மாறும்வண்ணம் பேசவாரீர் (பேச)

இன்பவடி வொன்றுடையீர் பேசவாரீர்—உண்மை
இன்பமெனக் கீயும்வண்ணம் பேசவாரீர்
என்பும்உள் கரைந்துருகப் பேசவாரீர்—அந்நாள்
ஏசு சொன்ன வாசகம்போல் பேசவாரீர் (பேச)

அழுதழுது வாடுகின்றேன் பேசவாரீர்—பர
மாத்மவொளி கூடும்வண்ணம் பேசவாரீர்
தொழுதுருகக் கற்றறியேன் பேசவாரீர்—மேலாம்
துரியநிலே கூடும்வண்ணம் பேசவாரீர் (பேச)

அன்பருக் கிரங்க வல்லீர் பேசவாரீர்—உண்மை
அன்பறியா என்னுடனும் பேசவாரீர்
ஒன்பது நிலேயுடையீர் பேசவாரீர்—நன்மை
ஒன்றுமறியா என்ைேடும் பேசவாரீர் (பேச)

நாட்டில் ஒரு பேதை யென்பால் பேசவாரீர்—தெய்வ
ஞானமணி வாய்திறந்து பேசவாரீர்
வீட்டில் இன்பம் காட்டு சொல்லால் பேசவாரீர்—பக்கம்
வேருெருவர் காணுமல் பேசவாரீர் (பேச)

செம்பவள வாய்திறந்து பேசவாரீர்—தூய
செம்பொனுெத்த வார்த்தைகளால் பேசவாரீர்
செம்பொருள் விளக்கம் தந்து பேசவாரீர்—திவ்ய
தேஜஸ்எனக் கெய்தும் வண்ணம் பேசவாரீர் (பேச)

ஊனமெலாம் வெந்தொழியப் பேசவாரீர்—உள்ளே
உண்மைவிளக் கேற்றி வைத்துப் பேசவாரீர்
மோனநிலேகூடும் வண்ணம் பேசவாரீர்—பர
முத்தியின்பம் எய்தும்வண்ணம் பேசவாரீர் (பேச)

ஏழ்வகைப் பவம்கடத்தப் பேசவாரீர்—பெண்ணும்
என்னையும் உள்ளேகரைக்கப் பேசவாரீர்
சூழ்நிலையெல் லாம்திருந்தப் பேசவாரீர்—எங்கும்
ஜோதியொளி வீசும் வண்ணம் பேசவாரீர் (பேச)

சட்டநெறி நுட்பமெல்லாம் பேசவாரீர்—ஞான
சாத்திரத்தின் உட்பொருள்கள் பேசவாரீர்
சிட்டர்பணி செய்யுமுறை பேசவாரீர்—இன்பத்
தேனருவி பாயும்வண்ணம் பேசவாரீர் (பேச)

துக்கமெலாம் தீரும்வண்ணம் பேச வாரீர்—மோன
துரியபர மார்த்தநிலை பேச வாரீர்
எக்கணத்தும் நீக்கமின்றிப் பேச வாரீர்—சீரார்
ஏழ்நிலைக்கும் மேல்நிலையைப் பேச வாரீர் (பேச)

நன்மையனைத் தும்விளையப் பேச வாரீர்—பர
நாதநிலை யையுணர்த்திப் பேச வாரீர்
பொன்மொழிக ளானவெல்லாம் பேச வாரீர்—அருள்
பொங்குமின்பம் தங்குமின்சொல் பேச வாரீர் (பேச)

நும் திருத் தளிச்சிறப்பைப் பேச வாரீர்—திரு
நோக்கருளும் செல்வவளம் பேச வாரீர்
புந்திமகிழ் வெய்தும்வண்ணம் பேச வாரீர்—நுமது
பொற்றளிப் பணிப்பெருமை பேச வாரீர் (பேச)

## 50. கூட வாரீர்

கூட வாரீர்—என் பால்—கூட வாரீர்
கொள்ளையின்பம் கூட்டவல்லீர் கூட வாரீர்

ஆடவந்த என்னுடனே கூட வாரீர்—உண்மை
அன்பறியேன் என்னினும்நீர் கூட வாரீர்
பாடவந்த என்னுடனே கூட வாரீர்—தூய
பக்தியறியேன் எனினும் கூட வாரீர் (கூட)

தேடவந்த என்னுடனே கூட வாரீர்—மனச்
செம்மையறி யேன்எனினும் கூட வாரீர்
ஊடல்கொண்ட என்னுடனும் கூட வாரீர்—என்றன்
ஊடல்தவிர்த் தின்பருளக் கூட வாரீர் (கூட)

நாலுமறை தேடவுள்ளீர் கூட வாரீர்—இந்த
நாயடிமை குற்றம் காணீர் கூட வாரீர்
சாலமயல் கொண்டுவந்தேன் கூட வாரீர்—அருள்
தன்மைமிகக் கொண்டெனுடன் கூட வாரீர் (கூட)

தேவர்முனி வோர்புகழ்வார் கூட வாரீர்—ஏழை
செய்பிழைக ளேதுமெண்ணீர் கூட வாரீர்
பாவமெல்லாம் தீர்க்கவல்லீர் கூட வாரீர்—இந்தப்
பாவைகண்ணீர் பார்த்தருளால் கூட வாரீர் (கூட)

என்றும் எங்கும் நின்ருளிர்வீர் கூடவாரீர்—இப்போ
தென்விருப்பி டேறும் வண்ணம் கூடவாரீர்
நன்றழைக்கு மாறறியேன் கூடவாரீர்—என்றன்
நாதரேயென் ஆவல்கண்டு கூடவாரீர் (கூட)

நாடிவந்து பற்றகிலேன் கூடவாரீர்—நும்சீர்
நாமம் எண்ணிவாடுகின்றேன் கூடவாரீர்
கோடிமதன் போலொளிர் வீர்கூடவாரீர்—என்றன்
குற்றம் கண்டு நின்றிடாமல் கூடவாரீர் (கூட)

ஆர்வமுட னேயழைத்தேன் கூடவாரீர்— என்பே
ராசையெல்லாம் தீரும்வண்ணம் கூடவாரீர்
மார்வமுற.வேயணைத்துக் கூடவாரீர்—என்னுள்
மர்மமுணர்ந் தேயருளால் கூடவாரீர் (கூட)

தேவையெல்லாம் தீரும்வண்ணம் கூடவாரீர்—நாவால்
செப்பரும்பே ரின்பம்நல்கிக் கூடவாரீர்
சேவையளித் தேயென்னுடன் கூடவாரீர்—இன்னும்
செப்பவுள தேதினிதே கூடவாரீர் (கூட)

சட்டநெறி தந்திங்குள்ளீர் கூடவாரீர்—அருட்
சட்டம் கற்பித்தேயென்னுடன் கூடவாரீர்
திட்டமெல்லாம் தீட்டவல்லீர் கூடவாரீர்—மனத்
திட்பமில்லா என்னுடனும் கூடவாரீர் (கூட)

பல்பிணியும் நீக்க வல்லீர் கூடவாரீர்—இந்தப்
பாவைமன நோயகற்றிக் கூடவாரீர்
வல்வினைகள் தீர்க்கவல்லீர் கூடவாரீர்—என்றன்
வாழ்வுநிலை யாகும் வண்ணம் கூடவாரீர் (கூட)

செல்வமெல்லாம் நல்கவல்லீர் கூடவாரீர்—வேறு
செல்வமொன்றும் யான்விழையேன் கூடவாரீர்
கல்விக்கட லேக்கடந்தீர் கூடவாரீர்—உள்ளே
கள்ளமில்லா தோடி வந்தேன் கூடவாரீர் (கூட)

தெய்வவழி பாடறியேன் கூடவாரீர்—நீரே
தெய்வமென எண்ணியுள்ளேன் கூடவாரீர்
உய்வழியொன் றும்அறியேன் கூடவாரீர்—கூடி
உய்யவைப்ப தும்கடனும் கூடவாரீர் (கூட)

பற்பல்வழி யும்குறியேன் கூடவாரீர்—உம்தாள்
பற்றும்வழி காட்டியன்பால் கூடவாரீர்
அற்பஎண்ணங் கள்விலகக் கூடவாரீர்—உமக்
கர்ப்பணம்சொத் தாவியுடல் கூடவாரீர் (கூட)

ஒன்றும்அறி யாதுழல்வேன் கூடவாரீர்—அருள்
ஊட்டி யின்பம் கூட்டியென்பால் கூடவாரீர்
சென்றது கருதி நொந்தேன் கூடவாரீர்—என்றன்
சிந்தைதெளி வாகும் வண்ணம் கூடவாரீர் (கூட)

எத்தனைநாள் காத்திருப்பேன் கூடவாரீர்—உமக்
கின்னும் வரத் தாமதமேன் கூடவாரீர்
முத்தர்புகழ் மூர்த்தியானீர் கூடவாரீர்—இன்ப
முத்தியெனக் கீயும்வண்ணம் கூடவாரீர் (கூட)

சங்கடமெல் லாம்தவிர்ப்பீர் கூடவாரீர்—என்றன்
சஞ்சலமெல் லாம்அகலக் கூடவாரீர்
மங்களமெல்லாம் பெருகக் கூடவாரீர்—உயர்
மவுனநிலை கூட்டியென்பால் கூடவாரீர் (கூட)

ஐம்புலனை மாய்க்கவல்லீர் கூடவாரீர்—அரு
ளற்புதங்கள் காட்டவல்லீர் கூடவாரீர்
செம்பொருளைக் கூட்டவல்லீர் கூடவாரீர்—உள்ளம்
செப்பமுறச் செய்யவல்லீர் கூடவாரீர் (கூட)

அட்டசித்தி நல்கவல்லீர் கூடவாரீர்—உம்மை
அண்டிவந்த என்னுடனும் கூடவாரீர்
சிட்டர்பலர் போற்ற வுள்ளீர் கூடவாரீர்—என்றன்
சித்தமலம் போக்கவல்லீர் கூடவாரீர் (கூட)

கட்டமெல்லாம் நீக்கவல்வீர் கூடவாரீர்—என்றன்
காதலறிந்தே என்னுடன் கூடவாரீர்
சுட்டதிரு நீறளித்துக் கூடவாரீர்—காய
சுத்தியெல்லாம் கூடும்வண்ணம் கூடவாரீர் (கூட)

வெட்டவெளி காட்டியதில் கூடவாரீர்—ஆசை
வெந்து பொடி யாகும்வண்ணம் கூடவாரீர்
பட்டணத்தைக் காட்டிவைத்துக் கூடவாரீர்—மனப்
பக்குவமெல் லாம்அளித்துக் கூடவாரீர் (கூட)

நட்டநடு நாடிகாட்டிக் கூடவாரீர்—விந்து
நட்டமின்றி யேற்றியென்பால் கூடவாரீர்
உட்டெளிவு கூட்டிவைத்துக் கூடவாரீர்—எனக்
கொப்பில்பர போகம் நல்கிக் கூடவாரீர் (கூட)

சாத்திர வாதம் தவிர்த்துக் கூடவாரீர்—உண்மைச்
சாந்தியமு தூறும்வண்ணம் கூடவாரீர்
கோத்திரச்சண்டை யகற்றிக் கூடவாரீர்—இன்பக்
கோட்டையினைக் காட்டிவைத்துட் கூட வாரீர் (கூட)

ஞானநெறி காட்டி யென்னைக் கூடவாரீர்—மோன
நாதமுடி வாயொளிர்வீர் கூடவாரீர்
பானம்சிவ போதமென்பீர் கூடவாரீர்—அருட்
பார்வை யாலென் நோய்தவிர்ப்பீர் கூடவாரீர் (கூட)

யோகமுடி வாயொளிர்வீர் கூடவாரீர்—சிவ
யோகவழி காட்டிவைத்துக் கூடவாரீர்
போகம்சிவ போகமென்பீர் கூடவாரீர்—சிவ
போகமெங்கும் மேவும்வண்ணம் கூடவாரீர் (கூட)

---

அனைத்துலகுக்கும் ஒளிகொடுக்கும் அப்பேரொளியே உன் உள்ள ஒளி யாகட்டும்!

உலக ஒலிகளைக் கேளாது, அவன் அருள் ஒலியைக் கேட்கப் பழகு.

உலக இன்பங்களை நுகராது, அவன் அருள் இன்பத்தை நுகரப் பழகு.

உலக உணவை நாடாது, அவன் அருள் உணவை நாடு.

## 51. அருள் மணம் கொண்டமை

குற்றம் எண்ணில்பல் கோடியான் செய்யினும்
சற்றும் தம்திரு வுள்ளத்திற் கொண்டிலார்
சுற்றம் யாவினும் தூயநற் சுற்றமென்
றுற்றென் னுள்ளமர்ந் தாரென் னிறைவரே. 1

ஆதி நாதன்என் ஆருயிர் நாதனென்
றோதி வந்தென துள்ளம் கவர்ந்தனர்
சூதொ ரெள் ளள வும்அறி யாதவர்
ஆத லால்எனை ஆண்டுகொண் டார்கொலோ? 2

கல்லைப் போன்றஎன் நெஞ்சைக் கரைத்தனர்
சொல்லைத் தந்து தொடுத்திடு கென்றனர்
வல்லை வந்தினி தேற்று மணந்தனர்
எல்லை யின்றவர் இன்னருட் கென்றுமே. 3

பாடிப் பாடியென் பக்கல் அணுகுவர்
நாடிப் போந்துளே நல்லன சொல்லுவர்
வாடி யன்புடன் வாஎன் றழைத்திடின்
ஓடிவந் தின்பம் ஊட்டுவர் அங்ஙனே. 4

கோடி பொன்இக் குவலயத் தீயினும்
ஈடின் றுமவர் இன்னருள் தன்மைக்கென் (று)
ஏடு சொல்மறை யாவும் இயம்பிடும்
வீடு நல்கவல் லாரவர் வீரரே. 5

நல்லன எலாம் ஞாலத் தருளுவர்
அல்லன எலாம் நீங்க அருளுவர்
சொல்லுள் எண்ணத்துள் செய்கையுள் சூழ்ந்தெலாம்
வல்லர் என்ப துணர்த்திவாழ் விப்பரே. 6

வேடம் யாவையும் காட்டி விளக்குவர்
பாடம் யாவையும் பண்பாய்ப் புகட்டுவர்
ஓடம் போலவந் தொண்கரை சேர்ப்பவர்
தோடம் தீர்த்தெனைத் தூய்மைசெய் தூயரே. 7

கள்ளம் கொண்ட என் னுள்ளமும் கொள்ளைகொண்
டுள்ளன் போடுமுற் றொப்பிலின் பூட்டுவர்
வள்ளல் தானென அள்ளி வழங்குவர்
உள்ளில் உள்ளம் உருகிநீ ராகுமே. 8

காணக் காணக் கனிவொடு நோக்குவர்
மாணப் பக்கவில் வந்துகை பற்றுவர்
ஆணைப் பாரிலர், சால அழகியர்
நாணம் காண்கிலன் நான்அவர்க் காணினே. 9

வந்துவந் தென்கை பற்றிவா வாஎன்பர்
சந்தம் சால்தொடை சாத்திடு வாயென்பர்
சொந்தம் கூறுவர் சூக்குமம் காணென்பர்
அந்த வோர்கணம் என்னை மறப்பனே. 10

உன்னை யானறி வேன்நெடுங் காலமாய்
என்னை நீயறி யாய்கொலென் றோதுவர்
முன்னைத் தோழமை காட்டி முயங்குவர்
அன்னை யே!அவ் வருட்கில்லை யெல்லையே. 11

ஏது நாடியெங் கேகினும் என்னுடன்
போது வர்,பொருள் யாவும் அருளுவர்
கோதில் அன்பொடும் கூடுவர் என்னுடன்
ஜோதி யாம்அவர் செய்கையென் சொல்வதே. 12

ஆடை பற்றி அருள்முகம் காட்டுவர்
கோடை யொத்த கொடுவினை நீக்குவர்
மேடைக் கீர்த்தெனை மெல்லெனப் புல்குவர்
வாடல் தீர்த்தின்பம் நல்கருள் வள்ளலே. 13

நன்மைக் கேயெல்லா மும்நடக் கும்என்பர்
என்மெய் தொட்டெனை யீர்த்தணைத் தாளுவர்
பொன்மெய் நல்குவர் போதம் புகட்டுவர்
புன்மை போக்குவர் பூர்ணம் அருள்வரே. 14

வேதம் ஓதி விளக்கம் அருளுவர்
பூதம் ஐந்துட் பொலிதிறம் காட்டுவர்
போதம் கூட்டுவர் போகம்நன் றூட்டுவர்
பாதம் நல்குவர் பண்பருள் கொண்கரே. 15

கற்றவர் கல்லார் யார்க்கும் அருளுவர்
பற்றெல் லாம்தவிர் பண்பருள் பான்மையர்
அற்ற வர்கட் கருநிதி யானவர்
முற்றும் என்னையாட் கொண்ட முதல்வரே. 16

ஊனம் நீக்குவர் உள்ளொளி கூட்டுவர்
ஞானம் நல்கி நடனமுட் காட்டுவர்
மோன மீந்தின்ப முத்தி வழங்குவர்
கோனென் றுற்றெனைக் கொண்ட குணாளரே. 17

யானென தெனும் பற்றை யெரிப்பவர்
ஊனைக் கோயிலாக் கொண்டுள் ளொளிர்பவர்
ஏனை எண்ணம் மாய்த் தின்பம் அருள்பவர்
வானை வையத்தில் வைத்த மகிழ்நரே. 18

மூல மந்திரம் ஓதும் குருபரர்
ஆல மும்அமு தாச்செய வல்லவர்
சீலம் யாவையும் நல்கித் தெருட்டுவர்
கோலம் காட்டியாட் கொண்ட குரிசிலே. 19

ஐம்பு லன்களின் வேகம் அடக்குவர்
செம்பொ ருள்தெளி வீந்து தெருட்டுவர்
நம்பிக் கும்பிடின் இன்பம் வழங்குவர்
எம்பி ரான்எனை யாண்ட இறைவரே. 20

கோபம் காமமெல் லாம் தவிர் கொள்கையர்
பாபம் யாவும் மன்னித்தருள் பார்த்திபர்
தாபம் தீர்த்தெனைத் தன்புடை கொண்டவர்
தீப மாய்த்திகழ் தேவர்என் நாதரே 21

கண்ணின் ஒண்மணி யான கருணையர்
எண்ணம் சொல்செயல் தூய்மைசெய் விப்பவர்
பெண்ணென் னைமணந் தின்பம் பெருக்குநர்
வண்ணம் காட்டிநல் வாழ்வருள் வள்ளலே. 22

பற்பல் தீமையும் நீக்கும் பராபரர்
கற்பனை கள்கா ணொண்ணாக் கருணையர்
பொற்பெல் லாம்அருள் புண்ணியர் திண்ணியர்
உற்ப வம்மரிப் போட்டும்என் நாதரே. 23

நாம மோதிடின் நன்மை புரிபவர்
மாம றைக்கும்வித் தாகி வயங்குநர்
சோமன் வன்னியொண் சூரிய னானவர்
ஓமு ருவர்என் உள்ளம்கொள் வள்ளலே. 24

வைய மும்மற் றுலகும் படைப்பவர்
ஐயம் யாவையும் தீர்த்தருள் ஆண்டவர்
செய்யும் யாவும்தம் செய்கையென் றேற்றவர்
உய்யும் வண்ணம் உவந்தருள் நாதரே. 25

ஆங்கா ரத்தை அடக்கியாள் ஆண்மையர்
ஓங்கா ரத்துள் ஒளிரும் திறத்தினர்
பாங்காய் என்கரம் பற்றி மணந்தனர்
தீங்கே தும்தொடா வண்ணம்என் தீர்த்தரே. 26

பூலோ கத்தினைப் பொன்னுல காக்குவர்
சாலோ காதி பதங்கள் தருபவர்
மாலோட நன் மணம்புரிந் தாண்டனர்
கோலோச் சிஅரு ளாட்சிசெய் கொண்கரே. 27

கல்வி யின்பயன் காட்டும் கருணையர்
செல்வம் யாவையும் நல்கும் திறத்தினர்
நல்வ ரங்கள்எல் லாம்தர வல்லவர்
தொல்வி னைதவிர்த் தென்னைக்கொள் தூயரே. 28

அவ்வும் உவ்வும்மவ் வும்மென ஆனவர்
வெவ்வி னையெலாம் வேகத்தீ மூட்டுநர்
செவ்வை யாய்மணம் செய்தெனை யேற்றனர்
எவ்வ ளங்களும் என்னுள் நிறையவே. 29

சட்டம் என்றொரு செந்நெறி தந்தவர்
கட்டம் யாவையும் நீக்கும் கருணையர்
இட்ட மோடெனை யீர்த்து மணந்தனர்
அட்ட மூர்த்தியென் றுன அழகரே. 30

ஒன்றும் நன்றறி யாமல் உழல்எனை
நன்று நோக்கிமெய்ஞ் ஞான வொளியினுல்
குன்று நேர்வினை யாவும் குமைத்தருள்
மன்றல் செய்தின்ப வாழ்வளித் தாரின்றே. 31

ஆரும் கண்டறி யாமல் அருகில்வந்
தாரும் பேரும்கேட் டுள்ளம் கவர்ந்தனர்
பாரும் வானும் பரவும் பராபரர்
சோரும் யாவும்தந் தாளும் குழகரே, 32

எண்ணு வார்எண்ணம் யாவும் முடித்தருள்
அண்ண லார்வந்தென் அங்கைதொட் டாண்டனர்
பண்ணில் பாட்டில் படர்அருட் பான்மையர்
எண்ணில் பல்லுல கும்தரும் ஈசரே. 33

செம்மை யாவையும் நல்கருள் தேசினர்
மும்மை வெம்மலம் மோசித் தருள்பவர்
இம்மை யில்வந் தினிது மணந்தனர்
மம்மர் யாவும்தீர்த் தின்பம் வழங்கவே. 34

அங்கம் யாவும் அருள்மய மானவர்
கங்கை யைஅதி காலையிற் காட்டுநர்
செங்கை பற்றித் திருமணம் செய்தனர்
துங்கம் நல்கியென் சோகம்தீர்த் தோம்பவே. 35

தஞ்சம் என்றுறின் தாங்கும் தயாபரர்
கஞ்ச மாமலர்ச் சேவடி காட்டினர்
செஞ்சொல் கூறித் திருமணம் செய்தனர்
அஞ்ச லென்றெனை யாண்டருள் அண்ணலே. 36

மக்களுக்கு வண் சட்டம் வழங்கி யாள்
சற்குரு பரர் சாந்த வடிவுடன்
புக்கென் னுட்சிற் பொலிவுதந் தாண்டனர்
நற்கடி மணம் செய்திந்த ஞாலத்தே. 37

அண்டம் கோடிபல் கோடி யளித்தவர்
எண்டிக் கும்நல் லிசைபரப் பீசுரர்
மண்ட லத்தில்இன் றென்னை மணந்தனர்
அண்டர் கூடிநல் லாசி வழங்கவே. 38

ஏட்டி னுல்எழுத் தால்அறி தற்கொணு
மேட்டி மைமிகும் வேத விகிர்தர் என்
வாட்டம் தீர்த்தெனை வாழ்த்தி மணந்தனர்
மீட்டும் யான்பிற வாவண்ணம் காக்கவே. 39

தீங்கு தீர்ந்து திருவடிப் பேறுற
ஓங்கு செந்நெறி யொன்றை யளித்தவர்
ஈங்கு வந்தெனை யீர்த்து மணந்தனர்
பாங்க னைத்தையும் நல்கிப் பாலிக்கவே. 40

## 52. அருளனுபவம்

இருடியர் பட்டிக் குருநாதர் என்னுள்ளம்
திருடி யுவந்தாரடி—உள்ளம்—திருடி யுவந்தாரடி

பருதி பல்லாயிரங் கோடி யெனவொளிர்
திருவுரு வாளரடி—ஞானத்—திருவுரு வாளரடி

கருதித் தினம்போற் றடியவர் உள்ளத்தில்
மருவி யொளிர்வாரடி—அவர்—மருவி யொளிர்வாரடி

வருதி யெனத்தன் னருகினில் என்றனை
வலுவில் அழைத்தாரடி—என்னை—வலுவில் அழைத்தாரடி

சட்டத் திருநெறி மேற்கொண்டுய் வாயென
இட்டமொ டீந்தாரடி—மிக—இட்டமொ டீந்தாரடி

சட்ட அடியர் பலர்நட்பை யீந்தெனைத்
திட்டமாய்க் காத்தாரடி—நன்று—திட்டமாய்க் காத்தாரடி

அருள்சக்தி யன்னை தரிசனம் செய்யவைத்
திருளைத் தவிர்த்தாரடி—சூழும்—இருளைத் தவிர்த்தாரடி

அருட்கொடி ஸ்வாமி தரிசனைக் கூக்கி
அருட்டிரு சேர்த்தாரடி—நல்—லருட்டிரு சேர்த்தாரடி

தூய உபவாசம் பேணவைத் தேமிகத்
தூய்மை யளித்தாரடி—நன்கு—தூய்மை யளித்தாரடி

கோயில் திருப்பணிக் காக அழைத்தருள்
வாயில் திறந்தாரடி—அருள்—வாயில் திறந்தாரடி

அருள்ஞானச் செல்வத்தா யைக்காட்டி நல்ல
தெருள்பெறச் செய்தாரடி—நற்—றெருள்பெறச் செய்தாரடி

என்றன் பிழைகள் அனைத்தும் கருணையால்
நன்று மன்னித்தாரடி—அவர்—நன்று மன்னித்தாரடி

ஒப்பில் தவப்பயன் எல்லாமு மேயெனக்
கப்பொழு தீந்தாரடி—அண்ணல்—அப்பொழு தீந்தாரடி

இம்மை மறுமை நலங்கள் அனைத்தையும்
செம்மையாய் ஈந்தாரடி—இவண்—செம்மையாய் ஈந்தாரடி

ஆரும் அறியாமல் என்னுட் புகுந்தெனைச்
சீர்மணம் கொண்டாரடி—என்னைச்—சீர்மணம் கொண்டாரடி

என்னையும் தன்மய மாக்கியெங் கெங்கும்தா
னென்னத் திகழ்ந்தாரடி—தா—னென்னத் திகழ்ந்தாரடி

## 53. தோழியும் தலைவியும்

அன்ன நடையுள்ள பெண்ணரசே! உன்னை
அன்போ டணைந்தவர் ஆரேடி
உன்னரு நன்மறை மூலப் பொருள் என
உள்ள ஒருஞான வள்ளலடி.

வண்ணக் கிளிமொழிப் பெண்மயிலே! உன்பால்
வந்து புணர்ந்தவர் ஆரேடி
எண்ணெண் கலைகட் கதிபதி யாய்ஒளிர்
ஏகனடி பர போகனடி.

முத்தன்ன வெண்ணகைச் சித்திரமே! வந்து
முத்தம் கொடுத்தவர் ஆரேடி
பத்தர்கள் சித்தர்கள் முத்தர்கள் போற்றும்
பரமனடி நம் குரவனடி.

பாடிப் பரவும் மடமகளே! உன்னைப்
பாரிற் புணர்ந்தவர் ஆரேடி
தேடி எவரும் உணர அரிய
திறத்தனடி பொன் நிறத்தனடி.

செந்தமிழ் பேசிடும் பைந்தொடி யே! உன்னைச்
சேர்ந்தின் பளித்தவர் ஆரேடி
அந்தம் நடுமுதல் ஏதுமிலா அரு
ளாளனடி மண வாளனடி.

புன்னகை பூத்தொளிர் சொன்னமே நின்னைப்
புணர்ந்தின் பளித்தவர் ஆரேடி
நன்னல மெல்லாம் வழங்கிடும் என்னுத்தம
நாதனடி ஞான போதனடி.

கள்ளமில் உள்ளம்கொள் கன்னியே நின்னைக்
கலந்தின் பளித்தவர் ஆரேடி
உள்ளம் தளியென் றுகந்து குடிகொள்
ஒருவனடி ஓ ருருவனடி.

வெண்மதி நேர்முகப் பெண்மணி உன்னை
விழைந்தின் பளித்தவர் ஆரேடி
ஒண்மல ரோடருட் பண்மலர் மாலைகொள்
உத்தமன் மெய்ஞ்ஞான சித்தனடி.

நல்லெழி லோடொளிர் மெல்லிய லே! உன்பால்
நண்ணிப் புணர்ந்தவர் ஆரேடி
சொல்லரி தாம்சுயஞ் சோதி வடிவுடைச்
சுத்தனடி திகழ் நித்தனடி.

சட்டநெறி செல்லும் சுட்டழகி உன்னைச்
சார்ந்து கலந்தவர் ஆரேடி
உட்டெளி யூட்டி உயர்சுகம் கூட்டிடும்
ஒப்புயர் வற்ற தலைவனடி.

இன்ப முறுமென நம்பிய நின்னோ
டிணைந்து புணர்ந்தவர் ஆரேடி
அன்பறம் மிக்க இருடியர் பட்டியெம்
அண்ணலடி அருள் வண்ணனடி.

## 54. செப்பருங் கருணை

என்னவென்று சொல்லிடுவேன் என்கணவரின்—அரு
ளியல்பினை என்றன் வாயால் என்னுயிர்த் தோழி
உன்னஉன்ன உள்ளினிக்கும் உள்ளம் கரையும்—அவர்
உள்ளும் புறமும் புரக்கும் உத்தமரடி

எவ்வுலகை யும்புரக்கும் ஈசரனுவார்—எங்கும்
எப்பொருளும் தானேயாகி என்றும் திகழ்வார்
ஒவ்வொருயிர்க் கும்உயிராய் மேவியமைவார்—மன்னும்
ஒவ்வோரணு வுள்ளுமுற் றியக்குந ராவார்
செவ்வையுற யாவுமே நடந்திடச் செய்வார்—சூழும்
தீமை நீக்கி நன்மைகள் விளைந்திடச் செய்வார்
இவ்வொரேழை பால்இரக்கம் சாலவும் கொண்டார்—இதனை
இனிதுகரை சேர்க்கவேண்டும் என்றுளம் கொண்டார்
(என்ன)

வேதமெல்லாம் தானேயாகி மேவியமைவார்—அவற்றின்
விளக்கமும் தானேயாகி மெய்யுணர்த்துவார்
பூதமெல்லாம் தானேயாகிப் போகங்களீவார்—ஞான
போதம் புகட்டியெனைப் பூரணம் செய்வார்

நாதமுடி மேல்நடம்செய் நாயகராவார்—கூறும்
நாமஉரு வம்கடந்த வொண்பொருளாவார்
பாதமலர் என்சிரமேற் சூட்டி யாட்கொண்டார்—என்னைப்
பக்குவம் செய்தே இன்னருட் பண்புணர்த்தினர் (என்ன)

கட்டழகு மிக்கவொரு காளையாய் வந்தார்—அருட்
கண்ணொளியால் நோக்கியென்றன் உள்ளம் கவர்ந்தார்
எட்டினே டிரண்டினைச்சேர்த் தெண்ணிடச் செய்தார்—என்றன்
எண்ணில்வினை யாவும் பற்பம் பண்ணி மகிழ்ந்தார்

மட்டிலாப்பே ரன்புகொண்டு மார்பொடணைத்தார்—வண்ண
மலர்வாய்வைத் தென்னிதழில் முத்தம் கொடுத்தார்
உட்டிகழ் உவகைபொங்க ஒன்றியிணைந்தார்—அப்போ
துற்றஇன்பம் உன்னவும் உரைக்கவும் போமோ (என்ன)

## 55. திருவருள் விளக்கம்

தெய்வமென்ற ஒன்றிவ்வேழை சிந்தையுள் நிறைந்திடும்
மெய்விளக்க மென்றவொன்று மெய்யினில் விளங்கிடும்
மொய்யொளி விளக்கமொன்று மொழியினில் மிளிர்ந்திடும்
செய்கை யாவு மேஇறை செயல்களாய்த் திகழுமே. 1

வாணி வந்து நாவினில் வயங்கிச்சொல் வழங்குவள்
பேணி வந்து சக்தியென்றன் மெய்யினிற் பிறங்குவள்
ஊணுடைபொன் யாவும் தந்திலக்மியுள் ளொளிருவள்
காணின் யாவும் சற்குரு கருணையென்ப துண்மையே. 2

சக்தியொன் றகம்புறம் திகழ்ந்து காவல் செய்திடும்
பக்தியென் னுளத்துமைந்து பண்பினைப் பெருக்கிடும்
யுக்தியைக் கடந்தவொன்றெ னுள்விளங்கி யோம்பிடும்
முக்திநல்கு மோனஞான மூர்த்தியென்னைப் பேணுமே, 3

சொற்கள்யாவும் செய்கையாவும் தூயசிந்தை யும்திகழ்
சற்குரு கருணையென்னில் சத்தியம் முக்காலுமே
இற்குளுற்ற யாவுமே இறைவனின் கருணையாம்
நற்கலைகள் யாவும்நம்பன் நல்லருள் விளக்கமே. 4

அவனருள் விளக்கம்என் னுடல்பொருள் அனைத்துமாம்
அவனருள் விளக்கம்என் னுயிரும்என்ப துண்மையாம்
அவனருள் விளக்கமே அகம்புறம் அனைத்துமாம்
அவனருள் விளக்கம்நன் றணுத்தொறும் திகழுமே. 5

எங்கும் என்றும் யாவுமாய் இலங்கிடும் திருவருள்
எங்கும் என்றும் யாவுமாய் இயங்கிடும் திருவருள்
எங்கும் என்றும் யாவுமாய் நிறைந்திடும் திருவருள்
எங்கும் என்றும் யாவையும் இயற்றலும் திருவருள். 6

அருளினால் அனைத்துமாம்என் றுரணம் முழங்கிடும்
அருளினால் அனைத்துமாம்என் றுகமம் விளக்கிடும்
அருளினால் அனைத்துமாம்என் றுரியன் உணர்த்திட
அருளினால் அனைத்துமாம்என் றடிமையிங் குணர்ந்தனன். 7

அருளினால் அனைத்துலகு மாகிநன் றமைந்திடும்
அருளினால் அனைத்துலகும் அழகுற இயங்கிடும்
அருளினால் அனைத்துயிரும் அங்கங்கும் இலங்கிடும்
அருளினால் அனைத்துயிரும் உய்யுமென்ப துண்மையே. 8

அருளினால் மனம் முதற் கரணம்நன் றமைந்திடும்
அருளினால் மனம் முதற்கரணம்நன் றசைந்திடும்
அருளினாற் பொறிபுலன் அனைத்துமே இயங்கிடும்
அருளினாற் செயல்கள்யாவும் ஆகுமென்ப துண்மையே. 9

அருளினால் அனந்தகோடி உலகமும் விளங்கிடும்
அருளினால் அனந்தகோடி உயிர்களும் திகழ்ந்திடும்
அருளினால் அனந்தகோடி செயல்களும் நடந்திடும்
அருளினால் அனந்தகோடி உயிர்களுய்வ துண்மையே. 10

அருளினால் அனந்தகோடி சக்திகள் இயங்கிடும்
அருளினால் அனந்தகோடி சக்தர்கள் இயங்குவர்
அருளினால் அனந்தகோடி சித்திகள் நிகழ்ந்திடும்
அருளினால் அனந்தகோடி ஆன்மசக்தி பெருகுமே. 11

அருளினுல்மெய் யன்புதோன்றி யெங்கணும் நிறைந்திடும்
அருளினுல் அறம்துலங்கி யெங்கணும் சிறந்திடும்
அருளினுல் தவம்விளங்கி யெங்கணும் பிறங்கிடும்
அருளினுல்மெய் யின்பம்என்றும் எங்கும்மேவி யமையுமே. 12

## 56. நின் தாள் போற்றி

(பல்லவி)

மணிமணி யாகஅடியார்களைச் சேர்த்தருள் செய்
மாமணி நின்தாள் போற்றி (மணி)

(அனுபல்லவி)

பணிவுடன் இன்சொல் அன்பு பண்பு பத்தி நிறைநல் (மணி)

(சரணம்)

விணிலுறை அமரரும் வேதமும் போற்றி செய்ய
மணிலுள பலநல்ல சமயமும் வாழ்த்து சொல்ல
அணிஅணி யாகயோக முனிவரர் ஆசி கூற
எணில்சித்தர் ஞானியர்எல் லாம்மகிழ் வெய்தி வாழ்த்த (மணி)

செல்வ வளம் கொழிக்க சீரும் சிறப்பு மெய்த
கல்வியுள் ளோரும்கல்வி கல்லாரும் கைக்கொண் டுய்ய
பல்வித ஐயங்களும் நீங்கியிப் பாரோர் போற்றத்
தொல்வினை யாவும் தீரத் தூய சட்டம் வழங்கி (மணி)

## 57. சந்தப் பாடல்கள்

தனனதத்த தனனதத்த தந்ததந்த தானனு

அருள்மிகுத்த அடியர் பற்றும் அன்புகொண்டு கூடுவோம்
பொருள்மிகுத்த வளம்நிறைத்த பண்கள்நன்று பாடுவோம்
தெருள்மிகுத்த தவம்நிலேத்த பண்புமிஞ்ச நாடுவோம்
இருளகற்றி ஒளிவிளக்கும் இன்பமன்று ளாடுவோம். 1

தானதான தானதான தானதான தானனு

ஆதியோட் ஞதி யாகி யாவுமான ஆதியாம்
நீதியாகி நேர்மையாகி மேவுஞான ஜோதியாம்
பூதிசாத ஞதிகூறு தூயயோக ஞானியாம்
ஓதியாரும் நாடுதேவ ஞகமேவு மோனியாம். 2

தானதான தய்யதந்த தய்யதான தய்யதா

யாரும் யாவு மெய்துகென்று நல்குதூய செல்வராம்
பாரும் வானு முய்ய வந்தொர் சொல்லையீயும் வள்ளலாம்
கோரும் யாவும் நல்கிநன்று புல்குமாதி தெய்வமாம்
பேரும் ஊரும் உள்கியன்பு செய்து நாமும் உய்வமே: 3

தானதான தானதான தானதத்த தானனு

ஞாலமாதி லோகம் யாவு மே யளித்த மூலனும்
சீலர்தேவர் யோகர் யாரு மே வழுத்து சீலனும்
காலகால ஞகிஞான வானிலுற்ற பாலனும்
மூலமான ஓமை யோது தூயபத்தர் பாலனும். 4

தானதான தந்ததந்த தத்ததந்த தாத்தனு

ஞானதேசி கன் பதம் சிரத்தணிந்து போற்றுவோம்
மோனயோகி யின்பெருங் கருத்தை யென்று மேத்துவோம்
பானமாய் மெய் யன்பருந்தி பத்திகொண்டு வாழ்த்துவோம்
வானமேவு மின்பமிங் களித்திடென்று சாற்றுவோம். 5

தானதந்த தானதான தய்யதன்ன தந்தனு

நாளுமுன்றன் நாமமோதி உய்யும் உண்மையன்பு தா
மூளுகின்ற மூலஜோதி நல்கிஉண்மை யின்பு தா
நாளு மன்பர் பாதபூசை செய்ய நண்ணு பண்பு தா
ஆளுகின்ற தூயதாளை யுள்கமன்னு சிந்தை தா. 6

தனத்தத்த தனதந்த தனதான

இருட்பட்ட நெறிசென்று நலியாமல்
இகத்துக்கொர் வழிகண்டு பரஞானத்
தெருட்பெற்று ஞுயர்வொன்றி நலமேவுன்
திருத்தக்க நெறிநின்று பொலிவேனே

பொருட்பெற்ற மறைதந்த புலவோனே
புறப்பற்றொ டகம் வென்று பொலிவோனே
அருட்சட்டநெறி தந்த குருநாதா
அகத்துக்குள் குடிகொண்ட பெருமாளே. 7

தனனதனத் தனதான

சுருதிகளுட் பொலிவோனே
சுகநெறியைத் தருவோனே
கருதுபவர்க் கெளியோனே
கருணையெனக் கருள்வாயே
பருதியையொத் [தொளிர்வோனே
பவவினைசுட் டருள்வோனே
இருடிநகர்க் குருதேவே
எனதிறியப் பெருமாளே. 8

தந்தத் தனதான

அன்புக் கெளியோனே
அங்கத் தொளிர்வோனே
என்பற் றறமேவி
இன்பக் கழலீவாய்
துன்பச் சுமைதீரத்
தொண்டைத் தருவோனே
மின்பொற் சுடரோனே
விந்தைப் பெருமாளே. 9

தத்த தனனதன தனதான

மக்கள் மனைவிதுணை வருமாகி
மற்ற பலவகைய உறவாகி
ஒக்க வருபவரை விழையாமல்
உற்ற நினதுபத உணர்வீவாய்
எக்க ணமுமுனடி மறவாத
இட்ட ரிதயமல ரமர்வோனே
தக்க வழியுணர [விழைவோர்தேர்
சட்ட நெறியையருள் [பெருமாளே. 10

தனதன தான்

அரு மறை யோனே
அருள் நெறியோனே
வரு வினைதீர
வழி யருள்வோனே
அரு வுருவாகி
அமை பெரியோனே
குரு பெருமானே
குழை பெருமாளே. 11

தத்த தனதான

சட்ட நெறியோதித்
திட்டம் அருள்வோனே
துட்டன் எனையாளும்
சிட்டர் பெருமாளே. 12

தந்த தனதான

துன்ப உருவான
புன்பி றவிதீர
இன்ப நெறியோதும்
அன்பர் பெருமாளே. 13

சந்தம் நனிபாடும்
சொந்த குருநாதா
இந்த நிலமீதில்
வந்த பெருமாளே. 14

பொன்தி கழுஞான
மன்று ளொளிர்வோனே
என்றன் உளமீதும்
நின்ற பெருமாளே. 15

தத்த தனதான

புத்தி தெளிவாகப்
பத்தி தருவோனே
சித்தி யருள்வோனே
முத்தி யருள்வாயே. 16

தய்ய தனதான

அல்லல் தவிர்ஞானச்
செல்வம் அருள்வாயே
இல்லை யெனவோதா
நல்ல குருநாதா. 17

நல்ல நெறியோத
வல்ல குருநாதா
தொல்லை மறைமூலச்
சொல்லை யருள்வாயே. 18

தான தனதான

ஆதி குருநாதா
நீதி வடிவோனே
பூதி தருவோனே
ஜோதி யருள்வாயே. 19

தனதான தந்த தனதான

அருவாகி யெங்கும்
[நிறைவோனே
உருவாக நின்று பொலிவோனே
திருவாகி நன்று திகழ்வோனே
குருவாக வந்த பெருமாளே. 20

தனத்தன தான தனதான

இருட்படு மாயை யினைநூறி
பொருட்டெளி வோது
[புலவோனே
தெருட்பெரு தேசு தருவோனே
அருட்குரு வான பெருமாளே.

தத்தன தானன தனதான

சிற்குணர் தேடிடு பரஞானப்
பொற்குவை யேதருதனவானே
எற்கரு ளேசெய நிலமீது
சற்குரு வாய்வரு பெருமாளே 22

தான தத்தன தனதான

ஊன மற்றொளி ருபதேசத்
தேன ருத்திட வருவாயே
மோன முத்தமிழ்
[மறையோனே
ஞான சற்குரு பெருமானே 23

சீல முற்றிய உபதேசப்
பால ருத்திட வருவாயே
பால மெய்க்கனல் வடிவோனே
மூல சற்குரு பெருமானே. 24

தானதன தான தனதான

ஊனமணு காத உபதேசம்
ஓதுகென நாடு மெளியேனுள்
மோனமொழி கூறி
[மடவார்கள்
மோகமது தீர அருள்வாயே
பானமென வேநின்
[அருள்ஞானப்
பாகு கனிவோடு தருவோனே
ஞானகுரு நாத னுருவாக
ஞாலமிசை மேவு பெருமாளே. 25

தனன தனந்த தனதான

இருளே விழைந்துகெடுவேனுள்
இனிதே திருந்து நெறியோதி
மருளே தவிர்ந்து னிருபாத
மலரே வணங்க அருள்வாயே
பொருளே தெளிந்த
[புலவோனே
புவிமீ திசைந்து வருவோனே
அருளே வழங்கு குருநாதா
அகமே விளங்கு பெருமாளே.

## 58. நாமாவளி

ஞான சபா பதியே—உயர்—மோன தபோ நிதியே
வான வரோதயமே—மிகு—தான தபோ பலமே
வேத விழுப் பொருளே—அருட்—போதம் அளித்தருளே
மந்திர நாயகனே—பல—தந்திர மானவனே
ஒப்பரு மெய்ப்பொருளே—இவண்—இப்பொழு தெற்கருளே

சிற்பர தத்துவமே—அருள்—அற்புத மெய்த்தவமே
ஜோதி யொளிப் பொருளே—ஒரு—வீதி வகுத்தருளே
நாடு தனிப் பொருளே—உயர்—வீடு கொடுத்தருளே
சத்திய தத்துவமே—அருள்—நித்திய மெய்ச்சுகமே
அன்பில் முளைப்பவனே—உயர்—இன்பம் அளிப்பவனே

அன்னம் அளிப்பவனே—உயர்—சொன்னம் நிறைப்பவனே
கல்வி கொடுப்பவனே—அருட்—செல்வம் அளிப்பவனே
தேவை குறைப்பவனே—அருட்—சேவை கொடுப்பவனே
நிட்டை கொடுப்பவனே—வினைக்—கட்டை யறுப்பவனே
நிந்தை தவிர்ப்பவனே—அருட்—சிந்தை யளிப்பவனே

பித்தம் ஒழிப்பவனே—அருட்—சித்தம் அளிப்பவனே
சிற்பர தேசிகனே—உயர்—நற்பொரு ளீபவனே
ஒப்பரு ஞானியனே—உயர்—மெய்ப்பொரு ளானவனே
சத்துவ மேனியனே—பர—தத்துவ மானவனே
மோன முழுப்பொருளே—சிவ—ஞானம் அளித்தருளே

[வேறு]

தேவ ரெலாம் புகழ் செம்பொருளே
மூவர்கள் வாழ்த்து முழுச்சுடரே

பாவமெலாம் தவிர் பண்ணவனே
தேவை யெலாம்தரு செம்மையனே

வல்வினை தீர்த்தருள் வானவனே
நல்வரம் நல்கிடு நாயகனே

மாமுனி வோர்புகழ் வான்பொருளே
சேம மெலாம்தரு தேன் சுவையே

செல்வ மெலாம்தரு சின்மயமே
பல்வள மும்செறி பண்மயமே

ஒப்பரு சிற்பர தத்துவமே
இப்பொழு தெற்கருள் மெய்த்தவமே

மெய்த்தவர் போற்றிடு நற்றவமே
சத்துவ மூட்டிடு சிற்சுகமே

கற்பனை காணரு மெய்ப்பொருளே
உற்பவம் மாய்வற உய்த்தருளே

செப்பரி தான செழுஞ்சுடரே
ஒப்பரு ஞான வொளிச்சுடரே

மும்முல மும்சுடும் ஒண்கனலே
செம்மை யெலாம்தரு திண்பொருளே

புன்மை யெலாம்தவிர் பூரணமே
நன்மை யெலாம்தரு நாயகமே

அன்பர் உளம் குடி கொண்டவனே
இன்ப மெலாம்தரும் எம்பரனே

அருள்நெறி தரவரும் அற்புதனே
பொருள்புகழ் மிகவருள் சிற்பரனே

நேயர்கள் போற்றருள் மேனியனே
தூயவர் வாழ்த்திடு மோனியனே

அணுவென மலையென ஆனவனே
அணுவினுள் அணுவெனும் வானவனே

தேனெனக் கனியெனத் திதிப்பவனே
ஞானசற் குருவென உதித்தவனே

கன்றினைப் பேணும்ஆப் போன்றவனே
என்றென்றும் காத்தருள் ஆண்டவனே

பொறுமைக் குணம்மிகப் பூண்டவனே
அறுபகை மாய்த்தருள் ஆண்டவனே

செம்மை யெலாம் தரு நல்லவனே
மும்மை மலம்கொய வல்லவனே

என்னைக் கவர்ந்தருள் என்குருவே
உன்னை எனக்கருள் ஒண்குருவே

குருநாதன் எல்லார்க்கும் நல்லவனே
குறைகளெல் லாம்தீர்க்க வல்லவனே

உளமிசை கோயில்கொள் உத்தமனே
அளவறு துயர்தவிர் அற்புதனே

சற்குரு மூர்த்தி யென் ருனவனே
சிற்பர சிவவடி வானவனே

என்னைத் தானுக்கிட எண்ணுநனே
என்னுள் அமைவிடம் உண்ணுநனே

ஆலத்தை யுண்டமு தாக்குநனே
சீலத்தை எம்மிடம் தேக்குநனே 45

அன்புரு வாயெனை யாக்குநனே
இன்புரு மேவிட ஊக்குநனே

அகமிசை யன்பினைப் பூட்டுநனே
இகபர சுகவமு தூட்டுநனே

அம்பலத் தாடல்செய் அருளரசே
எம்பவ நோய்தவிர்த் திடும்அரசே

அருட்கொடி நாட்டுமென் அருளரசே
இருட்கடு வுண்டமு தீயரசே

தெருட்பெறு மாறெனைத் திருத்தரசே
அருட்டிரு அமுதெனக் கருத்தரசே 50

ஆனந்த மாநடம் காட்டரசே
ஆனந்தத் தேனமு தூட்டரசே

ஞானமன்றி னில்நடம் காட்டரசே
மோனவிண் ணமுதெனக் கூட்டரசே

அம்பலம் உள்ளமென் ருடிறையே
எம்பவம் மாயஉட் கூடிறையே

தேவர்க்கும் யாவர்க்கும் அரியவனே
சேவிக்கும் அன்பர்கட் கெளியவனே

உருவென அருவென உள்ளவனே
குருவென என்னையாட் கொண்டவனே 55

அன்னை யத்தன் குரு ஆனவனே
என்னுளம் கொள்ளைகொள் வானவனே

என்னைத் தடுத்தினி தாண்டவனே
தன்னை எனக்கருள் ஆண்டவனே

அறம் பொரு ளின்பமென் றானவனே
திறம் புக லற்கரி தானவனே

ஓமெனும் உருவுடை உத்தமனே
சேம மெலாம் அருள் சிற்பரனே

கல்வி யெலாம் அருள் கற்பகமே—அருட்
செல்வ மெலாம் அருள் சிற்பரமே 60

சற்ஜனர் தேடிடு சத்தொளியே
சிற்குணர் நாடிடு சித்தொளியே

சித்தனைத் தும்செயும் தேசிகனே
புத்தமு தூட்டிடு பூரணனே

வல்வினை மாய்த்தருள் வல்லபமே
நல்வழி காட்டிட வல்லவனே

மதமனைத் தும்தொழு மாண்பினனே
இதம் பொறை யன்பளி பூண்பவனே

இருட்படி நெஞ்சையும் திருத்துநனே
அருட்பொலி வூட்டியின் பருத்துநனே 65

அருள்வழி காட்டிட வந்தவனே
தெருள்மிக ஊட்டியுள் நின்றவனே

புண்படு மனத்தினைத் திருத்தரசே
ஒண்பதம் சேர்த்தருள் அருத்தரசே

திருத்த மெலாம் செயும் தேசிகனே
பொருத்த மெலாம் அருள் போதகனே

நேச மிகச்செயும் நின்மலனே
வாசி விளைவருள் மன்னவனே

மனமெனும் மலர்மிசை மன்னிறையே
இனமென எனைப்புணர் என்னிறையே 70

துணையென எனக்கமை தூயவனே
இணையில்மெய்ச் சுகம் அருள் நாயகனே.

[வேறு]

திருவெனல் குருதிரு மலரடியாம்
ஒருமுறை யெணிலருள் பெருகொளியாம்

அடியவர் குழுதிரு வருட்குழுவாம்
அடியவர் புகழ்திரு வருட்புகழாம்

[வேறு]

ஞானமிஞ்சிய மோனமொன்றிய வானகந்திகழ் நாதனே
ஞான சற்குரு வாகியன்பொடு மாநலம்புரி போதனே

ஞால மெங்கணு மேன்மையுற்றிட நாடுசற்குண நாதனே
சீல மிஞ்சிய மேலவர்புகழ் திவ்யசிற்குண போதனே 75

நாலு வேதமு மூலநாதமு மாகியே மிளிர் ஞானியே
மாலும் நான்மறை யோனுமீசனு மாகியே யொளிர் மோனியே

ஆதி யந்தமி லாதசிற்சுக மானதற்பர ஜோதியே
ஓதி யென்று முணர்ந்திடற்கரி தானஅற்புத நீதியே

பூத மைந்தையு மேதமின்றி விளங்க வைத்தருள் போதனே
காதல் கொண்டு பராவுமன்பர்கள் கண்டிறைஞ்சிடு பாதனே. 78

## 59. திருவருள் தெளிவு

சட்டப் படியே சரியாய் நடந்திட்டால்
பட்டாணி யேதுக்கடி—தின்னப்—பட்டாணி யேதுக்கடி

வெட்ட வெளியில் விளையமு துண்டிட்டால்
கட்டமு தேதுக்கடி—உண்ணக்—கட்டமு தேதுக்கடி

அலையா துளம்நன் றருளில் நிலைத்தால்
பலகாரம் ஏதுக்கடி—பற்பல்—பலகாரம் ஏதுக்கடி

சாலப் பரிவொ டுபவாசம் பேணிடின்
பால் பழம் ஏதுக்கடி—நாளும்—பால் பழம் ஏதுக்கடி

மூலக் கனிரசம் உண்ண முடிந்திட்டால்
பாலொன்றும் ஏதுக்கடி—பசும்—பாலொன்றும் ஏதுக்கடி 5

கார்ப்பானம் போற்சிற் ககன அமுதுண்ணின்
நீர்ப்பானம் ஏதுக்கடி —தண்—ணீர்ப்பானம் ஏதுக்கடி

காயம் அவனிடம் நேயமொ டொப்பித்தால்
வாயுதான் ஏதுக்கடி—ப்ராண—வாயுதான் ஏதுக்கடி

பொய்யொன் றறியாமெய்ப் போதம் நிறைந்திடின்
செய்கைதான் ஏதுக்கடி—செய்யும்—செய்கைதான் ஏதுக்கடி

மாச்சரியம் மதம் மோகம் கோபம் இன்றேல்
பேச்சுதான் ஏதுக்கடி—வெறும்—பேச்சுதான் ஏதுக்கடி

திண்ணம் மிகும் தவத் திட்பம் வளர்ந்திடின்
எண்ணந்தான் ஏதுக்கடி—எந்த—எண்ணந்தான் ஏதுக்கடி

இசைவொ டவன்பொன் னடிக்கண் இழைந்தால்
அசைவுகள் ஏதுக்கடி—தேக—அசைவுகள் ஏதுக்கடி

நிர்விகற் பத்தில் நிலைத்தவர்க்கே அணுக்
கர்வந்தான் ஏதுக்கடி—மனக்—கர்வந்தான் ஏதுக்கடி

சித்தம் சிறிதும் அசையா தமைந்திட்டால்
புத்தகம் ஏதுக்கடி—படிக்கும்—புத்தகம் ஏதுக்கடி

நாதாந்தம் கண்டு நடனம் தரிசித்தால்
வேதாந்தம் ஏதுக்கடி—வாய்—வேதாந்தம் ஏதுக்கடி

நாடி யனைத்தும் இறைவன்பால் நன் றென்றின்
ஓடிடல் ஏதுக்கடி—இங்கங்கென்—றோடிடல் ஏதுக்கடி

கூடு மிடத்தினிற் கூடியொன் றயிடின்
பாடல்தான் ஏதுக்கடி—வெறும்—பாடல்தான்ஏதுக்கடி

ஆடல் அனைத்தும் அவனுடல் என்றுன்னின்
ஊடல்தான் ஏதுக்கடி—சற்றும்—ஊடல்தான் ஏதுக்கடி

எம்பிரா னோடும் இதயம் இணைந்திடின்
கும்பிடல் ஏதுக்கடி—நாளும்—கும்பிடல் ஏதுக்கடி

நலமொ டவன்பாலே நம்மை யொடுக்கின்
வலம் வரல் ஏதுக்கடி—கோயில்—வலம் வரல் ஏதுக்கடி

ஆசு தவிர் அரு ளாளனொ டொன்றிடின்
பூசுதல் ஏதுக்கடி—நீறு—பூசுதல் ஏதுக்கடி

தீர்த்தன் அருளைத் தெவிட்டா தருந்திடின்
தீர்த்தந்தான் ஏதுக்கடி—பருகும்—தீர்த்தந்தான் ஏதுக்கடி

அருளால் அனைத்தும் நடக்கும்என் றோர்ந்திடின்
பொருளாசை ஏதுக்கடி—மாயப்—பொருளாசை ஏதுக்கடி

சிந்தை மொழி செயல் எல்லாம் அவன் கொண்டால்
சந்தேகம் ஏதுக்கடி—சற்றும்—சந்தேகம் ஏதுக்கடி

மையல் அனைத்தும் தவிர்ந்தபின் னேஇந்த
வையகம் ஏதுக்கடி—இந்த—வையகம் ஏதுக்கடி

வையமும் வானமும் ஒன்றாய்ச் சமைந்தபின்
பொய்யுற வேதுக்கடி—வெறும்—பொய்யுற வேதுக்கடி

மெய்யுற வொன்றேஇம் மேதினியைப் பேணும்
ஐயனின் ஆணையடி—அரு—ளையனின் ஆணையடி

மேவும் அனைத்தும் அவன்பால் அமைத்திட்டால்
பாவம் அணுகுமோடி—சற்றும் பாவம்—அணுகுமோடி

மாயை கடந்த மகிபனொ டொன்றிடின்
நோயும் அணுகுமோடி—எந்த—நோயும் அணுகுமோடி

முமல தகனம் முடிந்த இடத்தினில்
மமதை யணுகுமோடி—சற்றும்—மமதை யணுகுமோடி

தெருளால் அனைத்தும் தெளிந்தபின் வையத்
திருள்வந்து மூடுமோடி—வையத்—திருள்வந்து மூடுமோடி

விமலன் அருளின் விளைவறிந் தொன்றிட்டால்
யம பயம் ஏதுக்கடி—சற்றும்—யம பயம் ஏதுக்கடி.

கரணம் அனைத்தும் கடவுள்பால் ஒன்றிட்டால்
மரணம் அணுகுமோடி—ஈறும்—மரணம் அணுகுமோடி

அனவர தம் அவன் அருளில் நிலைத்திட்டால்
ஜனனம் அணுகுமோடி—பின்—ஜனனம் அணுகுமோடி

கொல்லா விரதம் பொய் சொல்லா விரதமும்
நல்லார்கைக் கொள்வாரடி-என்றும்-நல்லார்கைக் கொள்வாரடி

சன்மார்க்க மாம்சட்டம் நன்மார்க்கம் என்றோம்பின்
துன்மார்க்கம் நீங்குமடி—எங்கும்—துன்மார்க்கம் நீங்குமடி

தினமும் அவன்பாதத் தேனருந் தன்பர்க்கு
மனமும் அடங்குமடி—துள்ளும்—மனமும் அடங்குமடி

கொள்ளல் கொடுத்தல் அனைத்துமே அவ்வருள்
வள்ளல் செயல்களடி—அருள்—வள்ளல் செயல்களடி

யாவும் அவன் செயல் என்றே அமைந்திடின்
யாவும் நடக்குமடி— நன்றே—யாவும் நடக்குமடி

நாதமும் விந்துவும் நன்றவன் பாலொன்றின்
போதம் விளங்குமடி—ஞான—போதம் விளங்குமடி

யாவும் அவன்மயம் என்றே உணர்ந்திட்டால்
மேவும்மெய் யின்பமடி—என்றும்—மேவும்மெய் யின்பமடி 40

உள்ளும் புறமும் அவன்மய மாயிடின்
விள்ளரும் இன்பமடி—யார்க்கும்—விள்ளரும் இன்பமடி

தானந்த மில்லாச் சதானந்தத் தோன்றிடின்
ஆனந்த மாகுமடி—பர—மானந்த மாகுமடி

கோனைக் குறுகி அக் கோனிடத் தொன்றிடின்
ஆனந்த மாகுமடி—ப்ரம்—மானந்த மாகுமடி

காப்பதவன் பரம் என்றே யிருந்திடின்
சீர்ப்பதம் எய்துமடி—அண்ணல்—சீர்ப்பதம் எய்துமடி

வானை வளைத்திந்த வையத்தி லேவைத்த
கோனருள் கூட்டுமடி—ஞானக்—கோனருள் கூட்டுமடி 45

எத்தனை கூறினும் ஏன்தெளி வுற்றிலை
சித்தம் தெளிந்திடடி—இனிச்—சித்தம் தெளிந்திடடி

சித்தம் தெளிந்திட்டால் பித்தம் பறந்தோடும்
அத்தன் அருள்வானடி—என்றும்—அத்தன் அருள்வானடி

சச்சிதா னந்தத்தில் சார்ந்து கலந்திட்டால்
நிச்சயம் முத்தியடி—எய்தும்—நிச்சயம் முத்தியடி. 48

நீ கழிக்கும் ஒவ்வொரு கணமும் உன் வாழ்நாளை விழுங்குகின்றன என்பதை எப்போதும் மறவாதே.

## 60. அருட் கும்மி

அண்ட மனைத்துக்கும் வேந்தனடி—நல்
லருள் மறை நல்குப சாந்தனடி
கண்டதும் ஈர்த்தருள் காந்தனடி—என்
கரம்தொட் டுளம்கவர் காந்தனடி 1

தூய்மை மிகப்புரி தூயனடி—மேலாம்
தூமறை யோதுசெவ் வாயனடி
வாய்மை தவறுநன் னேயனடி—மோன
மன்றெனும் ஞான வாகாயனடி 2

எங்கும் பரந்தொளிர் வீரனடி—செயல்
யாவும் செயவல்ல தீரனடி
துங்க ரெட்டிப்பட்டி யூரனடி—சட்டம்
சொல்லிப் பேணும் உப காரனடி 3

எவ்வுருவும் பூணும் வேடனடி—மறை
எல்லாம் விளக்கும்பொன் னேடனடி
செவ்விய நல்லுளப் பீடனடி—ஞானச்
சீர்கொள் துரியநன் ஞுடனடி 4

அன்பர் களுக்கனு கூலனடி—நல்
லருள் ஞானச் செல்வச்செங் கோலனடி
இன்பம் அனைத்தும்செய் சீலனடி—இங்குற்
றென்னை யணைத்தாண்ட லோலனடி 5

தேவர்கள் யார்க்கும் அரியனடி—அன்பு
செய்பவர்க் கென்றும் எளியனடி
பாவ மறுக்கும் பிரியனடி—மலர்ப்
பாதம் வழங்கும் பெரியனடி 6

கன்மங் களைச்சுட வல்லனடி—மேலாம்
கருணை சுரந்தருள் நல்லனடி
நன்மனம் நல்குசெஞ் சொல்லனடி—பர
ஞானம் வழங்கியாள் துல்யனடி 7

சுத்தம் மிகப்புரி சுத்தனடி—யாரும்
சொல்லரும் சித்துசெய் சித்தனடி
அத்தமனம் காணு அத்தனடி—என்றும்
அற்புதமா யொளிர் நித்தனடி 8

சத்தினுட் சத்தருள் சத்தனடி—முத்தர்
சார்ந்து நிதம்புகழ் முத்தனடி
முத்தி தரவல்ல கர்த்தனடி—என்னை
முழுதும் விழுங்கியாள் பர்த்தனடி 9

ஞான நெறிதரும் நக்கனடி—எல்லா
நன்மைகளும் செயும் சொக்கனடி
மோன உலகமாம் சொர்க்கனடி—பர
முத்தி யளித்தருள் பர்க்கனடி 10

செல்வம் நல்கும் திரு வாளனடி—மேலாம்
தேவர் தொழும் புக ழாளனடி
நல்வரம் நல்கரு ளாளனடி—என்னை
நன்றே புணர்மண வாளனடி. 11

## 61. அறு பற்றை நீ மனமே

புவனியில்வாழ் எவ்வுயிரும் போகமுறப் போதமுறத்
தவநெறியாம் சட்டத்தைத் தந்தருளும் குருபரனார்
உவமையில்சீ ருருக்காட்டி ஓங்கார ஒலிகூட்டி
அவமறுத்தாட் கொண்டருள்வார் அறுபற்றை நீ மனமே. 1

செல்லும்வழி யறியாமல் திகைக்கின்ற உலகோர்க்கு
நல்லவழி மிகஎளிதில் நல்கவந்த நாயகனார்
பல்லுயிர்க்கும் இன்பநலம் பாலிக்கும் குருநாதர்
அல்லலறுத் தாண்டருள்வார் அறுபற்றை நீ மனமே. 2

பற்றுடனே நீவாழ்ந்து பார்மிசையெப் பயன் கண்டாய்
குற்றமெலாம் பொறுத்தருளும் குருநாதர் திருப்பாதம்
சற்றுநினைந் திருந்தாலும் சாந்தநிலை வந்தெய்தும்
அற்றமறுத் தருள்பெறலாம் அறுபற்றை நீ மனமே. 3

நிலமெனவும் நீரெனவும் பொருளெனவும் நீளாசை
நலமெதுவும் தாராதென் றினிதுணர்ந்து நற்குருதாள்
மலரிட்டுப் பணிந்தேத்தின் மாஞான நிறைவெய்தும்
அலமரல்தீர்ந் தின்புறலாம் அறுபற்றை நீ மனமே. 4

இகம்பரமும் இனிதருள்வார் என்றென்றும் துணையாவார்
சுகம்தருவார் துயர்தவிர்ப்பார் இருவினையாம் சுமைதீர்ப்பார்
சதம்திகழ்பல் லுயிர்வாழச் சட்டம்அருள் தனிஇறைவர்
அசந்தை தவிர்த் தடிசேர்ப்பார் அறுபற்றை நீ மனமே. 5

ஊனுடையும் பிறபலவும் உலகமிசை யெஞ்ஞான்றும்
மாணருளால் நல்குகுரு மலரடிசார்ந் தின்புறலாம்.
பூணரிதாம் மெய்யன்பு பூண்டினிதே போற்றிட்டால்
ஆணவமாய்த் தருள்புரிவார் அறுபற்றை நீ மனமே. 6

ஓங்கார மாம் மறையுள் ஊறியொளி யெய்தாமல்
ஈங்கேன்நீ எப்போதும் எங்கெங்கோ ஓடுகிறாய்
பாங்கார் சற் குருநாதர் பண்பொடுமெய் யன்பூட்டி
ஆங்காரம் தீர்த்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 7

பசுபாச நிலையுன்னிப் பரஞான குருபாதம்
விசுவாசம் மிகுந்தேத்தின் விமலசுக நிலைபெறலாம்
அசுசிமிகு நினைவுமொழி செயல்கள் தவிர் அருளண்ணல்
அசுரகுணம் மாய்த்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 8

காசுபணம் வேண்டுமெனக் காசினிமீ தலைகின்றாய்
மாசுதவிர் மார்க்கத்தில் மாண்புறவே சென்றுயலாம்
ஈசுரனாய் என்னுள்ஒளிர் இருடியர்பட் டிச்சாமி
ஆசுதவிர்த் தருள்புரிவார் அறுபற்றை நீ மனமே. 9

நீசால மயல்கொண்டு நீணிலத்தில் திரிகின்றாய்
பூசால மகிழ்வோடும் குருபரனார் பொற்றாளில்
பூசா விதிப்படியிட் டேத்தின்உயர் புனிதமிகும்
ஆசாபா சத்தமிழா தறுபற்றை நீ மனமே. 10

சீருடையும் பசிக்குணவும் தேடியெங்கெங் கோதிரிந்தாய்
பாருலகிற் சுகம் கிடைக்கும் துணைகிடைக்கு மெனப்பார்த்தாய்
ஊருலகுக் கினிதருள உதித்தகுரு நாதரன்றி
ஆருளரிங் குறுதுணையென் றறுபற்றை நீ மனமே. 11

வெய்யபசிப் பிணிதீர்க்க வேண்டியுல கில்திரிந்தாய்
ஐயர்அருட் குருநாதர் அடிமலருக் கன்புசெயின்
பொய்யனைத்தும் பொடியாகும் புனிதமிகும் இன்பெய்தும்
ஐயமெலாம் அறநீக்கி அறுபற்றை நீ மனமே. 12

பொறியோடு புலன்காணாப் போதகுரு நாதர்பதம்
குறியாகக் கொண்டேத்தின் குறைகள்நொடி யினில்நீங்கும்
அறிவெய்தும் அன்பெய்தும் அருளெய்தும் பொருளெய்தும்
அறியாமை யறநீங்கும் அறுபற்றை நீ மனமே. 13

தணிவறியாப் பெருங்காமம் சினமெய்தித் தவித்திட்டாய்
பணிவுண்மை யன்புமிகு பக்குவமும் உடையோரை
மணிமணியாய்த் தேர்ந்தருள்செய் குருபரர்க்கு மாணடியார்
அணியணியாய் உளதறிந்தே அறுபற்றை நீ மனமே. 14

துன்பம் அனைத்தும் தவிர்த்துத் தூய்மைபுரி தேசிகனார்
மன்பதைகள் வாழஉயர் சட்டம்அருள் மாண்புடையார்
புன்பவமாம் பிணிவிலக்கிப் பூர்ணம்அருள் பொற்புடையார்
அன்பொளிதந் தின்பருள்வார் அறுபற்றை நீ மனமே. 15

சரியைகிரி யாயோகச் சாரமெலாம் திரள்சட்டம்
விரிபுவிக்கு வழங்கியருள் விமலகுரு நாதர் நமக்(கு)
உரியதுணை யாய்அமைந்தார் உண்மையின்ப மூட்டிடுவார்
அரியபெரு நிலைபெறலாம் அறுபற்றை நீ மனமே. 16

படியிற்பல் வகையான நெறிசென்று பாழாகி
இடிபட்டு மடியாமல் இன்புபெய்த வழிகாட்டிக்
கொடிகட்டி யருளாட்சி புரிஞான குருநாதர்
அடிபற்றி இன்புறலாம் அறுபற்றை நீ மனமே. 17

பூதபரம் பரைபொலியப் புவிமீதிற் போந்தருளி
நூதனமாய்ப் புராதனத்தின் நுட்பமெலாம் திரள்சட்டம்
பூதலத்திற் சிந்தின்பம் புகட்டுகுரு நமையாண்டார்
ஆதலினால் இன்புறலாம் அறுபற்றை நீ மனமே. 18

அருளெர்னும் உருவுடையார் அன்பென்னும் உரையுடையார்
தெருள்நல்கு நெறியுடையார் திறல்நல்கு சீருடையார்
பொருள்நல்கு செயலுடையார் இருடிநகர்ப் பூரணனார்
அருளால்மெய் யின்புறலாம் அறுபற்றை நீ மனமே. 19

அவமன்னு நெறிநாடா தருட்குருவின் நெறிநாடிப்
பவமென்னும் நோய்நீக்கிப் பழிபாவ மறநீக்கித்
தவமென்னும் முறைபேணித் தனியின்ப மெய்திடலாம்
அவனிக்குள் எதன்மீதும் அறுபற்றை நீ மனமே. 20

காஞறு போலெங்கும் கலக்கமுற்றுத் திரியாமல்
நாஞவி தப்பாச பந்தமுடன் நலியாமல்
கோஞம் சற் குருபரஞர் கழல்நாடிக் கூடிட்டால்
ஆஞப்பே ரின்புறலாம் அறுபற்றை நீ மனமே. 21

இத்தரைமீ தழி பொருளை எண்ணி எண்ணி ஏமாந்தே
எத்தனைநாள் இருந்தாலும் எந்த சுகமும் காணுய்
முத்தரெலாம் பற்றியுய்ந்த மோனநெறி கடைப்பிடித்தால்
அத்தனருள் பெற்றுயலாம் அறுபற்றை நீ மனமே 22

இசையறியாய் இயலறியாய் இன்னருளின் திறமறியாய்
நசைமிஞ்சி நாஞளும் நானிலமேல் ஓடுகிருய்
திசையெங்கும் போற்றுகுரு திருவடியன் பாற்போற்றின்
அசைவிலருள் நிலைபெறலாம் அறுபற்றை நீ மனமே. 23

ஐம்பொறி புலன்வழியே அனுதினமும் சென்றுழன்ருய்
உம்பர்களும் அதிசயிக்க உலகினிற்சட் டம்வழங்கும்
நம்பெருமான் அருள்பெற்ருல் ஞானநட மாடிடும்சிற்
றம்பலம்கண் டின்புறலாம் அறுபற்றை நீ மனமே. 24

தேடரிய திரவியமாம் திருவருளை நாடாமல்
கூடரிய மெய்ஞ்ஞான குருபதத்திற் கூடாமல்
ஓடலினுல் என்னபயன் உள்நோக்கி யமரின்அரு
ளாடல்பல கண்டுயலாம் அறுபற்றை நீ மனமே. 25

கதிபெறவும் கருதாமல் கருணைநெறி பேணுமல்
பதிதொறும் ஓடித்திரியின் பயனில்லை பகர்வது கேள்
மதிநலம்மிக் கருளிமலர்க் கழலருள்வண் குருவருளாம்
அதிமதுரக் கனிபெறலாம் அறுபற்றை நீ மனமே. 26

காலங்கள் கற்பனைகள் எல்லாம் கடந்தொளிர்வார்
சீலம் சிறந்தஉயர் சட்டம்அருள் தேசிகஞர்
கோலம் திகழுருவம் காட்டிநன்ருட் கொண்டருள்வார்
ஆலம்அமு தாக்கிடுவார் அறுபற்றை நீ மனமே. 27

சரணமெலாம் புனிதமுறக் கருணைநெறி தந்தருள்வார்
தருணமறிந் துதவியருள் தண்ணளிசால் குருபரஞர்
இருள்நயந்த நிலைநீக்கி ஒளிவழங்க இசைந்துள்ளார்
அரணமென அமைந்தாள்வார் அறுபற்றை நீ மனமே. 28

இமையவரும் முனிவரரும் ஏத்தவருள் புரிஇறைவர்
மும்மலமறுத் தருள்நாதர் மோனசுகம் தருமூலர்
சமயமத சாரமெலாம் சட்டமெனத் தருதலைவர்
அமைதியளித் தருள்புரிவார் அறுபற்றை நீ மனமே. 29

வானந் தனில்வாழ்வோர் வரமுனிவோர் வாழ்த்துரைக்க
ஞானந் தனைநல்கி நன்றோம்பு குருபரனார்
மோனந் தனிலாழ்த்தி முத்தான்மா வாக்கிடுவார்
ஆனந்த வாழ்வருள்வார் அறுபற்றை நீ மனமே. 30

பற்பலுல கும்தருவார் பற்பலுயி ருள்ளொளிர்வார்
சிற்பர வியோமமெனும் தில்லையில் நடம்புரிவார்
பொற்புறுநற் சட்டநெறி பூதலத்திற் கருள்குரவர்
அற்புதமாய்க் காத்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 31

செஞ்சொலெனும் மறையருள்வார் திருக்கண்ணால் நோக்கிடு
கஞ்சமலர்ச் சேவடிகள் காட்டிவினை களைந்தருள்வார் [வார்
நஞ்சனைய தீமைதவிர் ஞானவுருக் குருபரனார்
அஞ்சலளித் தாண்டருள்வார் அறுபற்றை நீ மனமே. 32

இயலனைத்து மாயொளிர்வார் இசையனைத்து மாய்த்திகழ்வார்
செயலனைத்தும் செய்தருள்வார் திருவருட் சட்டம் தருவார்
மயலனைத்தும் நீக்கிடுவார் மாஞான குருபரனார்
அயலறியா வணம் புரப்பார் அறுபற்றை நீ மனமே. 33

உலகில் எந்தப் பொருளாலும் உறவுமுறை யெவராலும்
நலமுறலாம் எனஎண்ணி நம்பியிருந் தயராதே
குலமுழுதும் உயும்வண்ணம் சட்டம்அருள் குருநாதர்
அலகிலுயர் சுகம்அருள்வார் அறுபற்றை நீ மனமே. 34

வழியாதென் றறியாமல் வருந்தியுழன் றிடுகாலை
பொழிமாரி போற்கருணை புரிதூய குருபரனார்
வழிகாட்டி யாட்கொண்டார் வளம்அருளிப் பேணுகிறார்
அழியாப்பே ரின்பருள்வார் அறுபற்றை நீ மனமே. 35

பழமையுடன் புதுமைநிறை பாங்குடைநற் சட்டநெறி
உழலுயிர்கள் உய்யும்வணம் நல்கியினி தோம்பிறைவர்
கழல்நினைமெய் யன்பருள்வார் கருணைபுரிந் தாண்டருள்வார்
அழல்நிகர் ஞானம்தருவார் அறுபற்றை நீ மனமே. 36

களவனைத்தும் அறநீக்கிக் கருணையெனும் அமுதுண்ண
உளவனைத்தும் ஓதிடுவார் ஒப்பிலருட் குருநாதர்
குளநிலவும் விழியருள்வார் கோதிலருள் நோக்கருள்வார்
அளவிலருட் பேறருள்வார் அறுபற்றை நீ மனமே. 37

ஓடுகின்ற செயலைவிடுத் துள்ளடங்கி உய்வெய்த
நாடுதிநீ எனநாளும் நவில்கின்ற குருநாதர்
ஊடும்நினைத் திருத்திடுவார் உண்மையின்பம் ஊட்டிடுவார்
ஆடும்மலர்க் கழல்சேர்ப்பார் அறுபற்றை நீ மனமே. 38

கடலுலகிற் காசாசை மிகமிஞ்சிக் கறங்கென்னத்
தொடர்வினையூக் கிடஉழன்றாய் தூய்மையருள் குருநாதர்
உடல்பொரு ளாவியையேற்றன் பூட்டியருள் செயப்போந்தார்
அடல்மிகு பாதம் சேர்ப்பார் அறுபற்றை நீ மனமே. 39

பொருட்பற்று மிகக்கொண்டு பூவுலகில் திரிந்துழன்றாய்
இருட்செற்றுள் அருள்கூட்டும் இயல்ஞான குருநாதர்
தெருட்பெற்ற நிலையருள்வார் சிவஞான அமுதருள்வார்
அருட்கழலிற் சேர்த்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 40

நினைப்பவைக ளெல்லாமும் நினைக்குமுன ரேயருள்வார்
வினைப்பகையைப் பொடியாக்கி விமலசுகம் தந்தருள்வார்
நினைப்பவர்கள் நெஞ்சினிலே நிலைத்திருக்கும் குருநாதர்
அனைத்துநலங் களும்அருள்வார் அறுபற்றை நீ மனமே. 41

நாசிநுனி யினில்நில்லாய் ஞானநெறி யினைநாடாய்
வாசிவிளை வுறமுயலாய் வையமிசை உழலுகிறாய்
ஊசியும்நம் முடன்வாரா தென்றுணர்ந்தால் குருநாதர்
ஆசியளித் தருள்புரிவார் அறுபற்றை நீ மனமே 42

வாராநற் செல்வமெலாம் வருவித்து வழங்கிடுவார்
பேர்ஆர்வ முடன்ஓதும் பெட்பருளிப் பேணிடுவார்
தேராஇவ் வடிமையும்நற் றெளிவெய்தச் செய்தென்றும்
ஆராநல் லமுதாவார் அறுபற்றை நீ மனமே. 43

எங்கெங்குற் றலைந்தாலும் எவரெவரைப் பார்த்தாலும்
அங்கங்கும் அவரவருள் அமைந்தொளிர்வோர் குருபரரே
இங்கிந்த உண்மையுணர்ந் தினிதவர்தாள் ஏத்திட்டால்
அங்கணொளி தந்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 44

யமபயத்தை யறுத்தெறிவார் இகமோடு பரமீவார்
சமரிடுமைம் புலனைவெலத் தக்கதிறல் தந்தருள்வார்
மமர்தவிர்த்தாள் குருநாதர் மாஞான ஒளிகூட்டும்
அமுதருத்தி யாண்டருள்வார் அறுபற்றை நீ மனமே. 45

திமிரமெனும் புவிமயலிற் சிக்கியுழல் வதுநலமோ
சமுகமெலாம் உயும்வண்ணம் சட்டநெறி தந்தருள்செய்
சுமுகர்அருட் குருபரனார் தூமலர்த்தாள் துணைபற்றின்
அமரத்வ மீந்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 46

உபயோக மானஒன்றும் உன்னாமல், புரியாமல்
அபவாத மானசெயல் களைநாடி அலைவுறலேன்
சுபமான யாவும்அருள் குருபாதம் துணைபற்றின்
அபரோட்ச நிலையருள்வார் அறுபற்றை நீ மனமே 47

நேர்வழியை யறியாமல் நீ சந்துதொறும் அலைந்தாய்
பார்மயலிற் படிந்துழன்றாய் நிலையாம்நற் பயனளிக்கக்
கார்முகில்நேர் கருணைநிறை குருநாதர் காசினிமீ (து)
ஆர்வமுடன் போந்துள்ளார் அறுபற்றை நீ மனமே. 48

கணக்கிறந்த காலமதாய்க் கருமம்மிக மிகப்புரிந்து
பிணக்குடைய நெறிக்காளாய்ப் பிறவிவலைப் பட்டுழன்றாய்
கணக்குமுடித் தடிசேர்க்கக் கருணைநிறை குருநாதர்
அணுக்கள்தொறும் நிறைந்துள்ளார் அறுபற்றை நீ மனமே 49

தீதணுவும் அணுகாநற் றிருநெறியை அளித்தருளி
மாதவத்தின் பயன்எளிதில் மாநிலத்தோர் பெற்றுய்யப்
போதகுரு நாதர்வழி வகுத்துள்ளார் நமக்கென்றும்
ஆதரவாய்த் திகழுகின்றார் அறுபற்றை நீ மனமே. 50

இச்சைமிக மிகக்கொண்டே எங்கெங்கும் திரிந்துழன்றாய்
நச்சரவு போன்றிருந்தாய் ஞானகுரு நாதர்நினை
உச்சநிலைக் கழைத்தேக உளங்கொண்டார்; ஓரணுவும்
அச்சமிலை அருள்புரிவார் அறுபற்றை நீ மனமே. 51

ஓதாய்சற் குருநாமம் உறுதுயர்தீர்ந் தின்புறலாம்
பாதார விந்தமலர் பணிந்தேத்தின் பயன்பெறலாம்
காதார அவர்புகழைக் கேட்கின்அவர் கருணைநமக்(கு)
ஆதார மாய்ப்பேணும் அறுபற்றை நீ மனமே. 52

செந்தமிழால் அவர்புகழைப் பாடின்அருள் திருவெய்தும்
கந்தமலர் அவர்கழலிற் சூட்டின்அருட் கருணைமிகும்
சந்ததமும் குருவருளைச் சிந்தித்தால் சாந்தியுறும்
அந்தமிலா இன்பெய்தும் அறுபற்றை நீ மனமே. 53

எங்கெங்கோ சென்றலைந்தாய் ஏதேதோ நினைந்துழன்றாய்
எங்கெங்கு சென்றாலும் எவரும்மனத் துயர்நீக்கார்
துங்கநிலை நினக்கருளார் தூயகுரு திருவருளே
அங்கங்கும் துணையாகும் அறுபற்றை நீ மனமே. 54

கங்கைநன்னீர் எங்கும்அதி காலையினிற் றிகழ்வதனால்
இங்கதிகா லையில்தண்ணீ ரினில்மூழ்கின் இன்புறலாம்
சங்கையிலை யென்றருளும் சற்குருதாள் போற்றிட்டால்
அங்கமிதே தளியாகும் அறுபற்றை நீ மனமே. 55

காலமொரு மூன்றறியாய் கற்பனையுள் மூழ்கிடுவாய்
சாலமயல் கொண்டுழல்வாய் தக்கவர்பால் சார்ந்தறியாய்
சீலம்அருள் குருநாதர் திருவருளால் தேகமிதே
ஆலயமென் றமர்வதறிந் தறுபற்றை நீ மனமே. 56

மமதையற்றுச் சினமற்று மாஞான நெறிபற்றின்
நமனைவெலற் கருள்குரவோன் நளினமலர்க் கழல் பெறலாம்
சுமையனைத்தும் கழன்றுவிடும் தூய்மைமிகும் தெளிவெய்தும்
அமலசுக நிலைமேவும் அறுபற்றை நீ மனமே. 57

பகலென்ன இரவென்னப் பாராமல் ஓடுகிறாய்
சுகமென்ன கண்டிட்டாய்? தூயகுரு திருவடியை
அகமுறநன் றேபோற்றின் அருள்ஞான நிலையெய்தும்
அகல்வான மும்வாழ்த்தும் அறுபற்றை நீ மனமே. 58

தேகாபி மானமின்றி மயலுக்குட் சிக்கலின்றி
மாகாதல் கொண்டு குரு மலரடியை யேநாடிப்
பாகாக உருகிஉயர் பக்குவமுற் றால் ஞான
ஆகாய மயமாவாய் அறுபற்றை நீ மனமே. 59

நிகரிலரு மறையனைத்தும் குருநாதர் நீள்புகழைப்
பகரவியலா தென்னப் பரிவொடுரைத் திளைக்குமெனில்
சகமிசைமற் றறிவார்ஆர் தண்மலர்த்தாள் பெறநாடின்
அகரஉக ரத்தில்நிலைத் தறுபற்றை நீ மனமே. 60

மனிதர்குலம் மாவினம்புள் ளினம்பயிரும் வாழ்ந்துய்யப்
புனிதநெறி தந்தருளும் இருடிநகர்ப் பூரணனர்
கனியினுமின் சுவைகாட்டிக் கருணைபுரிவார், மேலாம்
அனுபூதி தந்தருள்வார் அறுபற்றை நீ மனமே. 61

## குருவருட் பல்லாண்டு

குருவருள் திருமறை குருவருள் திருநெறி
குலவுக பல்லாண்டு
குருவரு ளடியவர் குருவருள் புவிமிசை
குலவுக பல்லாண்டு
குருவருட் செயல்களைக் கூறுநர் உருகுநர்
குலவுக பல்லாண்டு
குருவருள் நிட்டையிற் கூடுநர் தேறுநர்
குலவுக பல்லாண்டே. 1

குருவருட் பாடல்கள் குவலய மிசைநனி
குலவுக பல்லாண்டு
குருவருட் பாடல்கள் ஓதுநர் கேட்குநர்
குலவுக பல்லாண்டு
குருவருட் பாடலின் பொருளினுள் தோய்பவர்
குலவுக பல்லாண்டு
குருவருட் பாடலின் படியமைந் தொளிர்பவர்
குலவுக பல்லாண்டே. 2

குருவருட் கொள்கையைப் புவிமிசை பரப்புநர்
குலவுக பல்லாண்டு
குருவருட் சட்டத்தில் முழுவதும் தோய்பவர்
குலவுக பல்லாண்டு
குருவருள் சிந்தையில் சந்ததம் தோய்பவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளினுள்நனி மூழ்கியொன் றுகுநர்
குலவுக பல்லாண்டே. 3

குருவருட் காட்சியை உள்ளத்துட் காண்பவர்
குலவுக பல்லாண்டு
குருவருட் பெருமையை உலகெங்கும் காண்பவர்
குலவுக பல்லாண்டு
குருவருள் மகிமையை உயிர்தொறும் காண்பவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளாட்சியை அணுதொறும் காண்பவர்
குலவுக பல்லாண்டே. 4

குருவரு ளடியவர் கூட்டுற வுடையவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளடியவர் கூட்டத்தை நாடன்பர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளடியவர் பணிபுரிதூயவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளடியவர் வாழ்கென உன்னுநர்
குலவுக பல்லாண்டே. 5

குருவருளால் அறம் குவலயத் தினில்நனி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்உண்மை குவலயத் தினில்நனி
குலவுக பல்லாண்டு
குருவருளால் அன்பு குவலயத் தினில்நனி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்இன்பம் குவலயத் தினில்நனி
குலவுக பல்லாண்டே. 6

குருவரு ளால்இனி தகம்புறம் தூய்மையாய்க்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்கொலை புலைதவிர் செந்நெறி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்உயர் பக்திமெய்ஞ் ஞானமும்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்இம்மை மறுமைநன் னலமெலாம்
குலவுக பல்லாண்டே. 7

குருவரு ளால்ஜாதி மதவெறி தவிர்ந்தன்பு
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்தெய்வம் ஒன்றெனும் பேருண்மை
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்பஞ்ச பாதகம் தவிர்ந்தின்பம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளாய்மருந் தின்றிநோய் தவிர்முறை
குலவுக பல்லாண்டே. 8

குருவரு ளால்அதி காலைநீ ராடுநர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்வெள்ளி விரதம் பேணடியவர்
குலவுக பல்லாண்டு
குவருளால் உபவாசத்தைப் பேணுநர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்நிலை யினில்உயர் அடியவர்
குலவுக பல்லாண்டே. 9

குருவரு ளால்பொருள் புகழ்அருள் வளம்மிக்குக்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்பொறை நிறை இறை நலம்நனி
குலவுக பல்லாண்டு
குருவரு ளாற்றல்சற் குருவருட் பொலிவிவண்
குலவுக பல்லாண்டு
குருவரு ளாட்சியிக் குவலயத் தினில்நனி
குலவுக பல்லாண்டே, 10

குருவரு ளால்திரு நீறு தீர்த் தத்தின்சீர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்திரு விருடிநன் னகர்வளம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்வீர பத்திரக் குரிசில்சீர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்நங்கை ஆவுடை யம்மைசீர்
குலவுக பல்லாண்டே. 11

குருவரு ளால்மது ராபுரி பொலிவுடன்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்அங்க யற்கண்ணி யாலயம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்பரி பூரணர் திருத்தளி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்பரிபூரணர் அருளெங்கும்
குலவுக பல்லாண்டே. 12

குருவரு ளால்திருக் குற்றாலக் குகை
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்திருச் சாத்தனூர் சந்நிதி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்பிள்ளை யார்குப்பம் சந்நிதி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்காஞ்சி மாநகர் சந்நிதி
குலவுக பல்லாண்டே 13

குருவரு ளால் இருடிப்பட்டிக் குருசங்கம்
குலவுக பல்லாண்டு
குருவருளால் அருள்நகர் அருட் கொடிப்பள்ளி
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்சட்ட மாணவர் விடுதியும்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்இரு டிப்பட்டிச் சந்நிதி
குலவுக பல்லாண்டே. 14

குருவரு ளால்சென்னை இலக்கியப் பதிப்பகம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்இவண் பதிப்பிக்கும் நூலெலாம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்அவை எழுதுநர் படிப்பவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்திரு வருட்சட்ட அடியவர்
குலவுக பல்லாண்டே. 15

குருவரு ளால்எங்கும் நீர்வளம் நிலவளம்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்எல்லா உயிர்களும் நலமுறக்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்அருட் பண்பினிற் சிறந்தவர்
குலவுக பல்லாண்டு
குருவரு ளால்என்றும் எங்கணும் பேரின்பம்
குலவுக பல்லாண்டே. 16

## போற்றி! போற்றி!!

போற்றி நின்னொளி
போற்றி நின்னொலி
போற்றி நின்னுரு
போற்றி போற்றியே. 1

போற்றி நின்திறல்
போற்றி நின்புகழ்
போற்றி நின்னருள்
போற்றி போற்றியே. 2

போற்றி நின்னறம்
போற்றி நின்திறம்
போற்றி நின் நடம்
போற்றி போற்றியே, 3

போற்றி நின்சிரம்
போற்றி நின்கரம்
போற்றி நின்பதம்
போற்றி போற்றியே. 4

போற்றி நின்முகம்
போற்றி நின்னகம்
போற்றி நின்புறம்
போற்றி போற்றியே. 5

போற்றி நின்விழி
போற்றி நின்மொழி
போற்றி நின்செயல்
போற்றி போற்றியே. 6

போற்றி நின்னியல்
போற்றி நின்னிசை
போற்றி நின்நிலை
போற்றி போற்றியே. 7

போற்றி நின்கலை
போற்றி நின்னெழில்
போற்றி நின்திரு
போற்றி போற்றியே. 8

உன்னோடு இந்த உலகிலே வாழும் ஒவ்வோர் உயிரும் நீ வணங்கும் பரமாத்மா என்பதை நன்றாகத் தெரிந்துகொள். நீ வணங்கும் பரமாத்மாவிடம் பொய் பேசுவதோ, தூஷிப்பதோ, சினம் கொள்ளுவதோ செய்வாயா?

## வாழ்த்து

வாழி வையகம்
வாழி வானகம்
வாழி பாதலம்
வாழி வாழியே. 1

வாழி யன்பர்கள்
வாழி யோகியர்
வாழி ஞானியர்
வாழி வாழியே. 2

வாழி மெய்யறம்
வாழி யன்பருள்
வாழி நல்வளம்
வாழி வாழியே. 3

## பிரார்த்தனே

ஆதி நாதனே
நீதி வாணனே
ஜோதி ரூபனே
ஓதி யாள்கவே. 1

ஞான நாதனே
மோன ரூபனே
வான நாடனே
தேன ருள்கவே. 2

வேத நாதனே
நாத மூலனே
போத ரூபனே
பாத மீகவே. 3

## மங்களம்

ஏகநாத மங்களம் மாகநாத மங்களம்
இருடிநன் னகர்க்கண்வந்த எங்கள்நாத மங்களம்
போகநாத மங்களம் யோகநாத மங்களம்
புங்கவர்கள் போற்றி செய்யும் துங்கநாத மங்களம்

ஏமநாத மங்களம் சேமநாத மங்களம்
இருளகற்று சூர்யனங்கி சோமநாத மங்களம்
நாமநாத மங்களம் தாமநாத மங்களம்
நன்மைகூட்டு சிற்பர வியோமநாத மங்களம்

வானநாத மங்களம் ஞானநாத மங்களம்
வல்லபம் எலாம்வழங்கு மோனநாத மங்களம்
தீனர்நாத மங்களம் தியானநாத மங்களம்
செம்மையாவை யும்வழங்கு தியாகநாத மங்களம்

பூதநாத மங்களம் நாதநாத மங்களம்
புண்ணியர்கள் பாடுதூய வேதநாத மங்களம்
போதநாத மங்களம் அபேதநாத மங்களம்
பூமணம் செந் தேன்திகழ்பொற் பாதநாத மங்களம்

இட்டநாத மங்களம் சிட்டர்நாத மங்களம்
இன்னருள் அமுதமூட்டு சட்டநாத மங்களம்
அட்டமூர்த்தி மங்களம் அமரமூர்த்தி மங்களம்
ஆருயிர்க் கெலாம் அருள்செய் அமலமூர்த்தி மங்களம் (ஏக)

# அடியார்க்கு எளியவன்

இறைவன் அடியார்களுக்குக் காட்சி தருகின்ருன். அத்தகைய பெரும் பாக்கியம் பெற்ற அடியார்கள் யாவர்? அடியார் என்பதன் தகுதி யாது? யாருக்கு அவன் எளிமையாக வருவான்? இவ்விஞக்களுக்கு விடையாக இருப்பதுவே, பெரிய புராணம், ஆழ்வார்கள் வரலாறு போன்றன. இறைவனுடைய திருவடிக்கு உரிமையுடையவர்கள், அத்திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் மதியாதவர்கள். அத்திருவடிகளுக்குத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தவர்கள். அத்திருவடிகளின் செயலன்றி வேறு ஒன்றையும் செய்யாதவர்கள். அத்திருவடிகளையே தம் சிரமீது சூட்டி மகிழ்ந்திருப்பவர்கள். எண்ணம், மூச்சு, சொல், செயல் அனைத்தையும் அவனுக்காகவே அர்ப்பணம் செய்தவர்கள். அவன் மயமாகவே வாழ்கின்றவர்கள் யாரோ, அவர்களே, அடியார்கள் என்ற தகுதிக்கு உரியவர்கள். அவர்களுக்கு இவ்வுலகம் ஏவல் செய்யும். இயற்கை அடிபணியும். இறைவன் எளியவனுவான்.

[ஆண்டவர் அருள்]

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

குறிப்பு:—பக்கம் 97ல் "உனைப்போற்ற" என்று தொடங்கும் பாடலில், "எனக்கேற்ற தந்தையென்றுனாய்—எனக்—கேற்ற மணவாளனாய்ப் பிள்ளை யானாய்" என்று அமைந்துள்ளது. இக்கருத்துக்கு ஆதாரம் கீழே காண்க.

"எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் அய்யன்"

—திருவாசகம்—திருப்பொற்சுண்ணம் பாடல்-13.

"தந்தையென்றாய், மகன் என்றாய், மணவாளன் என்றாய்"

—திருஅருட்பா, ஆறாம் திருமுறை—அனுபவமாலை—பாடல்-26.

---

ஓம்

## பிழை திருத்தம்

தயவுசெய்து பிழைகளைத் திருத்திக்கொண்டு வாசிக்கவும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 14 | சொரூபம் | சொருபம் |
| | 23 | ,, | ,, |
| | 24 | அருேணே | அருணே |
| 6 | 25 | தந்துசாப் | தந்துகாப் |
| 9 | 13 | கருபபொரு | கரும்பொரு |
| 14 | 12 | ஆருளர் | ஆருளர்காண் |
| | 30 | ணமசிறந்த | ணம்சிறந்த |
| | 33 | சிசுப்யந்தோய் | சிசு பயந்தோய் |
| 21 | 13 | அடியர் | அடியார் |
| 29 | 24 | காட்டும் | கூட்டும் |
| 31 | 7 | தசவனைத்தும் | தகவனைத்தும் |
| 46 | 29 | பணமாக் | பணமாக |
| 50 | 12 | இறைஞ்சாய | இறைஞ்சாய் |
| 51 | 1 | ,, | ,, |
| 56 | 3 | நின்னருளடைவர் | நின்னருளையடைவர் |
| 57 | 32 | வாழவைத | வாழவைத் |
| 61 | 26 | றணு-ளவும் | றணுவளவும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 62 | 10 | வித்தாய் | வித்தாகி |
| | 29 | நவ்லமுதமே | நல்லமுதமே |
| 67 | 8 | யன்பினையும் | யன்பினையுள் |
| 68 | 22 | சிவன்மாலயன் | சிவனார்அருள் |
| 69 | 28 | வாழத்தரு | வாழ்த்தரு |
| 70 | 16 | கருள | கருள் |
| 79 | 16 | குழவுளுய்த்து | குழுவுளுய்த்து |
| 80 | 27 | தமுமுணர்ந்தல் | தமுமுணர்தல் |
| 81 | 14 | வேண்டும | வேண்டும் |
| 83 | 2 | வுறைவோய் | உறைவோய் |
| | 3 | உரிரனைத்துள் | உயிரனைத்துள் |
| 84 | 5 | நாதாநத | நாதாந்த |
| 102 | 9 | உண்ர்ந்தினிதே | உணர்ந்தினிதே |
| 103 | 15 | யோடொளிர | யோடொளிர் |
| | 23 | சூககுமம் | சூக்குமம் |
| | 24 | சாநதநிலை | சாந்தநிலை |
| 106 | 4 | திகழ்க்கமலம் | திதழ்க்கமலம் |
| 107 | 4 | வெண்ணிலாவே | வெண்ணிலாவே |
| | 10 | அவாக் | அவர்க் |
| 109 | 2 | இநதத் | இந்தத் |
| 117 | 13 | யருய்வாரடி | யருள்வாரடி |
| 121 | 9 | மாதவன்தன் | மாதவள்தன் |
| 136 | 2 | என்னுளம் | என்னுள்ளம் |
| 139 | 26 | காணின | காணின் |
| 141 | 4 | வெங்கணும் | யெங்கணும் |
| 143 | 15 | எனதிதியப் | எனதிதயப் |
| 154 | 6 | தெறிதரும் | நெறிதரும் |
| | 17 | ஓங்கரர | ஓங்கார |
| 155 | 3 | சதம்திகழ் | சகம்திகழ் |
| 156 | 19 | இன்பபெய்த | இன்பெய்த |
| | 26 | அருளெள்னும் | அருளென்னும் |
| 158 | 40 | ருள்ளெளிர்வார் | ருள்ளொளிர்வார் |
| 164 | 14 | குவருளால் | குருவருளால் |

# பாடல் முதற்குறிப்பகராதி

## வேண்டுகோள்

**இந்நூல் விற்பனையால் வரும்தொகை,** நம் குருநாதர் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமி களுக்கு, மதுரைமாநகரில், வைகைநதியின் தென்கரையில், ரெயில் பாலத்திற்கு மேற்கில், அருட் காட்சி அளித்து, ஆட்கொண்டருளி, அருந்தவ விளைவருளி, அருட்சட்ட நெறியருளி, அதே இடத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளி, அருளாட்சி புரிந்து வரும் **ஸ்ரீ பரிபூர்ண விநாயகப் பெருமான் திருக்கோயில் திருப்பணிக்குப் பயன் பட இருப்பதால்,** அனைவரும் இந்நூலை வாங்கிப் படித்து, ஸ்ரீ பரிபூர்ணப் பெருமான் கருணை யையும், ஸ்ரீகுருநாதர் திருவருளையும் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

இரெட்டியப்பட்டி,
8—10—1976.

இங்ஙனம்,
**மணி விழாக் குழுவினர்.**

துரை அச்சகம், காஞ்சிபுரம். (போன்: 2631)

# ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கு 28 கல் தொலைவில் உள்ள நாகலாபுரத்தை அடுத்த இரெட்டியப்பட்டியில் 1856-ல் அவதரித்த இடத்திலேயே, 1923-ல் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்கள்.

இத் **திருக்கோயிலில்** நித்ய பூஜையும், ஆண்டுதோறும் சித்திரை௴ மூன்றாம் வெள்ளிக்கிழமையில் வசந்த விழாவும், புரட்டாசி௴ இரேவதித் திருநாளில் ஜயந்தி விழாவும், மார்கழி௴ அனுஷ நன்னாளில் குருபூஜை விழாவும் திருவருளால் நடைபெறுகின்றன.

விழுப்புரம்—விருத்தாசலம் குறுக்குப் பாதையில் திருவெண்ணெய் நல்லூர் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள அருள் நகரில், **சுவாமிகள் சங்கமும்**, எட்டாம் வகுப்புவரை உள்ள **அருட்கொடிப் பள்ளியும், இலவச மாணவர் விடுதியும்** உள்ளன.

சுவாமிகள் சம்பந்தமான நூல்களை வெளியிடவும், சுவாமிகளின் **அருட்சட்ட நெறி** பற்றிப் பிரசாரம் செய்யவும் அமைக்கப் பெற்ற **ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம்** சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் எண் 161-ல் அடியார்கள் இல்லத்தில் உள்ளது.


விவரங்கட்கு :

**ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் திருக்கோயில்**

**இரெட்டியப்பட்டி, நாகலாபுரம் அஞ்சல்,**

**(திருநெல்வேலி மாவட்டம்) Pin : 627 904.**

உ

ஓம்

அருள்மிகு இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

## தவத்திரு பாலகவி மீ. கே. வேங்கடராமன் அவர்கள்

11—3—86ல் குருநாதர் திருவடியடைந்து

காப்பிட்ட இடத்தில் அமைத்த


## அருள்மிகு பாலகணபதி ஆலயக் குடமுழுக்கு விழா

2—5—86 வெள்ளிக்கிழமை இரெட்டியப்பட்டியில்

வழங்கிய

## திருத்தேர்ச் சித்திரக் கவி








பால கணபதியே

போற்றி போற்றி !

**இன்னிசை வெண்பா**

அன்பன் கமலமுக ராமநாமா ஆண்டவர்தம்
மன்புகழைக் காவியமாய் நாடெங்கும் போற்றிடச்
சாலவேய மைத்தபுகழ் வித்தரேவிண் கண்டசீலர்
பாலகவி வேங்கடரா மன்

( ஆக்கி வழங்கியோர் : மதுரை அறநெறியண்ணல் கி. பழநியப்பனார் )